உ

குகமயம்.

# ஈச்சுர நிச்சயம்.

யாழ்ப்பாணம்

குகதாசர்

ச. சபாரத்தினபிள்ளையால்

இயற்றி,

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு.—திருக்குறள்.

# சிறப்புப்பாயிரம்.

சுன்னாகம்

## ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

### ஆசிரியவிருத்தம்.

பூவுலகிற் கடவுளில்லை மறைகளில்லை யென்றுரைக்கும்
பொய்ம்மை வாதப்
பாவிகடங் கொள்கையெலா மறுத்துரைத்துத் தர்க்கநெறி
பரவக் காட்டி
மூவருமாய் முத்தொழிலு முறையியற்றி யாவருக்கும்
முதன்மை பூண்ட
தேவொருவ னுளனென்று பற்பலரும் விற்பனமாய்த்
தேறும் வண்ணம். (க)

சூத்திரமு மதற்கியைந்த செந்தமிழ்சேர் வாக்கியமுந்
துலங்கத் தீட்டிச்
சாத்திரத்தின் கருத்தமைதி தர்க்கமுறைக் கிசைவுபெறத்
தயங்க காட்டி
நாத்திகர்கண் மனமறுக வீச்சுரநிச் சயமென்று
நாமஞ் சூட்டிக்
கோத்தொருநூல் பிரகடனஞ் செய்துதந்தான் யாருமிது
கொள்க மாதோ. (உ)

செய்தவன்யா ரெனிலறைதும் யாழ்ப்பாணக் கொக்குவிலிற்
சேருஞ் செல்வன்
சைவநெறி முறையாளன் குகதாசன் பரசமயத்
தார்கள் சொல்லும்
கைதவநூற் கண்டனங்கள் பலபுரிந்து சைவமதக்
காவல் பூண்டோன்
மெய்தவரு வாக்குப்டுத் துவமுடையோ னடுநிலைமை
மேலாக் கொள்வோன். (ரு)

செந்தமிழு மிங்கிலிசு நன்குணர்ந்தோ னங்கிலேயச்
செங்கோன் மன்னர்
தந்தவதி காரமெனும் பூடணத்தோன் சன்மார்க்கர்
சபைசேர் தீபன்
புந்திநிறை பொறைநீதி முதலாய குணங்களெலாம்
பொலியுஞ் சீலன்
சந்ததமுஞ் சிவத்தினெஞ் சுறுத்துசபா ரத்தினப்பேர்த்
தகைமை யோனே. (சு)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

இவ்விலவுலகத்தின்கண்ணே தோன்றி நின்று அழியும் சிவதோற்றங்கள் எனைத்துள்ளும் விவேக ஆற்றலாற் சிறந்தது மானுஷ்யதோற்றமேயாம். இந்தத் தோற்றம் பூமியின் கண்ணே அமைந்துள காலம் இத்துணைத்தென்னும் வரையறை பௌதிகசாத்திர நியதிக்கு இன்னும் சித்தித்திலதாயினும், இக்கால எல்லை மிக நீடித்ததொன்றென்பது சமயஞானத்துக்குக்கும் தத்துவஞானத்துக்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். இங்ஙனம் நீடித்த காலத்திற்முன், எல்லாக் காலத்தினுமாதல் அன்றி எல்லாத்தேயத்தினுமாதல், மானுஷ்யவிவேகம் ஓரேபடித்தாய் இருந்துளதல்ல. இது காலத்துக்குக்காலம், தேயத்துக்குத்தேயம், அருகியும் பெருகியும் பல நெறிப்பட்டு வருகின்றதென்பது இதிகாசகால நிகழ்ச்சி கொண்டு துணியத்தக்கது.

இங்ஙனமே மனிதருடைய அறிவாற்றல் காலதேசங்கடோறும் சுருங்கியும் விரிந்தும் வருந் தகுதியுடையதாயினும், இப்பல நெடுங்காலத்தும் பல பெருந்தேயத்தும் உள்ள மானுட தொகுதியுள், ஒரு சிலவரை ஒழித்தொழிந்தார் பிறர் எல்லாம், தம்முடம்பின்கண்ணே அவ்வுடம்பின் வேறுகியதோர் அமூர்த்தசித்து உண்டென்றும், இங்ஙனமே உடம்புகள்தோறும் உள்ள அமூர்த்த சித்துகள் அனைத்தையும் இயக்கி நிற்பதோர் வரம்பிலாற்றல் படைத்த மகாசித்து இவை எவற்றுக்கும் மேலாய் உண்டென்றும், இந்தச்சித்துக்காரணமாகவே சித்தும் அசித்துமாகிய இருதிறப் பிரபஞ்சங்களும் இயக்கமுற்று வரும் என்றும் விசுவசித்து, அவ்விசுவாசத்தின்வழியே ஒழுகிவருகின்றனர்.

# முகவுரை.

இந்த விசுவாசம், உலகத்திலே காலந்தோறும் தோன்றி நின்று அழியும் ஏனைக் கொள்கைகளைப் போலாது, யாதோராற்றானும் நிலையழிதலின்றி மிகப் பிரபலம்பட்டுத்து விளங்குவதொன்றாயினும், இதன்மீது ஆக்ஷேபந் தொடுப்பாரும் ஆங்காங்குச் சிற்சிலர் காணப்படுவாராயினர். இந்த ஆக்ஷேபங்களும் ஒருநெறிப்பட்டாது காலதேய பேதங்களுக்கியையப் பலநெறிப்பட்டு வருமாற்றால், இவற்றால் உலகத்துக்குப் பல பெருங் கேடுகள் விளைதற்கு ஏதுவாயிற்று. முந்தைக்காலத்திருந்த பதிசாத்திரப் பயிற்சியும் பதிப்பிரசாத உணர்ச்சியும், இந்தக் காலத்திலே கருமுகிற் படலத்தான் மறைப்புண்ட பூரணசந்திரனைப்போல, மாக்களைப் பிணித்த அஞ்ஞான திமிரத்தாற் கிரகணிக்கப்பட, அக்கிரகணத்துக்குச் சகாயமாய்த் தத்காலத்தே மலிந்துள்ள லௌகிக நாட்டமும் லௌகிகசாத்திர விருத்தியும் பெருந்துணை புரிவனவாயின. தத்காலத்தே நாகரிகமும் சீர்த்திருத்தமும் முதலியவற்றாற் சிறந்து விளங்குவன என்று உத்தேசிக்கப்படும் அமரிக்கா ஐரோப்பா முதலிய தேயங்களிலே, லௌகிகார்த்தமான பலப்பல விருத்திகள் பூர்த்தியுற்றாங்க [ஆங்கே பதிசாத்திர உணர்ச்சிக்கமைந்த பயிற்சிக்கிரமங்கள் ஆதிகாலத்தில்லாதிருந்தமை காரணமாக]லௌகிகப்பிரவிருத்தியும் லௌகிகநாட்டமும் மிக வளர்ந்து, இறுதியிலே ஈச்சுர உண்மையையும் சங்கிக்கத்தக்கவாறு அந்த லௌகிகப்பற்று மிகத் தடித்துக்கொண்டது. அந்தத் தேயங்களிலே கல்வியிற் சிறந்தார் என்று கணிக்கப்படுவார் பலர், "கண்டதேமெய் அல்லன எல்லாம் பொய்" என்பதோர் விபரீதக் கொள்கையை அனுசரிப்பாராகி, "பிரபஞ்சமெல்லாம் காணப்படுவதாகிய பூதபேதங்களின் காரியமாத்திரையேயாம்" எனச் சாதிக்கும் பௌதிகவாத (Materialism) மருளின்வாய்ப்பட்டு, அம்மருளின்கண்ணே மிக முறுகிவளர்ந்த அபிமானமுடையராய்த் தமக்கும் பிறர்க்கும் பெருங்கேடு விளைப்பாராயினர். இந்த வாதத்தை நிலையழியச் செய்யவல்ல நையாயிகவாற்றல் நமது பரதகண்டத்தே வழங்கும் பதிசாத்திரங்களில் மிகப் பூர

ணமாக உள்ளனவேனும், அந்தச் சாத்திரப்பயிற்சி இந்தக்காலத்தே பெரிதும் அலக்ஷியம் செய்யப்படுதல் காரணமாகவும், "மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி" என்பது நியதமாதலின், அரசபாஷையாகிய ஆங்கிலபாஷையும், அப்பாஷையின் கணுள்ள பௌதிகவாதமரபும் விருத்திபெற்றோங்குதல் காரணமாகவும், நம்து பதிசாத்திரங்களின் மாட்சி விளக்கம்பெருதொழிய, அந்நியதேயங்களாகிய அமரிக்கா ஐரோப்பா முதலிய தேயங்களிலே தலை எடுத்துநிற்கும் பௌதிகவாதம் புண்ணியபூமியாகிய நமது பரதகண்டத்தும் நுழைந்து, நம்மவர்க்குப் பெருங்கேடு செய்யத் தொடங்கிக்கொண்டது. ஆங்கிலபாஷையிற் தேறி, நாகரிகத்திற் சிறந்து, பௌதிகசாத்திரத்திற் பாண்டித்திய மடைந்தமைக்கறிகுறி நாஸ்திகம் பேசுதலே என்பதும் நம்மவருட் பலர்க்குக் கருத்தாய்க்கொண்டது. இங்ஙனமாயின், நமது தேசத்தின் நிலைமை நன்றாயிருந்தது!!

பௌதிகவாதசேட்டராகிய பிறட்லா (Bradlaugh) முதலாயினாரது துர்வாதங்களை வாசித்துணர்ந்த நம்மவரிற் பலர் அக்கொள்கையின்கண்ணே பேரபிமானமுற்று, அதனை எடுத்துப் பத்திரிகைகள்வாயிலாகப் பிரதிபாதிக்கத் தொடங்கிக்கொண்டார்கள். இற்றைக்குப் பதினைந்து வருடங்கட்கு முன்னே, சென்னைபுரியிற் பிரசரிக்கப்பட்டுவந்த "தத்துவ விசாரிணி" "தத்துவவிவேசினி" என்னும் பத்திரிகைகளிலே இப்பௌதிகவாதம் பெரிது பிரதிபாதிக்கப்பட்டு வந்தமைகாரணமாக, நாம் அந்தக்காலத்திற்றானே, அக்கொள்கைகளையும் அவற்றுக்கு ஆதாரமாயுள்ள உலோகாயத முதலிய நிரீச்சுரவாதக் கொள்கைகளையும் கண்டித்து, யாழ்ப்பாணம் "உதயபானு" பத்திரிகைவாயிலாகப் பற்பல கடிதங்களை எழுதிப் பிரசரித்துவந்தேம். அந்தக் கடிதங்களைக் கண்ட வித்துவான்கள் சிலர், அவற்றைப் புத்தகவடிவாக அச்சிட்டுப் பிரசரிப்பதுண்டாயின், அதனாற் பெரும் பிரயோசனமுண்டாமென்று எமக்குப் பலமுறையும் அறிவித்தார்

கள். அவர்கள் விருப்புக்கியைந்து, அக்கடிதங்களைப் புத்தக வடிவாகப் பிண்டஞ்செய்யப் புகுந்துழி, அவற்றின்கண்ணே செய்யப்படுதற்குரிய பற்பல மாற்றங்களும், அவற்றோடு மேலும் சேர்த்தற்குரிய பற்பல விஷயங்களும் எமது சிற்றறிவுக்குத் தட்ட, அவற்றை எல்லாம் வரன்முறை பிறழாது அமைக்கவேண்டிய இடங்களில் அமைத்து, இச்சிறு பிரபந்தத்தை எழுதிமுடித்து இப்போது வெளிவிடுகின்றோம்.

கடவுணிச்சயத்துக்கமைந்த நியாயமரபுகள் எல்லாம் எல்லார்க்கும் புலப்படுவனவல்ல. இங்ஙனமாகவும், இந்தக் கொள்கை உலகத்தின்கண்ணே நிலைபெற்று விளங்குவது பெரும்பான்மைபற்றிச் சனங்களிடத்துள்ள விசுவாசங் காரணமாகவேயாம். இந்த விசுவாசத்தைத் தத்காலத்தெழுந்துள்ள பௌதிகவாதம் ஓர் அளவைக்கு அசைவுறச் செய்துவிட்டதெனலாம். இந்தக்காலம் முந்தைக்காலத்தைப் போல விசுவாசத்தைப் பெரிதுபோற்றுது, எந்தெந்த விஷயத்தையும் நியாய ஆராய்ச்சிகொண்டு பரீக்ஷிக்கத் தொடங்கிக்கொண்டது. முந்தைக்காலத்தனவாகிய பதிசாத்திரகிரந்தங்களிலே, எத்தனையோவிஷயங்கள் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமுமுறப் பிண்டஞ் செய்து வைக்கப்பட்டமையால், அவை இந்தக்காலத்தில் எல்லார்க்கும் பயன்படுதலும் அரிதாய்க்கொண்டது. ஆகவே இந்தக்காலத்துச் சனங்களது அறிவுநிலைக்கும் அவரது விசாரவிருப்பத்துக்கும் இயைந்த முறையாக இந்நூல் அமைதல்வேண்டும் என்பதே எமது பெருவிருப்பாமென்பதறிக.

தத்காலத்தனவாகிய ஆக்ஷேபங்களை எல்லாம் சந்தேக விபரீதமறச் சமாதானஞ்செய்தல்வேண்டும் என்பதே எமது விருப்பாயினும், இதனகத்தே எல்லாத்துறைகளும் விரித்து வித்தரிக்கப்படும் என்று நாம் சொல்லமாட்டோம். அங்ஙனம் விரிக்கப்புகுந்தால் இதுபோலும் பல பிரபந்தங்கள் வேண்டப்படுமாதலின், விசேடமானவற்றையே விரித்து ஒழிக்

தனவற்றைக் குறிப்புமாத்திரையால் உய்த்துணர்ந்துகொள்ளவே வைத்தாமென்க. விரிக்கப்பட்டனவற்றுட் சிலதாமும், இதனைப் புதிதாக வாசிப்பார்க்கு நூதனமாகத் தோற்றுதலுங்கூடும். என்னை? அவர் எல்லாம் அந்த நியாயமரபுகளை முன்னொருபோதும் கண்டுகேட்டிராமையின். எம்மாற் சாதாரணமாக நம்பிஎடுத்தாளப்படும்கொள்கைகளைத்தாமும் ஆராய்ச்சிசெய்யப்புகுந்தால், அவற்றுக்கு ஆதாரமாகிய நியாயங்கள் எமக்கு வெகுநூதனமாகவே தோற்றும். என்னை? அந்த நியாயமரபுகள் நாம் முன்னொருபோதும் கண்டுகேட்டிராப் புதியனவாதல்பற்றி. அதுகொண்டு நாம் அவற்றை ஒழித்துவிடுதல் மரபாகாமைபோல, இதன்கணுள்ள நியாயங்களையும் அவை புதியனவாய்த் தோற்றுதல் காரணமாக அலக்ஷியஞ்செய்துவிடாது, அவை உண்மைநிலைக்கு ஒத்தனவோ அன்றோ என்பதைச் சித்தசமாதனத்தோடு சீர்தூக்கி நோக்குதல்வேண்டும். பக்ஷாபிமானங்களைத் தூரத்தே போக்கிவிடுதல்வேண்டும். அப்போதே ஆராய்ச்சியாற் பெறத்தக்க பிரயோசனம் கைகூடுவதுண்டாம்.

கடவுளுண்மையை நாம் நையாயிகமரபால் ஆராய்ந்து காண்டலினும், அனுபவங்கொண்டு காண்டலே மிகத்திருப்தியுடைத்தொன்றாம். இந்த அனுபவத்தை நாம் இந்நூலின்கண்ணே விரிக்கப்புகுந்தால், அது குருடனுக்குப் பாலின் வடிவைப் புலப்படுத்தப் புகுந்ததுபோற் பலர்க்கு விபரீதத்தை விளைக்குமாதலின், அந்தத்துறையை நாம் இங்கே மிக விரித்திலம். ஆயினும், அவ்வனுபவத்தால் உணரத்தக்கனவும் பலப்பல உண்டு என்பதை நமது பௌதிகவாதிகள்தாமும் மறுக்கத்துணியார் என்று நம்புகின்றோம். இந்த அனுபவக்காட்சி தலைப்பட்டாலன்றி, தத்காலத்துக்குப் பெருங்கேடாய் விளைந்துள்ள பௌதிகவாதவிடம் நம்மவரை விட்டொருங்கே நீங்குதல்கூடாதாம். இந்த அனுபவக்காட்சிக்கட் தலைப்படுதற்கோர் வழிகாட்டியாகவே, நாம் இந்நூலைப் பௌதிகவாதப் படியிலுள்ளார்க்கு ஏற்புடைத்தாக இயற்றினும்

இதன்கட் பிரதிபாதிக்கப்படும் நியாயமரபுகளைச் சிந்தித்துத தெளிவார்க்கு ஈச்சுரநிச்சயத்தின்கண்ணே ஓர்பற்றுண்டாய், அப்பற்றுக்காரணமாக அவர்க்கெல்லாம் படிமுறையே அந் நிச்சயத்தின்கட் பத்திவிசுவாசம் விளைந்து, அப்பத்திவிசுவா சங்காரணமாக ஈச்சுரநிச்சயத்தை உள்ளபடி அறிதற்கியை ந்த அனுபவ உணர்ச்சி தலைப்படுமோம். இங்ஙனமாயதோர் கருவிநூலின்றி நமது பௌதிக்வாதிகள் மேலைச்சுட்டிய அனு பவ உணர்ச்சி சித்திக்கப்பெறுதல் மிக அரிதாகும். அங்ங னம் அரிதாகப்பெறுமிடத்தும் அது மிக நீடித்ததோர் சோ பானக்கிரமமாகவே ஆதல்வேண்டும். அந்தக்கிரமத்தை எம து சிற்றறிவிற்கெட்டியபடி அனுமிக்கப்புகுந்தால், அவர்கள் பிரபஞ்சமேயன்றிப் பொருள்பிறிதில்லை என்னும் முண்டவா தமாகிய தமது பௌதிகவாதத்தை விடுத்து, கடவுள் ஒருவர் இருக்கினும்இருக்கலாம் என்னுஞ் சந்தேகவாதத்தில் (Agnosticism) இறங்கி, பின்னர் அதனையும் விடுத்து தீயாசபி (Theosophy) மதமாகிய தத்துவவிசாரத் துறையிலிறங்கிப், பின்னர் அதனையும்விடுத்து எல்லாம் பிரமமே என்னும் அசு த்த வேதாந்தத்துறையிலிறங்கி, பின்னர் அதனையும் விடுத் தே சுத்தசித்தாந்தமாகிய சைவத்தை அடைந்து அந்த அனு பவ உணர்ச்சியை உள்ளபடி பெறுதல்வேண்டும். ஆனால், இந்தப்படித்துறைகளை முறைமுறையாகவந்து அடைதன் முன், இடையிடையே, அவ்வவர் செய்துகொண்ட வினைப்பய னுக்கீடாக, உலகத்துப் பல்கியுள்ளனவாகிய நாநாசமயங்களு ட்சென்று புகுதலும், அன்றி இப்படிமுறைகளிற் சிலவற்றி ற்புகாது மேற்கொண்டு அப்பாற்செல்லுதலுமாகும். இதனை வரையறுத்தற்கு நாம் திரிகால உணர்ச்சியுடையேமென்று நடிக்கமாட்டேம். இந்தப்படித்துறைகளினும் ஓர் ஓர் அனுப வக்காட்சி கைவரத்தக்கதாயினும், உண்மைக்காட்சி சித்திப் பது சைவசித்தாந்தத்திலன்றிப் பிறவற்றிற் கூடாதாம். இந் நூலைக் கிரமமாகக் கற்பதுண்டாயின், அக்கல்வியால் உண் மைத்துறையாகிய சைவசித்தாந்தத்துறை மிக இலகுவிற் கிட்டும் என்பது எமது நம்பிக்கை. இங்ஙனமாயினும், நாம்

# முகவுரை.

இந்நூலின்கண்ணே யாதொரு சமயத்தை விதந்தெடுத்து வியந்து ஒழிந்தவற்றை இகழ்ந்துரைப்பாமல்லேம். எல்லாச் சமயத்துக்கும் பொதுவாகவே இந்நூல் பெரும்பான்மைபற்றி அமைந்துள்ளது.

ஈச்சுரநிச்சயத்துக்கு மறுதலையாயுள்ள மதங்கள் பூர்வத்துள்ள உலோகாயதம், நிரீச்சுரசாங்கியம், பௌத்தம் முதலியனவும், தத்காலத்தனவாகிய பௌதிகவாதம் (Materialism) சந்தேகவாதம் (Agnosticism) நிரீச்சுரவாதம் (Atheism) மித்தியாவாதம் (Idealism) முதலியனவுமாம். இவற்றின்கண்ணே ஈச்சுரவுண்மைக்கு விரோதமாயுள்ள துறைகளைமாத்திரம் எடுத்துக் கண்டித்துச் சுபக்ஷத்தைத் தாபித்து இதனை முதற்பாகமாகப் பிரசரிக்கின்றாம். இனி அவ்வம்மதக்கொள்கைகளைக் கண்டித்து அவற்றின் துர்ப்பலத்தை இனிது சாதித்துப் பரபக்ஷமாகிய இரண்டாம்பாகத்தை விரைவில் வெளிப்படுத்துவாம்.

இந்தப் பிரபந்தம் நியாயநூற்பயிற்சியின் வல்லாரும் அல்லாருமாகிய எல்லார்க்கும் பயன்படுமாறு, பொதுவும் சிறப்புமாகிய இரண்டியலாகப் பகுக்கப்பட்டு, பொதுவியலுக்கு இரண்டுசூத்திரமும் சிறப்பியலுக்கு மூன்றுசூத்திரமுமாக, ஐந்துசூத்திரவடிவிற்றாய் அமைக்கப்பட்டுளது. இவற்றுள், பொதுவியலுக்குரிய முதற்சூத்திரத்தின்கண்ணே, கடவுணிச்சயவிஷயத்தைப் பொதுவகையால் நோக்குமிடத்து, உலகத்தே கடவுள் உண்டெனக்கொண்ட வழக்கை நாம் எல்லாம் கைக்கொண்டொழுகவேண்டிய கடப்பாடுடையேமென்பதும்; இரண்டாஞ்சூத்திரத்தின்கண்ணே கடவுள் உண்டெனக்கொள்வதே கடவுள் இல்லை எனக்கொள்வதினும் யுத்திக்கியைந்ததென்பதும்; சிறப்பியலுக்குரியதாகிய மூன்றாம் சூத்திரத்தின்கண்ணே, கடவுளுண்மையைச் சிறப்புவகையால் விசாரிக்குமளவில், அது நையாயிகதர்மத்துக்கு இனிது அமைவுடைத்தாய் அதனால் செவ்விதிற் தாபிக்கப்படும் என்

பதும்; நான்காஞ் சூத்திரத்தின்கண்ணே அந்தக் கடவுளுன்மை இன்றியமையாச் சிறப்பிற்றுய்ச் சந்தேகவிபரீதமற நாட்டப்படும் என்பதும் காட்டப்பட்டு; ஐந்தாஞ்சூத்திரத்தின்கட் கடவுளுண்மைக்கு மறுதலையாயுள்ள ஆக்ஷேபவகைகள் எல்லாஞ் சமாதானஞ் செய்யப்படும்.

யாழ்ப்பாணம் கொக்குவில்:
கலியப்தம் - சகூகூசு.
ஐப்பசி மாசம்.

ச. சபாரத்தினபிள்ளை.
நூகதாசர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஈச்சுரநிச்சயம்.

## முதற்பாகம்.

### காப்பு.

உலகெவாந்தன்பாலாகவுலகத்துட்டானுமாகி
யலகிலாதிவ்ற்றுக்கெல்லாமதீதமாயறிவினூடு
நிலவுசீரமலனீன்றநித்தியாநந்தமுக்கட்
குலவுபேரருளினல்வாய்க்குஞ்சரமுகன்றாள்போற்றி.

### உபாசனமூர்த்தி வணக்கம்.

அகிலசராசரத்திறனுற்றனுதுண்மையுடியரேங்க
டகுதிபெறவுணர்ந்துயுமாறவ்வவற்றிற்சார்ந்துஞ்சாரா
திகபரக்கணுயிர்க்குயிராயெவ்வெவையுமியக்குமாதிக்
குகபெருமானடியிணையைமுடியணியாக்கொண்டுவாழ்வாம்.

## அவதாரிகை.

காணப்படுவதாகிய இப்பிரபஞ்சம் தனக்கோர் நிமித்த காரணரையுடைத்தா அன்று என்பது மானுடதேகிகளாகிய நாம் எல்லாம் அத்தியாவசியகம் அறியக்கடவதோர் விடயமாகும். பிரபஞ்சத்துக்கோர் காரணர் உளராமாயின், அந்தக் காரணர் தாமே எமது சுகதுக்க அனுபவங்கள் தமக்கும் காரணர் என்பதூஉம், அந்தச் சுகதுக்கங்களை நாம் அனுபவித்தற்குரிய களம், இம்மையேயன்றி மறுமையும் ஒன்று உண்டென்பதூஉம், இந்த இம்மை மறுமை இரண்டன்கண்ணும் நாம் அனுபவிக்கும் அனுபவங்கள் அனைத்தும், எங்கள் எங்கள் வினையளவுக்கியைய அந்தக் காரணரால் வரை

யறுத்துநியதிசெய்யப்படும் என்பதூஉம் பிறவும் இனிது துணியப்படும். ஆதலின், எமக்குமேல் வரக்கடவனவாகிய அனுபவங்களனைத்தையும் வழிப்படுத்தற்கமைந்த பிரயத்தனங்களை எல்லாம் நாம் இப்போதே தப்பாது செய்துகொள்ளுதற் பொருட்டு, முந்தக் கடவுளுண்மையைச் சந்தேகவிபரீதமற நிச்சயித்துக்கொள்ளுதல் ஒருதலையாகவேண்டப்படும்.

பிரபஞ்ச காரணராகிய கடவுள் ஒருவர் உளரென்பது நாம் இப்போது புதிதாக நாட்டப் புகுவதோர் கொள்கையல்ல. இது இத்துணைக்காலம் என்று வரையறுத்தற்கரிய அத்துணைக்காலந்தொட்டு இப்பூமியின்கண்ணே எடுத்தாளப்பட்டுவருகின்றது. ஆயினும், இக்கொள்கையை ஆக்ஷேபிப்பாரும் சிலர் ஆங்காங்கே காலந்தோறும் தலையெடுத்துலவியதுமுண்டு. இன்னோரது ஆக்ஷேபங்களெல்லாம், புண்ணிய பூமியாகிய நமது பரதகண்டத்தே பண்டைக்காலத்திருந்த பண்டிதோத்தமர்களால் தர்க்கசம்பிரதாயமரபாக அனுவதித்துக்கண்டிக்கப்பட்டன. அக்கண்டன கிரந்தங்களுள்ளே பற்பல இக்காலத்தும் உள்ளனவாகவும், அவற்றின் திட்பநுட்பங்களை ஊகித்துணரும் வன்மை இன்மையானே, அன்றிக் கலிகாலவலியானே, ஈச்சுரநிச்சயத்தின்மீது பலப்பல நவீன ஆக்ஷேபங்களைத் தொடுத்துநின்றழிவார் சிலர் தத்காலத்தும் ஆங்காங்கே தலையெடுத்துநின்று கலாம் விளைப்பாராயினர். இந்த நவீன ஆக்ஷேபங்கள் தமக்கும், தக்கசமாதானங்கள் மேலைக்கண்டன கிரந்தங்களிற்றானே அமைந்து கிடப்பனவேனும், அச்சமாதான அமைதியை உள்ளபடிகாணவல்லார் மிகச்சிலரன்றி இலராக, அவற்றால் இம்மை மறுமை இரண்டனுக்கும் பெருங்கேடுகள் விளைவனவாயின. இவ்வாக்ஷேபங்கள் தத்காலத்துள்ள பௌதிகவாதிகளது (Materialists) பிரத்தியக்ஷவுணர்ச்சி மாத்திரையினே பற்றிநிற்பனவேனும், இவ்வ எல்லாம் மேலைக்காலத்தார்க்குப் புலப்பட்டிலபோலத் திரிபுறுத்துக் காட்டப்படுமாற்றால், இவற்றுக்குச் சமாதானம் யாண்டேனும் இல்லை என்பதோர் பிர

மை பலரிடத்தே மிகத்தடித்து வளர்வதாயிற்று. ஆகவே, முந்தைக் காலத்திருந்த மகான்களது திருவாக்கையே குரு வாக்காவதோர் ஆதாரமாக்கொண்டு, தத்காலத்து எடுத்தா ளப்படும் நவீன ஆக்ஷேபங்களை எல்லாம் இக்காலத்துக்கு இயைந்தபடி எடுத்துக் கண்டித்து விளக்கி ஓர் நூலை இயற் றுவதுண்டாயின், அதனாற் பெரும் பயனுண்டாம் என்னும் ஓர் பேராசை எம்மைப் பிடர்பிடித்துந்த, இச்சிறு பிரபந்த த்தைப் பரங்கருணைத் தடங்கடலாகிய சண்முகப்பெருமா னது அருட்பிரசாதத்தை முன்னிட்டு எழுதத் தொடங்கு கின்றும்.

திருச்சிற்றம்பலம்.

# பொதுவியல்.

—:o:—

## முதலாஞ்சூத்திரம்.

கடவுளுண்டெனக்காண்புறுவழக்கை
அடைவுறநாங்கொளல் ஆர்கடனென்றது.

அகிலசராசரமனைத்தையும் படைத்தளித்தழிக்குமோர் பரம்பொருட்சத்தன் உளனோ இலனோ என்று வினுதன் முன்னர், அங்ஙனம் ஒருவன் உளன் எனக்கொள்ளும் உலக வழக்கை நாம் அங்கீகரித்தல் வேண்டுமோ வேண்டாவோ என்பதே முன்னர் நிச்சயிக்கத்தக்கது. என்னை? நாம் கடவுளுண்மையைக் குறித்து விசாரிக்கப்புகுவது, அங்ஙனம் ஒருவர் இருக்தக்கால் அவரை விசுவசிப்பது கருதியேயாதலின், அவ்விசுவாசத்தைப் பெறுதற்கு நியாயமுகத்தாற் றுணியப்படும் பிறிதோர் சுருங்கியவழி யுண்டாமாயின், அவ்வழியை முந்த ஆராய்தலே அறிவுடைமக்கள் கடற்றும். ஓர் வியாச்சியத்தை விசாரிக்கப் புகுந்தானோர் நீதிபதி, அதனைத் தீர்த்தறகமைந்ததோர் அவாந்தர நியாயமுளதாயின், அதனை முந்த விசாரித்தலே அவன் கடனும்.

## முதல் அதிகரணம்.

(க.) உலகத்தின்கணுள்ள சிருட்டி பேதங்கள் எவற்றினும் மனுடன் சிறந்தமைக்குக் காரணம் இவனிடத்தேயுள்ள அறிவாற்றலாம். இதனை அவ்வவர்க்குரிய இயல்பிற்கமைய இயன்றவாறு சாதனைசெய்து, இதன்வழி ஒழுகுவதே பெருமக்களியல்பெனப்படும். இவ்வறிவாற்றல் எவ்வெவரிடத்தும் பிறரிற் பற்றுதலின்றிச் சுவாதீனமாயுள்ளதாயினும், இதனைச் சாதனை செய்து விருத்திசெய்புமிடத்துப் பிறருடைய சகாயமும்வேண்டியே கிடக்கின்றது.

உலகத்துள்ள மானுட இயற்கையை ஆராயுமிடத்து நாம் நமது அறிவைப்பெற்று விருத்திசெய்யும் பிரதம ஏதுக்கள் மூன்றாகும். அவை (க) பெற்றோர்போதனை, (உ) ஆசிரியர் சிக்ஷை, (ங) உலகவழக்கு என்பனவாம். நாம் பிறக்கும்பொழுது நமது அறிவு விருத்தி அடைந்துகிடப்பதன்று. அக்காலத்தே நாம் அறிவாற்றலில் மிருகங்களினுங் கடையராய்க் கிடக்கின்றோம். பின்னர் நமதறிவு மேலேப்போந்த மூன்றேதுக்களாலும் விருத்தி அடைய, அங்ஙனம் அடைந்த அறிவோடு, நமது சுவஞானசாதனையையும் துணையாகக்கொண்டு அவற்றின்வழி ஒழுகுகின்றோம். நாம் நமது பாலப்பருவத்திலே இன்னின்ன பொருட்கு இன்னின்ன பெயர், இன்னின்னார் எமக்கின்னின்ன உறவினர் என்பன முதலிய அறிவை நம்பெற்றாரிடத்தும்; இன்னின்னகுறிகள் இன்னின்ன அக்ஷரங்களைக் குறிக்கும், இன்னின்ன இலக்கணங்கள் இன்னின்ன சொற்களுக்குண்டு, இன்னின்ன தேசங்கள் ஆறுகள் கடல்கள் மலைகள் இன்னின்ன இடங்களிலுண்டு, கணிதநூன்முறை இன்னது, வானசாத்திரமுறை இன்னது, காவியசாத்திரமுறை இன்னது, பூவகசாத்திரமுறை இன்னது என்பன முதலியவற்றை ஆசிரியரிடத்தும்; இன்னார்க்கின்ன மரியாதை செய்யப்படவேண்டும், இன்னின்ன சமயங்களில் இன்னின்னமுறைகள் அனுசரிக்கப்படும், இன்னின்ன பொருள்கள் இடங்கள் காலங்களைப்பற்றிய விருத்தாந்தங்கள் இன்னின்ன என்பன முதலிய அறிவை உலகவழக்கிலிருந்தும் கற்றுக்கொள்ளுகின்றோம். ஆகவே இம்மூவகை ஏதுக்களாலும் பெறப்படும் அறிவே எமது அறிவாற்றலுக்காதாரமாம். இங்ஙனம் பெற்ற அறிவை நாம் உண்மை எனக்கொண்டு, அக்கொள்கையை அக்காலத்துமாத்திரமன்றி எக்காலத்தும் எடுத்தாளுகின்றோம். இதுவே எமது இயற்கை. இயற்கைமாத்திரமன்றி, நாம் எமது சுபாவத்தின்வழி நின்று அறிவை விருத்திசெய்தற்கமைவது மிதுவேயாகும். இம்மூவகை அறிவையும் இங்ஙனே உண்மை எனக்கொண்டு எடுத்தாளுவதில்லையாமெனின், நாம் உலகத்திலே யாதானுமோரறிவைப் பெறுதல் கூடாமல், விலங்கினங்கள் தம்மினும் கடையராய்க் கிட

க்கவருமாதலின், அவற்றை அங்ஙனம் கொள்ளுதல் எமக்கின்றியமையாச் சிறப்பினதாய்ப் பெறுதல் கண்டுகொள்க. இம்மூவகை ஏதுக்களுள் யாதானுமொன்றால் ஓரறிவைப் பெறுவதுண்டாயின், அவ்வறிவை எம் வாழ்நாள்காறும் சரி என்று எடுத்தாளவேண்டிக் கிடப்பேமாகிய நாம் அது பிழையுடைத்தென்றுகொள்வது, அப்பிழை இதுவென்று பூரணபெலமுடைய நியாயமுகத்தால் துணிந்தபின்னன்றி அதன்முன்னரன்று. அதன்முன்னர் எக்காலும் அவ்வறிவு அதிப்பிரபலநியாய சகித உண்மை என்றே எடுத்தாளப்படுவது. இஃதெல்லாம் மானுட இயற்கை.

இங்ஙனமாதலின், இம்மூவகை ஏதுக்களுள் ஒன்றன் மாத்திரமன்றி எல்லாவற்றானும் ஏகோபித்து எமக்கூட்டப்பெற்ற "கடவுள் ஒருவர் உண்டு" என்னும் போதனையையும் நாம் எக்காலமும் சரி என்று எடுத்தாண்டு, அக்கடவுளுண்மையை விசுவசிக்கவேண்டுமென்க. அம் மூவகை ஏதுக்களால் ஊட்டப்பெற்ற பிறபோதனைகளை எடுத்தாளலாம்: கடவுளுண்மையை மாத்திரம் எடுத்தாளுதல் கூடாதெனின், அது நியாயநெறிக்குச் சிறிதும் அடாதாம். அவ்வேதுக்கள் மூன்றானும் எமக்கூட்டப்பெற்ற பிறபோதனைகளையும் நாம் ஒழித்துவிடுவேம் எனின், எம்மிடத்தில் ஓர் அணுத்துணைப் பிரமாணமுடைய அறிவுதானும் இருத்தல் கூடுமோ? கூடாதாம். என்னை? நாம் பின்னைக் காலத்துச் சுயேட்ட ஞானசாதனையால் ஈட்டிக்கொண்ட அறிவுக்கும் ஆதாரம் அம்மூவகையாற் பெற்ற அறிவேயாம். அவ்வறிவை ஒழித்துவிட்டால், நாம் "மரமக்களாதலேவேறு" என்னும் இலக்கியத்தின்பாற்படுவேம். ஆகவே, அவ்வறிவு எத்துணைச்சிறப்புடையதென்பதும், அங்ஙனம் சிறந்ததை நாம் ஒழித்தல் கூடாதென்பதும், கூடாதாகவே அம்மூவகையானும் ஒருங்கூட்டப்பெற்ற கடவுளுண்மையையும் நாம் ஒழித்தல் கூடாதென்பதும் பிறத்தல் காண்க.

(உ) அறிவாற்றலிற் குறைவுற்றுக்கிடந்த பாலப்பராயத்திலே நாம் அம்மூவகைஏதுக்களாலும் அறிவுபெறுதல்சாலும்; அறிவிற்சிறந்த யௌவனபராயத்தினும் அங்ஙனம் பெறுதல் வேண்டுமோ எனின்; நாம் இவ் யௌவன பருவத்திலும் அவ்வேதுக்கள் வாயிலாக அறிவுபெறுக என்பாமல்லேம். முன்னர்ப் பாலப்பருவத்திலே ஆண்டுப் பெற்றுக்கொண்ட அறிவை, அங்ஙனம்பெற்ற பிறஅறிவுகளை ஒத்து, இப்போதும் எடுத்தாள்க என்கின்றேம். நாம் பாலப்பருவத்திலே பெற்றோர் முதலிய மூவகை ஏதுக்களாலும் கற்பிக்கப்படுவதும், கற்பித்ததைக் கற்பதும், கற்றதை உண்மை என்றுகொள்வதும், கொண்டதை எக்காலமும் எடுத்தாள்வதும் எமதியல்பாம். இவ்வியல்பின்வழியே நாம் பெற்றுக்கொண்ட கடவுட்கியானத்தையும் எடுத்தாண்டு இயற்கைவழிப்போந்த நிலையில் நிற்க என்கின்றுமன்றி, இயற்கைக்குமாறாய் நியாயரகிதமானதோர் கொள்கையைக் கொள்க என்பாமல்லேம்.

(ங) இனிப் பெற்றோராதியர்வாய்ப் பாலப்பருவத்தில் நாம் பெற்றுக்கொண்ட அறிவை இப்போது எடுத்தாளுதல் கூடாதெனின்; நாம் அக்காலத்தே இன்னார் எமதன்னையர், இன்னார் எமது தந்தையர், இன்னார் எமக்கின்ன கிளையினர், இன்னபொருட் கின்னபெயர், இன்னகுறி இன்ன எழுத்து, இன்ன ஊர் இன்ன இடத்துள்ளது, கணிதசாத்திர முறை இன்னது, இன்னார் எமை ஆள்பவர், அரசர்க்குச் செய்பணி இன்னது, குடிகட்குச்செய்முறை இன்னது, என்பனமுதலிய அறிவுகள் அனைத்தையும் யௌவனபராய சலாக்கியம் பெற்றுவிட்டேம் என்னும் மமதைகாரணமாக இழந்துவிட்டு, வெறும் பாண்டங்களாய்ச் சேதன சூனியராய் நடைப்பிணமொத்தியங்குதல் வேண்டுமோ? இவற்றை நாம் ஒழிக்கவேண்டுமென்பதில்லெனின், பின்னை இவைபோன்றே நமக்களிக்கப்பட்ட கடவுட்கியானத்துக்கு மாத்திரம் ஓர் நூதன புறனடை கண்டுகொண்டனிரோ?

நம் பெற்றோராதியர் போதனையை நாம் ஒழிக்கவேண்டும் என்பதில்லை: அவரூட்டிய கடவுட்கியானம் ஆதாரமின்றிக்கிடத்தலின் அதனை ஒழித்தல்வேண்டும் எனின்; நம் பெற்றோராதியர் ஊட்டிய இக்கடவுட் கியானம் ஆதாரமற்றதென்று நீர் கொள்வதெப்படி? அங்ஙனம் ஓர் ஆதாரம் எமக்குப் புலப்படுதலின்மையின் எனின்; நுமக்குப் புலப்படாதன எல்லாம் இல்பொருள்களேயோ? அவ்வாதாரம் புலப்படாதொழிதற்குப் பற்பல ஏதுக்களிருத்தல் கூடும்; ஆதலின் நமக்கவை தோன்றாதிருத்தலும்சாலும்; ஆகவே நாமவற்றை இல்லாதன எனக்கோடலும், அதுகொண்டு கடவுட்பத்தியை ஒழித்தலும் சாலாவாம். இஃதுண்மையாயினும் ஆதாரம் புலப்படாத ஒன்றை நாம் விசுவசிக்கலாமோ எனின்; நாம் புதிதாயொன்றை விசுவசிக்கினே ஆதாரந்தேடவேண்டுவது; கடவுட்கியானமோ நாம் பெற்றோரிடத்துப் பெற்று எம்மால் விசுவசிக்கப்பட்டுவருவது. இங்ஙனம் பெற்றோரிடத்துப் பெறுவனவற்றிற்கு, ஆதாரசகாயந் தினைத்துணையும் வேண்டுவதல்ல. நாம் அவரிடத்துப்பெறும் அறிவெல்லாம் ஆதாரரகிதமாகவேயாம். அங்ஙனம் பெற்றன எவற்றையும், நாம் பின்னைக்காலத்தும் (ஆதாரங்கண்டாலென், காணுதொழிந்தாலென்) உண்மையெனக் கொண்டாண்டு வருவதே எமதியல்பாம். ஆதலின் இப்போது ஆதாரங்காணாமை காரணமாக அவற்றை நாமொழித்துவிடுதல் மரபாகாது. அவை ஆதாரமற்றன என்றாயினும், அன்றேல் ஆதாரமின்றி நம் முன்னவராற் கொள்ளப்பட்டன என்றாயினும் நியாயசகிதமாய் எமக்குப் புலப்படுத்தப்பட்டாலன்றி நாம் அவற்றை ஒழித்துவிடாது, எமது சுபாவிகதர்ம வழிநின்று அப்பெற்றோர் போதனுசம்பந்தமுடைய கடவுட்கியானத்தையும் நம்பி விசுவசிக்கவேண்டுமென்க.

(௬) இளமைப்பருவத்திற் கற்றுக்கொண்டனவெல்லாம் ஆதாரமின்றிக் கொள்ளப்பட்டனவாதலின், வயதின்முதிர்ந்தவுடனே அவற்றை ஒருங்கொழித்து விட்டு வெற்றுப்பாண்ட

மாய்த் திரிதல்வேண்டுமென்பது துணிபல்ல. ஆதாரம் விசாரித்தும் காணுதகைத் தள்ளுதல் வேண்டாவோ எனின்; ஆதாரங்காணுமையின் அதைத்தள்ளுதல் கூடாது. என்னே? ஆதாரங்காணுமை ஆதாரம் இல்லையெனக் காட்டப்போகாது: போகாதாகவே, நாம் ஆதாரமுண்டென நம்பிப்பத்தி செய்துவந்த கொள்கை அழிவுருது: அஃதழிதலின்மையின் நாம் அதைத் தள்ளுதலுங் கூடாது. எங்ஙனமாயினும் அக்கொள்கையிலே எமக்குச் சந்தேகங் கிளருமன்றேவெனின்; ஒன்றைக்குறித்து நாம் சந்தேகிப்பது எப்போது? அதன்மாட்டுச் சபலந்தோன்றினன்றே? இக்கடவுட்கியானத்திலே சபலந்தோன்றுவதெங்ஙன்? இது எம்மினும் எவரினும் அநந்தகோடிமடங்கு அறிவிற்சிறந்த கடவுளாலும், அவர் அருட்பெற்ற திருஞானச்செல்வர்களாலும் அதிப்பிரபல்ய ஆதாரசகிதமாக நாட்டப்பெற்றுளதென்றும், இதனகத்தே எமது கிஞ்சித்புத்திக்கு அதீதமாயுள்ள துறைகள் பற்பலவுண்டென்றும், இவற்றை எமது சிற்றறிவின்பயன் எனக்கொள்வதன்றி ஈச்சுரநிச்சயத்துக்கோர் குறை எனக்கோடல் கூடாதென்றும், நம்பெற்றூர்முதலியோர் போதனையால் நம்பி, அந்நம்பிக்கையை எமதியல்பின்வழி விசுவசித்தற்கடமைபூண்டு, அங்ஙனம் பூண்டபடி அதனை இனிது விசுவசித்துவருவேமாகிய எமக்கு, இப்போது இவ்வாதாரவிசாரமுதலிய அல்ப்ப ஏதுக்களால் கடவுணிச்சயத்திலே சிறிதேனும் ஓர் சபலந்தோன்றுதலும் சந்தேகங்கிளர்தலும் ஒருங்கே கூடாவாம். அதனை முதுமையினுங்கொள்வது, ஆதாரம் விசாரித்துக் கண்டாலே என்னும் நியதி தினைத்துணையும் இருப்பதல்ல. அந்நியதி இல்லாதபோது, நாம் ஆதாரம்விசாரித்தலும், விசாரித்துக் காணுதமாத்திரையானே நாம் கைக்கொண்டொழுகும் அக்கொள்கை பிழைபுடைத்தென்று நீக்குதலும் மரபாகாவாம். நாம் இளமையிற்பெற்ற அறிவு எமக்கு அப்பருவங்காறுமே உதவுக; அப்பால் உதவாதொழிக என்பது எமதியல்புக் கமைந்ததன்று. அஃது (ஆதாரம் புலப்படினென், புலப்படாதொழியினென்) எமக்கு எம் வாழ்நாள்காறும் உதவுவ

தோன்று. இது எமதியல்பின் வழித்தாய மரபு. இம்மர பில்லாக்கால் நாம் எட்டுணையேனும் அறிவுடையேமாதல் கூடாது. நாம் இன்னுருடைய பிள்ளையென்று இளமையிற் கற்றுக்கொண்ட அறிவை, ஆதாரங் காணுமை காரணமாக முதுமையில் ஒழித்துவிட்டுச் செருக்கித்திரிந்தால், நம்மறிவு என்னும்? நங்காயத்தில் அற்பகாயங்கண்டவுடன், தண்ணீர்ச் சீலை சுற்றுகின்றேம். தலையதிர்ந்தவுடன் சுக்கவித்துக் குடிக்கின்றேம். இங்கே தண்ணீர்ச்சீலையின் குணமிது, சுக்கின் குணமிது என்று ஆதாரம் விசாரித்தறிந்தே செய்கின்றனமோ? இல்லை. நாம் இளமையிற் கற்றுக்கொண்ட அறிவின் வழியேயாம். இங்ஙனம் ஒழுகுவாமல்லேம் எனின், நாம் பேரிடர்ப்பட்டு நம்முயிரையும் இழக்கவரும். கணிதத்திலே, கர்னமூல வர்க்கமூலங்களைக் காண்பதற்கு இன்னின்னபடிசெய் என்று ஆசிரியன் கற்பித்தவழிச் செய்த சிறுவன், அறிவின்முதிர்ந்தவுடனே அவ்வழிக்கு ஆதாரங் காணுமை பற்றி (இவ்வாதாரம் எல்லாரும் அறிந்ததல்ல) அவ்வழியை ஒழித்து, கர்னமூல வர்க்கமூலங்களைக் கண்டறியத்தக்கானல்லனுய் முழுமகப்பட்டங்கட்டித் திரிதல்வேண்டுங் கொல்லோ? புவனசாத்திர அறிவுமுழுதும் (பொதுப்படச் சாத்திர அறிவு எல்லாம்) பிறர்கோளை உண்மையென்று விசுவசித்துக் கற்பதனுல் எய்துவதாம். இங்ஙனம் கற்றுன் ஒருசிறுவன் அறிவின்முதிர்ந்தவுடன் அவற்றுக்கு ஆதாரம் காணுமை காரணமாக (அதாவது, தான் போய்ப்பார்த்து, பரீக்ஷித்தறியாமையினுல்) அவை எல்லாம் பிழை என்று தள்ளிவிட்டு மூடேந்திரனுய்த் திரிதல் முறையாகுமோ? உலக இயல்பினையும் மானுட சுபாவிகத்தையும் தினையளவும் சிந்தியாது, எழுந்தமாத்திரையினே நம்மவரிற் சிலர் விதண்டை தொடுக்கின்றுர். இவர் உலகத்திலே நிகழும் வழக்கையும், அவ்வழக்கு மானுட சுபாவிகத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாய் அமைந்துகிடக்குமாற்றையும் சிறிதுபொழுது சிந்தித்து, அந்தமுறையைத்தானே தெய்வங்கொள்கையினும் அமைத்து நோக்குவதுண்டாயின், அக்கொள்கை சிறிதும் துர்ப்பெல

முழுது பேராற்றல்படைத்திருப்பக் காண்பர். நாம் மேலைப்
பல திருட்டாந்தங்களால் விரித்துக் காட்டியவாறு ஆதாரம்
காணாதவழியும் நாம் விசுவசித்தற்கடமைபூண்டுள்ள விஷயங்
கள் பல உண்டு. அவற்றை விசுவசித்தல் (உலகத்திலே நாம்
இயங்குமுறைப்படி) நம்பெருங்கடனாக் கிடக்கின்றது. ஒரு
வைத்தியனிடத்திலே நம்மை ஒப்புவிக்கும்போது, அவன்
தரும் அவுடதங்களை எல்லாம் ஆதாரம் விசாரித்தறிந்த பின்
தானா உட்கொள்வம்? இல்லை. இங்ஙனமே நாம் ஆதாரம்
அறியாதவழியும் கொள்ளவேண்டியன பல உண்டு. அவற்
றுள், இளமையிற்கொண்ட அறிவே விசேடித்தது. அதன்
மாட்டே எமது இயக்கம் அனைத்துந் தொங்கிக் கிடத்தலின்.

அஃதேல், நாம் இளமையிற் கற்றுக்கொண்டன எனைத்
தையும், எத்துணைநியாயங்கிடந்தாலும், தள்ளாது அங்கிகரித்
தெடுத்தாளுதலோ முறை என்பீரேல்; அங்ஙனம் சொன்
னார். யார்? அவை பிழையுடையன என்று நியாய ஆதாரங்
கொண்டு துணிதல் கூடுமாயின், அவற்றை அக்கணத்திற்றா
னே ஒழித்துவிடுக. அங்ஙனந் துணியுமாறில்லையாயின், அவ்
வெல்லாம் எமக்குப் பரமசத்தியமாகவே கிடக்கும்.

(௫) பெற்றாராதியர்வாய்ப்பெறும்அறிவுகளை நாம் கைக்கொ
ண்டெடுத்தாளுவதின்றேல் உலகத்தியங்குதல் கூடாதென்
பது மெய்: ஆகவே, உலகநடைக்கு வேண்டுவனவற்றை மா
த்திரம் கைக்கொள்வம்; அதனுக்கு வேண்டப்படாத ஈச்சுர
விசுவாசத்தைக் கைக்கொள்ளமாட்டேம் எனின்; நாம் பெ
ற்றாராதியர்வாய்ப்பெறும் அறிவு உலகநடைப்பொருட்டுமாத்
திரமேயல்ல. பொதுப்பட எமது அறிவு எனைத்துக்கும் (நம்
பாலியதசையில்) அவரே காரணர். இஃது எமது இயற்கை
நெறியின்வழித்தாயதோர் மரபாதலால் இதன்பால் மேலும்
ஆக்ஷேபந்தொடுக்க இடனேயில்லை. இங்ஙனம் இவர்வாய்ப்
பெறும் அறிவு எனைத்தையும் நாம் கைக்கொண்டு எடுத்தா
ண்டுவரவேண்டிய கடப்பாடு பூண்டிருத்தலை விளக்கிக் காட்

மொறே, உலகநடையால் அக்கடப்பாட்டை நாம் தெரித்து விளக்கியது. உலகநடையால் அக்கடப்பாடு பெறப்படவே, நாம் பெற்றுர் முதலாயினுர்பால் அறிவுபெறும் இயற்கை முறை அனைத்தும் வலியுறுத்துச் சாதிக்கப்பட்டவாறு காண்க. இன்னமும் அவர்வாய்ப்பெறும் அறிவுகள் எமக்கு இகபரம் இரண்டனிலும் பலித்தற்குரியனவாம். இவற்றுட் பரபயனே எமக்கு இகபயனிலும் அத்தியந்த விசிட்டமுடையதாதலின், அப்பயனுக்குரிய அறிவையே நாம் விரைந்து பற்றி அங்கிகரிக்கவேண்டுமென்க. இனி, ஈச்சுரவிசுவாசம் இம்மையினும் பலிப்பதொன்ருகலின், அது உலகநடைக்கும் பெரிது வேண்டப்படுமொறு காண்க.

(சு) இனிப் பெற்றுர்வாய்ப்பெறும் ஈச்சுரவிசுவாசமொழித் தொழிந்த ஏனைய அறிவுகள் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களால் உண்மை என்று காணப்படுதலின் அவற்றை எடுத்தாள்வம். ஈச்சுரவிசுவாசம் அங்ஙனம் இன்மையின், அதனை எடுத்தாளுதல் கூடாதென்பீரேல்; எத்தனையோ கொள்கைகள் அவ்வப்பொழுதிற்றுனே பலித்துத் தமதுண்மையைப் பிரத்தியக்ஷமாகப் புலப்படுத்தாவழியும், அவை பின்னர்ப்பலித்துப் பிரயோசனப்படும் எனக்கொண்டு எம்மால் எடுத்தாளப்பட்டு வருகின்றன. இங்ஙனமே ஈச்சுரவிசுவாசமுமாமென்க. அஃதாவது பிரயோசனந்தான், உண்மைதான், எமக்கு உடனே புலப்படினென், புலப்படாதொழியினென், பெற்றுர்முதலியோர் போதனையை நாம் கொள்ளவேண்டிய காலத்துக் கொண்டு, கொண்டபடி எடுத்தாண்டுவருதல் எமதியற்கையே என்றபடி. இவ்வியற்கைமுறைக்கு அமைவுருதொழிதல் எவர்க்கும் அமையாது. இயற்கைமுறை இங்ஙனம் கிடக்கும்போது யார் யார் எத்துணைப் பிரயாசைப்பட்டாலும் என்செய்யத்தக்கது?

(எ) தத்காலத்துள்ள சுயக்கியானிகள்சிலர், எந்தெந்தவிஷயத்தையும் அவரவரே பரீக்ஷித்தறிந்தாலன்றி உண்மை என

க்கொண்டு விசுவசித்தல் மரபாகாதெனச் சாதிப்பர். இவர் மானுஷ்ய சுபாவத்தைச் சிறிதுபொழுது ஊன்றிச் சிந்தித்து ஆலோசிப்பாராயின், இங்ஙனம் சாதிக்கத் தலைப்படமாட்டார். மனுஷன் தானுகப் பரீக்ஷித்தறிந்து விசுவசிக்கவேண்டிய விஷயங்களுமுண்டு. பிறர் சாக்ஷியங்களை நம்பி விசுவசிக்க வேண்டிய விஷயங்களுமுண்டு. பிறர்சாக்ஷியங்களை நம்பி விசுவசிக்கவேண்டுவனவே பெரும்பான்மைபற்றியன. நீதி ஸ்தலங்களிலே வாதி பிரதிவாதிகட்கிடையில் நிகழும் வியாச்சியங்களை நீதிபதியாயினுன் முடிப்பதெல்லாம் சாக்ஷியங்களை நம்பியேயாம். அங்ஙனமின்றி நீதிபதிகள் எவ்வெவ் விஷயத்தையும் தாமாக நேரே அறிந்தாலன்றி வியாச்சியங்களை முடித்தல் கூடாதெனின், உலகத்திலே நீதிசெலுத்தப்படுதல் கூடாது.' நாம் பொன் வெள்ளி முதலிய லோகங்களையும், மாணிக்கம் வைடூரியம்முதலிய இரத்தினங்களையும், யானை குதிரை முதலிய மிருகங்களையும் விலைகொடுத்துக் கொள்வதெல்லாம் அவ்வப்பொருளை விலைபாணிக்கவல்லாரது சாக்ஷியங்களை நம்பியேயாம். இங்ஙன்மின்றேல், உலகத்து மனுஷர் எல்லாம் எல்லாத்தொழிலினும் வல்லராதல் வேண்டும். இது கூடாதன்றே. கூடாதபோது உலகம் நடைபெறுமாறெங்ஙனே? வித்தியாவிஷயங்களிற்றானும், எமது அறிவுக்கு அதீதமாயுள்ள துறைகளை எம்மின் விஞ்சிய அறிவுடையார்வாய்க் கேட்டு விசுவசிப்பதூஉம் அவர் சாக்ஷியங்களை நம்பியேயாம். இங்ஙனமே மனுஷனுடைய சுபாவத்தையும் நிலையையும் நாம் சீர்தூக்குவம் எனின், அவன் தனது தனித்த அறிவாற்றலின்மாத்திரம் தொங்கிநிற்றல் கூடாதென்பதும், தக்க பிறர் சாக்ஷியங்களை நம்பிக் கோடல் பெரிது வேண்டப்படும் என்பதும் இனிது போதரும். இவ்வாறு நம்பிக் கோடலும் நியாயநெறிநிற்பதோர் முறையன்றி அந்நெறிக்குச் சிறிதேனும் மாறுயதோர் முறையல்ல. மனிதர் எல்லாம் தத்தமதியற்கைமுறைக்கமைந்தவாற்றால் அறிவுபெறுமாற்றை நீதியாகாதென்று நிறுத்தவல்லார் யார்? இனி ஈச்சுரவிசுவாசத்துக்கமைந்த சாக்ஷியமோ நாம் மேலே

காட்டியபடி எம்மால் உண்மை எனக்கொண்டு, கொண்டவாறு எடுத்தாளப் படவேண்டிய தொன்றாகலின், ஏனைச் சாமானிய சாக்ஷிபங்களைப்போலாது மிக வலிபடைத்துள தோர் விசிட்ட சாக்ஷியமாய் அமைந்து நிற்றலுங் காண்க.

(அ) இனி, எவ்வெக்கொள்கையையும் அவ்வப்பொழுதிற்றுனே ஆசங்கித்தல்வேண்டும். ஆசங்கித்து ஆராய்ச்சிசெய்து உண்மைகண்டாலே அதனை நாம் கொள்ளத்தக்கதுஎன்பதும் இக்காலத்துள்ள சில சுவக்கியானிகள் தர்மம். இவ்வாசங்கை எம்மாற் கைக்கொண்டனுசரிக்கப்படாததோர் நவீன கொள்கைக்கு அமையுமேயன்றி, நாம் பண்டுதொட்டுக் கைக்கொண்டனுசரித்து விசுவசித்துப் பத்திசெய்துவரும் ஓர் கொள்கைக்கு அமைவுறாது. ஆசங்கை விசுவாசமற்ற கொள்கைக்கன்றி, விசுவாசமுற்ற கொள்கைக்கு வேண்டப்படாது. நாம் எமது இயல்பின்வழிநின்று அறிவுபெறுமரபு, மேலே விளக்கிக் காட்டியபடி, எமது சுவ ஆராய்ச்சியானுமாகும்; அன்றிப் பெற்றோராதியர் போதனையானுமாகும். இவற்றுள் யாதோராற்றான் யாதோரறிவை யாதொருமுறையிற் பெற்று, அதனை உண்மை எனக்கொண்டு விசுவசித்துவிட்டனமென்றால், பின்னர் அவ்விசுவாசம் பிழையுடைத்தென்று தக்க பிரமாணவாயிலாகக் காட்டப்படுங்காறும், அஃது எமக்குப் பூரணசத்தியமாகவே கிடக்குமாம். அங்ஙனம் பூரணசத்தியமாகக் கிடக்கும் ஓர் கொள்கையைப் பின்னர் நாம் நிரேதுவாய்ச் சங்கித்தல் நியாயமரபாகாது. ஆகும் எனின், எத்துணை நியாய ஆராச்சியான்முடித்த முடிபையும், நாம் மேலும்மேலும் சங்கித்துக்கொணடே இருக்கலாம். என்னை? மானுஷ்யஞானம் அபூரணமுடையதாதலான், நாம் முடிக்கும் எந்தெந்த முடிபும் பிழையுடைத்தாயிருத்தல் சாலுமாதலின். இங்ஙனம் ஆசங்கையையே தலையீடாகக்கொண்டால் அஃதெம்மை எல்லாம் பித்தாட்டின்பாற்படுத்தி எம்மிடத்துச் சிறிதேனும் ஓர் அறிவின்றாக்கிவிடும். நாம் ஒருமுறை ஆராச்சியாற் கண்ட உண்மையை (அதனுக்கு மாறுதோன்று

வழி) எங்ஙனம் கைக்கொண்டு அனுசரித்து வருகின்றேமோ, அங்ஙனமே, நாம் அறிவுபெறுதற்குரிய பிற ஏதுக்களாற் கண்ட உண்மையையும் விசுவசித்துவருதல் வேண்டுமென்க. என்னை ? அவ்வக்காலத்து அவ்வவரிடத்துள்ள அறிவின்வழி ஒழுகுதலே மனுஷர்க்கெல்லாம் கடனாதலின். இக்கடப்பாட்டின்வழி நின்று எம்மால் விசுவசிக்கப்பட்டுவரும் கடவுளுண்மையை இப்போது சங்கித்தல்வேண்டுமென்கை யுக்தமாகாதாம். நாம் ஆசங்கையை நிகழ்த்துமுறைக்கெல்லாம் ஓர் ஓர் எல்லையுண்டு. அவ்வெல்லைகடந்து அதனை நிகழ்த்தப் புகுந்தால், அஃது எமது இயற்கைமுறையை நோக்க, எமக்கே பெருங் கேடுசெய்தலாய் முடியுமென்க.

(கூ) கடவுளுண்மையை நிரேதுவாய்ச்சங்கித்தல் கூடாதெனினும், அவ்வுண்மைக்குப் பிரதிகூலமாந்தகையினவாய நியாயத்துறைகளைக் கண்டாலும் அதன்மீது எமக்குச் சந்தேகங் கிளர்தல்வேண்டாவோவெனின்; கடவுளுண்மைக்குப் பிரதிகூலமாகிய நியாயவாற்றலைக் கண்டால், அதனை உடனேதானே ஒழித்துவிடுக. ஆனால், அவ்வுண்மையை நேரே நிறுத்திமறுக்குமாற்றலில்லதாகியதோர் ஏதுவைக்கண்டு "இது கடவுளுண்மையைப் பிரதிகூலஞ் செய்யினுஞ் செய்யும்" என்று ஐயுற்று, அவ்வையுறவு காரணமாகக் கடவுளுண்மையைச் சங்கித்தல் மரபாகாது. என்னை? கடவுளுண்மை அதிப்பிரபல சத்தியமாமென்று எம்மாற் பரிபூரணமாக நம்பிப் பத்திசெய்யப்பட்டு வருவதொன்று; ஆகவே அதனை யாதோர் ஏதுப் பிரதிகூலம் செய்தல் இல்லை என்பதே எமது விசுவாசமாம். இங்ஙனமாகிய விசுவாசமிருக்கும்போது, அதனை ஓர் ஓர் ஏதுப் பிரதிகூலம் செய்யினும் செய்யும் என்று நாம்துணிதலும், அதுபற்றி அதன்மேற் சந்தேகம் நிகழ்தலும் கூடாவாமாதலினென்க. நன்றுகூறினீர்; அக்கொள்கையைப் பிரதிகூலம் செய்யினும் செய்யும் என்றற்கியைந்த ஏதுவைக் கண்டவிடத்தும், அங்ஙனமாயதோர் துணிவு நம்பாற் சன்மியாதோவென்பிரேல்; அக்கொள்கை சத்தியத்தின் பாற்றாகுமெனுங்

துணிபு எம்மிடத்திருக்கும்போது, அது பிரதிகூலப்படினும் படும் என்றற்கியைந்த ஏது நம்மாட்டுப்பலித்தல்கூடாதாம். என்னை? துணிபு சந்தேகத்தினும் வலியுடைத்தாதலின், நம் மாட்டுள்ள துணிபினால், பின்னர்த்தோற்றற்குரிய சந்தேகம் ஒதுக்கப்பட்டழியு மாதலினென்க. இஃதேல் நாம் ஒருகால் விசுவசித்துள்ள கொள்கையைப் பின்னர் எத்துணை நியாய வாற்றலைக் கண்டாலும் ஒழித்தல்கூடாதோ எனின்; அங்ங னம் சொன்னார் யார்? அக்கொள்கையை நிறுத்திப் பிழைபடு த்துமாற்றலுடைய நியாயமுறையைக் கண்டால், அதனைத் தடையின்றி ஒழித்துவிடுக. அங்ஙனமின்றி, எமக்கு உண்மை யாய்க்கிடக்குமோர் கொள்கையைத் தகுதியும் குறியும் முதலி ய பெலமாத்திரையே பற்றிநிற்கும் சந்தேக ஏதுக்கள்கொண்டு சங்கித்தல் அமையாதாம். என்னை? அக்கொள்கை உண்மை யின்பாற்றும் என நம்பால் முன்னேற்றுள்ள விசுவாசமே அக்கொள்கை பிரதிகூலப்படினும் படும் எனப் பின்னர்த்தோ ற்றத்தக்க சங்கைக்குத்தக்க அவுடதமாமாகலின், இவ்வவுடத த்தை முந்த நம்மாட்டுக்கொண்டுளோமாகிய எம்மைப் பிந்த இச்சங்கைநோய் தாக்குதல் கூடாதமாதலினென்க.

(க0) யாதோர் ஏதுக் கடவுளுண்மையை நேரேநிறுத்தி மறு க்கமாட்டாதாயினும், அதனிடத்தே அக்கடவு ளுண்மையைப் பிரதிகூலம் * செய்தற்கியைந்த தகுதி பெரிது காணப்படுமா யின், அப்போதாயினும் அதனை நாம் சங்கித்தல்வேண்டாவோ வெனின்; எத்துணைப்பெருந் தகுதிகள்தான் காணப்படினும், அவை எல்லாம் அனுமான சங்கைகள் மாத்திரையேயன்றி உண்மைகள் ஆகாவாம். அங்ஙனம் உண்மையிற்குன்றிய ஆற் றலுடைய சங்கைகள், எமக்குப் பூரண உண்மையாய் அமை

* கடவுளுண்மைக்கு மாறாக இப்போது எடுத்தாளப்படும் நியாயங் கள் நாட்டப்படுமிடத்தும், அவை கடவுளுண்மைக்குப் பிரதிகூலமா னவைகள் என்று கொள்ளத்தக்கனவன்று: அனுகூலமாகாதன என் றுமாத்திரம் கொள்ளத்தக்கன. அனுகூலமாகாமை கொண்டு எமது விசுவாசத்துக் கெய்தற்பாலதாகிய இழுக்கென்றுமில்லையாம்.

ந்துகிடக்கும்கொள்கைகளை நிலையழித்தல் சிறிதும் கூடாதென்க. ஆனால் அச்சங்கைகள் அவ்வுண்மைக்கு மாறுபடுங்கால், அவ்வுண்மைகளாற் றாமொதுக்கப்பட்டொழிதலே மரபாமென்பதறிக.

இங்ஙனம் போந்தவாற்றால், நாம் எமதியற்கைமுறைக்கமைந்தபடி நீதியாயதோர் மரபாற் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை, அனுமான சங்கைகளாற் சங்கித்தல் முறையாகாதபடி காண்க. எமக்குச் சங்கை நிகழவேண்டுவது நாம் விசுவசியாததோர் கொள்கையினன்றி விசுவசித்துள கொள்கையினன்றாம். நாம் விசுவசித்துளதொரு கொள்கை, அவ்விசுவாசம் எம்மாட்டுளதாங்காறும் எமக்கு உண்மையாகவே அமையும்: அமையவே, அவ்விஷயத்திலே அதுவோ இதுவோ என்று ஐயுறுதற்கிடனாகத் தோற்றும் சங்கையினை, இதுவென்றே தன்பலங்கொண்டு தன்சார்புற நிச்சயித்துவிடுமாதலினால், விசுவாசத்தின் முன்னர்ச் சந்தேகம் நிலையுதல்யாட்டாதென்பது காண்க. உண்மையைக்குறித்த விசுவாசமுடையானுக்குப் பின்னர்ச் சந்தேகம் நிகழவேண்டியதுதான் பெருநூதனமன்றோ? அவ்வுண்மையை மறுத்தற்கியைந்த ஏதுவைக் கண்டால், அற்றேல் அவ்வுண்மையறிவு நம்பால் அமைதற்கு வருவாயாயுள்ள ஏதுவில் யாதானுமோர் தவறுளதாந்துள்ளமையினைக் காண்பதுண்டானால், அப்போது அதை ஒருங்கே ஒழித்துவிடலாம். அங்ஙனமின்றி நமக்கு உண்மையாய்க்கிடப்பதொன்றை, உண்மையின்முன்னர் நிலைநிற்கவல்லதல்லதாகிய சந்தேகம்பற்றிச் சங்கிக்கத் துணிதல் விவேகிகள் கூற்றாகாதென முடிக்க.

(கக.) இனி நாம் உண்மை என்று விசுவசித்துப் பத்தி செய்துவரும் ஈச்சுரவுண்மை முதலிய பெற்றோராதியர்போதனையைப் பிழையுடைத்தென்று நியாயங்கொண்டொழிக்க வருமிடத்தும் தீர்க்காலோசனைசெய்து சிந்தித்துத் தெளிந்தே ஒழிக்கவேண்டுவதன்றி நேர்ந்தநேர்ந்தபடி அதனை ஒழித்துவிடுதல் முறையாகாது. பெற்றோராதியர் போதனை

கள் எம்மால் விசுவசிக்கப்பட்டு எமக்கெல்லாம் பரமசத்தியங்களாய் அமைந்துகிடக்குமாற்றால், அவ்வுண்மைகளிற்கொண்ட அபிமான விசுவாசங்களை அல்ப்பகாரணங்களால் தளர்ப்புறவொட்டாது சாவதானமாகக் காத்து, அப்போதனைகளின் ஆற்றலையும், அவற்றை ஒழித்தற்கு ஏதுவாக்கொண்ட நியாயங்களின் ஆற்றலையும், அந்நியாயங்களைக்குறித்து நாம் செய்துகொண்ட விசாரத்தின் ஆற்றலையும், சித்தசமாதானத்தோடு சீர்தூக்கிப்பார்த்து, அப்பால் அப்போதனைகளை ஒழித்தல் தகுதியென்று கண்டாலே, அவற்றை ஒழிக்கத்தக்கது. இங்ஙனம் காணுதல் இல்லையாயின், எமது விசுவாசம் பழமைபோல வலிகொண்டே நிலைபுதலுற்றுக் கிடக்கற்பாற்று. நாம் விசுவசித்துப் பத்திசெய்து உண்மை எனக்கொண்டாடும் ஓர் கொள்கையைத் தக்க நியாயமின்றியும் தக்க ஆராய்ச்சியின்றியும் ஒழித்துநிற்றல், எமதியற்கைமுறையை நோக்குங்கால், சிறிதும் முறைபாகாது. என்னை? இங்ஙனமே நாம் ஓர் ஓர் காலத்து ஓர் ஓர் ஆற்றாற் பெற்றுக்கொண்ட அறிவுகளை நம்மனத்தே நேர்ந்தநேர்ந்தவாறு கிளரும் ஆதாரமற்ற அல்ப்ப காரணங்களால் சங்கித்து ஒழிப்பதுண்டேல், நாம் உலகத்திலே அறிவுடையேமெனப்படுதலும், அவ்வறிவுகொண்டு சாகியசஞ்சாரஞ்செய்தலும் கூடாவாம்.

(கஉ.) இனி மானுஷ்யஞான விருத்திக்கு அவ்வவர் இயற்கைநெறியின் வழித்தாய பெற்றோராதியர் போதனைமாத்திரமல்ல, சுவ ஆராச்சியும் ஓர் சிறந்த காரணமேயாம். ஆதலால் இவ்விருநெறிப்பட்ட ஏதுக்களையும் அது அதுக்குத் தக்கவாறு சாதனைசெய்து நமது அறிவை விருத்திசெய்துகொள்ளுதல்வேண்டும். ஆனால் அங்ஙனம் விருத்திசெய்யுமிடத்து இவ்விரண்டு ஏதுக்களையும் ஒன்றோடொன்றை முரணவிடாது சாவதானமாகக் காத்துக்கோடல்வேண்டும். சுவ ஆராச்சியைச் சாதனைசெய்யுமுகத்தால் பெற்றோராதியர் போதனையைத் தள்ளிவிட்டொழுகுதல் மரபாகாது. பெற்றோர்போதனை தக்க சுவ ஆராய்ச்சியாற் பிழைபடவெதுண்டா

யின், அதனைப் பெற்றூர்போதனை என்றமாத்திரையானே போற்றிக்கொள்ளுதலும் மரபாகாது. சுவ ஆராய்ச்சியை யும் இயன்றமட்டும் எடுத்தாள்க. பெற்றூராதியர் போதனை யையும் பூரணமாக அனுசரிக்க. ஆனால், ஆராய்ச்சிகாரண மாகப் பெற்றூராதியர் போதனை தவறுடைத்தெனப் பிரபல நியாயசகிதமாகப் புலப்படுவதுண்டேல், அதனைத் தடையி ன்றி ஒழித்துவிடுக. அங்ஙனம் புலப்படுதல் இல்லையாயின், அப்போதனையைக் கிஞ்சித்தும் அலக்ஷியஞ்செய்யாது அனு சரித்தே வருதல்வேண்டும் என்க. இங்ஙனமே கடவுணிச்ச யமும், நம்மறிவுக்குக் காரணராய் அமைந்துள்ள நற்பெற்ரு ராதியர் போதனையால் நாம் உண்மை என்று நம்பிப் பத்தி செய்துவருவது ஒன்ருகலானும், அதனைத் தடைசெய்யு மோரேதுவின்மையானும், அதனை நாம் சங்கியாது எடு த்தாண்டு வருதல் வேண்டுமென்பது போந்தபடி கண்டு கொள்க.

(கங.) மானுடதேகம் எடுத்தார் எனைவர்க்கும் சுவாதீ னமர்னதோர் அறிவாற்றல் கொடுக்கப்பட்டிருத்தலின், அவ் வாற்றலை இயன்றமட்டும் சுவ ஆராய்ச்சியான் விருத்திசெய் தலே மரபு. இவ்வாராய்ச்சியின்றிப் பெற்றூராதியர் போத னைமாத்திரையிற் தொங்கிநிற்கும் கிள்ளையுணர்வை நாம் ஈண் டுத் தாபிக்கப்புகுந்தேம் என்று கருதற்க. எந்தெந்தக்கொ ள்கையையும் உள்ளிட் டாராய்ந்து, நியாயவாற்றல்களைச் சாதனசாத்தியமுறையான் அறியும் அறிவே உண்மை அறி வெனப்படும். இவ்வறிவை எவ்வெவரும் தங்கள் தங்களால் இயன்றளவு ஈட்டிக்கொள்ளுதல்வேண்டும். ஆனால் இவ்வறி வின்மை காரணமாக, நாம் எமது இயற்கைவழிநின்று பெற் ருராதியர்வாய்ப்பெற்ற அறிவையும் ஒழித்துவிடுதல் கூடா தென்பதே நாம் சாதிப்பது. சுவ ஆராய்ச்சி பெற்ருராதியர் போதனை ஆகிய இரண்டும் நமது அறிவுக்கு வருவாய்களாம். இவற்றுண் முன்னையதாற் பின்னையது நியாயங்கொண்டு மறுக்கப்பட்டான்மாத்திரமன்றி, மற்றெக்காலத்தும் அஃதே

ம்மால் எடுத்தாளற்பாற்றென்பதே நாம் வற்புறுத்துவது. இன்னமும், இச் சுவ ஆராய்ச்சிக்கண் நாம் விசேடமாகக் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. நாம் ஆராய்ச்சியையே பெரிது பொருட்படுத்தி அதன்மீது அளவைகடந்த ஆவல்மீதூரப்பெற்று நிற்பமென்றால், எமக்கு எவ்வெத்துறைகளினும் நியாயவரையறைகடந்த சந்தேகம் விளைந்து பெருங் கேடு செய்துவிடும். ஆதலால் நாம் எமது அபூரணத்வநிலையையும், சுவ ஆராச்சியான்மாத்திரமன்றிப் பிறவாற்றானும் நாம் அறிவுபெறுதற்கமைய பூண்டுள எமதியற்கைமுறையையும், இங்ஙனம்பெறும் அறிவுகள் எமக்கு இன்றியமையாது வேண்டிக்கிடக்குமாற்றையும், ஆகவே இவ்வறிவுகள் எம்மளவிற் படைத்துள அத்தியந்த விசிட்டத்தையும் பலமுறை சிந்தித்து, நாம் செய்யத்தொடங்கும் ஆராய்ச்சியால் மேலைக்காட்டிய சபல சந்தேகங்கள் உற்பத்தியாகி நம்மாட்டுள்ள மற்றை அறிவுகளை வாளாபழுதுபடுத்தாமாறு சித்தசமாதானம் என்னும் கலினம்பூட்டியே ஆராய்ச்சியை நிகழ்த்தல் வேண்டும் என்பதறிக. இச்சந்தேகப் பேரிழுக்குப்பற்றியே சமயங்களும் விசுவாசத்தைப் பெரிது பரிபாலித்து வற்புறுத்துமாறென்பது காண்க.

(கசுஎ.) இனிச் சிலர் நாம் எல்லாம் ஈச்சுரவிசுவாசத்தில் அழுந்திநிற்றல் நம்பாலுள்ள பக்திவிசுவாசம்பற்றியே என்றும், இப்பக்திவிசுவாசங் காரணமாக நாம் நியாயத்துறைகளைச் சிந்திக்கிலம் என்றும் கூறுகின்றனர். நாம் நியாயத்துறைகளைச் சிந்தியாமை யாங்ஙனமோ நாம் அறிகிலம். அது கிடக்க. நாம் உண்மை எனக்கொண்டதோர் கொள்கையிலே பக்திவிசுவாசங் கொள்ளுதல் நீதிதானே. பின்னை அப்பக்தி விசுவாசம்பற்றி நம்பாற் குறைசுமத்தல் எவ்வாறோ? அன்றியும் பக்திவிசுவாச நியாயங்கண் மூன்றும் தம்முண் மாறுபாடுடையனவல்ல. அவை ஒன்றற்கொன்று அனுகூலமானவைகள் என்றே கூறத்தகும். நியாயவாற்றலால் நிச்சயித்ததொன்றை விசுவாசத்தால் நம்பிப் பத்தியால் அபி

மானிக்கின்றும். பக்திவிசுவாசமில்லாக்கால் நியாயமுடிபாற் பிரயோசனமேயில்லை. நியாயவழிப்போந்ததொரு கொள்கையை விசுவசித்தலும் அபிமானித்தலும் சுகுணதர்மங்களேயாதலின், முறைபிறழாப் பக்திவிசுவாசங்கள் சிறிதும் குற்றத்தின்பாற்படாது குணமென்றே பாராட்டத் தக்கன.

(கரு.) இப்பத்திவிசுவாசங்களின்றி ஆராய்ச்சிமாத்திரையால் உண்மையைக் கடைப்பிடித்துப் பயன்படுத்துவது ஒருங்கே கூடாது. என்னை? சந்தேகமேற்கொண்டு நமது அறிவாற்றல் ஆராய்ச்சியிற் றலைப்படுமாயின், எந்த எந்த உண்மையைக் கண்டாலும் அது சந்தேகத்தான் மொத்துண்டு தாமரையிலைச் சலம்போற் தளம்பும். மானுஷ்ய ஞானம் வரையறைப்பட்டதும் அபூரணத்துவமுடையது மாதலின், எந்த எந்த முடிபும் பிழைபுடைத்தாதல் சாலுமெனச் சங்கித்தல் இனிது கூடுமோம். இவ்வியல்பிற்றாய சங்கை பக்திவிசுவாசமின்றேல் பெருங் கேடுசெய்து எமக்குப்பரமசத்துருவாகவே அமையும். நியாயவாற்றல் எமக்குச் சிறிதுநேரத்துக்குப் புலப்படுமாயினும், அவ்வாற்றலைப்பற்றிநிற்கவல்ல பத்திவிசுவாசம் எம்மாட்டில்லையாயின், அது பாசிபடுகல்லெனச் சட்டென நீங்கிவிட, பழமைபோற் சந்தேகம்மூடி எம்மை எல்லாம் பேரிடர்ப்படுத்துவிடும். இதனுக்கு ஆராய்ச்சியிற்றலைப்பட்டார் அனுபவசாக்ஷியங் கூறுவர். ஒருமுறை நியாயநெறிநின்று பெற்ற துணிபைப் பத்திவிசுவாசத்தால் பந்தித்து வைத்தாலன்றிப் பிரயோசனமின்றும். பத்திவிசுவாசபந்தனமில்லாக்கால் நமக்கு நியாயவழித்தோன்றிய துணிபுகள் பிரசண்டமாருதத்துப்பட்ட பூழைபோல் சந்தேகச்சூறையால் ஒதுக்கப்பட்டொழியும் என்பது சத்தியம்.

(கசா.) பத்திவிசுவாசங்கள்தாமும் நியாயமரபின்றி அமைதல் பெரிதும் சாலாதாம். எமது அறிவிற் குற்றமாகத்தோற்றுவதோர் கொள்கையை, யாதானுமோர் நியாயமின்றிக்

குணமுடைத்தென நம்பிப் பத்திசெய்தல் சிறிதும் கூடாது. அங்ஙனம் நம்புகின்றேம் எனக் காட்டுவதுண்டெனினும், அது போலிமாத்திரையன்றி உண்மையாகாது. நாம் எல்லாம் அறிவுபெறுமுறைக்கமைந்த பெற்றார்போதனை, உலக வழக்கு, சுவ ஆராய்ச்சி என்பனவற்றுள் யாதோராற்றான் ஓர் கொள்கைக்கமைந்த அறிவை முன்னர்ப்பெற்று, பின்னர் அவ்வறிவுகாரணமாக அதன்மாட்டோர் நாட்டமுண்டாயினே நாம் அதனை விசுவசித்தல் கூடும். ஆகவே விசுவாசத்துக்குப் பெரும்பான்மைபற்றிய ஆதாரம், அவரவர் இயற்கைமுறைக்குத் தக்கபடி நீதியாயதோர் மரபாற் பெற்றுக்கொண்ட அறிவேயாதலின், அதனை நியாயவிருத்தமாயதோர் துறை எனக் கண்டித்தல் சாலாமை காண்க.

(கஎ.) கடவுணிச்சயத்துக்கமைந்த நியாய ஆதாரங்களைக் கண்டுதான் அதனை விசுவசிப்பார் எல்லாம் விசுவசிக்கின்றனரோ எனின், ஒன்றனுண்மையை விசுவசிப்பதற்கு அவ்வுண்மைக்கியைந்த நியாய ஆதாரங்கள் எப்போதும் வேண்டற்பாலனவல்ல என்பது முன்னர்க்காட்டி இருக்கின்றாம். ஒரு கொள்கைக்கு இயைந்த நியாயத் துறைகளை நாம் நேரே பிரத்தியக்ஷமாகக் கண்டறிந்தே அதனை விசுவசிக்கவேண்டிய தருணங்களுமுண்டு. அவற்றை நேரே காணுதவழியும், பிறர்சாக்ஷியவாயிலாற்றான், அன்றி நாம் அறிவுபெறும் இயற்கைமுறைக்கமைந்த பிறிதோராற்றாற்றான், அக்கொள்கை உண்மையின்பாற்றென்னும் அறிவைப்பெற்று விசுவசிக்கவேண்டிய தருணங்களுமுண்டு. இங்ஙனம் சாக்ஷியாதிகள் வாயிலாக ஒன்றனுண்மையை விசுவசிப்பதும் நியாயவழிநிற்பதோர் மரபேயாதலின், இவ்வாறே நியாயவழிநின்று கொள்ளப்பட்ட ஈச்சுரநிச்சய பத்திவிசுவாசங்களைக் கண்டித்தல் நெறியாகாதென்பதே நாம் சாதிப்பது.

(கஅ.) ஆனல் நாம் ஒருகால் விசுவசித்துப் பத்திசெய்துவிட்டதொரு கொள்கையிலே கொண்டுள அபிமானவயிரம்,

அதன்மாட்டுப் பின்னர்த் தோன்றும் குற்றங்களையும் குணமாக்கொள்ளாவே எம்மை ஏவும். இவ்வேவுதலுக்கமைதலே குற்றத்தின்பாற்று. விசுவாசம் நியாயநெறியோடு கூடிச் செல்லவேண்டுவதன்றி அதனோடு முரணுதல் நீதியாகாது. நாம் விசுவசித்துப் பத்திசெய்துவரும் ஒரு கொள்கைதானும் பிழை என்று நியாயமுகத்தாற்றுணிதல் கூடுமாயின் அதை அக்கணத்திற்றானே ஒழித்துவிடல்வேண்டும். ஆனால் யார் யாரும் யாதொருகொள்கையை உண்மை என்று நம்பி விசுவசித்துவிட்டால் அஃது அவர்க்கெல்லாம்சத்தியமேயாகும். ஆகவே அதன்மாட்டோர் அபிமானமுண்டாதல் நியதியும் நீதியுமேயாம். இவ்வபிமானம் உண்மை எனக்கொண்டதிற் கொண்டதோர் அபிமானமென்றால் இது பெரிது போற்றத் தக்கதே. இங்ஙனம் போற்றவேண்டிய அபிமான விசுவாசங்களை நாம் நினைந்தநினைந்தபடி நீக்கவிடாது, அவற்றுக்கு விரோதமாய நியாயங்களைக் கண்டவிடத்தும், அந்த நியாயங்களைத் தக்கவாறு ஆராய்ந்து முடித்தன்றி, நாம் கொண்டிருந்த பத்திவிசுவாசங்களை நீக்குதல் நெறியாகாது.

(கக.) நாம் ஒருகொள்கையை விசுவசித்துப் பத்திசெய்தற்பொருட்டு, அக்கொள்கை உண்மை என்பதற்கியைந்த அறிவு நம்பாற் தோன்றி, பின்னர் அவ்வறிவுகாரணமாக எழுவதோர் அபிமான உணர்ச்சி பிறந்து, பின்னர் அவ்வுணர்ச்சி காரணமாக ஓர் விசுவாசங்கிளர்ந்து, அதன்பின்னரே அதன் மாட்டோர் பக்தியுண்டாம். இங்ஙனம் உண்டாய பக்தியைப் பின்னர்ஒழித்தற்கும் இந்தமுறையே நம்பால் ஓர் எதிர்ப்பக்தி தோற்றல்வேண்டும். அஃதாவது, நாம் முன்னர்க்கொண்டிருந்த பக்தி தக்கதன்றென்பதற்கியைந்த அறிவு தோன்றி, பின்னர் அவ்வறிவின் உண்மைநிலையைக் குறித்ததோர் உணர்ச்சியுண்டாய், பின்னர் அவ்வுணர்ச்சிகாரணமாக அவ்வெதிர்க்கூற்றில் ஓர் விசுவாசம்பிறந்து, அவ்விசுவாசங் காரணமாக ஓர் பக்தி கிளர்தல்வேண்டும். அப்போதே நாம் முந்திய பக்தியை ஒழித்தல் சாலும். கடவுட்பத்திக்கு மாறாய் இங்

னுணர் தோற்றிய யாதொரு அறிவு, உணர்ச்சி, விசுவாசம், பக்தி இல்லாதிருக்கும்போது, நாம் முந்தியபக்தியை ஒழிக்கின்றிலம் என்றும், அப்பக்திகாரணமாகவே நாம் கடவுளுண்மையைக் கைக்கொண்டுள்ளோம் என்றும் நம்பாற் குறைசுமத்துதல் நீதியாகாதாம்.

(௨௦.) இன்னமும், நாம் ஒருகால் ஒரு கொள்கையை விரோதிப்பதுண்டாயின், பின்னர் அதன்பால் உண்மைகாணப்பட்டுழியும் அதனைப் பற்ருது உவர்ப்பதும்; நாம் ஒருகால் ஒருகொள்கையை விசுவசித்துவிட்டனமென்ருல், பின்னர் அதனிடத்து நியாயத்தவறு காணப்படுமிடத்தும், அதனை ஒழித்துவிடாது முன்போற் பேணிக்கொண்டேநிற்பதும், நமது மனதுக்கியல்பாதலால், நியாயத்துறைகளைக் கண்டவிடத்து, அதனை மீட்டும் மீட்டும் அழுத்தி அதன்வழி ஒழுகுமாறு நமது மனத்தைப் பழக்கிக்கொள்ளுதல் வேண்டும். இனி, நியாயம் முதலிய ஏதுக்களின்மை காரணமாக, நமது சித்தம் நம்புதற்கு ஒருப்படாத கொள்கையைத் தானும் அது சரி என்றே மீட்டும் மீட்டும் நினைப்பதனுல், சித்தத்தின்வலி படிமுறையே குன்றிக் காலாந்தரத்தில் அது சரி என்னும் விளக்கமே நமது மனத்திற் படிந்துவிடும். ஆதலால் நியாயவிருத்தமாத் தோன்றுவதைத் தொடக்கத்திற்ருனே நீக்கிவிடுதல்வேண்டும். இங்ஙனமே நியாயமரபாயதோர் கொள்கையையும், நாம் நமது மனம்போனவாறு சங்கிப்பதனுல், அதன்மாட்டுள விசுவாசம் நிலைதளம்பிக் குறைந்துவிடும். ஆதலால் அங்ஙனம் சங்கித்து நமது அறிவைப் பழுதுபடுத்தாது, நாம் கொண்டுள கடவுட்கொள்கை நியாயமரபின்வழியாய்க் கொள்ளப்பெற்றமையின், அதனை (அதனுக்கு மாறுகாணுங்காறும்) எடுத்தாண்டுவருதலே நீதி என்பது காண்க.

## ௨-ம் அதிகரணம்.

(க.) இனி மனுஷன் கிஞ்சிஞ்ஞன். இவன் அறிவு இப்பூமியிலுள்ள ஓர் சிறுகூற்றின் அதிசய நூதனங்களைத்தா

னும், ஒருங்களந்தறியும் ஆற்ற லுடையதன்று. ஆகவே இது பிரபஞ்சமனைத்தையும் ஒன்றொழியாது ஒருங்களந்தறிவது சிறிதும் கூடாதாம். இது கூடாதபோது, கடவுளை யாண்டுந் தேடி ஆராய்ந்தார்போன்று, அவரை இல்லை என்று நிச்சயித்தல் சிறிதும் அமையாதாம்.

(உ.) பிரபஞ்சத்தைத்தான் ஒருங்களந்தறிவ துண்டெனினும், கடவுளை நமது ஆராய்ச்சியாற் காண்டல் கூடாது. என்னை? அவர் எமது சிற்சத்தியால் ஆராய்ந்தறியத்தக்க இயல்புடையர் அல்லர். இவ்வியல்பின ரல்லாத கடவுளை நாம் எக்காலத்தாயினும் ஆராய்ச்சியான் இல்லை எனச்சாதித்தல் கூடாது. கூடாதபோது கடவுள் உண்டெனக்கொண்ட நம் பெற்றோர்கொள்கை அழிவுறுதல் இல்லை. ஆகவே, அக்கொள்கையை நாம் கொள்ளாதொழிதலும் சங்கித்தலும் மரபாகாவென்க.

(௩.) கடவுள் எமது சிற்சத்தியால், ஆராய்ந் தறியப் படாத இயல்புடையராவரேல், எமதறிவுக்குப் புலப்படாதார் எனல்வேண்டும். இங்ஙனம் எமக்குப்புலப்படாத ஒரு வஸ்துவை நாம் விசுவசித்தல் எங்ஙனம் என்பிரேல்; நாம் விசுவசிப்பதெல்லாம் எப்போதும் எமது அறிவுக்கு நேரே புலப்பட்ட பொருள்களைத்தாமோ? விக்டோரியா இராணி என்பார் ஒருவர் இருக்கிறார் என்று விசுவசிக்கும் சனங்கள் எல்லாம், அவரைச் சென்றுகண்டு தம்மறிவுக்கு நேரே புலப்படுத்தியபின்தான் அங்ஙனம் விசுவசிக்கின்றாரோ? இல்லை. அவ்விராணியைக் குறித்துச் சிலர் சொல்லக்கேட்ட மாத்திரையினே விசுவசித்தல்போல, கடவுளைக் குறித்தும் நம் பெற்றோர் முதலியோர் சொல்லக்கேட்டு விசுவசித்தல் இனிது கூடும் என்க.

(௪.) கடவுள் நம்மனோரறிவுக்குப் புலப்படா இயல்புடையராவரேல், அவர் நம் பெற்றோராதியர் அறிவுக்குப் புலப்பட்டதுதான் எங்ஙனம் என்பிரேல், கடவுளை நாமாகத்தேடிக்கா

ண்டல் கூடாதென்பதன்றி, அவர் தமதடியருட் சிறந்தாராயி னூர்க்குத் தாமாக வெளிவந்து அருள்புரியும் ஓர் அருட்குண முமுடையர். ஆதலின் நம்முன்னோர் அவ்வாற்றான் அவரை முந்த அறிந்து, பின்னை எமக்கு அவரைப்பற்றிய அறிவை அளித்திருத்தல் கூடுமோம். அன்றியும் கடவுளைக் கண்டே அவருண்மையை நிச்சயித்தல்வேண்டும் என்பதூஉந் துணிப ல்ல. காரணத்திருந்து காரியந்தாபிக்கப்படல்போல், காரிய த்திருந்து காரணந்தாபிக்கப்படலும் வழக்கேயாம். ஆதலின் நம்முன்னோர் பிரபஞ்சமாகிய காரியத்திருந்து கடவுளை நிச் சயித்திருத்தல் பின்னும் கூடுமோம். ஆகவே, நம்முன்னவர், பிரத்தியட்ச அனுமானப் பிரமாண்யதாரகமாகக் கடவுளுண் மையை நிச்சயித்தற்குத்தக்க அமைதி கிடத்தலின், அவர்க்கு அவ்வறிவு எங்ஙன் அமைந்தது என்று நாம் சந்தேகிக்க வேண்டா.

அன்றியும் நம்முன்னவர்க்கு இவ்வறிவு எங்ஙன் எய் திற்று என்னும் ஆதாரசந்தேகம், அவ்வறிவை நாம் கொள்ளா தொழிதற்கு நியாயம் ஆகாது. நம்பெற்றூர் எமக்கீட்டிவைத் ததோர் நிதி, அவர்க்கு அமைந்தவாறு எங்ஙன் என்று நாம் அறியாமைகொண்டு, எம்மாற் சுதந்தரியா தொழிக்கப்படுதல் இல்லை.

(௫.) அற்றன்று, கடவுள் வாக்கு மனோதீதர் எனப்படுவ ரன்றோ? இங்ஙனமானூர் ஒருவரதுண்மையை நாமாவது நம் முன்னோராவது அறிதலும் விசுவசித்தலும் எங்ஙனம் என்பி ரேல், கடவுளுடைய இலக்ஷணங்களை எல்லாம் நாம் ஒன் றுெழியாது ஒருங்களந்தறிந்து அவர் இன்னபடியினர் என்று முற்றக்கிரகித்து நிச்சயிக்கவல்லுநம் அல்லேமாதலினே, அவ ர், எமது வாக்குமனங்கட்கதீதர் எனப்படுவர். இதனால் இங் ஙனமானூர் ஒருவர் இருக்கிறூர் என்பதும் எமது அறிவுக்குப் புலப்படாதென்பது பெறப்படாது. “வாக்குமனோதீதர்” என் பதன்பொருள் வாக்குமனங்கட்குத் தோன்றூதார் என்பத ல்ல; வாக்குமனங்கட்கு முற்ற அமையாதார் என்பதேயாம்.

கடவுளுடைய இயல்பை நிச்சயித்தற்கே அவருடைய இலக்ஷணங்களை எல்லாம் நாம் ஒருங்குகிரகித்தறியவேண்டியது. அவருடைய உண்மையை நிச்சயித்தற்கு அது வேண்டப்படுவதன்று. அவ்வுண்மையை நம்முன்னோர், நாம் மேலேக்காட்டியபடி, பிரத்தியக்ஷ அநுமானப் பிரமாணங்கொண்டு அறிந்து விசுவசித்தல் கூடும் என்பதும், அன்னோரது வழித்தோன்றல்களாகிய நாமும் அவர்வாயிலாக அவ்வறிவைப்பெற்று விசுவசித்தல் அமையும் என்பதும் அமைந்தபடி காண்க.

(௬.) எமது அறிவுக்கு அமையாத ஒன்றை நாம் அறிதலும் விசுவசித்தலும் எங்ஙனம் என்பிரேல், இது கூடாதேயோ? வீசகணித அறிவு ஒரு சிறுவனது அறிவுக்கு அதீதமாயினும், அங்ஙனம் காடின்னியமானதோர் நூலுண்டென்னும் அவ்வுணர்ச்சி அச்சிறுவனுக்குப் புலப்படுதல் இனிது சாலுமன்றோ? அதுபோல், கடவுளிலக்ஷணங்கள் எமது அறிவுக்கு அமையாவாயினும், அங்ஙனமாய இலக்ஷணங்களையுடையார் ஒருவர் உளர் என்னும் உணர்ச்சி எமதறிவுக்கு அமைதலும் நாம் அதனை விசுவசித்தலும் இனிது சாலும் என்க. ஒன்றனுண்மையைக்குறித்து நாம் அறிதற்கு, அதன் இலக்ஷணங்கள் அனைத்தையும் மயலறத் தேர்தல்வேண்டும் என்பது மரபன்று.

(எ.) இது முறையே: ஆயின் கடவுள் சிலர்க்கு வெளிவந்து புலப்படுவர் என்று மேலேக்கூறினீர் அன்றோ? வாக்குமனதீதர் அங்ஙனம் புலப்படுமாறு எங்ஙனம் என்பிரேல், கடவுள் சிலர்க்கு வெளிவந்தமாத்திரையானே, அவரதுலக்ஷணங்கள் ஒருங்களந்தறிந்து கொள்ளப்படமாட்டா. ஆனபின் அவரது வாக்குமனதீதலக்கணம் பிறழ்தலும் இல்லை என்க. கடவுள் வாக்குமனதீதராயினும், தமதடியாருட் சிறந்தார்க்குத் தாம் ஒருவாறு புலப்படும் ஓர் அருட்குணமுமுடையர். இங்ஙனம் ஒருவாறுபுலப்படல் ஒருங்குபுலப்படல் ஆகாது. ஆகாதபோது அவருடைய வாக்குமனதீதலக்ஷணமும் அருட்குணமும் மாறுபடாமை கண்டுகொள்க.

(அ.) இவற்றால், கடவுள் வாக்குமனாதீதரும், எமதாற்றலால் ஆராய்ந்தறியப்படாத இயல்புடையருமாயிருப்பினும், அவரதுண்மையை நம்முன்னோரும் நாமும் அறிந்து விசுவசித்தல் அமையுமென்பதும், அங்ஙனமாயகடவுளை நாம் நமது புல்லிய ஆற்றல்கொண்டு நாடிக்காண்டல் கூடாமையின், அவரை எப்போதாயினும் இல்லை எனச்சாதித்தல் இயலாதென்பதும், இயலாதாகவே நம்பெற்றார் நமக்களித்த கடவுட்கியானம் அழிவுறாதென்பதும், ஆகவே நாம் அதனை ஒழித்தல் கூடாதென்பதும் கண்டுகொள்க.

## ௩-ம் அதிகரணம்.

(க.) உலகத்திலே அறிவொளிவீசப்பெற்று விளங்கும் சகலதேசத்துச் சகல சனங்களாலும் இக்கடவுளுண்மை விசுவசிக்கப்பட்டுவருகின்றது. அங்ஙனம் விசுவசிக்கப்பட்டுவருவதும், எம்மாலும் எவராலும் இக்காலம் என்று வரையறுத்தற்கரிய அக்காலந்தொட்டு; அதுவும் அவ்விசுவாசம் இடைத்தோன்றியதன்று, ஆதிகாலந்தொட்டது, என்னும் சாதாரணாங்கீகாரத்தோடு.

நாம் எமக்கு வழிகாட்டிகளாகக் கொள்ளவேண்டுவது, எமதூரையும் எமது காலத்தையுமேயாகவும், இவற்றோடமையாது, அறிவாற்சிறந்த சகலதேசத்தாலும் பண்டுதொட்டுக் கடவுளுண்மை கைக்கொண்டு அங்கீகரிக்கப்பட்டு வருதலின், அதனை நாம் சிறிதும் தாழ்க்காது அங்கீகரித்தல்வேண்டு மென்பது தக்கநியாய சகிதமாக அமைந்து கிடத்தல் காண்க.

(உ.) அந்தமான்தீவார் முதலிய சனங்கட்குக் கடவுளைப்பற்றிய அறிவு சிறிதுமில்லையாதலின், அவ்வறிவு சகலதேசத்தாரிடத்தும் உண்டென்பதெங்ஙனம் என்பீரேல்; நாம் எமக்கு வழிகாட்டிகளாகக் கொள்ளக்கிடப்போர், அறிவிற் சிறந்தாரன்றி, அந்தமான்தீவார் முதலிய இருகால் விலங்கு

கள் அல்ல. ஆதலினே, நாம் "அறிவொளிவீசப்பெற்று விள ங்கும் சகலதேசத்துச் சகலசனங்களும்" என்றும். ஆதலின், அந்தமான்தீவார் முதலிய அந்தகர் கொள்கையின்வழி நில் லாது, அறிவாலும் பிறகாரணங்களாலும் சிறந்த அறிவுடை யுலகம் சொல்லுமாற்றில் நிற்றலே விவேகத்தின் பாற்றும்.

(௩.) இவைர ஒழிக்கினும் ஒழிக்க; பௌத்தர் முதலிய நாகரிகமுடையாரும் கடவுளுண்மையை மறுப்பரன்றே எனின், பௌத்தர் கடவுளுண்மையை மறுத்தலும் செய்யார் நிறுத்தலும் செய்யார்; ஆகவே அவரது சாக்ஷியம் ஈண்டைக் கடுப்படுதொன்றன்றும். ஆயினும், அந்தப் பௌத்தர்தாமும் பிரபஞ்சதோற்றங்கட்கெல்லாம் ஓர் ஓர் காரணர் உண்டெ ன்றே சொல்வர். அவ்வளவே எமக்கிப்போது வேண்டப்படு வது. அந்தக் காரணரும் நாமும் இறுதியிலே சூனியதசையை அடைவேம் என்னும் அவரது அப்பாலைக் கொள்கையைக் குறித்து நாம் இங்கே யாதும் பேசுவதில்லை.

இனி, அவர்கள் கடவுளுண்மையை மறுப்பது உண்மை என்றே கொண்டு வாதிப்பாம். அவர்கள் கடவுளுண்மையை மறுக்கப்போந்தது, உலகத்திலே கடவுளுண்மை அங்கிகரிக் கப்பட்டு வந்தமைபற்றியேயாம். ஆகவே நங்கோள் முந்திய தும் அவர்கோள் பிந்தியதுமாகும். ஆகலின், அவரும் எமது வாதநியாயத்தின்வழிக் கடவுளுண்மையை ஏற்று அங்கிகரிக் கவேண்டியவராக, அந்த நியாயமுடிபுக்கு மாறாக நிற்பார் ஒருவரை நாம் மேற்கோளாக் கொள்ளுதல் எங்ஙனம்? கடவு ணிச்சய விஷயத்திலே பௌத்தரும் எமது பிரதிவாதிகளே யாவர். பிரதிவாதியை வாதிக்கோர் ஆப்தன் எனக்கோடல் அமையாதன்றே?

சைவம் முதலிய ஆஸ்திகமதகாலங்கள் பௌத்தர் கால த்துக்கு முந்தியதென்பதே சரித்திரவியுற்பன்னர் துணிபு. அன்றியும் பௌத்த நூன்முடிபு ஆஸ்திகமத கண்டனமேயா தலின், அது ஆஸ்திகமதத்துக்குப் பிந்தியதென்பது செவ்வ ண்போதரும். இன்னமும் ஆஸ்திகமதத்தைக் கண்டித்தார்,

அது இடைத்தோற்ற முடையதாயின், அத்தோற்றந்தானே அதனுக்குத் தக்க கண்டனமாமாதலின், அதனையும் தம்மத நூலுட் பொதிந்துவைப்பர். அங்ஙனமின்மையின், ஆஸ்திக மதக்கோள் முந்தியதென்பதும், பௌத்தமதக்கோள் பிந்திய தென்பதும், ஆகவே பௌத்தரும் தம்மூதாதையர்கொண்ட கடவுள்விசுவாசத்தைக் கைக்கொண்டொழுகுதல் வேண்டும் என்பதும், எனவே, அவர் அந்நியாயவாற்றலுக்கு மாறாகக் கொள்ளுமோர் கொள்கை எமது பட்சத்தைச் சபலஞ்செய் யாதென்பதும் காண்க.

## ச-ம் அதிகரணம்.

(க.) இனி யாதானுமோர் வழக்குச் சாதாரணாங்கிகாரமு டையதாயின், அஃது அதிப்பெலமுடைத்தாய்,தனதுண்மை க்குப் பிறசான்று வேண்டாது நிற்கும். அது துர்ப்பலமுடை த்தென்று சாதிப்பார் யாருமுளரேல், அத்துர்ப்பலம் இதுவெ ன்று காட்டவேண்டிய ருசுப்பொறுப்பு (Burden of proof) அவர் பாலதேயாகும். அங்ஙனமன்றி அக் கொள்கையைக் கைக்கொள்வார்மேல் அதன் உண்மையைத் தாபிக்கவேண் டிய கடமை தங்குதல் இல்லை. இதுவே நியாயநூற்றுணிபாம்.

உலகம் எல்லாம் இரவில் உறங்குவது நன்மை எனக்கொ ண்டு அங்ஙனம் உறங்க, அக்கொள்கை தவறுடைத்தென்று ஆக்ஷேபிப்பார் யாருமுளரேல், அத்தவறு இதுவென்று காட் டவேண்டிய ருசுப்பொறுப்பு அவர் பாலதேயாகும். அது போல், உலகத்திலே சாதாரண அனுஞ்ஞையினல் அங்கிகா ரஞ் செய்யப்பட்டுள கடவுள் விசுவாசத்தை ஒவ்வாது ஆசங் கிப்பார் யாருமுளரேல், அவ்வாசங்கைஞ்ய நியாயவாயிலாகத் தாபிக்கவேண்டிய பொறுப்பு அவர்பாலதேயாகும். அங்ங னந் தாபிக்குங்காறும், அக்கடவுள் விசுவாசம் வலிகுறைத லும், எம்மால் அங்கிகரியாது தவிர்க்கப்படுதலும் இல்லையாம்.

## ௫-ம் அதிகரணம்.

(க.) எமக்கு எக்காலத்துந் தலைவராய், இம்மை மறுமை இரண்டற்கும் எமக்கு ஏகதஞ்சமாய், எமது விருத்தியின் அத்தியந்த காதலுடையராய், எமது இடரொழித்தலையே தமது தொழிலாகக்கொண்ட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நாம் எல்லாம் இதுகாறும் பக்திவிநயத்தோடு விசுவசித்து, அத்தியந்த மனவிருப்புத் தூண்ட அன்புபாராட்டிக் கண்ணினுண்மணியினும் அரியார் எனக் கொண்டாடி வந்துவிட்டு, இப்போது யாதானுமோர் நியாயமின்றி அப்பத்தியை ஒழிப்பேமெனின் எமதுநெறி என்னும்! அவ்வுறைத்த பத்தியை ஒழிக்க நம் பேய்மனந் துணியுமாயின், விவேகம் ஆர்ப்பரித்து எழுந்து "பாதகமனமே, எமதுயிர்க்குயிராய் எண்ணிப் பத்தி செய்துவந்த அப்பெரும்பொருளை இப்போது யாது ஏதுக் கொண்டு ஒழிக்கின்றனை?" என்று கேட்குமன்றோ? அக்கேள்விக்கு யாது உத்தரந்தான் மனம் கூறவல்லது? மேலை இயல்பிற்றாய முறுகி வளர்ந்த மெய்ப்பத்தி, அற்ப சந்தேகத்தால் (அங்ஙனம் ஒன்று கிளருவதுண்டெனினும்) ஒழிய வருவது கூடுமோ? அம்மெய்ப்பத்தியின்முன்னர் எத்துணைச்சந்தேகம் எதிர்ப்படினும், அஃது பரிதிமுற்பனிப்போற் பறந்தொழியுமன்றோ? பின்னைச் சந்தேகம் நிலையுமாறெங்ஙனம்? யாவனொருவன் தான் சரி எனக்கொண்ட யாதொரு கொள்கையில் அபிமானமுற்று அழுத்திநிற்பானாயின், அங்ஙனம்நிற்றல் பெருங்குணமேயாம். அதுபோல் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்னும் கொள்கையில் விசுவசித்துப் பத்திசெய்வோர், அக்கொள்கையில் அபிமானமுற்று அழுந்திநிற்றல் பெருமையின்பாற்றேயாம். இப்பெருங்குணமுள்தாயின், கடவுளிலே உண்மையளவின் மெய்ப்பத்தியுடையார் எவர்க்கும், சந்தேகங்கள் எட்பிளவளவு தீங்குதானும் செய்தல் கூடாது. ஆனபின் அவர் தம்பத்தியிற் சிறிதாயினும் தளர்படைதற்கமைந்த நியாயம் ஒருசிறிதும் இல்லையாம்.

ஆகவே, உண்மையில் அபிமானமுடைமையாகிய பெருங்குணமுடையார்க்குக் கடவுட்பத்தி முறுகிவளர்ந்திருக்குமாதலின், அவர்க்குச் சந்தேகங்களான் வருவதோர் இழுக்கு என்றும் இல்லை என்பதும், அவர் கடவுட்பத்தியை ஒழித்தல் சாலாதென்பதும் காண்க.

(உ.) இனி உண்மையில் அபிமானமுடைமையாகிய அக்குணத்தோடு, பெரியார்க்கடிமை பூண்டொழுகலாகிய அச்சுகுணமும் சேர்ந்து கடவுட்பத்தி கிளருமாயின், சந்தேகங்கள் சமீபத்தும் அணுகப்பெறுவாம். ஆகவே அவை அப்பத்தியைச் சிறிதாயினும் தளர்பலியப்படுத்துதல் இல்லை என்பது காண்க.

## சா-ம் அதிகரணம்.

(க.) பண்டைக்காலந்தொட்டு அறிவாற்சிறந்த தேசங்களிலே, அறிவாற்றலிற்சிறந்த சகலசனங்களாலும் கடவுளுண்மை கைக்கொண் டனுசரிக்கப்பட்டு வருகின்றது. இது அறிவின்குறைவால், அறிவிற்குறைந்த தேசத்திலே, அறிவிற்குறைந்த காலத்திலே தோன்றியதென்பதற்கு ஓர் இதிகாசமச்சமுமில்லை; யுத்தி அனுபவ எச்சமும் இல்லை. பெரும்பாலும் தாங்கண்டவற்றையே அறிதலும் விசுவசித்தலும் இயல்பாவுள்ள சனங்கள், இவ்வதிநூதன கடவுளுண்மையையும், அதுதன்னினும் நூதனமாய அட்டலக்ஷணங்கள் அவர்க்குண்டென்பதனையும், எங்ஙன் அறிந்தார் என்பதை நாம் சிறிதுபோது உற்றுலோசிப்பமாயின், இவ்வுண்மைகள் காட்சி கேள்விகளினும் சிறந்த ஆராய்ச்சியானே இனிது நாட்டப் பெற்றிருத்தல் வேண்டும்; அற்றேல் கடவுள்வாயிலாகவே இவ்வுண்மை அவர்க்குப் புலப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பது துணியப்படும். ஆகலின் இது அறிவின் குறைவால் வந்ததோர் விளைவு என்று நாம் சங்கித்தற்குச் சிறிதாயினும் ஓர் காரணமில்லையாக, இதனை நாம் விசுவசியாதொழிதல் கூடாதபடி காண்க.

## எ-ம் அதிகரணம்.

(க.) கடவுளுண்மை ஆதிகாலந்தொட்டு வேற்றியல்பும், வேற்றுசாரமும் வேற்றுக்குணமுமுடைய பலதேசத்துப் பல சனங்களாலும் ஒருங்கே அங்கிகரித்துக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. வேற்றியல்பு குணங்களையுடைய ஒருவர் கொள்கையை மற்றவர் நிந்தித்தொழித்தலையே தலையீடாகக் கொண்ட சனங்கள், இக்கடவுளுண்மையை எக்காலத்தும் எத்தேசத்தும் (காலதேசபேதங்களானும் மாறுபாடுறாது) ஏகோபித்துக் கைக்கொண்டொழுகுகின்றனர். அறிவொளி வீசப்பெறாத அந்தமான்தீவாராதியார்தாமும், தமக்குதவும் தம்மினும்பெரியதோர் பொருள் உண்டெனும் கொள்கையை உடையராய் இருக்கின்றனர். எல்லாம் இறுதியிலே சூனிய தசை அடையும் என்றுகூறும் பௌத்தரும் சிருட்டிகாரணர் ஒருவர் உண்டென்பர். சுத்தசூனிய நிரீச்சுரவாதத்தைச் சாதித்து "நாத்தழும்பேற நாஸ்த்திகம் பேசினார்" தாமும், தமது அந்தியகாலத்திலே "கடவுள் ஒருவர் உண்மையாகவே இருக்கின்றார்" என்று பிரஸ்தாபமாகத் தமது உள்ளக்கிடக்கையை வெளிவிட்டுப் பிரலபித்திறந்தார்கள். இங்ஙனமாகிய இவ்வியற்கை நெறியினைச் சீர்தூக்கிப் பார்க்குமளவில், எம்முண் மறைந்துநின்று எமக்குக் கடவுளுண்மையை உணர்த்தவல்லதோர் கிளர்ச்சி இருத்தலைச் செவ்விதிற் காண்கின்றாம்.

(உ.) ஓர்மகவை ஈன்ற அன்றே பிரிந்த அன்னை, பின்னர் அம்மகவைக் காண்பதுண்டாயின், அது தனது பிள்ளை என்று அவள் அறியாதிருந்தாலும், அதனை அவள் பிள்ளை என்றே அவளுக்குணர்த்தவல்ல உள்ளுணர்ச்சி ஒன்று அவள்மாட்டுண்டாம். இவ்வுணர்ச்சி மற்றெந்தகைய சாட்சியங்களினும் அதிப்பெலமுடையதாம். அதுபோல், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று சனங்கள் எவ்வெவரிடத்தும் உண்டாம் ஓர் அகவுணர்ச்சி, அக்கடவுளுண்மைக்குப் பிறசாட்

சியங்களில்லாத காலத்தும், அதிப் பெலமுடையதாகும். ஆதலின் நாம் எவ்வாற்ருனும் கடவுளுண்மையைக் கைக்கொண்டனுசரித்தல்வேண்டு மென்பது காண்க.

## அ-ம் அதிகரணம்.

(க.) கடவுளுண்மையை விசுவசித் தொழுகுதலினல், அங்ஙனம் ஒருவர் இல்லாக்காலத்தும், எமக்கெய்தற்பாலதோர் இழுக்கென்றுமில்லை. ஆயின், அதனுல் அநேக பிரயோசனங்கள் இம்மையிற்ருனும் உண்டென்பது அனுபவங்கொண்டு சாதிக்கத்தக்கது. கடவுள் ஒருவர் இருக்கின்ருர்; அவர் எமது தீவினைகண்டு எமக்கெல்லாம் தண்டம் செய்வர் என்று அஞ்சி, அத்தீத்தொழில்களின் விலகுவார் பலர். அரசனது தண்டத்துக்குத் தப்புதல் கூடும்: தேவதண்டத்துக்குத் தப்புதல் சிறிதும் கூடாது என்னும் விசுவாசம் எத்தனையோகோடி சனங்களைத் தீத்தொழிலிற்படாவாறு காக்கும் பெரியதோர் அரணுகக் கிடக்கின்றது. ஆகவே சனங்களைத் தீமையினின்று காத்தற்கமைந்ததோர் உபாயத்தை உலகின்கண்ணே அனுசரித்தொழுகுதல் குணமேயன்றிச் சிறிதேனுமோர் குறையாகாது. ஆகவே கடவுள் ஒருவர் இல்லாதவிடத்தும், அங்ஙனம் ஒருவர் இருக்கின்ருர் என்னும் உலகவழக்கை அனுசரித்தொழுகுதல் உலகத்துக்கு மகத்தாகியதொரு நன்மைக்கேதுவாகும் என்க.

(உ.) இனிக் கடவுள் ஒருவர் இருந்துவிட்டார் என்ருல், நமது விசுவாசம் நமக்கு மறுமையினும் சொல்லுதற்கரிய நன்மைக்கேதுவாகும். ஆனல் அவ்விசுவாசத்தை நாம் ஒழித்தொழுகுவம் என்ருல், நம்மறுமைக்கதி யூதாகும்!! ஆகவே கடவுளுண்மைக்கமைந்த நியாயவாற்றல் எமக்குப் புலப்படாவிடத்தும், அங்ஙனம் ஒருவர் உண்டெனக் காண்டொழுகுதலோ, அங்ஙனம் காணுதொழுகுதலோ விவேகிகள் செய்யத்தக்கது? உண்டெனக்கண் டொழுகுதலேயாகும்.

ஆகவே இவ்விஷயத்தை நாம் எவ்வாறு எடுத்து நோக்கினு லும் கடவுளுண்டெனக்கொள்ளும் உலகவழக்கை அனுசரித் தொழுகலே எமக்கெல்லாம் பெருங்கடனென்பது போதரு மாமென்க.

(ரு.) கடவுளுண்மையை விசுவசித்தலால் எமக்குச் சில நன்மைகள் கைவரத்தக்கன என்னும் இக்கூற்று, நாம் அக்க கடவுளுண்மையின்பால் நமது விசுவாசத்தை உறுத்தற் கமைந்த ஏதுவாகுமோ என்பீரேல், நாம் இங்கியாயம்பற் றிக் கடவுளுண்மையை விசுவசிக்குமாறு சொல்வதில்லை. உலகவழக்குப்பற்றி நாம் விசுவசிக்கவேண்டிய கடவுளுண் மை, எமக்குப் பலப்பல நன்மையையும் தரத்தக்கதொன்றாக வின், அதனை நாம் எல்லாம் கைவிடாது அனுசரித்தல்வேண் டுமென்பதே நாம் ஈண்டெடுத்துக் காட்டியதென்க. எனவே கடவுளுண்மையை நாம் கைக்கொண்டொழுகல் வேண்டும் என்னும் இச்சூத்திரக்கூற்றுப் பல்லாற்றானும் பரிஷ்காரமாக நாட்டப்பட்டவாறு காண்க.

# இரண்டாஞ் சூத்திரம்.

கர்த்தனுண்டெனக்காண்பதுதானே
யுத்திக்கிசைந்ததென் றுண்மைசாதித்தது.

பிரபஞ்ச தோற்றங்களைச் சிறிதுபொழுது உற்றுநோக் கிப் பரியாலோசனை செய்யுமிடத்து, அவற்றின்கணுள்ள கிரமபிரயோசன நூதனங்கள் எல்லாம் அத்தியந்த அற்புத த்தைக் கிளர்த்தலின், அவற்றுக்குக் காரணமாயதோர் சித் துப்பொருள் உண்டெனக்கோடலே, அங்ஙனம் ஒன்றில்லை எனக் கோடலினும் யுத்திக்கியைவுற்றுள்ளதாம்.

## க-ம் அதிகரணம்.

(க.) ஆகாயத்தே அந்தரத்தே நிலையுற்று, மனோகதியும் பின்னிட மஹாகதிகொண்டு ஓடித்திரிந்து சரித்துலவுவன வாகிய கிரகநக்ஷத்திராதி சோதிகளை அளவிடப்புகின், அவை அநந்தகோடியினும் அப்பாற் சென்றுபெருகும். எமது சூரியனிலும் பன்னூறு மடங்கு விரிவுடைய நக்ஷத்திராதிகள் எத்தனையோகோடி யுண்டு. எமது சூரியமண்டலத்தினும் பன்மடங்கு விரிவும் விஸ்தீரணமுமுடைய மண்டலங்கள் அளவிறந்தன உண்டு. ஒவ்வொரு மண்டலத்தினும் எத்தனையோ கிரகங்கள், எத்தனையோ நக்ஷத்திரங்கள், எத்தனையோ சந்திரர்கள் உண்டு. இவை எல்லாம் அந்தரத்திலே யாதானுமோர் ஆதாரமின்றி நிலைபெறுமாறும்; நிலைபெற்றும், அறிவாற்றலிற் சாதுரியமுற்ற சித்துப்பொருள்களை ஒத்துத் தத்தமக்குரிய கதிகளினும் நெறிகளினும் சிறிதும் பிறழாது குறித்த குறித்த எல்லையிற் குறித்த குறித்த நெறிவழியாகக் குறித்த குறித்த கதியோடு ஆங்காங்குச் சென்று சென்றுலவித் தத்தமக்குரிய ஓட்டுகளைக் கிரமந்தவறாது நடாத்திவருமாறும்; ஒவ்வொருமண்டலத்துமுள்ள ஒவ்வொரு கிரகத்துக்குமுரிய சந்திரர் எல்லாம் தம்மையும்சுற்றித் தத்தமக்குரிய கிரகங்களையும்சுற்ற, அந்தக்கிரகங்களும் அங்ஙனமே தம்மையும்சுற்றித் தமக்குரிய சந்திரரோடு தத்தமது சூரியரைச்சுற்ற, இந்தச்சூரியரும் இங்ஙனமே தம்மையும்சுற்றித் தத்தமக்குரிய கிரக நக்ஷத்திர சந்திரரோடு தங்கள் தங்கள் மகா சூரியரைச்சுற்ற, இவ்வாறே பிரமாண்டத்துள்ள கோடா கோடி கிரகாதிகள் அனைத்தும் தங்கள் தங்கள் கதிநெறிகளிற்சிறிதும் பிறழாது ஓடித்திரிந்துகொண்டிருக்கும் வரிசையும் கிரமமும் காலவரையறையுமுதலிய நியதிகளும்; இந்தக் கிரகாதிகள் அனைத்தும் இன்னபெருஞ்சிறப்பினவாகிய ஓட்டுகளில் நிராதாரமாக நிலையுதலுற்றமையுமாறு அவ்வவற்றின்கண் வேண்டியவேண்டிய அளவைப்படி அமைந்துள பிரமாணமும், அப்பிரமாணத்துக்கிசைந்த விசையும், இப்பிரமா

ணவிசைகள் இரண்டும் கொண்டு இவைகள் தக்கவாறு ஒன்றை ஒன்று சுற்றித்திரியுமாறு அவை கர்ஷணநிபந்தங்களாற் பிணிக்கப்பெற்றுள மரபும்; இந்தக் கர்ஷணநி அளவையும் அவ்வவற்றுக்குரிய கதி அளவையும், ஒன்றை ஒன்று சிறிதேனும் விஞ்சுவதுண்டாயிற் சொல்லுதற்கரிய பேரிழுக்குகளும் பெருங் குளப்பங்களும் அவற்றின்கண் நிகழ்ந்துவிடுமாக, அங்ஙனமாகிய பிறழ்ச்சிகள் சிறிதேனும் நிகழாமாறு அவ்வக் கிரகாதிகளிடத்தே தக்கதக்க அளவைப்படி ஒன்றை ஒன்று விஞ்சாத கருஷண கதிவிசைகள் அமைந்திருக்குமாறும்; இந்தவிசைகளும் அந்தந்தக் கிரகாதிசோதிகளிடத்துச் சகசமாயுள்ளனவாகாது வேறு பிற சோதிகளாற்றானே பெரும்பான்மைபற்றிச் செலுத்துப்படுமாறும்; இங்ஙனம் செலுத்தப்படுதலும் எத்தனையோ பல திசைகளினுள்ள எத்தனையோ பன்னூறு கிரகாதிகளானுமவும், அவை எல்லாவற்றானும் செலுத்தப்படும் மொத்தவிசை அவ்வச்சோதியின் கதிமரபுகளுக்கியைந்த அளவைத்தாய் அமைந்துள்ள அந்தப் பெரு நூதனமும்; இன்னமும் இந்தக் கர்ஷண விசைகள் அவ்வச்சோதிகளிலே வேண்டிய வேண்டிய அளவைப்படி சென்று தாக்குமாறு அவை எல்லாம் அது அதுக்கியைந்த தூரத்தே நிறுவப்பெற்று நிற்குமாறும்; இங்ஙனமே இந்தக் கிரகாதிசோதிகள் ஒருவிநாடிக்குப் பல்லாயிரகாதம் செல்லத் தக்க அத்துணைவிசைகொண்டு ஓடிச்சரிக்குமாயினும், ஒன்றை ஒன்று தீண்டித் தகர்ந்தழிந்து பேரிடர்விளையாது விலகிச்செல்லும் மரபும்; இந்த ஒட்டுகளினாலே ஆங்காங்குள்ள சிவராசிகட்கும், அவைகளுக்கு நிலைக்களனாயுள்ள அண்டங்களுக்கும் விளைதற்குரியனவாகிய பிரயோசனங்களும் பிறவும் யுத்தியிற் சிறந்தார் ஓர் மகாபுருடரால் அமைக்கப்பட்டன என்று கொள்வதா, அன்றி இவை எல்லாம் தற்செயலாய் அமைந்தன என்று தற்செயலாய் முடித்துவிடுவதா யுக்தம்?

ஆகாயத்தே ஒருசிறு காகிதக்கறங்கு பறத்தலைக்காணுழி, அதனை அமைத்தானும், அமைத்து அங்ஙனம் பறக்கவிட்

டானும் ஒருவன் உண்டென்றுமுடிக்கும் இயல்பினை உடையேமாகிய நாம், இந்த அல்ப்பகறங்கினும் அநந்தகோடிமடங்குவிசிட்டமும் விஸ்தீரணமும் கிரமபிரயோசன நூதனங்களும் கொண்ட கிரகாதிசோதிகள் அனைத்தும் தற்செயலாய்ச் சரிக்கின்றன என்று முடித்தல்தான் எங்ஙனம் யுக்தமாகுமோ?

(உ.) இனி இப்பிரபஞ்சத்திற் சங்கத்தொரு கூறுதானுமாகாத இச்சிறுபூமியினுள்ள கிரமாதிகளை அளவிடப்புகின், அவைதாமுந் தொகைக்கடங்கா. அவற்றை எடுத்து விரித்து வித்தரிப்பதுதான் எளிதின் முற்றுப்பெறுவதொன்றல்ல. ஆயினும் சுருங்கச்சொல்லுமிடத்து, பூமிக்கண் உள்ளனவாகிய தோற்றங்கள், இயக்கவகையாற் சரம் அசரம் ஆகவும், தோற்றவகையால் லோக தாவர மிருகங்களாகவும் பகுக்கப்படும். இவற்றுள் ஒருவகைத்தோற்றத்திலிருந்து அவ்வகையினதாகிய தோற்றமேயன்றிப் பிறிதொன்று தோன்றாத நியதியும், ஓரினத்துக்குரிய வித்திலிருந்து தோன்றும் தோற்றங்கட்கெல்லாம் அவ்வினத்துக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் சிறிதும் தவறாது அமையும் மரபும், ஓர் இனத்துக்குரிய ஒருபொருளிற்றானே இரசகுணங்களான் வேறுபட்ட பல பொருள்கள் அமைந்திருக்கும் முறையும், அப்பொருள்கள் ஒன்றோடொன்று மாறுகொண்ட பலபருவங்களை அடையும நெறியும், இங்ஙனமே பலபட்டபொருள்களைக் கொண்டிருந்தும், பலபட்ட பருவங்களைச் சென்றடைந்தும், அப்பொருள்கள் தத்தம் இனத்துக்குரிய சுபாவிகதர்மத்தில் சிறிதும் பிறழாது விருத்திபெறும் சிறப்பும் பிறவும் ஓர் ஆஞ்ஞைவழி நிகழ்வன என்று கோடலோ, அன்றித் தற்செயலாய் நிகழ்வனவெனக் கோடலோ யுத்திக்கியைந்ததாகும்? இவ்வுலகத்துள்ள பல்லாயிரகோடி பேத தோற்றங்களுள் ஒன்றினைத்தான் எடுத்து ஆராய்வமெனினும், அதன்மாட்டுள்ள கிரமவிநோதாதிகள் அனைத்தும் அத்தியந்த அதிசயத்துக்கிடனாகக் கிடக்கின்றன. ஒன்று இரண்டோடையாது எல்லாத்

தோற்றங்களினும் இன்ன பல கிரமாதிகளைக் கண்டும், இவற்றை எல்லாம் தற்செயல் என்றுதான் முடிக்கத்தக்கதா?

(௩.) லோகதோற்றங்களினுள்ள படைவரிசைகளும், அவைகள் தத்தமக்குரிய முதற்காரணங்களிலிருந்து விளைவுற்றமையும் சிறப்பும், இவற்றால் தாவர மிருக தோற்றங்கட்கெய்தற்பாலனவாகிய பிரயோசனங்களும், அரசியல் கிருஷிகம் கைத்தொழில் முதலிய பல தொழில்களுக்கும், இத்தொழில்கள் காரணமாக வந்தெய்தும் சீர்த்திருத்தத்துக்கும் இவை இன்றியமையாது வேண்டப்பட்டு நிற்கும் விசிட்டமும், இவை தாவராதிகளை ஒத்து இலகுவில் ஊனமுறற்றாதியாவாறு படைத்துளவன்னெறியும், அங்ஙனம் படைத்துளவன்னெறியோடு வேண்டிய வேண்டியவாறு உருகி வசைதற்கியன்றதோர் மென்னெறி அவற்றின்கண் உண்மையும் பிறவும் ஒரு விவேகியின் அறிவாற்றலிற் பலிப்பதுண்டாயின், அவன் இந்த லோகதோற்றங்கள் அனைத்தையும் தற்செயல் என்றுதான் முடிப்பனா?

(௪.) தாவரவடிவங்களின் அமைந்துள்ள தோற்றமும், சிறப்பும், விநோதமும், ஆங்காங்களவிறந்து காணப்படும் கிரமவரிசைகளும், அவற்றால் மிருகதோற்றங்கட்கும், மிருகதோற்றங்களால் அவற்றுக்கும் பெரும்பயனுண்டாம் மாபும்; அவற்றுக்கு ஆதாரம் மண்ணேயாகவும், அம்மண்ணினின்று தமக்கு வேண்டிய ஆகாரத்தைக் கவரவல்ல கை கால் முதலிய உறுப்பு மிருகதோற்றங்களிற்போல அவற்றின்கண் இல்லாதிருப்பவும், அங்ஙனம் கவர்தற்கியைந்த வேர்கள் அவற்றுக்குக் கொடுக்கப்பட்டிருத்தலும்; அதுவும் அந்த ஆகாரத்தைத் தன்பாற்கொண்ட மண்ணோடே சம்பந்தப்படுத்துக் கொடுக்கப்பட்டிருத்தலும்; மண்ணின்கணுள்ள ஆகாரத்தைக்கவர்தற்கியைந்ததோர் அதிநூதன ஆற்றல் அவ்வேர்களிலே அமைந்துள அதிசயமும்; அவ்வாற்றல் தாவரதோற்றங்களின் பிறபாகங்களினின்றி வேர்களின்மாத்திரமே காணப்படுமாறும்; இவ்வேர்கள் கூரிய அஸ்திரம்போன்று மண்ணைப்

பிளந்து ஊடறுத்துச் செல்லும் வன்மையும்; இவைகள் தாம்
செல்லும் வழியிலே கன்முதலிய தடைகள் எதிர்ப்படுமிடத்து
அத்தடைகளை விலகி அப்பாற்செல்லும் இயல்பும்; தாவரங்
களின் பிறபாகங்கள் மண்ணிற்பட்டவழிக் கெட்டொழியவும்,
இவ்வேர்கள் அங்ஙனமின்றிச் செழிப்புற்றோங்கு முறையும்;
இங்ஙனமாயதோர் இலக்கணம் வேர்களுக்கு இன்றியமையாது
வேண்டப்படுமாறும்; இவ்வேர்கள் இங்ஙனம் கவர்ந்துகொடுக்
குஞ் சத்தினை மரத்தின் உடம்பெங்கணும் ஆங்காங்குச் செ
லுத்தவல்லதோர் ஆற்றல் அம்மரத்தின் அமைந்துளவாறும்;
இம்மரங்கள் ஆங்காங்குப்பெறும் ஆகாரத்தைத் தத்தமக்கி
யைந்த சத்தாகத் திரித்துக்கொள்ளும் அப்பெருவிந்தையும்;
அந்தச்சத்தினும் மரத்துக்கு வேண்டுவன மரத்துக்கும், பட்
டைக்கு வேண்டுவன பட்டைக்கும், இலைக்கு வேண்டுவன
இலைக்கும், காய்க்கு வேண்டுவன காய்க்குமாக இங்ஙனமே
வரன்முறை பிறழாது தக்க தக்க கணித அளவைப்படி செ
லுத்தப்படும் நியதியும்; இவ்விலை பூவாதிகள் முதிர்வடைந்த
விடத்து அந்தச் சத்து அவற்றுக்குச் செல்லாது இளங் காய்
இலைகளை நாடிச்செல்லு மரபும்; இனி ஒருபடித்தாகிய ஒரு
ஆகாரந்தானே மரங்கடோறும் வேற்றுவேற்றியல்பினவாகிய
வேற்றுவேற்றிரசகுணங்களாய்த் திரியுமுறையும்; இங்ஙனமா
ய்த் திரித்துக்கொள்ளுதல் நம்மனோர் புத்திக்கும் சாமர்த்திய
த்துக்கும் அதீதமாகியதோர் பெரு நூதனமாய்க் கிடக்குமா
றும்; தெய்வகம்மியராற் சமைக்கப்பெற்ற சித்திரமண்டபங்
கள்போல, இவற்றின் கொம்பு, இலை, பூ முதலாயினவெல்
லாம், நரம்புபோலிய மெல்லிய துரும்பாதியவற்றால் நிரைக்
கப்பெற்று, சத்தால் வேயப்பெற்று, அதிவிசித்திர மாடகூட
ங்களை ஒத்த பற்பல பகுப்புகளைக்கொண்டு, எத்துணைச்சிற
ந்த பொன்வினைமாக்களாலும் நினைத்தற்கரிய மகா விசித்தி
ரவினோதங்களும் வர்ணங்களும் புனையப்பெற்றுக் கிடக்கும்
காட்சியும்; இந்தத் தாவரதோற்றங்கள் உலகத்திலே பல்கிப்
பெருகி நிலைபெறுமாறு, இவற்றின் பிரமாண்ட உருவகார
ணங்களை எல்லாம் நுண்ணிதினும் நுண்ணிதாக்கித் தம்பாற்

கொண்டுள வித்துகள் இவற்றின்கட் தோன்றும் அதிசயமும்; இவ்வித்துகளிலிருந்து அவ்வத்தாவரதோற்றம் அதிநூதன சாலவித்தைகள் தம்மினும் மிக நூதனமாய்த்தோன்றும் சிறப்பும்; இந்த வித்துகள் பழுதடையாமைப் பொருட்டு அவை எல்லாம் தத்தமக்கியைந்த காப்புகளினாலே காவல் செய்யப்பட்டிருக்கும் நெறியும்; இந்தக் காப்புகளாகிய உறைகளிலே, அவ்வத் தோற்றங்கள் முளைகொண்டு வெளித்தோற்றுதற்கியைந்ததோர் மிருதுவாகிய பாகம் அமைந்திருக்கும் வியப்பும்; அத்தோற்றங்கள் அங்ஙனம் தோன்றி வேர்விடுத்து மண்ணினின்று ஆக்ராரத்தை உறிஞ்சுதற்கமைந்த பக்குவத்தை அடையுங்காறும், அவ்வவற்றைப் போஷித்துக் காத்தற்கமைந்த பதார்த்தங்கள் அவ்வித்துக்களிற்றானே அமைக்கப்பட்டிருக்கும் அதிசயமும்; இனித் தாவரங்கள் பல்கிப்பெருகுமாறு அவ்வவற்றின் வித்துகளைப் பிறப்பித்தற்கியைந்த ஆண்மரங்களும் பெண்மரங்களும் அமைந்திருக்கும் நூதனமும்; ஆண்மரத்துள்ள ஆண்சத்தைப் பெண்மரங்களினுள்ள பெண்சத்தோடு சேர்த்து அது அதுக்கியைந்த வித்தைப் பிறப்பிக்கும் அப்பேர் இரகசியமும்; ஆண்மரங்கள் இல்லாத வர்க்கங்களில் ஆண்சத்தும் பெண்சத்தும் ஒரேமரத்திற்றானே அமைக்கப்பட்டிருக்குமுறையும்; இவற்றின் இளங்காய் பூவாதிய மெல்லிய பாகங்கள் வெப்ப முதலிய ஏதுக்களால் தீதுறாவண்ணம் அவை பாளைகளால் காக்கப்பட்டிருக்குமியல்பும்; பூக்களின் கண்ணே அமைந்து, கண்டார் பரிசித்தாரது இந்திரியங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க விசித்திரவர்ணங்கள் பரிமளகந்தங்கள் என்றுள்ள இவற்றின் பெருமையும்; மிருதுவாகியதோர் வித்திலின்று இரும்பும் ஒன்றோ என்றையுறத்தக்க மராமரங்கள் பிறக்கும் முறையும்; இன்னும் விரித்துரைக்கின் இதுபோலும் பன்னூறு பிரபந்தங்களினும் அடங்காத அத்துணைப் பெரும் கிரமபிரயோசன நூதனங்கள் எல்லாம் ஓர் சித்துப் பொருளினது அறிவிந்திரியத்திற் சேட்டிப்ப துண்டானால்,

இவை எல்லாந் தற்செயலாம் என்று முடிப்பது தகுதியாகுந் தானே? விவேகிகாள் கூறுக!

(ரு.) இனி மிருகதோற்றங்கள் ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர்வாழ்வன முதலிய பலபகுப்புகளாய்ப் பகுக்கப்படும். இவற்றுள், ஊர்வனவற்றுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பல சிறுகால்களும், முதுகெலும்பும், நீண்டவடிவும், பிறவும் அவ்வவற்றுக்கு வேண்டிய வேண்டியபிரமாணப்படி கொடுக்கப்பட்டிருத்தலும்; பட்சிசாலங்களுக்குப் பறத்தற்றொழிற்கியைந்த சிறகர்களும், அவயவ ஆகிருதியும், அவ்வவற்றின் பிரமாணங்களும், ஆங்காங்கே தக்க தக்க கணிதமுறைப்படி கொடுக்கப்பட்டிருத்தலும்; நடப்பனவற்றுக்கு நடத்தற்றொழிற்கு வேண்டப்படும் காற்பெலம், குழம்பு, பாதம், விரல், அவயவ ஆகிருதி, அவயவ அளவை முதலிய ஏதுக்கள் எல்லாம் பிரமாண அளவை பிறழாது அதிசாதுரிய சம்பந்தமாக அமைக்கப்பட்டிருத்தலும்; நீர்வாழ்செந்துகளுக்கு நீஞ்சுதற்கு வேண்டப்படும் கருவிகளாகிய இறகு, சுவாசமடக்குமியல்பு முதலிய ஏதுக்கள் பலவும் அமைந்திருத்தலும் பிறவுமாகிய இவற்றை எல்லாம் எமது சித்தத்தின்கண்ணே சிறிதுபொழுது அழுத்திச்சிந்திப்பாமெனில், இவற்றைத்தற்செயல் என்றுதான் சாதிக்க நமதுமனம் ஒருப்படுமோ?

மிருகபக்ஷண விலங்குகளுக்கு இன்றியமையாது வேண்டப்படும் கூர்ந்த தந்தவரிசையும், நகவலிமையும், மூர்க்ககுணமும், மிருக போசனத்திற்கே இயைந்த இரைப்பையும், ஆகிய இவைகள் அமைந்திருத்தலும்; தாவரபக்ஷண விலங்குகளுக்கு இவ்வியல்பினவாகிய நகமுதலிய புறத்துறுப்புகளும் மூர்க்ககுணம் முதலிய அகத்துறுப்புகளுமின்றி, சாந்தகுணமும், தாவரங்களிற் சீவித்தற்கியைந்த இயல்பும், அவ்வுணவுக்கே இயைந்த இரைப்பையும், பிறவும் ஆகிய இவைகள் அமைந்திருத்தலும், ஒருவரது யுத்திகாரணமாக அமைந்தன எனக்கொள்ளுதலோ, அன்றித் தாமே அமைந்தன எனக்கொள்ளுதலோ யுத்திக்கியைந்தது?

பட்சிசாலங்களுக்கு, பிறமிருகங்களுக்குப் போலாது, பறத்தற்றொழிற்கே இயைந்ததலையும் சொண்டும் கால்களும் ஆகிய இவைகள் தக்க தக்க ஆகிருதிப்படி தக்க தக்க பிரமாணத்தோடு தக்க தக்க தானங்களிலே அமைந்திருத்தலும்; இவற்றின்வாயிலே பல்வரிசை உண்டாமெனில், இஃதிவற்றின் பறத்தற்றொழிலுக்குப் பேரிழுக்காய் முடியுமென்பது கருதி, அப்பற்கள் அங்கே அமைக்கப்படாது கிடத்தலும்; இங்ஙனமாயினும் இப்பட்சிசாலங்கள் தமது உணவைப் பொடிபடுத்தற்குரிய திறமை இவற்றின் சொண்டுகளிலே அமைக்கப்பட்டிருத்தலும்; பறத்தற்றொழிலைப் பூண்டுள்ள இந்தப் பட்சிகள் நடக்குந்திறமு முடையனவாமாறு, அவ்வவற்றின் அவயவ ஆகிருதி பிரமாணங்களை எடுத்துச் சீர்தூக்கி, இயைந்த இயைந்த தானங்களிலே பறத்தலும் நடத்தலுமாகிய இரண்டற்கும் இயைபுடையனவாகிய மெல்லிய கால்கள் பிரமாண அளவைகளிற் சிறிதும் பிறழாது அமைந்துகிடத்தலும்; இன்னமும் எடுத்துக் கூறில் வரம்பின்றிப்பெருகும் அளவைக்கடங்காத கணிதசாத்திர விநோதவியுற்பத்திகள் எல்லாம் தாமே அமைந்தன என்றுதான் சொல்லுவமா?

ஓர் காகிதக்கறங்கை அமைத்துக் காற்றிற் பறக்கவிடுதற்கு எத்தனையோ அளவைப்பிரமாண யுத்திசாதனைகள் வேண்டப்படும் என்றால், இப்பட்சிசாலங்கள் ஆகாயத்தே அதிவிநோதமாகப் பறந்து விளையாடுமாறு இவற்றின் அவயவ ஆகிருதி பிரமாணங்கள் எல்லாம் தற்செயலாய் அமைந்தன எனக்கோடல் கூடும் தானோ?

(சு.) இனி மிருகங்களின் உடம்பைநோக்குழி யார்தாம் பிரமையுறார்!! தேவகம்மியரால் அமைக்கப்பட்ட சித்திரமண்டபங்களினும் மகா விசித்திர விநோதங்கொண்டு, என்புகளால்பூட்டி, நரம்புகளால் மாட்டி, தசையாற் பொதிந்து, தோலால் வேய்ந்து, சொல்லுதற்கடங்காத பலப்பல அதிநூதன மாடகூடாதி வனப்புகள் எல்லாம் வாய்ந்து—இந்தமாடகூடாதிகள் அனைத்தும் கணந்தோறும் வளர்ந்துகொண்டே

இருப்பவும், இவ்வளர்ச்சியினுல் இவைகள் சிறிதேனும் பங்க முருது தத்தமக்குரிய விநோத ஆச்சரிய நிலையினை நிலைபெற்று விருத்தியுற்ருேங்கும் பேராச்சரிய இயற்கை அமைந்து—அதுல்லிய அதிநூதன அதிசூக்கும விநோதங்கள் வாய்ந்துள்ள மகாயந்திரங்களைப்போன்று, ஆங்காங்குள்ள அவ்வவ்வவயவங்களெல்லாம் தத்தமக்குரிய ஓர் ஓர் தொழிலை இடையீடின்றிச் செய்துகொண்டிருப்ப, இயக்குவார் ஒருவர் இன்றித் தானே இயங்கிநிற்கும் இம் மகா அலங்கார விநோத மண்டபமாகிய மிருகதேகம் தானே தற்செயலாக அமைந்தது என்று பிதற்றுவார் பித்தரன்றிப் பிறராவரோ? ஒரு சிறு வண்ணத்துப்பூச்சியைத்தான் எடுத்து மிருகசாத்திரஞானங்கொண்டு பரீக்ஷிப்பாமெனின், அதன்கணுள்ள விநோதவிசித்திரங்கள் எல்லாம், ஓர் கீராவியந்திரத்தின்க ணுள்ளவற்றினும் மகா நூதனம்படைத்தனவாகக் காணப்படுமன்றே! நீராவியந்திரத்தின்கணுள்ள விநோதங்களுக்குமாத்திரம் ஓர் காரணன், அதுவும் அதிவிவேகியாயுள்ளான் ஒருவன், வேண்டும்; வண்ணத்துப்பூச்சியின்கணுள்ளனவற்றுக்கும் ஒருவனும் வேண்டியதில்லை கொல்லோ?

ஒரு வண்ணத்துப்பூச்சி முட்டைக்கண் உற்பத்தியாகிப் பூரணதசை அடைந்ததோர் செந்துவாந்துணையும் அதன்பால் நிகழும் விநோதங்களையும் விகாரங்களையும் சற்றே ஊன்றிச் சிந்திக்க. இந்தச் செந்துவுக்குரிய கருவானது ஒரு முட்டையுள் அமைந்து படிமுறையே விருத்தியுற்று மயிர்க்குட்டியாகி, அம்மயிர்க்குட்டியிலிருந்து அதனோடு சிறிதும் ஒப்புமைகாட்டாத கூண்டுப்புழு (Chrysalis) தோன்றி, அதிலிருந்து மகாலங்கார விசித்திர வர்ணம் கொண்ட இறகும் பிறவும் அமைந்துளதோர் வண்ணத்துப்பூச்சி வந்தமையும் மரபு, இயற்றுவான் ஒருவனின்றித் தானே நிகழத்தக்கதுதானே? மனுஷருள்ளே இங்ஙனம் ஒன்றை ஒன்ருக்கவல்லார் யாரும் காணப்படுவரேல், அவர்கள் மகாசாதுரியர் என்றுபாராட்டி எடுத்தேத்தப்படுவர். வண்ணத்துப்பூச்சிக்கட் காணப்படும் சாதுரிய சாமர்த்தியங்கள் மாத்திரம் தற்செயலாமோ?

இன்னமும் இவ்வல்ப்ப செந்து மயிர்க்குட்டி நிலையில் இருக்கும்போது கடினபதார்த்தங்களை உண்ணும்; வண்ணத்துப்பூச்சியானபின் தாவரசத்துக்களே இதனுக்குணவாகும். இருதசையிலும் அவ்வப்பதார்த்தங்களைத் தூகள்படுத்தவும் சமீகரணஞ்செய்யவும் தக்க அவ்வக்கருவிகள் அவ்வக்காலத்தே அமையுமுறையும், இக்கருவிகளிற் காணப்படும் அதிசூக்கும நுண்மையும், கிரமமும், எத்துணை விசிட்டம்பூண்டயந்திரங்களினும் காண்டற்கரிய அத்தியற்புத அதிவிசித்திர விநோதங்களும், தற்செயல் என்றுதான் முடிக்கத்தக்கனவா?

பேரியந்திரங்களிற் காணப்படும் விநோதாச்சரியங்களினும் சிற்றியந்திரங்களிற் காணப்படுவனவே பெரிது பாராட்டப்பட்டு அவ்வவற்றை ஆக்கினாரை மகா சாதுரியர் என்று எடுத்தேத்திப் புகழ்விக்கின்றன. யானை முதலிய பெருவிலங்குகளிலே காணப்படும் காட்சி கேள்வி உணர்ச்சி முதலிய புலங்களுக்குரிய அவ்வவ்வங்கங்களும், உணவுகளை அரைத்தல், பதஞ்செய்தல், இரைப்பையுட்புகட்டல் முதலிய தொழில்களுக்குரிய அவ்வக்கருவிகளும், அங்ஙனம் புகட்டப்பெற்ற உணவுகளை எத்தனையோதிறப்பட்ட தானங்கடோறும் செலுத்தி, எத்தனையோதிறப்பட்ட பக்குவங்களை வருவித்து, கழிவுகளை நீக்கி, எஞ்சியதை அவ்வவ்வுடம்புக்குரிய சத்துகளாக்கி உடம்பெங்கணும் கொண்டு செலுத்தவல்ல அவ்வவ்வதிநூதன கருவிகளும், எறும்பினும் மகா நுண்ணிய அல்ப்ப செந்துக்களினும் குறைவின்றி மிக நுண்ணிதாக அமைக்கப்பட்டிருத்தலைக் காண்பமென்றால், இந்த நுணுக்க விசித்திரங்களைப் பிறழாது அமைக்க வல்லதோர் சித்துப்பொருள் உண்டென்பது சிலையில் எழுத்துப்போல் சிறுவர் அகத்தும் தீட்டப்படமாட்டாதா?

மனிதரால் ஆக்கப்படும் எத்துணைச் சிறப்புடைய யந்திரமும், இயங்க இயங்கக் கணந்தோறும் தேய்வுற்றுக் காலாந்தரத்தில் ஒருங்கே பழுதுபட்டழியும். இங்ஙனம் விரைவிற் பழுதுறுவாறு இவை எல்லாம் இடை இடையே எண்ணெய்

முதலிய பதார்த்தங்கள் ஊட்டப்பெறும். மிருகதேகமாகிய யந்திரமும், இங்ஙனமே இயங்குந்தோறும் தன்பாலுள்ள நாடிமுதலிய கருவிகள் தேய்வுற்றருகும். இக்குறைவை நிறைவுசெய்யுமாறு அந்தந்த யந்திரத்திற்றனே அதன்பொருட்டு வேண்டப்படும் பதார்த்தங்கள் அவ்வக்கணத்திலே வந்துபொருந்துமாறு அமைக்கப்பட்டிருக்குமென்றால், இதன் மாட்சி எத்துணைப் பேரதிசயத்துக்கிடமானது? இதனையா தற்செயல் என்று நாம் சாதித்துவிடுவது? மிருகதேகமாகிய யந்திரத்தின்கண் தேய்வினாலுண்டாகும் இக்குறைவை அவ்வப்போதிற்றனே அந்த அந்த மிருகங்களுக்குணர்த்தவல்ல பசி எனப்படும் ஓர் சிறந்த உபாயத்தை அவற்றின்கண் அமைத்து, அதுகாரணமாக அக்குறைவு நிறை,பெறுமாறு நாட்டப்பெற்றுள இந்த மதிமாட்சி எத்துணைச் சிறந்த விவேகத்தின் பயனாயிருத்தல்வேண்டும்!! பசிதாகங்கள் மிகச் சாதாரணமான உணர்ச்சிகளாதல்பற்றி இவற்றின் விசிட்டத்தை நாம் உள்ளவாறு சிந்திப்பதில்லை. ஆனால் அவற்றைக்குறித்துச் சிறிது ஊன்றிச் சிந்திப்பாமெனில், அவற்றின் பெரும் பிரயோசன விசிட்டம் பொள்ளெனப் புலப்படும். மிருகவர்க்கங்களிடத்தே பசி தாகங்களாகிய உணர்ச்சிகள் அமைக்கப்பட்டிருத்தலினன்றே, அந்த வர்க்கங்கள் உலகத்தின்கண்ணே நிலைபெற்றுப் பல்குவனவாயின. இளங்குழவிகள் எல்லாம் தங்கள் தங்கள் தேகத்தின்கண் நிகழ்ந்துள குறைகளைப் பசி தாகங் காரணமாக அறிந்து தத்தம் பெற்றார்க்குணர்த்த, அப்பெற்றாரும் அவ்வப்போதிற்றனே அவ்வவற்றுக்கியைந்த போசனாதிகள் தந்து போஷிப்பதில்லையாயின், மிருகவர்க்கங்கள் அடியற்றொழிபுமன்றி அவை உலகத்துப்பல்குமாறில்லையாகும். மிருகங்கள் தமது தேகத்தின்கண் எய்தியுள்ள குறைகளைக் கண்ணாரக்கண்டறிதல் கூடாதாகவும், அவற்றை அவைகளுக்குத் தடையின்றி உணர்த்துமாறும், அதுவாயிலாக அவைகள் போசனாதிகளை உட்கொண்டு அந்தக்குறைகளை எல்லாம் நிறைவுபடுத்தித் தங்கள் தங்கள் தேக யந்திரங்களைப் பூரணநிலையில் வைத்துக்கொள்ளுமாறும் அமைக்கப்

பட்ட பசி தாகங்களாகிய உபாயங்களை நாம் சிந்திப்பம் என்றால், இவைகள்தாமே கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதைச் செவ்விதின் நாட்டுமாம்.

(எ.) யந்திரங்களிலே அமைக்கப்படும் கருவிகள் எல்லாம் பிரமாண அளவைகள்பற்றி ஒன்றற்கொன்று ஏற்புடைத்தாக அமைக்கப்படுதற்கு மிகச் சிறந்த கணிதவியுற்பத்தி வேண்டப்படும். இங்ஙனமாகிய வியுற்பத்திக்கிரியங்கள் அளவிறந்தன மிருகதோற்றங்களில் அமைக்கப்பட்டிருப்பக் காண்கின்றும். நாற்கால்விலங்குகளின் முற்கால்கள் இரண்டும் ஓர் அளவாயும், பிற்காலிரண்டும் ஓர் அளவாயும், முற்கால்கள் பிற்கால்களுக்கியைந்த அளவாயும், அமைக்கப்படாதிருந்தால் அம்மிருகங்கள் நடத்தல் கூடுமேயோ? ஒரு காலின் மற்றொருகால் ஒரு நெற்பிரமாணமாயினும் குறைந்தாவது கூடியாவதிருந்தால், அவற்றைக் கொண்டுளமிருகம் எத்துணைச் சங்கடத்துக்காளாய் முடவிக்கொண்டழுந்தவரும்? இன்னமும் இந்தக்கால்கள், அவ்வவ்வுடம்பின் கனத்தைத் தாங்குதற்கியைந்த பெலமுடையனவாய், அவற்றைத் தாங்குதற்கியைந்த தானங்களில் அமைக்கப்படுதற்கு எத்துணைச் சிறந்த கணிதவியுற்பத்தி வேண்டப்படும்? ஓர் பேடகத்தைத் தாங்குமாறு அமைக்கப்படும் கால்களிலே சம அளவு அமைத்தற்கும், அவற்றைத் தக்கதானங்களிலே இயைத்தற்கும், அவற்றிலே அப்பேடகத்துக்கியைந்த பெலத்தை நிறுத்தற்கும் எத்துணைச் சிறந்த விவேகசாதனை வேண்டப்படும் என்பது நாம் எல்லாம் அனுபவங்கொண்டு நன்கு நிச்சயிக்கக்கிடக்கின்றது. ஒரு பேடகத்தினும் மகா விசிட்டம்பூண்டுள மிருகதேகத்தை அது அதுக்குரிய கால்களிலே நிறுத்துதற்கும், அதுமட்டோ, அங்ஙனம் நிறுத்தி அவைகளை எந்தப் பக்கத்திலாயினும் தள்ளுறவொட்டாது நேர்ப்படுத்து இயக்கிநடாத்துதற்கும், எத்துணை அளவைப் பிரமாண நிச்சயங்களும், எத்துணைச் சாத்திரவரையறைகளும் வேண்டப்படும்? ஒரு சிறுதேகத்திற்றானும் இதுபோற் பன்னூறு கணிதவியுற்

பத்திக்கியைந்த விநோதங்கள் காணப்படுமென்றால், பல்லர் பிரதேசங்களில் அமைந்துள்ள இந்த வியுற்பத்திகள் எல்லாம் தற்செயல் என்று சாதிக்குமாறு எவ்வாறு?

(அ.) மானுடதேகத்தை ஒருவன் ஆராய்ந்து சீர்தூக்குவ னுண்டாயின், அதன்கணுள்ள விசித்திர விநோதங்களும் கிர மபிரயோசனங்களும் எத்துணைச் சிறந்த விவேகிகளது அறி வாற்றலையும் கடக்குமன்றே! இந்த உடம்பின்கண்ணே, யார் ஒருவரானும் யாதொருகாலத்தும் ஆக்குதல் கூடாத அதி விநோத அதிப்பிரயோசனம் படைத்த பஞ்சப்புலன்களுண் மையும்; அப்புலன்களைக் கிரகித்தற்பொருட்டு ஆங்காங்கே அது அதுக்குரிய வேற்று வேற்றுப் பஞ்சப்பொறிகள் அமை ந்துகிடத்தலும்; அவ்வப்பொறிகளிடத்தே அது அதுக்குரிய புலனைக் கிரகித்தற்பொருட்டு இன்றியமையாது வேண்டப் படும் பதார்த்தங்கள் எல்லாம் அமைக்கப்பட்டுக் கிடத்தலும்; அவ்வப்பொறிகள் அனைத்தும் தாம் தாம் கிரகித்த அறிவை மூளைக்குக் கொண்டு செலுத்துமாறு அது அதுக்கியைந்த வேற்று வேற்றியல்பினவாகிய நரம்புகளால்—அதாவது, கண் காட்சி நரம்பானும், மூக்கு முகர்ச்சி நரம்பானும், காது கேள்வி நரம்பானும்—மூளையோடு இசைக்கப்பட்டிருத்தலும்; இவ்வியல்பினவாகிய புல பதார்த்தங்களும் புல நரம்புகளும் அது அதுக்குரிய அந்தந்தப் பொறிகளினன்றிப் பிறவற் றிலே மறந்தும் அமைந்திராத அந்தப் பெரும் கிரமமும்; இந் தப்பொறிகளாகிய கண் காது முதலிய பேர் அருமைபடைத் துள உறுப்புகளுக்கு தீங்குநேரிடாவாறு காக்கவல்ல மடல், மயிர், குடுமி என்றின்னன காப்புகள் ஆங்காங்கே செய்யப் பட்டிருத்தலும்; இந்தப்பொறிகள் எல்லாம், "இவற்றினும் சிற ந்ததானம்பிறிதில்லை" * என்னும்படி சிறந்ததக்கதக்க தானங்

* நமது கட்பொறிகளை அவை இப்போது அமைந்துகிடக்கும் தானத்திலன்றி மற்றெந்தத்தானத்தில் அமைத்தாலும், இத்துணைப் பயனை அவை எமக்களித்தல் கூடாது. நமது செவி நாசிகளை மூளைக்குத் தூரத்தேயுள்ள கால் கைகளில் வைத்தால், அவற்றால் நாம் எய்துதற்குரிய பிரயோசனம் பெரிது குறைவுற்றிடும்.

களிலே அமைக்கப்பட்டிருக்கும் அப்பெருஞ் சிறப்பும் தற்செயல்கள்தாமேயோ?

எமது கட்பொறியைமாத்திரம் சற்றே சிந்தித்துப்பார்க்க. அது அமைந்துள்ள மகா அதிசய விநோதமும், அதன்பேர் அருமையும், அதன் அளவைக்கடங்காப் பிரயோசனமும், அஃது எமது அறிவுக்கெல்லாம் பெருந்தாரகமாக அமைந்து கிடக்கும் மாட்சியும், அதனுள்ளே அமைந்துவிளங்கும் காட்சிப் பதார்த்தங்களின் விநோதமும், அப்பதார்த்தங்களின் அதி மிருதுவாகிய நுண்மையும், இந்நுண்ணிய பதார்த்தங்களால் பார்வைத்தொழிற்கு இன்றியமையாது வேண்டப்படும் படலங்கள் மணிகள் நரம்புகள் என்றுள்ள இவை எல்லாம் கிரமநெறிதவறாது படிமுறையே வரிசை வரிசையாக அடுக்கி அமைக்கப்பட்டுள சிறப்பும், அம்மணி முதலாயின கருவிகள் காட்சித்தொழிற்கு வேண்டிய வேண்டியபடி விரிந்தும், சுருங்கியும், சுழன்றும் அமைந்துகொண்டிருக்கும் அப்பெருநூதனமும்; இவைகாரணமாகக் காட்சிப்புலன் சித்திக்கும் அப்பெரு விந்தையும்; கண்களிற்படும் அழுக்குகளை அப்போதைக்கப்போதே மெல்லென ஒற்றி எடுக்கவல்ல மயிர்நிரை பதிக்கப்பெற்ற மடல்கள் கீழும் மேலும் சிறு கதவங்களை ஒத்து நிறுவப்பெற்றுள்ள நூதனமும்; இந்தமடல்கள், நாம் செலுத்தாவழியும் தாமே சென்று சென்று தமது தொழிலை ஓவாது செய்துகொண்டிருக்கு முறையும்; இன்னமும் கண்ணுக்கு யாதானுமோர் தீங்கு நேரிடின், அதனை விரைந்து சென்று விலக்குமோர் இயற்கை இம்மடல்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மரபும்; கண்கள் பிரமாணத்தால் ஒன்றற்கொன்று விகாரப்படுவதுண்டானால் காட்சிக்குப் பேரிழுக்காய் முடியுமாதலின், அவைஇரண்டும் சமஅளவாய் அமைக்கப்பட்டிருக்கும் கணிதவியுற்பத்தியும், அவை அமைக்கப்பெற்றுள வரிசையிற் சிறிது பிசகுவதுண்டென்றாலும் நமது காட்சித்தொழில் பெரிது பிழைபட்டுவிடுமாதலின், அவை இரண்டும் ஒரேவரிசையில் தகுந்த தானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நூதனமும், இன்ன பிறவுமாகிய (கண்ணுடைய பெருமையை நாமா

அளவிட்டுச் சொல்ல வல்லம்!!) அநந்தகோடி பேரதிசயப் பெரும் பிரயோசனங்கள் எல்லாம் தற்செயல் என்றுதான் சாற்றத்தக்கனவாமோ? ஒரு தூர திருஷ்டிக்கண்ணாடியினும் எமது கண்ணிலுள்ள விநோதங்களும் பிரயோசனங்களும் கிரமங்களும் எத்தனை ஆயிரமடங்கு சிறந்தன!!! தூரதிருஷ்டிக்கண்ணாடிக்கு யுத்தியிற்சிறந்தாரொருவர் கர்த்தன்வேண்டும், அதனினும் பல்லயுத்தமடங்கு சிறந்த கண்ணுக்கு அங்ஙனம் ஒருவன் வேண்டாவேயோ!!!!!

(கூ.) இனி எமது தேகம், அதிவிசித்திர சிற்பநுட்பங்கள் அமைந்ததோர் அந்தாணிமண்டபத்தை ஒத்துப் பற்பல உறுப்புகளையுடைத்தாகி; அந்த அந்த உறுப்பெல்லாம் அது அதுக்குவேண்டிய அளவை ஆகிருதிகளையுடைய பற்பல எலும்புகளால் நிரைத்து, நரம்புகளால் இசைத்து, தசையாற் பொதிந்து, தோலால் வேய்ந்து; ஆங்காங்கே அதிநுட்பமாகிய கடிகாரங்கள் தம்மினும் மகாநுட்பம் அமைந்த பலப்பல விநோத யந்திராங்கங்களைக்கொண்டு; நவத்துவாரங்களாகிய சாளரங்கள் அமைந்து (அச்சாளரங்கள் எல்லாம் தத்தமக்குரிய ஓர் ஓர் அரும் பெரும் பிரயோசனத்தைத் தந்துகொண்டிருப்ப) வாய்ந்துளதோர் பேராச்சரியப் பெருமாழிகையாகும். இப்பெருவியப்பமைந்த மாழிகை, நமது பாவனைக்கு இன்றியமையாது வேண்டியவண்ணம் அதிப் பெலமுடையதாயிருந்தும், அப்பெலத்தோடு, அது வேண்டிய வேண்டியவாறு வசைதலையும் பொருந்தி நிற்றற்பொருட்டுத் தக்க தக்க தானங்களிலே சந்துகளைக்கொண்டிருத்தலும்; அச்சந்துகளில் எல்லாம், கதவங்களில் அமைக்கப்படும் பிணையல்களை ஒத்து, முன்னும் பின்னும் விரிந்தும் சுருங்கியும் வருந்தகுதியுடைய நரப்புமண்டலங்கள் அமைக்கப்பட்டிருத்தலும்; நாம் எல்லாம் எங்கள் எங்கள் தொழில்களை இனிது நடாத்துதற்குப் பேருபகாரகமாயுள்ள உயர்வொப்பில்லாப் பெருஞ் சிறப்பமைந்த இரண்டுகைகளும் கால்களும் அளிக்கப்பட்டிருத்தலும்; இந்தக் கைகால்கள் தத்தமது தொழிலே இனிது

நட்டாத்துதற்கியைபந்தவாறு சம அளவினவாய் ஆக்கப்பட்டுச் சமதானங்களிலே நிறுத்தப்பட்டிருத்தலும்; இவற்றிலேயே தொழில்செய்தற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய விரல்கள் இயைக்கப்பட்டுக் கிடத்தலும்; இவ்விரல்கள் தொழில்செய்தற்கினிதியலுமாறு, மற்றை அங்கங்களினும் மிக அதிகமாகிய பொருத்துகளைக் கொண்டிருத்தலும்; இப் பொருத்துகளிற் சந்திக்கும் இரண்டு என்புகளும், ஒன்றோடொன்று செவ்விதிற்பொருந்துமாறு (சிற்பன் மரங்களைப் பொருந்துமாறு வெட்டிச் சீர்ப்படுத்தாலென்ன) இயைபுற ஆக்கி அமைக்கப்பட்டிருத்தலும்; இந்தச் சிற்றங்கங்கள் தாமும் விரிந்தும் சுருங்கியும் இயங்குமாறு நுண்ணிய நாடி பந்தனம் செய்யப்பட்டிருத்தலும்; இந்த நாடிகளுட்பல எமது பிரஞ்ஞையின்றியும்; துயின் முதலிய காலங்களிற்றானும், தாமே இயங்கி எமது சீவனுக்குப் பெரும் பாதுகாப்பாயிருத்தலும்; தற்செயல்கள் என்றுதான் சாதிக்கத்தக்கனவாமோ?

இனி, நாம் உட்கொள்ளும் உணவுகளை அரைத்துப் பொடிபடுத்தற்பொருட்டு அதற்கியைந்த வன்மைபடைத்த பல்வரிசைகள் அமைக்கப்பட்டிருத்தலும், இப்பல்வரிசைகள் மற்றை அங்கங்களைப்போலாது அரைத்தற்றொழிற்கு உரிய வடிவமும் வன்மையும் படைத்துக்கிடத்தலும்; இவற்றுள், உணவுகளைத் துண்டங்களாக்குதற்கியன்ற பற்கள் ஒருபுறமாகவும், அத்துண்டங்களைப் பின்னர்ப் பொடிபடுத்தற்கியன்ற பற்கள் ஒருபுறமாகவும் நிரைக்கப்பட்டிருத்தலும்; இந்தப் பற்கள் நாம் எல்லாம் வன்னெறிபடைத்த உணவுகளை உண்டற்குரிய பராயத்தை எய்தியபின்னே நம்பாற் தோன்றுதலும்; இப்பற்களால் அரையுண்டு பொடிபடும் உணவுகளைக் குழைத்துப் பாகஞ்செய்தற்கமைந்த உமிழ்நீர் நமதுவாயிலே அமைக்கப்பட்டுள்ளமையும்; இந்த உமிழ்நீரிலே நமது ஆரோக்கியத்துக்குப் பெரிது வேண்டப்படும் சத்தமைந்துகிடத்தலும்; இதனுல் குழைத்து அரையுண்ட உணவை உள்ளே செலுத்தற்கமைந்ததோர் குழல் வாயின்கண் இயைக்கப்பட்

டுண்மையும், இந்தக்குழல் உணவுகளை ஏற்றுப் பரிபாகஞ்செய் யவல்ல இரைப்பையோடு இணைக்கப்பட்டுக் கிடத்தலும்; இவ் விரைப்பை அவ்வவர் தேகத்துக்குத்தக்க அத்துணைப் பிரமா ணங்கொண்டு கிடத்தலும், அங்கே நாம் உண்ணும் உணவு களை அந்நுவயஞ்செய்து சத்துகளை வேறுக்குமோர் பேரதி சய ஆற்றல்படைத்துள பாசகநீருண்மையும், இப்பாசகநீரால் பிரிவுற்ற சத்து அன்னப்பாகாய்த் திரிந்து குக்கு அமோத்து வார வாயிலாகக் குடருட்புகுதலும், இங்ஙனம் புகுங்கால் அவ் வன்னப்பாகு பித்தாசயத்தினுள்ள பித்தத்தின்வலியால் அன் னரசமாய்த்திரிந்து, பின்னர்ச் சிறிது சிறிதாக இரத்தவடிவெ டுத்து நரம்புவழியாக உதிரதசிரத்துட் செல்லுதலும், அன் னப்பாகு இங்ஙனம் செல்ல, சமீகரணமுறையாற் கழிவுற்ற கழிவுகள் எல்லாம் பிறிதோர்வழியாற் பிறிதோர் குடருட் கிர மந்தவறாது புக்கு மலநீராதிகளாக மாறி வெளியேகழிதலும்; இவற்றை எல்லாம் இந்த முறை தவறாது ஆங்காங்கே கொண் டுசெலுத்தவல்ல வாயு சூடு முதலியன தக்க தக்க அளவைப் படி அமைந்துள்ளமையும்; இனி முன்னர் உதிரதசிரத்துட் சென்றஇரத்தம் ஒன்றன்பின் ஒன்றாய் நால்வகை ஆயசங்களு ட்சென்று படிமுறையே பூரணசுத்தி அடைந்து உதிர அணுக் களின் துணையால் நரம்புகள்வழியாக உடம்பெங்கணும்செல் லுதலும்; இவ்விரத்தத்தால் தசைக்குமாத்திரத்தினமையாது என்பு, நரம்பு, மயிர், மூளை, நகம் முதலிய அனைத்துறுப்புகட் கும் அது அதுக்கியைந்தபடி ஆகாரம் செல்லுதலும்; ஆயசத் தினின்று இரத்தத்தை உடம்பெங்கணும் கொண்டு செலுத் தும் உதிர அணுக்கள் அங்ஙனம் செலுத்துகையினல் அழுக் கடைந்து பின்னர்ப் பிறிதோர் நரம்புவாயிலாற் பின்னும் உதிரதசிரத்துட் புக்குச் சுத்தி அடைந்து, மீட்டும் தமது தொழிலை ஓவாது செய்துகொண்டிருத்தலும்; இவ்வாறே நாம் உட்கொள்ளும் உணவுகள் நமக்கியைந்த தசையாதிக ளாக உருத்திரியும் அவ்வதிநூதன அதிசயமும், இந்த அதி நூதன அதிசயங்களை எல்லாம் புரிதற்கியைந்த பதார்த்தங் கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளமையும்; இனி எமது

உடம்பின்கணுள்ள மற்றெந்த உறுப்பினும் மகா முக்கியம் படைத்துத், தமக்கோர் அபாயம் நேரிடின் முழுதுடம்பும் பாழ்பட்டழிந்துவிடத்தக்க அத்துணைப்பெரு விசேடங்கொண்டுகிடக்கும் மூளையும் இரத்தாசயமும் பிற அங்கங்களைப் போலாது, மிகப் பெலங்கொண்ட இரண்டு என்புக்கூட்டுள் அமைத்துத் தீங்குநேரிடாவாறு பாதுகாக்கப்பட்டுக் கிடத்தலும்; இவ்வியல்பிற்ருய அதிநூதன தேகத்தைக்கொண்ட தோற்றங்கள் ஒன்றிலிருந்து ஒன்று உற்பத்தியாகிப் பெருகும் அப்பெருவிநோதமும், அவ்வாறு பெருகுதற்பொருட்டு இன்ன பல பேராச்சரியப் பெருநூதனங்களை எல்லாம் சூக்குமித்துக் கருவாக்கி அவ்வவற்றின்கண் அமைத்திருக்குமுறையும், அக்கருக்கள் கருப்பாசயங்களிற் படிந்தபின் எய்தும் விநோதாதிசயத்திரிபுகளும், அத்திரிபுகளின்கண் நிகழும் ஒழுங்குகளும், அவ்வொழுங்குகளால் எய்தும் பிரயோசனங்களும், இங்ஙனம் கருவாய குழவிகட்கு அவ்வக்காலத்தே அவ்வக்காலத்துக்கு இயைந்தபடி உணவுசென்று போஷிக்கும் அப்பேராச்சரிய மரபும்; இவ்வாறு கருவினின்று உற்பத்தியாகும் ஒவ்வொருதோற்றத்தினும் மேல் விரித்துக்காட்டிய அத்தியந்த அதிசயநிலையமைந்த கிரமபிரயோசன விநோதங்கள் யாவும் சிறிதும் பிறழாது அமையும் நியதியும், இன்னும் விரிவஞ்சி விடப்பட்ட கோடாகோடி செயற்கை இலக்கணங்களும், அவற்றிற் சம்பூரணமாகக் காணப்படும் கிரமங்களும், அந்தக்கிரமங்களால் எய்தும் பிரயோனங்களும், இப்பிரயோசனங்களை வரைவின்றிப் பயக்குமாறு ஆங்காங்கே எமது அறிவு கிரகிக்கலாற்ருத அத்துணைச் சிறப்போடு அமைக்கப்பட்டுள அதிவிநோதப் பேரதிசய இயற்கைமுறைகளும்; இதுமட்டோ, இவ்வாறு சனிக்கும் தோற்றங்கள் சீவித்தற்கு இன்றியமையாப் பெருந் தாரகமாயுள்ள, பரமாணு, நீர், அக்கினி என்றுள்ள இவைகளும், தாமே அமைந்தன! தாமே அமைந்தன! என்று அறிவுடை ஒருவன்கூற நா எடுப்பனு? விவேகிகாள்! கூறுக! கூறுக!!

(௧௦.) இத்துணைச்சிறந்த பல பிரபலநியாயங்களைக் கண்டபின்னரும், சிலர் நிரீச்சுராபிமானந் தலைக்கேறப்பெற்று "இவை எல்லாம் பயன்கருதிச் சிருட்டிக்கப்பட்டன அல்ல, தற்செயலாய் அந்த அந்த முறையாய் அமைந்து கிடத்தலிற் பயன்படுவவாயின; வெள்ளம் பள்ளத்தைநாடும், அதுகொண்டு பள்ளங்கள் எல்லாம் வெள்ளம்படிதற்காக அமைக்கப்பட்டன வெனல் சாலுமோ?" என்பர். ஆகா! இவர் அறிவு இருந்தவாறென்னை? ஒன்றிரண்டோடமையாது எந்த எந்தச் சிருட்டியினும் ஒருநூறு இருநூற்றுக் கணக்காகக் காணப்படும் இக்கிரமபிரயோசனநிதிகள் எல்லாம் தற்செயலாய் அமைந்தன எனக்கோடல் யுத்திக்கியைந்ததாகுந்தானே என்பதே நாம் இந்தச் சூத்திரத்துட் பேசப்புகுந்தது, இவற்றைக் காண்பான் ஒருவன் இவை தற்செயலாய் அமைந்தன என முடித்தலோ, அன்றி ஓர் காரணகர்த்தனால் ஊகித்தமைக்கப்பட்டன என முடித்தலோ யுத்திக்கியைந்ததென்று சொல்லத்தக்கது? காரணகர்த்தனால் அமைக்கப்பட்டன வெனக் கோடலே, தற்செயலாய் அமைந்தனவெனக் கோடலினும், பன்மடங்கு யுத்திக்கியைந்ததாம் என்பதை யாரும் ஒத்துக்கொள்வர். ஆகவே கடவுளுண்டெனக் கோடலே அங்ஙனம் ஒருவர் இல்லை எனக்கோடலினும் யுத்திக்கியைந்ததென்றபடி. இம்மட்டே எமக்கு ஈண்டு வேண்டப்படுவது. அது கிடக்க.

பயன்கருதிச் சிருட்டிக்கப்பட்டுளதொன்றுக்கும், தற்செயலாய் அமைந்து கிடந்தமையிற் பயன்படுவதொன்றுக்கும் பேதந்தெரித்தல் கூடாதேயோ? வெள்ளம் படிதற்காக அமைக்கப்படும் குளம் கூவல் முதலியவற்றுக்கும், தாழ்வுபற்றி நீர்சென்று படியும் பள்ளங்கட்கும் பேதமில்லையேயோ? ஒரு குளத்திலே நீர் செல்லுதற்குரிய கால்வாய்களையும், படித்துறைகளையும், நீர் நிலைக்கமைந்த வடிவத்தையும், அது பழுதுறுமாறு செய்யப்பட்டுள காப்புகளையும், அஃது அமைக்கப்பட்டுள தானத்தின் தகுதியையும், அங்கே அது வேண்டப்படும் ஏதுவையும் பிறவற்றையும் ஒருவன் காண்பதுண்

டாயின், அது நம்மனோர்க்குப் பயன்படுமாறு சிலரால் ஊகி த்து அமைக்கப்பட்ட தென்பானே, அல்லது பள்ளமாய்க் கிடந்தமையின் வெள்ளம் அங்குச்சென்று பயன்படுவதாயி ற்று என்பானே? முந்தியபடியென்றே ஓர் மந்தனும் சொல் வன். அதுபோலச் சிருட்டிகளின்கணுள்ள கிரமபிரயோசன நூதனங்களை நாம் நோக்குங்கால், அவை தற்செயலாய் அமைந்துகிடந்தமையிற் பயன்படுபவாய்த் தோன்றுது, பய ன்படுதற்காகவே அமைக்கப்பட்டன என்பது செவ்விதிற் தோற்றுகின்றது. எங்ஙனம்? நாம் எந்த எந்தச் சிருட்டியை த்தான் எடுத்துப் பார்த்தாலும், அது அது எல்லாம் நாம் மேலேக் காட்டியபடியாய் ஓர் ஓர் நோக்கத்தை விளக்கி நிற்கி ன்றது. எம்மிடத்துத்தானே அமைந்துள்ள பஞ்சப்பொறிக ளேயும் மூளையையும் சற்றே சிந்தித்து நோக்குக. இப்பொறி கள் எல்லாம் தாம் தாம் கிரகிக்கும் அறிவை மூளைக்குக்கொ ண்டு செலுத்துவல்லுனவாறு, அவ்வத்தொழிற்கியைந்த நரம்பு முதலியவற்றுற் றொடுக்கப்பெற்றுக் கிடக்குமுறையும், அவ் வப்புலனைக் கிரகித்தற்பொருட்டு இன்றியமையாது வேண் டப்படும் அவ்வப்பதார்த்தங்கள் எல்லாம் அவ்வப் பொறிக ளிலே சிறிதும் பிறழாது அது அதுக்குரிய கிரமப்படி மிகச் சிறந்த ஒழுங்காக அமைக்கப்பட்டுக் கிடக்குமாறும், அவ்வப் பொறிகளிலே அது அதுக்குரிய பதார்த்தங்கள் அன்றிப் பிற புலன்களுக்குரிய பதார்த்தங்கள் மறந்தும் அமைக்கப் பட்டிலா மரபும், அவ்வத்தொழிற்கியைந்தபடி அவ்வப்பொ றிகள் எல்லாம், வட்டம், நீளம், ஆழம், உண்டை முதலிய வடிவங்களைப் படைத்திருக்குமுறையும், அவ்வப்பொறிகளை எல்லாம் காப்புச்செய்யுமாறு அது அதுக் கியைந்த இமை, என்புக்கூண்டு, மயிர், குடுமி முதலிய காவல்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுக் கிடக்கும் நெறியும், இவை எல்லாம் தத் தம்பயனை இனிது பயத்தற்குரிய விசேட தானமாகிய சிரசிற் றனே சிருட்டிக்கப்பட்டிருக்கு முறையும், இவை எமக்கெ ல்லாம் இன்றியமையாப் பெருஞ் சிறப்பினவாய் வேண்டப் பட்டுக் கிடக்கு நெறியும், இங்ஙனமே இவைமாத்திரமல்ல

எந்த எந்த உறுப்பும் அது அது பிரயோசனந் தரத்தக்க தானத்திற்றானே, அது அது பிரயோசனந் தரத்தக்க முறையாகவே மிக்க சாதுரிய சாவதானத்தோடு அமைக்கப்பட்டிருக்கு மாறும், பிறவும் ஒருவனது அறிவிற் புகுவதுண்டாயின், இவைகள் மக்கட்குப் பயன்படுதல் வேண்டும் என்னும் பெருநோக்கம்பற்றி ஒரு காரணனால் ஊகித்து அமைக்கப்பட்டனவா, அல்லது தற்செயலாய் அவ்வம் மரபினமைந்து கிடந்து பயன்படுகின்றனவா என்று சொல்லமாட்டானா? ஓர் பேதையும் சொல்லுமே! ஆதலின் இவ்வாக்ஷேபம் அமையாதபடி காண்க.

(கக.) இனிச் சிலர், சீவதோற்றங்களின் சிற்சில் உறுப்புகளிலே ஓர் ஓர் காலத்துச் சிற்சில நோய்கள் கிளர்தல்பற்றி, "இவ்வுறுப்புகளை ஆக்கினார் ஒருவர் உளராயின் அவர் இவற்றை நோய்க்கிடனாக ஆக்குவாரா?" என்று ஆசங்கிப்பர். இவ்வாசங்கை, பூவலயத்தே தோன்றிநின்றழியும் அநந்தகோடி சிருட்டிகளின் சகல உறுப்புகளினும் சகல காலங்களினும் காணப்படும் அளவிறந்த கிரமபிரயோசனாதிகளால் நாட்டப்பட்டுள்ள கடவுளுண்மையைச் சபலம் செய்யுமாமோ? யாதானுமோர் கிரமபிரயோசனம் யாதொருபொருளில் யாதொரு காலத்துக் காணப்படுவதுண்டெனின், அதனுக்கோர் காரணகர்த்தனுண்டெனக் கோடலே யுக்தமாமென்பது செவ்விதிற் போதரும். இங்ஙனம் போந்தபின்னர், வேறு பிறவற்றிலே ஓர் ஓர் கிரமத்தவறு காணப்படுவதனால், முன்னர்ப் போந்துள கொள்கைக்கு எய்தற்பாலதோர் இழுக்கென்றுமில்லையாம். எமக்குக் கடவுணிச்சயப்பொருட்டு வேண்டப்படுவது கிரமாதி மரபு. இதனை நாம் ஒரே ஒரு சிருட்டியின் ஒரே ஒரு உறுப்பிலாயினும் கண்டுகொண்டனம் என்றால், பிறவற்றைக் குறித்து நாம் சிந்திக்கவேண்டியதோர் ஆவசியகம் சிறிதும் இல்லை. யாதொரு கிரமநெறிபற்றி, அதனுக்கோர் காரணன் உண்டென்கை ஒருகால் நாட்டப்பட்டுவிட்டதென்றால், அது பின்னர்க்காணும் வேறுபிற கிரமத்தவறுகள் பற்றி அழிவுறாது. என்னை? ஒன்றன்மாட்டுக் காணப்படும் கிரம

நெறி பின்னொன்றன்மாட்டுக் காணப்படும் கிரமத்தவறுபற்றி அழிவுற்றொழியமாட்டாது. அஃதழிவுறுதல் இல்லையாகவே, அதனாற் பெறப்படும் காரண நிச்சயமும் அழிவுறலின்றாமெ ன்க. அன்றியும், கிரமபங்கங்கள் தாமும் ஓர் ஓர் காரணரைக் கொண்டிருத்தல் இனிது சாலுமன்றே. இங்ஙனம் சாலுவன, வேறுபிற ஏதுப்பற்றி நன்கு தாபிக்கப்பட்டுள்ள கடவுளுண் மைஎய நிலையழித்தல் எங்ஙனே கூடும்?

சில உறுப்புகளிற் காணப்படும் குறைவுதான் (அதனு க்குத் தக்க சமாதானம் காணப்படாவழியும்) கடவுளுக்கும் ஓர் குறைவை உண்டாக்கி, அவருடைய இலக்கணத்தைப் பிறழ்த்திவிடுமன்றி, கடவுணிச்சய விஷயத்திலே, அதனுக் குச் சார்பாகத்தான் அன்றி மாறாகத்தான் எடுத்தாளப்படத் தக்கதன்று. அங்ஙனம் எடுத்தாளப்படவருமிடத்தும், இது கடவுணிச்சயத்துக்கு ஒருவாறு அனுகூலமாகாதெனத் தக்க தன்றி; அதனுக்குக் கிஞ்சித்தேனும் ஓர் தடையாகமாட் டாது. ஆகாதபோது, வேறு பிறவற்றிலே, செவ்விதிற் காண ப்படும் கிரமாதிகள்கொண்டு தாபிக்கப்படும் கடவுணிச்சயம், இக்குறைவுகொண்டு தடைப்படமாட்டாது. அன்றியும் கட வுணிச்சயத்தை நாம் தாபிப்பது, இந்தக் கிரமத்தவறுகொண் டல்லவே. அல்லாதபோது அதனை ஈண்டெடுத்து வினைக் கெடுவது பெரிதும் அப்பிரயோசனமாமென்க. புகையுண் மையாற் தாபிக்கப்பட்டுள்ள நெருப்புண்மை, பிறிதோரிடத் துப் பெறப்படும் புகையின்மையாற் தடைப்படமாட்டாது. என்னை? புகையின்றியும் நெருப்புளதாதல் கூடுமாதலின். ஆயின், யாதோரிடத்துப் புகை காணப்படுவ துண்டாயின், அது நெருப்புண்மையைத் தடையின்றி நாட்டிவிடுமாம்.

இனி இக்கிரமத்தவறுகள் கடவுணிச்சயத்தைத் தடை செய்ய வல்லன என்றே கொண்டாலும், இவை காணப்படு வது சிருட்டிபேதங்களின் ஓர் அல்பகூற்றின் மாத்திரமே யாம். ஆனால் கிரமநியதிகளோ சிருட்டிபேதங்கடோறும் அநேகாநேகமாய்க் காணப்படும். ஆகவே இப்பலவற்றின்

சாக்ஷியத்தையே அச்சிலவற்றின் சாக்ஷியத்தினும் விசிட்ட முடைத்தெனக்கொண்டு, அப்பலவற்றூற் பகிரங்கமாக காட்டப்படும் கடவுளுண்மையை நாம் தாழ்க்காது அங்கிகரித்தல் வேண்டுமென்க. ஆனுல், உண்மை அளவிலே இவ்வல்ப்ப கிரமத்தவறுகள் கடவுணிச்சயத்துக்குக் கிஞ்சித்தேனும் ஓர் தடையாகாவாதலின், சிருட்டி குழாங்களினெல்லாம் அநேகாநேகமாய்க் காணப்படும் கிரமநெறிபற்றிச் சாதிக்கப்படும் கடவுளுண்மை தனதாற்றலிற் சிறிதும் குறைவுறுதாம். இக்கிரமத்தவறுபற்றி, நாம் மேலேக் காட்டியவாறு, இவற்றை அமைத்தார்மீதும் ஓர் குறைவைச் சாதிக்கலாமன்றி, இவற்றை அமைத்தார் ஒருவர் இல்லை எனச் சாதித்தல் நையாயிக தர்மம் ஆகாது. நாம் இங்கே பேசப்புகுந்தது, கடவுளது உண்மையைப்பற்றியன்றி அவரது இலக்கணங்களைப்பற்றியன்று தலின், அவர் குறைவுடையராயினென், நிறைவுடையராயினென், அங்ஙனம் ஒருவர் உளர் என்பதே எமக்கு வேண்டப்படுவது. அவரது உண்மை அங்கிகரிக்கப்பட்டபின், அவரது இலக்கணங்களைக் குறித்த சந்தேகங்களைச் சமய ஆராய்ச்சிசெய்து நீக்கிக்கொள்க. அவற்றை இங்கே எடுத்து விரித்துக்காட்டுதல் மற்றென்று விரித்தலாய் முடியும்.

(கஉ.) வேறு சிலர் "உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயினுலென்ன" நம்பாலுள்ள உறுப்புகள் எல்லாம், நெடுங்காலப்பாவனையினுல், ஒன்று மற்றொன்றாகத் தேய்ந்து உருத்திரியும் என்பர். இவரும், நாம் எடுத்துக்காட்டிய கிரமாதிகளின் வழியால் எவரகத்தும் இனிது பதியத்தக்கதாயுள்ள உண்மையினுற்றலைச் சிறிதேனும் நோக்காது, யாதானும் ஓர் சழக்குரைத்துச் சங்கற்ப நியாயத்தை மறுத்துவிடத் துணிகின்றனர். இவர் கூறும் இச்சழக்குரைதானும், நம்மாட்டுள்ள சகல உறுப்புகளுக்கும் அமைவுறுது. என்னை? எமது கண் காது மூக்கு நாக்கு இரத்தாசயம் மூளை முதலிய உறுப்புகள் எல்லாம் ஒன்றன் தேய்வினுற் பெறப்படுவனவல்ல. இவற்றின் கணுள்ள ரூபரசகந்தாதி அறிவுகளைத் தரத்தக்க பதார்த்தங்க

ளின் இயல்பு யாதொருபொருளைத் தேய்த்துக்குறைப்பதனல் உண்டாகத்தக்கதல்ல. இந்த உறுப்புகளின் சிறப்பை நோக்கவே, இவை ஒருவரால் உத்தேசித் தமைக்கப்பட்டன என்பது செவ்விதிற்போதரும். இனித் தேய்ந்தமையும் இயல்புடையனவென்று கொள்ளத்தக்கனதாமும், புறத்தேயுள்ள சில உறுப்புகளின்றி, அகத்தேயுள்ள அத்தி அற்புத அதி விநோதம் படைத்துள நூதன உறுப்புகள் அல்ல. என்னை? புறத்துறுப்புகளே எமது தேய்ப்பாற்றலாற் ருக்குறத்தக்கன. அகத்துறுப்புக்களின் பேர் அருமைபடைத்த பெருவிநோத வடிவங்கள் தேய்ப்பாற்றல்பற்றி அமையத்தக்கனவு மல்ல; அங்கே சாதாரண வடிவத்தைத்தானும் உருத்திரித்தமைக்கத்தக்க தேய்ப்பாற்றலும் பெரிதில்லை. ஆதலின் அவ்வகத்துறுப்புகளின் அரும்பெருவடிவங்கட்கெல்லாம் ஓர் காரண கர்த்தன் வேண்டுமென்பதே சித்தம். இனி இவ்வுறுப்புகள் தாமும் தேய்வுற்றமைந்தன என்றே கொள்ள வருபிட்டத்தும், இத்துணை உறுப்புகள் அனைத்தும் இத்துணைச் சிறப்பாகத் தேய்ந்தமைதற்பொருட்டு, இவற்றை இங்ஙனம் தேய்வுறச் செய்தார் ஓர் சாமர்த்தியர் உளர் என்று முடித்தலே விவேகிகள் தர்மம் ஆகும்.

இனித் தற்செயலாய்த் தேய்ந்து உருத்திரிந்து நின்று பயன்படுவனவற்றுக்கும், பயன்கருதி உத்தேசித்துச் சிருட்டிக்கப்பட்டனவற்றுக்கும் பேதங் குறித்தல் கூடாதேயோ? கூடும், கூடும். ஒரு பொருள் எத்துணைக் காலத்துக்குத்தான் தேய்ந்தாலும், நமது அங்கங்களிலுள்ள இத்துணைச் சிறப்புகளும், அவ்வவ்வங்கங்களில் அவ்வவற்றுக்கு வேண்டிய அளவைப்பிரமாண அமைதிகளும், அவ்வவற்றின் தொழின்முயற்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் அவ்வப்பதார்த்தங்களும், அவ்வவற்றின் தொழின்முறைக்கமைந்த அவ்வவ்வாகிருதிகளும், அவ்வவ்வுறுப்புகள் எல்லாம் பழுதுருவாறு ஆங்காங்கே செய்யப்பட்டுள காப்புகளும், இன்னமும் அவ்வவற்றின்கணுள்ள அதிநூதன யாந்திர நுணுக்கங்களும் தற்செயல் மாத்திரையாற் தேய்ந்தமைந்தன என்கை யுத்திக்கு

ஒரு சிறிதும் ஒவ்வாதாம். இவற்றைக்காண்பார் எவரும், இவை எல்லாம் ஓர் சாதுரியசம்பன்னரால் உத்தேசித்தமைக்கப்பட்டனவென்றே வற்புறுத்துச் சாதிப்பார். ஆகவே எமது அகத்தும் புறத்தும் உள்ள சராசரப்பிரபஞ்சங்களிற் காணப்படும் கிரமபிரயோசன விநோதங்களை நாம் தூக்கி ஆலோசிக்குமிடத்து, இவற்றுக்கெல்லாம் காரணனுவான் ஓர் கர்த்தன் உண்டென முடித்தலே எமது யுத்திக்கியைந்தபடி என்பது காண்க.

(௬௩.) அற்றன்று: நீரின்கட்குமிழி தோன்றினுலென்ன, இப்பிரபஞ்சமும், பௌதிகபதார்த்தங்களின்கட் தற்செயலாய்த் தோன்றிநின்றழியும் எனக் கொண்டால் என்னெனப்பிரேல்; இத்துணை வரையறைகடந்த விநோதாச்சரியங்களை எல்லாம் தற்செயல் என்று முடிக்கலாந்தானே என்பதே நாம் இந்தச் சூத்திரமுகத்துப் பேசப்புகுந்தது. இவற்றை உற்று நோக்குங்கால், இவை ஓர் காரணகர்த்தனது விவேகசாதனை காரணமாக நிகழ்வன என்று கொள்வதே யுத்திக்கியைந்ததாகும். இவ்வளவே நாம் இந்தச் சூத்திரத்து எடுத்துப்பேசத் தக்கது. இதுவே யுத்திக்கியைந்ததாம் எனவே, பிரபஞ்சதோற்றத்தை எடுத்து, தற்செயல் அளவிற்றுப்க் கவனிக்கப்படும் நீர்க்குமிழியோடு ஒப்புமைபூட்டல் யுத்திக்கியையாதென்றபடியாம். இதுகிடக்க, நீர்க்குமிழிக்குக் காரணம், நீரின்கட்படும் வாயுவீக்கம் முதலிய ஏதுக்களாம். இவற்றுக்கும் காரணம் விசாரித்துச்சென்றுல், இவ்விசாரமும் இறுதியில் ஓர் காரணகர்த்தனிற்றுனே சென்று முற்றுமென்க. ஆகவே நீர்க்குமிழியைத்தானும் ஒருங்கே தற்செயல் என்றுமுடித்தல் சாலாதபடியறிக. ஆயினும், நமது வாதப்பொருட்டாக நீர்க்குமிழியைத் தற்செயலென்றே நாமும் கொள்வம்; கொண்டு பிரபஞ்சம் நீர்க்குமிழியைப் போன்றதோர் "தற்செயல்" தானும் அன்றென்பதைச் சாதிப்பாம்.

நீர்க்குமிழி, நீரின்கட் பிறிதோராற்றுல் நிகழும் காற்று முதலிய ஆற்றற் சம்பந்தத்திலேதானும் தோன்றுதற்குரிய

அமைதியுண்மையின், ஆண்டுத் தற்செயலாய்த் தோன்றுவது. பிரபஞ்சமும் இங்ஙனமே பிறிதோர் ஏதுக்காரணமாக நிகழும் யாதொரு சம்பந்தத்திலே தற்செயல் மாத்திரையாகத் தோன்றுவதாக எமக்குப் புலப்படுதலின்மையின், நாம் அதனை நீர்க்குமிழியை ஒப்பத் தற்செயல் என்று முடித்தல் சாலாது. ஆனால், அதன்கட் புலப்படும் கிரமபிரயோசன விநோதாதிகளை நோக்கவே, அவ்வெல்லாம் ஓர் காரண கர்த்தனைக்காட்டி நிற்றலின், அவற்றைக்கொண்ட பிரபஞ்சம் ஓர் காரணனை யுடைத்தென முடித்தலே யுத்திக்கியைந்ததென்க. பிரபஞ்சம் ஓர் காரணனை அவாவிநிற்றல் தன்பாலுள்ள கிரம பிரயோசனாதிகளானும். இக்கிரமாதிகள் சிறிது மில்லதாகிய நீர்க்குமிழியை அப்பிரபஞ்சத்தோடு ஒப்பிட்டு, இதன் முடிபை அதனுக்குஞ் சார்த்தக்கருதுதல் எங்ஙனே அமையும்? பிரபஞ்ச நிகழ்ச்சிக்குரிய அமைதிகள் எல்லாம் ஆங்காங்கே வரன்முறை பிறழாது அமைந்து, அவ்வமைதிகள் ஓர் ஓர் நோக்கப்பொருட்டாக உத்தேசித் தமைக்கப்பட்டன என்பதைச் செவ்விதின் உணர்த்துமாதலின், அவற்றை அந்த அந்த நோக்கம்பற்றி அமைத்தார் ஒருவர் உண்டென்பது நன்கு போதரும். இங்ஙனயாகியதோர் நோக்கக்குறி நீர்க்குமிழியின்கண் இன்மையின், இதனைப் பிரபஞ்சத்தோடு ஒப்பிடல் மாபன்மை காண்க. நீர்க்குமிழியோ ஓர் ஓர் ஆற்றல்பற்றி அமைந்த நீர்ப்பொருமலன்றி மற்றொன்றல்ல. பிரபஞ்சகாரியங்களோ பெரும்பாலும் ஒன்று மற்றொன்றாய்த் திரிந்தமைவன. இங்ஙனமாயதோர் திரிபினை எய்துதல் அதிவிநோதசகிதமாகிய பெருநூதனமாதலின், இதனை நீர்க்குமிழியை ஒப்பதோர் பொருமல் மாத்திரையே என்று முடித்தல் சிறிதும் பொருந்தாதாம். இனி, நீர்க்குமிழியை நாம் தற்செயல் என்று ஒப்பது, அதனுக்குக் காரணமாகிய ஆற்றல் நீரின்கண்ணே பிறிதோர் இயைபுபற்றி நிகழ, அந்நிகழ்ச்சிக்கண் இது யாதானுமோர் சங்கற்பநோக்கஞ் சிறிதுமின்றித் தோன்றுதல்பற்றி. இங்ஙனமின்றி, இதன் தோற்றத்துக்கேதுவாகிய காரணம் எமக்குப் புலப்படாது,—இது தோற்றுதற்கமைந்ததோர் நோ

க்கம் உண்டோ இல்லையோ என்று நாம் அறியாது,—ஆகவே இது தற்செயலாய்த் தோன்றிற்றோ அன்றி யாரானும் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதோ என்று நாம் முடித்துக்கொள்ளக் கூடாது இருப்பம் என்றால், இதனைத் தற்செயல் என்று நாம் முடித்துக்கொள்ளுமா றில்லையாம். யாதொருபொருள் அமைதற்கமைந்த காரணங்கள் தற்செயல்மாத்திரையாற் சந்திப்ப துண்டாயினன்றே, அப்பொருளின் தோற்றத்தை நாம் தற்செயல் என்று முடிக்கத்தக்கது? பிரபஞ்ச தோற்றத்துக்கமைந்த காரணங்கள் இங்ஙனமே தற்செயல்மாத்திரையாற் சந்திப்பன என்றாவது, அந்தத் தோற்றம் யாதானும் ஓர் சங்கற்ப உத்தேசமின்றி வந்தமைவதென்றாவது நாம் முடித்துக்கொள்ளமாட்டுவமா? மாட்டாதபோது அதனை நீர்க்குமிழியை ஒப்பத் தற்செயல் என்று சாதிப்பது சற்றேனும் அமையாதென்க. ஆனால் பிரபஞ்சதோற்றத்தின்கண்ணே உத்தேசசங்கற்ப விவேகசாதனைகட்கமைந்த குறிகள் பல்லாயிரம் காணப்படுதலின், இதனை இங்ஙனமாக அமைத்தார் ஒருவர் உளர் எனக்கோடலே யுத்திக்கியைந்து சிறந்ததாம்.

பிரபஞ்ச தோற்றங்கள் எல்லாம் பெரும்பான்மைபற்றி ஓர் ஓர் நியதிநெறியை (Fixed course) உடையனவேனும், அந்நெறிக்கண் அவைகள் அமையுமாறு எங்ஙனம்? அந்நெறிகட்குக் காரணந்தான் யாது? அந்நெறிகளாற் பெறும் பயன் சித்திக்குமாறெங்ஙனம்? என்று விசாரம்புரிந்துசெல்வம் என்றால், அவ்விசாரம் இறுதியிலே எல்லாம் வல்லராய்த் தமக்கோர் நிமித்தகாரணம் இல்லராகிய கடவுளிற்றானே சென்றுமுற்றுமாம். பௌதிகசாத்திரிகள் எந்தெந்தப் பிரபஞ்ச நிகழ்ச்சியை விளக்குமிடத்தும், அது அது நிகழுங்காற் சென்றுபுகும் நியதிநெறிகளை எடுத்துக்காட்டுவரன்றி, அந்த அந்த நெறிக்கண்ணே அவைகள் சென்று புகுமாறு எங்ஙனம் என்றும், அங்ஙனம் சென்று அது அதுக்குரிய இயற்கைமரபைப் படைக்குமாறு எங்ஙனம் என்றும், அந்த அந்த நெறிகள் எங்ஙனம் வந்தமைந்தனவென்றும் வினவினால், இவைகள் தமது

அறிவுக்கெட்டிற்றில என்று கையை விரிப்பர். இந்நெறிகள் அனைத்தும் பிரபஞ்ச நிகழ்ச்சிப்பொருட்டாகக் கடவுளால் நிறுவப்பெற்ற நியதிகளேயாம். இங்ஙனமின்றி இந்நியதிகளே பிரபஞ்சதோற்றத்துக் கேதுவென்கை சாலாதென்க. பருத்தி ஆடையாய் அமைதற்பொருட்டுப் பலதிறப்பட்ட யந்திரங் கள்வாய்த் தொழிற்பட்டுச் செல்லும். இதுகொண்டு அந்த யந் திரங்களை ஆடைக்குக் காரணம் என்று யாரும் சொல்லார். பிரபஞ்சதோற்றத்துக் கமைந்த நியதிநெறிகளிற் காணப்படும் கிரமமரபுகளை நோக்குங்கால், அவைதாமே தமக்கோர் நிமி த்தகாரணன் உண்டென்பதைச் சந்தேகவிபரீதமின்றிச் சாதி க்குமென்க.

நீர்க்குமிழியும் பிரபஞ்ச நிகழ்ச்சிகளுள் ஒன்றேயாகி, ஓர் ஓர் இயற்கை நியதிபற்றியே நிகழ்வதாயினும், அது பிறி தோர் காரணவகையான் நிகழும் இயற்கை நியதிக்கண்ணே தானும் தோன்றுதற்குரிய அமைதி உண்மையிற் றோன்று வது. இங்ஙனமன்றி, அக்காரணவகைகள் இதன்பொருட்டு நிகழ்வனவல்ல. இதனை, எல்லாம் தற்செயல் என்று சாதிக் கும் பௌதிகவாதிகளும் ஒத்துக்கொள்வர். இவர் கொள்கை யின்வழி நோக்குமிடத்து, நாம் எடுத்துக்காட்டிய பிரபஞ்சநிக ழ்ச்சிகள் தற்செயலென்றுமேல், அவர் காட்டும் நீர்க்குமிழி நிகழ்ச்சி தற்செயலிற் தற்செயல் என்றாகும். இதனைத் தற்செ யலென்று நாமும் ஒருவாறு ஒத்துக்கொண்டது பற்றியே, இதைக் கடவுணிச்சய சாதனைக்கு விலக்கி, மற்றை நிகழ்ச்சி களை எடுத்து வாதிப்பதென்க. மற்றை நிகழ்ச்சிகளின் கார ணவகைகள் அவ்வவற்றின்பொருட்டு நிகழ்வனவன்றிப் பிறி தோர் இயைபுபற்றி நிகழ்வனவாக எமக்குத் தோன்றுமையா னும், ஆண்டுள்ள கிரமபிரயோசனங்கள், அவற்றுக்கெல்லாம் ஓர் ஓர் சங்கற்ப நோக்கத்தைக்காட்டி நிற்றலானும், அந்நிகழ் ச்சிகட்கெல்லாம் ஓர் காரணன் உண்டெனமுடித்தலே யுக்த மாகும். வாயுவின் இயக்கத்தால் அமைந்ததோர் மணற்குன் றைநோக்கித் தற்செயல் என்று முடித்தாலென்ன, ஓர் உப்

பரிகையையும் நோக்கித் தற்செயல் என்று சாதித்திதல் சாலு மாயின், பிரபஞ்சத்தையும் நீர்க்குமிழியை ஒப்பதோர் தற் செயல் என்று சாதித்தல் சாலுமாம்!!

## ௨-ம் அதிகரணம்.

(க.) காணப்படுவதாகிய இப்பிரபஞ்சம்; மூர்த்தங்களும் சடப்பொருள்களுமாகிய பூதபௌதிகங்களின் காரியமேயாய், அனைத்தும் சடமாத்திரையேயாம் என்று வாதிட்டு நிற்பாரா கிய நமது நாஸ்திகர், இப்பிரபஞ்ச வியவகாரங்களைச் சற்றே நுண்ணறிவுகொண்டு ஆராயத் தலைப்படுவர் என்றால், இவற் றின்கண்ணே மூர்த்த சடத்தின் வேறாகிய அமூர்த்தசித்தி யல்பும் பெரிதுண்டெனக் காண்பர். அதாவது சடப்பிரபஞ்ச மன்றிச் சித்துப்பிரபஞ்சமும் அகண்டமா யுண்டென்பது செவ்விதிற் புலப்படும். இச்சித்துப் பிரபஞ்ச இயல்பை எடு த்துச் சீர்தூக்கவே, அது கடவுணிச்சயத்துக்குப் பெரிது அனுகூலமாய், இந்தச் சித்துகளைப்போலவே, சடப்பிரபஞ்ச த்தின் வேறாகியதோர் மகா சித்துப்பொருள் உண்டென் றும், இந்தப்பொருள் காரணமாகவே சித்தும் அசித்துமாகிய இருகூற்றுப் பிரபஞ்சமும் இயங்குதல் பெறும் என்றும், பிர பஞ்சத்தே காணப்பெறும் சித்துமுயற்சிகளுட் பல இந்த மகா சித்துப்பொருளின் திருவருட்பிரகாசமே என்றும் தெள்ளி திற் காட்டுமோம். அஃதெங்ஙனம் என்பதைச் சில திருட்டா ந்தங்களால் விளக்கிக் காட்டுவாம்:—

க-வது. சீவதோற்றங்களிடத் தெல்லாம், சடபாகத்தின் வேறாகியதோர் சித்துப்பாகம் உண்மையினன்றே, அத்தோற் றங்கள் அறிவு சேட்டித்தலும், சேட்டித்தவழிச் சுவேச்சை கொண்டு தொழில் செய்தலும் இயலுவனவாயின. இந்த அறிவு தொழில்களுக்கு எமது உடம்பைக் காரணம் எனக் கோடல் கூடாதென்பதை மேலே நான்காம் சூத்திரத்து விள க்கிக்காட்டுதும். ஆனால் இவ்வறிவு தொழில்களுக்குக் காரண

மாகியதோர் ஆன்மாவுண்டெனக் கோடலே அதன் மறுதலே யினும் யுத்திக்கியைபுடைத்தாதலின், இவ்வான்மாக்களேப்போலச் சிற்சொரூபியாயுள்ளான் ஓர் இறைவனும் உளன் எனக் கோடலே எமது யுத்திக்குப் பெரிதும் இயைபுடைத்தாம். எமது உடம்பை இயக்குதற்கு ஓர் ஆன்மா வேண்டப்படும்: பிரபஞ்சத்தை இயக்குதற்கு யாதானுமொரு சித்துப்பொருள் வேண்டுவதின்றேயோ? எமதுடம்பின்கண்ணே அவ்வுடம்பின் வேருகியதோர் சித்துப்பொருள் இருத்தல் சாலும்: பிரபஞ்சத்தின்கண்ணே அப்பிரபஞ்சத்தின் வேருகியதோர் மகாசித்தமைந்து விளங்குதன்மாத்திரமோ சால்பின்ருவது? எனவே பிரபஞ்ச சேட்டைக்குக் காரணமாவதோர் சித்துப் பொருள் உண்டெனக்கோடலே யுத்திக்கமைந்தது என்றபடி.

உ-வது. உலகத்தின்கண்ணே, நன்மையைச் செய்தார் நற்பயனேயும், தீமையைச்செய்தார் தீப்பயனேயும் தப்பாது அனுபவிக்கக் காண்கின்றனம். எத்துணே வல்லார் எத்துணே ஆற்றல்கொண்டு முயற்சி செய்தாலும், தத்தமது செயலுக்குரிய பயனேக் காலாந்தரத்திலே அனுபவித்தே தீர்கின்ருர்கள். இது அனுபவத்திற்கண்ட சத்தியம். சிற்சிலவர் இப்பயனேச் சிற்சில சமயங்களிலே ஏலாது விலகிக்கொள்ளுகின்ருரன்ரே என்பிரேல்; அவர் அவ்வப்பயனே ஓர் ஓர் காலத்து ஒருவாறு விலகிக்கொள்வாரெனினும், அவரது சீவியத்தை நாம் கூர்ந்து எடுத்து நோக்குவம் என்ருல், எப்படியும் அப்பயன் அவரை வந்தடையவே காண்பம். ஆனல் எந்தெந்த விதிக்கும் ஓர் ஓர் விலக்குண்டு. (இவ்விலக்கால் விதி தாக்குற்றிடாதென்பது எல்லார்க்கும் உடன்பாடேயாம்.) பொதுப்பட நோக்குமிடத்து நல்வினே தீவினேப் பயன்கள் அவ்வவரை அங்கங்கேவந்து சார்தல் பிரத்தியக்ஷம். இந்நியதிக்குக் காரணர் யாரேயோ? அரசினரா? சனசாகியமா? எத்தனேயோ முறைகளில், எத்தனேயோ சாதுரியர், தமது விவேகமும் செல்வாக்கும் ஐசுவரியமும் முதலிய ஏதுக்கள் காரணமாக, அரசினர்க்கும் சனசாகியங்கட்கும் ஒருவாறு தப்பியும், இறு

தியிலே தமது தீவினைப்பயனைத் தப்பாது அனுபவித்தே முடிக்கின்றார்கள். இது, உலகத்தியல்பைச் சித்தசமாதானத்தோடு சீர்தூக்குவார்க்கு நன்குபுலப்படும். இதனுக்குக் காரணம் யாது? அவ்வவர் செய்துகொண்ட வினைகள்தாம் அவ்வப்பயனுக்குக் காரணமாமோ? ஆம் என்றால், வினைகள் எல்லாம் சடப்பொருள்கள்; இந்தச் சடப்பொருள்கள் யார் ஒருவரது ஆஞ்ஞையின்றி யாதொருபயனை யார் ஒருவர்க்கு அடைவிக்குமாறில்லை. பின்னை இப்பயன்தான் வந்தடைவது எங்ஙனம்? நாம் எத்தனை எத்தனை கோட்பாடுகளையும் (Theories)வாசகமாத்திரையாற் கட்டிவிடலாம். ஆனால் உண்மைகள் (Facts) எம்மாற் சலிக்கத்தக்கனவல்ல. உண்மையளவிலே இந்தப் பயன்கள் வந்தடைவது பிரத்தியக்ஷம் என்றால், இப்பயனை அடைவிப்பார் ஒருவர் உளர் என்பது எவ்வெவர் உணர்ச்சியினும் செவ்விதிற் பதியுமென்க.

ந-வது. கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று நம்பி, அவருக்குப் பத்திசெய்து, அவரை அனுசந்தானம்பண்ணிச் சேவைசெய்யும் சனங்கள் எல்லாம், பெரும்பாலும் தாம்தாம் விரும்பிய இட்டசித்திகளைப் பெறுகின்றார்கள். அந்தச்சேவையை ஏற்பார் ஒருவர் இல்லை என்றால், அதன் பயனாகிய சித்திகள் அவரை வந்தடையுமாறெங்ஙனம்? இப்பயன்கள் சித்திப்பது, சேவைசெய்வாரது மனதிலே கிளரும் நம்பிக்கை காரணமாக, அவர் செய்துகொள்ளும் முயற்சிபற்றியல்லாமல், அந்தச் சேவையையேற்றுப் பயன்தருவார் இல்லை என்பிரேல்; எத்தனையோ இடங்களிலே, எத்தனையோ காலங்களிலே, ஓர் ஓர் பயன் எமது முயற்சியாற் சித்திக்கத்தக்கதன்றாகவும், அது அச்சேவைமாத்திரையால் வந்தெய்தக்காண்கின்றனம். இதுபோல்வனவற்றை எமது முயற்சியின் பயன் என முடிக்குமாறெங்ஙனம்? இதுபோல்வன எல்லாம் "காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தா" லனைய தற்செயல்களாம் என்பிரேல்; ஒன்றிரண்டோடமையாது எத்தனையோ முறைகளில் எத்தனையோ நிகழ்ச்சிகள் இங்ஙனம் நிகழுமென்றால்,

இவற்றை எல்லாம் தற்செயல் என்று சாதிப்பதோ: அன்றி இவற்றுக்குக் காரணராகிய சித்துப்பொருள் ஒன்று உண்டென்று முடித்தலோ யுத்திக்கியைந்தது? பிந்தியதேயாம்.

ச-வது. இத்தேவானுக்கிரகம் என்று சொல்லப்படும் அதுவும், மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகை ஏதுக்கள் வாயிலாகப் பெறப்படும் என்பர் சமயிகள். இதனுண்மையை நிரீச்சுரவாதிகள் ஒப்பமாட்டாராயினும், சிற்சில க்ஷேத்திரங்களிலே, சிற்சில தீர்த்தங்களிலே, சிற்சில மூர்த்தங்களிலே விசேட அனுக்கிரகம் பெறப்படுவது அனுபவத்தாற் காணப்படுகின்றது. ஆயிரம் அர்த்தவாதங்களினும் (Theories) ஓர் உண்மை (Fact) அதிப் பெலமுடைத்தாம். ஆதலின் இவ்வுண்மைகள் பலப்பல காணப்படுமாற்றால், இவை எல்லாம் ஓர் சித்து நிச்சயத்தை நன்றாக நிறுத்துமென்பது காண்க.

ரு-வது. மந்திரோச்சாடணங்களால், எவ்வகை மூர்த்த சடங்களினும் எய்துதற்கரிய பலப்பல சித்திகள் வந்தடைகின்றனவன்றே. இச்சித்திகளைக்குறித்து எத்தனையோ விவேகிகள் பக்ஷபாதமின்றிச் சாட்சியம் பகர்ந்திருக்கின்றனர். இச்சித்திகள் யாதொரு சித்துப்பொருளின் ஆற்றலின்றிப் பெறப்படுதல் ஒரு சிறிதும் கூடாதாதலின், இதனாலும் பிரபஞ்சத்தின்கண்ணே சித்துமுயற்சி பெரிதுண்டென்பது நன்றாக நாட்டப்படுமென்க.

சு-வது. நந்தேசத்திலே, ஆங்காங்குப் பற்பல இடங்களிலே, ஓர் ஓர் பூதம் கணம் முதலிய அதிதேவதைகள் உண்டென்னும் ஐதிகம் அதிகம் உண்டு. இத்தேவதைகளாற் பீடிக்கப்பெற்றார் நோய்க்கட்படுதலும், பின்னர் அத்தேவதைகளுக்குரிய பிரீதி முதலாயின செய்தல் காரணமாக அந்நோய்கள் நீங்கப்பெறுதலும் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இந்த நியதிகள், அத்தேவதைகளாகிய சித்துப்பொருள்களது நிச்சயத்தையும், அதுகாரணமாகப் பிரபஞ்சத்தேயுள்ள சித்தியல் நிச்சயத்தையும், அதுகாரணயாக அச்சித்துகளையும்

அவற்றின் வேருகிய சடப்பொருள்களேயும் இயக்கி நிற்கும் ஈச்சுரநிச்சயத்தையும் எவ்வெவரது யுத்திக்கும் இனிது சித்திக்கச்செய்யுமென்க.

எ-வது. ஆகாயத்தே சஞ்சரிக்கும் கிரகநக்ஷத்திராதிகள் இப்பூமிக்கும் அதன்கணுள்ளார்க்கும் சடமாத்திரையானன்றிச் சித்துமாத்திரையாயும் எத்தனேயோ பல பலாபலன்களே விளேத்தல் அனுபவத்தாற் பலகாறும் காணப்பட்டுள்ளது. ஈதெல்லாம் அங்கங்குள்ளதோர் சித்துமுயற்சியைக் காட்டி நிற்பவே, இம்முயற்சியை ஒப்பதோர் மகாசித்து முயற்சியே இப்பிரபஞ்ச நிகழ்ச்சிதனக்கும் காரணமாயமைந்துளதென்பது யார் யார் யுத்திக்கும் நன்கு சித்திக்குமென்க.

அ-வது. எத்தனேயோமுறைகளில் எத்தனேயோ விவேகிகள் தாம் இருந்துழி இருந்து, காரணகாரியத் தொடக்குடைய யாதொரு சடப்பொருட் சம்பந்தமின்றி, ஓர் ஓர் வகையாகிய உணர்ச்சிபற்றித் தம்பால் ஓர் ஓர் எண்ணம் அறிவு முதலாயின உதிக்கப் பெறுகின்ருர்கள். பின்னர் இவை எல்லாம் உண்மையாக நிகழ்ச்சிபெறக் காண்கின்ருர்கள். கனவிற் காணப்படும் எத்தனேயோ காட்சிகள், பின்னர் உண்மையாக நிகழ்ச்சிபெறுதல் அனுபவத்திற் காணப்பட்டுக்கிடக்கின்றது. தூரதேசங்களிலுள்ள பந்துக்களுள் ஓர் ஓர் கெடுதி சம்பவிக்குமிடத்து, அது அதுக்கியைந்த ஓர் ஓர் குறி நம்மாட்டுக் காணப்படுகின்றது. பின்னே நிகழும் சம்பவங்களே முன்னே அறிவித்தற்கியைந்த சகுனமுதலிய சமிக்கைகள் எத்தனேயோ பல அனுபவத்தாற் தாபிக்கப்பட்டுக்கிடக்கின்றன. இவற்றை எல்லாம் குருட்டுப்பத்தி என்று மிக இலகுவிற் சொல்லிவிடலாம். ஆனுல் அவைகள் எல்லாம் உண்மைகளாகக் காணப்படும் என்ருல், நாம் அவற்றைக்குறித்து யாதானுமோர் சழக்குரை கூறும் ஆற்றலின்றி, அவற்றை விருப்பமின்றியேனும் அங்கிகரித்தற் கடமைபூண்டு கிடக்கின்றேம். இவற்றை எல்லாம் "குருட்டுப்பத்தி" என்று ஒதுக்கிவிடுமாறு எம்மை ஏவிநிற்கும் எமது குருட்டுப்பத்தியை நாம் முந்த

ஒதுக்கிவிட்டு, உண்மையை உற்றுநோக்குவம் என்றால், இவ்வனைத்துக்கும் ஏது இவற்றுள்ளே மறைந்து நிற்பதோர் சித்தாற்றலே என்பதும், இந்தச் சித்தாற்றல் பெறப்படவே, இதனைப்போலவே பிரபஞ்சம் அனைத்துக்கும் காரணராவார் ஓர் மகாசித்துப்பொருளாகிய கடவுள் இருக்கிறார் என்பதும் தெற்றெனப் புலப்படும்.

௯-வது. நாம் பற்பல தருணங்களிலே ஓர் ஓர் உருவெளித்தோற்றம் தோன்றி மறைந்துபோதலைக் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். இத்தோற்றங்களுக்கு யாதொரு சடப்பொருள் காரணமாகாமையால், இவை எல்லாம் ஓர் ஓர் சித்துப்பொருள் ஓர் ஓர் காலத்துக்கொள்ளும் நூதனவடிவே என்பதும், எனவே சித்துப்பொருளுண்மை பிரத்தியக்ஷக்காட்சியானும் காட்டப்படும் என்பதும் காண்க. காணவே, இந்தச் சித்துப்பொருள்களைப்போலவே கடவுள் ஒருவரும் எம்மால் காண்டல் கூடாத இயல்பினையுடையராய் எம்முண்மறைந்துநின்று உலகம் அனைத்தையும் இயக்கிநின்றருள்வர் என்பது இனிது சித்திக்குமென்க.

௧௦-வது. பெருமக்களது ஆசீர்வாதங்களாலும் சாபங்களாலும் சீவதோற்றங்கள் தாக்குண்டலைப் பலமுறையும் கண்டு கேட்டுள்ளேம். வெகுசன சமூகத்தான் விரும்பப்படுவது ஒன்று, அவர் விரும்பியவாறு நிகழ்ச்சிபெறுதல் காணப்படுகின்றது. யாதொருபொருளின் விருத்தியைக் கண்டுகேட்டு வியப்புறுதல் காரணமாக, அப்பொருட்கு நாத்திட்டி கட்திட்டி முதலிய கேடுகள் விளைதலை அனுபவத்திற் காண்கின்றோம். இந்த விளைவுகள் எல்லாம் யாதொரு சடப்பொருளினது ஆற்றல் காரணமாகப் பெறப்படுதல் கூடாமையின், இவைகள் ஓர் ஓர் சித்துமுயற்சியாற்றானே பலிப்பன என்பது செவ்விதிற்போதரும். இங்ஙனம் போதரும் சித்துமுயற்சிகள் எல்லாம் ஈச்சுரநிச்சயத்தைத் தெளிவுறச் சுட்டிக்காட்டிநிற்கும் என்க.

கக-வது. உலகத்திலேயுள்ள சீவர்கள் எல்லாம் தனித்த னியாயேனும் குழாம்குழாமாகவேனும் தாக்குற்றழிதற்கமை ந்த எத்தனையோ பல பெருங்கேடுகளும் அபவாதங்களும் விளைதற்குரிய ஏதுக்கள் இப்பூமியின்கண்ணே ஆயிரம் ஆயி ரமாகக் காணப்படும். அங்ஙனம் காணப்பட்டும் அவைகள் பெரும்பாலும் நிகழ்ச்சிபெறாது தடைப்பட்டேகழிகின்றன. இங்ஙனம் கழிவதெல்லாம் எமது விருத்தியின்கண்ணே பெ ருங்காதலுற்றதோர் சித்துப்பொருளின் திருவுளப்பாங்கெ ன்றே யார் யாரும் அனுமிக்கத்தக்கது.

கஉ-வது. எத்தனையோ சனங்கள் தீராப் பெருநோய்க ளுட்பட்டு வைத்தியர் பலராலும் கைவிடப்பட்டும், பின்னர் எல்லாரும் பிரமிக்கத்தக்க ஆச்சரியகரமாகச் சடிதியில் ஆரோ க்கியமடைந்து விடுகின்றார்கள். எத்தனையோபேர் தமது தே கத்திலே மரணத்துக்கியைந்த நோய் சிறிதும் இல்லாதிருப்ப வும், யாரொருவரும் காத்திராதபடி சட்டென இறந்துவிடுகின் றார்கள். இவ்விருகூற்றுக்கும் வைத்தியராவது மற்றெவரா வது யாதொருசமாதானம்சொல்லிக்கொள்ளுதல் கூடாமல், இந்த இரகசியம் பௌதிகவாதத்துறைக்கு எட்டுதல் கூடா ததோர் அதிதாச்சரியமாக்கிடக்கின்றது. இன்னனவாகிய நிய திகள் எல்லாம் ஓர் சித்துமுயற்சியாற்றானே நிகழ்கின்றன என்பது அர்த்தாபத்திமாத்திரையால் செவ்வே புலப்பட்டு நிற்குமென்க.

கங-வது. உலகத்திலே எந்தச் சாதியாரிடத்தும், அற்புத ங்களும் அதிசயங்களும் நிகழ்ந்தனவாகக் காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் "மடமை" என்று மிக இலகுவிற் சொல் லிவிடலாம். ஆனால் உண்மை ஒரு சிறிதுமின்றி இவ்வாறா கிய சரித்திரங்கள் நிலைபெறமாட்டா. உண்மை ஒன்றிருப்ப, அது பின்னர்ப் பாரித்துக் காட்டப்பட்டிருக்கலாம் என்பத ன்றி, அதன்பாற் சிறிதேனும் உண்மை இல்லை என்பது யுக்த மாகாது. நாம் உலகத்துள்ள நிகழ்ச்சிகளைத் தோற்றமாத்தி ரையால் முடித்துக்கொள்ளுதல் கூடாதென்பது மெய். அக்

துத் தோற்றமாத்திரையாற்றானே அவைகளை நாம் பொய் என்று ஒதுக்கிவிடுதலுங் கூடாது. நம் பௌதிகவாதிகளுட் பலர், யாதொரு நிகழ்ச்சி தமது பௌதிகத்துறைக்கு எட்டா தாயின், அதனை ஒரேமுறையிற்றானே தோற்றமாத்திரையிற் கொண்டு ஒதுக்கிவிடுகின்றார்கள். இது இந்தக்காலத்துக் கெய்தியதோர் பெருங்கேடு. இந்த நிகழ்ச்சிகளை உள்ளிட்டாராய்ந்து, இவற்றின் மூலத்தைத் துருவிச்சென்றால் ஆங்கோர் உண்மை அமைந்துகிடத்தலைச் செவ்விதிற் காணலாம். அற்புதங்கள் அறிவிற் குறைந்தாரிடத்தன்றி, அறிவிற்சிறந்தார் தம்மிடத்தும், சீர்த்திருத்த முதலிய விருத்திகள் கிரிதீபம் போற் பிரகாசித்த கால இடங்கள் தம்மினும், நிகழ்ச்சியுற்றனவாகக்காணப்படுகின்றன. ஆகவே இவற்றது அடிப்படையில் உண்மையும் சில உண்டென்பதும், அந்த உண்மை சடப்பொருட் சம்பந்தத்தாற் பெறப்படுதல் கூடாதென்பதும், எனவே அதனுக்குக் காரணமாகியதோர் சித்துப்பொருளாற்றல் தெற்றெனப்புலப்படும் என்பதும் காண்க.

கசு-வது. இந்தச்சித்து வித்தியாசாமர்த்தியத்திற் சிறந்தார் பலர், பற்பல விநோதாச்சரியங்களைச் செய்தமை பிரபல சாட்சியங்களால் நாட்டப்பட்டுக்கிடக்கின்றது. பொருள்களை அவ்வவற்றின் இயற்கைக்குணத்தின் வேறுபடுத்து அக்கினிஸ்தம்பனம், சலஸ்தம்பனம், பரகாயப்பிரவேசம், ஆகாயகமனம் முதலிய அரும்பெருஞ் செய்கைகள் செய்யப்பட்டமை பூர்வசரித்திரங்களால் நாட்டப்பட்டுக் கிடக்கின்றது. சுபாவிக தர்மவழிநின்று ஒன்றோடொன்று கூடும் இயற்கைப் பொருள்களை அங்ஙனம் கூடாது பிரித்தும், பிரிவனவற்றைக் கூடுவித்தும், நடப்பனவற்றை பறப்பித்தும், பறப்பனவற்றை நடப்பித்தும், பெருவிநோதங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. இவற்றுட் பலவிந்தைகள், இக்காலத்தும் நிகழ்ச்சியுறுவது சீர்த்திருத்தமுதலியவற்றிற் சிறந்த விவேகிகளது சாட்சியங்களானும் நிறுத்தப்பட்டுக் கிடக்கின்றது. இன்னணமாகிய சித்தியிற் கைவந்தார் பலர், பலகாத தூரத்துக்

கப்பாலுள்ள பொருள்களை ஒரு கணமாத்திரையில் பெரு விநோதகரமாகத் தருவிக்கின்றார்கள். ஓர் இடத்துள்ள பொருளை, அஃது எத்துணைக்காப்புச் செய்யப்பட்டிருந்தாலும், சடிதியில் அவ்விடத்தைவிட்டு யாரும் அறியாதபடி நீக்கிவிடுகின்றார்கள். வெகுதூரத்தே நிகழும் ஓர் ஓர் விநோதக்காட்சிகளைத் தாம் இருந்தவாறிருந்து சடிதியிற்சென்று கண்டு மீண்டுவருகின்றார்கள். தூரதேயங்களிற்றானும் இருந்து ஓர் ஒருவர் தம்மனத்தகத்தே நினைக்கும் நினைவுகளை உள்ளபடி அறிந்து எடுத்துச் சொல்லிவிடுகின்றார்கள். இவற்றுட் பல தமது சந்நிதியினே நிகழ்ந்தன என்று எத்தனையோ ஐரோப்பைய அமரிக்க துரைமக்கள் பலர் சாக்ஷியங்கூறுகின்றார்கள். இவைகள் யாதொரு சடப்பொருள் காரணமாக நிகழ்தல் கூடாமையின் இவற்றுக்கெல்லாம் காரணமாகிய சித்தாற்றல் ஒன்றுண்டென்பது செவ்விதிற்றுணியப்படும் என்க.

கரு-வது. பேய் பைசாசங்களாற் பிடிக்கப்பெற்று வருந்துஞ் சனங்கள், யாதானுமோர் அவுடதசகாயமின்றிச் சிற்சில சித்துப்பிரவிருத்தி காரணமாக அப்பிடிப்பு நீங்கப்பெறுகின்றார்கள். சர்வாரோக்கிய தாரிகளாகிய சனங்கள்மேல் ஓர் ஓர் பேயைப் பைசாசத்தை ஏவி அவர்களை வருத்துமாறுசெய்து அவ்வருத்தம் எவ்வகை அவுடதத்தானும் தீராதாக, இறுதியிற் சில சித்தாற்றல் காரணமாக அதனைத் தீர்த்தலைப் பலமுறையும் கண்டுகேட்டிருக்கின்றோம். எமது சரீரசம்பந்தமாகிய தீராநோய்கள் பல அவுடதபரிகாரங்களால் சிறிதும் தணிவின்றாகி, பின்னர் ஓர் ஓர் சித்தியற் கிரியானுசாரத்தால் அவை ஒருங்கே நீங்கக் காண்கின்றோம். பேய் பைசாசங்களை அகற்றுமிடத்து நிகழும் அதிசயமரபுகள் பல இச் சித்தாற்றலுண்மையைத் தெளிவுற விளக்குகின்றன. அப் பைசாசமுதலியன நீங்குகைக்கோர் அறிகுறியாக, நாம் அறியத்தக்கதான வேறு யாதொரு காரணமின்றி, மரங்களை வீழ்த்தியும், கிளைகளை முரித்தும், பலிமிருகங்களை உயிர்குடித்தும் பற்பல திருட்டாந்தங்கள் காட்டப்படுகின்றன.

கசு-வது. இப்பேய் பைசாசங்கட்கும் இறந்து உடல்நீங்கிய ஆன்மாக்கட்கும் உறைகளாயாயுள்ள எத்தனையோ வீடுகளில் நிகழும் பலபல சம்பவங்கள், சாத்திர ஆராச்சியிற் தலைப்பட்ட விவேகிகளாலும் சாட்சி பகரப்பட்டு, அவற்றுக்குக் காரணந்தான் யாதென்பது அவர்களது அறிவுக்கு ஒருங்கே அதீதமாகக்கிடக்கின்றது. இந்த வீடுகளில் உள்ள மஞ்சம்முதலிய மரப்பொருள்கள் இயங்கியற்பொருள்களை ஒத்து நிலைபெயர்ந்தியங்குதலும், இந்த வீடுகளிலே ஓர் ஓர் கோணத்து ஓர் ஓர் சத்தம் கேட்கப்படுதலும், கல்விகேள்விகளிற் சிறந்த விவேகிகளானும் கண்டு கேட்டுச் சாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இங்ஙனம் கேட்கப்படும் சத்தங்களுட் சிலவற்றால் பின் நிகழ்தற்குரிய சம்பவங்கள் பல முன்னே அறியப்பட்டும், முன் நிகழ்ந்த சம்பவங்களுட் பல பின்னே அறியப்பட்டும் பெரிது உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஓர் ஓர் வீட்டிலே, ஓர் ஓர் மாடத்திலே, எத்தனையோ காவல்களை நிறுவி, எத்தனையோ கபாடபந்தனங்களைச் செய்து, பெருங்காப்புச் செய்யப்பட்டிருக்கவும், அங்கே எல்லாரும் பிரமிக்கத்தக்கதாகக் கல்லெறிகள் வீழ்கின்றன. இவற்றை எல்லாம் ஓர் ஓர் சித்துப்பொருளின் சேட்டையே என்றன்றிச் சடப்பொருளின் சேட்டை என்று கொள்ளுதல் சிறிதும் கூடாதாம்.

கஎ-வது. கோயில்களிலே திருக்கதவங்கள் திருக்காப்பிட்டு அங்கு யார் ஒருவரும் இல்லாத அர்த்தயாமத்திலே மணி ஓசையும் பூசைவிழாக்களின் அரவமும், சனசமூகங்களின் ஆர்ப்பும் எத்தனையோ முறைகளிலே கண்டு கேட்கப்பட்டுள்ளன. இவற்றைச் சித்துமுயற்சி எனக் கொள்வதேயன்றிச் சடசம்பந்தமானதோர் தொழில் எனக்கொள்ளல் ஒருவாற்றானும் பொருந்தாது. கிலமாயுள்ள சிற்சில புராதன ஆலயங்களிலே ஓர் ஓர் காலத்துத் தீப ஒளியும் பிறவும் பற்பலராற் காணப்பட்டுள்ளன. சமீபத்தே செல்ல அவ்வொளி காட்சிக்கு விடயமாகாதொழிகின்றது. இவைபோல்வனவற்றுக்கு நாம் யாதொரு சடசம்பந்தமான காரணம் சமர்ப்பித்தல்

கூடாமையின், இவற்றுக்குக் காரணமாகிய சித்துமுயற்சி ஒன்றுண்டென்பதே துணிபாகும்.

கஅ-வது. உறக்கத்திலே கருவிகரணங்கள் எல்லாம் ஓய்ந்துகிடக்கும்போது, சிலர் எழுந்து சொப்பனநிலையிற் படிந்தவாறே வெகுதூரஞ்சென்று எத்தனையோ கருமங்களை முடித்துக்கொண்டு மீட்டும்வந்து தமது படுக்கையிற் கிடக்கின்றார்கள். விழித்தெழுந்தபின் அந்தச் செயல் ஒன்றும் அவரது அறிவிற் சித்திப்பதில்லை. இது அவருடைய சித்தாற்றல் பிறிதோராற்றால் உணர்ச்சிபெற் றியங்கியதென்பதைச் செவ்வே காட்டிநிற்கின்றது.

கக-வது. இன்னணமாகிய முறைகளையன்றே தத்காலத்தே ஐரோப்பைய அமரிக்க தேசங்களிலுள்ள விவேகிகள் எடுத்து நெறிப்படுத்து, வகுத்து, இவற்றுக்குச் சம்மோகனம் (Mesmerism) அந்தர்த்தரிசனம் (Clairvoyance) ஜீவகாந்திகம் (Animal magnetism) அந்தர்ச்சிரவணம் (Clair audience) முதலிய பெயர்கொடுத்து வழங்குகின்றார்கள். இவர் எல்லாம் இந்தச் சித்தாற்றலை எடுத்து விளக்குமிடத்து, இதை, அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நால்வகைப் பகுப்புகளாக வகுத்துக் காட்டி, இவற்றை அனுபவப்படுத்துதற்குரிய முறைகளை விரித்து வித்தரிக்கின்றார்கள். இந்த முறைகளை அனுசரிப்பார் பலர், யார் ஒருவர் யாதொன்றை நினைக்க, அந்த நினைவைத் தாம் இருந்துழி இருந்து சொல்லிவிடுகின்றனர். ஒருவரைக்கொண்டு அவருக்கு உடன்பாடல்லாத செய்கைகளைச் சந்தோஷமாகச் செய்வித்துவிடுகின்றனர். ஒருவரது அறிவை யாதொரு அவுடதப்பிரயோகமின்றி மயக்கிவிடுகின்றார்கள். (இந்தப் பிரயோகத்தை இப்போது வைத்தியசாலைகளிலே எடுத்தாண்டு பயன்படுத்துவார் பலர்.) ஒருவரைக்கொண்டு அவர் அறிவுக்குச் சிறிதும் புலப்படாத பூர்விகசரித்திரங்கள் மேல்வரும் நிகழ்ச்சிகளைச் செவ்வே சொல்லுவிக்கின்றனர். இவைமட்டோ! இன்னும் பற்பல அதிசயகரமான விநோதங்களை எல்லாஞ் செய்கின்றார்கள். இங்ஙனஞ் செய்

தமை, அமரிக்கா ஐரோப்பா முதலிய தேசங்களிலுள்ள பிரபுக்கள் பலராற் கண்ணுரக்கண்டு சாதிக்கப்பட்டுக் கிடக்குமென்ருல், இவற்றைக்குறித்துச் சிறிதேனும் சந்தேகிக்கவேண்டுவதில்லையன்றே. இவை எல்லாம் யாதொரு சடப்பொருளாற்றல்பற்றி நிகழ்வனவென்பது எவ்வாற்ருனும் சித்தித்தல் கூடாது கிடக்கின்றது. இங்ஙனங் கிடக்குமாற்ருல், இச் சட உலகத்தின் வேருகியதோர் சித்துலகம் உண்டென்பதும், அந்தச் சித்துலக சம்பந்தம்பற்றியே இந்தச் சட உலகமும் நிகழ்ச்சிபெறுகின்றதென்பதும், இந்தச் சடவுலகத்திற் காணப்படும் மேற்கண்ட நூதனங்கள் அனைத்தும் அந்தச் சித்துலகவாயிலாகவே சம்பவிக்கின்றன என்பதும், எனவே இந்தச் சித்துலகத்துள்ள சித்சமுகங்களை ஒத்ததோர் மகா சித்துப் பொருள் இவை எவற்றுக்கும் மேலாய் உண்டென்பதும், அந்தப்பொருள்தானே ஏனைச் சித்துகளனைத்தையும் நிரைப்படுத்து இயக்கி அவற்றின்பொருட்டாக இந்தச் சடவுலகத்தையுந் தந்து தொழிற்படுத்து நிற்கும் என்பதும், யார் யார் யுத்திக்கும் நேரே சித்திக்குமென்க.

உ0-வது. இனி எம்மிடத்துள்ள அறிவுக்கும், அவ்வறிவு காரணமாக நம்மிடத்தே கிளரும் நினைவு ஞாபகம் முதலியவற்றுக்கும் நமது பௌதிகவாதிகள் யாது காரணம் கூற வல்லர்? இவை எல்லாம் ஒரு சித்தாற்றலின் சேட்டை என்றே சொல்லத்தக்கனவன்றிப் பிறிது யாதோராற்ருனும் இவற்றுக்கோர் காரணம் சமர்ப்பித்தல் கூடாது கிடக்கின்றது. நினைவை மூளையின் சலனமென்பது சிலர் கூற்று. இங்ஙனமாமேல், நினைவெல்லாம் மூளை சலிக்கத் தோன்றி, அச்சலனம் ஒழியத் தாமும் ஒழிந்துவிடுதல் வேண்டும். இதற்குமாருக, ஒருவன் பல்லாண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்த பற்பல சம்பவங்களைத் தனது ஞாபகத்துச் சேமித்துவைத்திருக்கின்ருன். நினைவு அப்போதைக்கப்போது தோன்றும் மூளையின் சலனமாமென்ருல், இது சித்திப்பதெவ்வாருே? எத்தனையோ சிறுவர் பயிற்சிவாசனை சிறிதுமின்றித் தம்பாலுள்ள

இயற்கை ஆற்றல் காரணமாக, எழுதிக் கணிக்கினும் பலநாழிகைகள் செல்லத்தக்க பெருங் கணிதங்களை, ஒரு கண்பொழுதாமுன்னே, மனத்தாற் கணித்துச் சொல்லிவிடுகின்றனர். இங்கே இவர்களுடைய மூளை இத்துணைவிரைவிற் சலிக்குமாறெவ்வாறோ? எத்தனை சிறுவர் யாராயினும் ஓர் ஆசிரியர் முன்னிலையிற் கல்லாமல் மிக அதிசயமான அத்தியற்புத சங்கீதகானங்களைச் செய்கின்றனர். எத்தனை சிறுவர் அரிச்சுவடி கற்பதன்முன்னேயே, எத்துணைப்பெரும் பதங்களையும் எழுத்துக்கூட்டிக் காட்டிவிடுகின்றனர். கனவிலே பல நெடுங்காலபரியந்தம் நிகழத்தக்க நிகழ்ச்சிகள் எல்லாம், கனவிலே ஒரு நொடிப்பொழுதினுள்ளே எமதறிவிற்தோற்றி மறைகின்றன. எத்தனையோ பேதைகள்தாமும் தாம் முன்னொருபோதும் கற்றறியாத பாஷைகளைக் கனுநிலையினும் பேய் பைசாச முதலியவற்றாற் பிடிக்கப்பட்ட தருணங்களினும் பேசும் இயல்புடையராகின்றார்கள். இவைகள் எல்லாம் மூளை சலிக்கப்பெற்று நினைவுண்டாகி அதுகாரணமாகத்தான் பலிப்பனவாமோ? இவற்றைச் சித்தசமாதானத்தோடு விசாரித்துச் செல்லும் அளவில், இவற்றுக்கெல்லாம் காரணமாகியதோர் சித்துப்பொருள் உண்டென்பதும், இந்தப் பொருளின்கண்ணே காணப்படும் அறிவுக்கு முன்னைத்தொடர்ச்சிகளுஞ் சில உளவாம் என்பதும் செவ்வே சித்திக்குமென்க.

உக-வது. இனி உண்மை அளவிலே எமக்கு யாதொரு தீமைக்கேது சிறிதும் இல்லாதிருப்பவும், அங்ஙனம் ஒன்று உண்டென்று ஆரோபித்து, அவ்வாரோபங் காரணமாக நாம் பலகாலும் தாக்குற்றழிவது பெரும்பாலும் காணப்படுகின்றது. இதற்குக் காரணந்தான் என்னையோ? எல்லாம் பௌதிககாரியங்களாமாயின், எமக்கு உண்மை அளவில் தீமைக் கேதுவாகியதொரு பௌதிகபதார்த்தம் எம்மைத் தாக்குவதுண்டாயினன்றே அதுகாரணமாக நாம் அதன்பலனை ஏற்றல் கூடும்? இங்ஙனமில்லாத ஆரோபத்தை ஏற்றற்குரியது ஓர் சித்தேயன்றி யாதொரு சடப்பொருள் அதனை ஏற்கமாட்டா

தாதலின், எம்மிடத்தோர் சித்துப்பொருள் உண்டென்பது தெற்றெனத் துணியப்படும்.

இங்ஙனம் போந்தவாற்றானும், இன்னும் விரிவஞ்சி விடுக்கப்பட்ட எத்தனையோ பல விநோதாச்சரிய மரபுகளானும், இந்தப் பிரபஞ்சத்தின்கண்ணே சடசமூகங்களன்றி, அவற்றின் வேறாகிய சித்சமூகங்களும் மெத்தவுண்டென்பது தெற்றெனப் புலப்படும். என்னை? இன்ன மரபுகள் எல்லாம் சடப்பொருள்களின் பயனுதல் சிறிதும் கூடாமையின். இந்த மரபுகளை எடுத்து இவற்றின்கணுள்ள சடலக்கணங்களையும் சடசம்பந்த ஆற்றல்களையும் வேறுபடுக்கவே, இவற்றின்வேறாகிய பிறிதோராற்றல் எஞ்சிநிற்குமாம். பிரபஞ்ச வியவகாரங்களை எடுத்துச் சித்தசமாதானம் என்னும் கருவிகொண்டு அனுவபஞ் செய்வார்க்கு, அங்கே சடப்பொருள்களுக்குச் சமர்ப்பித்தல் கூடாத எத்தனையோ பல ஆற்றல்கள் எமதுணர்ச்சிக்குச் செவ்வே புலப்பட்டு விடயமாகும்; விடயமாகவே, இந்த ஆற்றல்களைத் தமக்கு உடைமைப்பொருள்களாய்ப்பெற்றுள பற்பல சித்துப்பொருள்கள் உண்டென்பது நன்றாக நிச்சயிக்கப்படும். இங்ஙனமே பிரபஞ்சத்தின்கட் சடப்பொருள்களின் வேறாகிய சித்துப்பொருள்கள் உண்டென்பது துணியப்படுமாயின், அந்தச் சித்துகளைப்போலவே பிறிதோர் மகாசித்துப்பொருளும் (பிரபஞ்ச காரியமனைத்துக்கும் காரணமாய்) அமைந்துளதென்பது எமது யுத்திக்கு இனிது இயைந்து சிறந்திடுமாம். இங்ஙனமானதோர் மகா சித்தில்லாக்கால், பராதீனமுடையனவாய்க் காணப்படும் ஏனைச் சித்துகள் இயங்குதலும், இந்தச் சித்துகளது ஆற்றலுக்கதீதமாய்க் காணப்படும் பிரபஞ்சம் தொழிற்படுதலும் கூடாதபடி காண்க.

(உ.) நாம் மேல் எடுத்துக்காட்டிய சித்துப்பிரபஞ்ச மரபைத் தத்காலத்துள்ள விவேகிகள் சிலர் எடுத்து, ஈதெல்லாம் நம்மவரிடத்துள்ளதோர் குருட்டுப்பத்தியும் பிராந்தியும் காரணமாகத் தோற்றும் ஓர் ஓர் விபரீதக் காட்சியேயன்றி உண்மையல்லவென்றுசங்கிப்பர். நாம் எது எதைக்குறித்து எவ்

வெவ்வாறு கூற விரும்புகின்றனமோ, அவ்வவ்வாறு மிக இலகுவிற் கூறிவிட்டிருந்திடலாம். ஆனால் நாம் உண்மையை உள்ளபடி சிந்தித்தல்வேண்டும். இந்த உண்மை எமது அனுபவத்திருந்தே திரட்டி எடுக்கற்பாலது. உண்மைகள் பெரும்பான்மைபற்றி எமது அனுபவங்களுள் ஒன்றிரண்டுமாத்திரையிற் காணத்தக்கனவல்ல. அவை பலப்பல அனுபவங்களிலே பலப்பல வடிவுகொண்டு கிடக்கும். இவற்றை எமது யுத்திசாதனைகொண்டு ஆங்காங்கெடுத்துத் திரட்டி அமைத்து நோக்குதலே எமக்கெல்லாம் கடனாகும். ஆயிரம் வாசகஞானத்தினும் ஓர் அனுபவஞானம் அதிப் பெலமுடைத்தாம். இந்த அனுபவக்காட்சியின் காரணகாரியத் தொடர்ச்சி எமக்குப் புலப்படாதாயினும், அதாவது அந்த அனுபவ உண்மைக்குரிய ஏதுக்களை நாம் அறிந்திலமாயினும், உண்மை உண்மையேயாகும். அதனை நிலையழித்தல் எவராலும் ஆகாது. இந்த அனுபவ உண்மைகளை எடுத்து, இவை எல்லாம் வீண் பத்தியும் பிராந்தியுமேயன்றிப் பிறிதல்லவென்று மிக இலகுவிற் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் அந்த உண்மைகள் அனுபவத்திலே பிரத்தியக்ஷமாகக் காணப்படுமென்றால், அவற்றை எமது வாசகஞானங்கள் எத்தனைதான் கூடினாலும் நிலையழிக்கமாட்டாவென்க. நாம் ஓர் ஓர் நோய்வாய்ப்பட்டுழி உட்கொள்ளும் அவுடதங்கள் எமது உடம்பிற்புக்கு அந்தநோயை நீக்கி எமக்கு ஆரோக்கியத்தைத் தருதலை நாம் அனுபவங்கொண்டு காண்கின்றோம். ஆனால் அந்த அவுடதங்கள் எமது நோயை நீக்குதற்கியைந்த காரணகாரியத் தொடர் எமக்குப் புலப்படுவதில்லை. இங்ஙனம் புலப்படாமைபற்றி, அவுடதங்கள் நோய்நீக்கத்துக்குரியன என்பது குருட்டுப்பத்திமாத்திரையே என்று முடித்துக்கொள்வமா? மருந்து உடம்புட்செல்லுதலையும், சென்று செய்யுந் தொழிலையும், அந்தத் தொழிலால் எய்தும் பயனையும் நாம் கண்ணாரக் காண்பதுண்டா? நோய்நீக்கம் சித்திப்பது மருந்தினால் அல்ல, பிறகாரணங்களாலாம் என்று நாம் கொண்டாலென்னை? காகதாலிகநியாயமாக மருந்துண்ண நோய்நீங்குதல்பற்றி, அம்மரு

ந்து நோய்நீக்கத்துக்குக் காரணமாவதெப்படி என்று வாதித்தாலென்னே?, இங்ஙனம் வாதிப்பதற்கு யாரேனும் ஒருவர் முற்பட்டெழுவரா? மருந்தை உட்கொள்ள நோய் நீங்குதலை நாம் அனுபவத்திற் காண்கின்றேம். ஆகவே அம்மருந்து தானே எமது நோயை நீக்கிற்றென்பது எமது அனுபவத்தில் இனிது சித்திக்கின்றது. ஆகலின் அதுவே எமது நோயை நீக்கியதென்பது நாம் எல்லாம் பரிபூரணமாகச் சொல்லத்தக்கதாம். இவ்வாறே எமக்குக் காரணகாரியத்தொடர் புலப்படாதனவேனும், சித்துப்பிரபஞ்சமரபை எமது அனுபவத்திற் செவ்வே விளக்கிநிற்பனவாயுள்ள நிகழ்ச்சிகள் அளவிகந்தன உண்டு. இந்த உண்மைகளை வாசகமாத்திரையாற் பிராந்தி என்றொதுக்கிவிடுதல் முறையாகாது.

சடவுலகத்தின் இயக்கம் அனைத்தும் ஓர் ஓர் சித்துமுயற்சியின் காரியமேயாயினும், இந்த முயற்சி எப்போதும் எல்லார்க்கும் புலப்படுவதல்ல; ஆனால் இந்த முயற்சியை நேரே காட்டவல்லனவாகிய எத்தனையோ பல ஆற்றல்கள் சடவுலகத்திற் றாக்குதலை, மேலே நாம் எடுத்துக்காட்டிய திருட்டாந்தங்களாலும், இன்னும் விரிவஞ்சி ஒழிக்கப்பெற்ற வேறு பற்பல வியவகாரங்களாலும் செவ்விதிற் காணலாம். உண்மையைச் சொல்லுமிடத்து, இந்தச் சித்தியல்பு பிரபஞ்சத்தே எங்கெங்குங் காணக்கிடக்கின்றது. ஆனால் அது எல்லார்க்கும் எப்போதும் காணப்படுதல் கூடாமைபற்றியே, அதனது இயற்கை மரபுகளைக் குருமுகமாகக் கேட்டறிதல் வேண்டுமென்று சமயங்கள் வற்புறுத்துவது. அந்தச் சமயசாத்திரங்களைச் சிரத்தையோடு கற்பதுண்டாயின், சித்தியல்பே சடவியல்புக் காதாரமென்பதும், சித்தியல்புகாரணமாகவே சடவியல்பு சேட்டித்துநிற்பது என்பதும், அந்தச் சித்தியல்பு சடவியல்பைப்போல் வெளிப்படையாகப் புலப்படுதலில்லையாயினும், அது சடவியல்பினுண் மறைந்துநின்று அநேகாநேகமாய்க் காணப்படும் என்பதும் இனிதுபுலப்படும். இந்தச் சித்துமரபை எடுத்துச் சீர்தூக்கவே, அது கடவுளுண்மையைத் தானே காட்டிநிற்கும் என்பது காண்க.

மேலே காட்டப்பட்ட சித்துவிலாசங்களுட் சிலவற்றை எடுத்து, அவை எல்லாம் நமது மனத்தின்கட் கிளரும் பிராந்தியும், நினைவும், விருப்பும் காரணமாகத் தோற்றும் மயக்கக் காட்சியேயன்றி, யாதொரு சித்துப்பொருளின் சேட்டை அல்ல என்று வாதிப்பார்க்கு நாம் சொல்லத்தக்கதொன்றுண்டு. பிராந்திமுதலிய ஏதுக்கள் காரணமாக நம்பால் மயக்கக் காட்சிகள் தோன்றுதற்குரியன என்பதை நாம் மறுப்பதில்லை. ஆனால் நாம் இங்ஙனம் சடசம்பந்த ரகிதமாகக் காணும் காட்சிகள் அனைத்தும் மயக்கக்காட்சிகளல்ல என்பதே நாம் சாதிப்பது. என்னை? யாதோர் பிராந்திமுதலிய ஏதுச்சிறிதும் இல்லார்தமக்கும்—அவ்வேதுக் கிளர்தற்கியைந்ததோர் காரணம் ஒரு சிறிதும் இல்லாக்காலத்தும்—இங்ஙனமானதோர் ஏது கிளர்தற்கியைந்த இயைபு ஒரு சற்றுமில்லாத பாலர்முதலியோரிடத்தும்—அவர் தம்மினும் மனோவியாபாரத்திற் பெரிது குறைவுற்ற சிற்சில * மிருகங்களிடத்திற்றானும்—இந்தக் காட்சிகள் சித்திக்கப்பெறுமாற்றால், இவற்றை மயக்கக்காட்சிகளாம் என முடித்தல் சாலாது. அம்மட்டோ? இக்காட்சிகளுட் பலகாரணமாகப் பின்னர்ச் சிற்சில உண்மைகள் நிகழக் காண்டலானும், இந்தக்காட்சிகளாற் சுட்டப்பெறும் பெறுபேறுகள் பின்னர் உள்ளவாறு விளைந்துவிடுதலானும், இவற்றை எல்லாம் மயக்கக்காட்சி என்று முடித்தல் ஒருசிறிதும் அமையாதாம். இந்தக்காட்சிகளோடு கலப்புற்றமைந்துள்ளனவாகிய உண்மைகளை நாம் மனக்கோட்டமின்றிச் சித்தசமாதானத்தோடு ஆராய்வம் என்றால், இக்காட்சிகளுக்கடிப்படையிலே பலப்பல பிரபல சத்தியங்கள் உண்டென்பது எமக்குப்பரிபூரணமாகப் புலப்படும். தத்காலத்துள்ள பௌதிகவாதிகள், பொருள்களை எல்லாம் தமது புலனுக்கு விடயமாகும் தோற்றமாத்திரையிற் றூக்கி முடிக்கின்றாரன்றி, அவற்றை உள்ளிட்டா

---

* எத்தனையோ மிருகங்கள் ஓர் ஓர் உருவெளித்தோற்றத்தைக் கண்டு வெருட்கொண்டோடுதலும், நோய்வாய்ப்பட்ட மிருகங்கள் மந்திராப்பியாசங்களால் ஆரோக்கியமடைதலும், பற்பல பிரபல சாட்சியங்களால் தாபிக்கப்பட்டுள்ளன.

ராய்ந்து, அந்தப் பொருள்களிடத்தே பிரத்தியக்ஷமாத்திரையிற் பெறப்படும் இந்தச் சடவியல்பன்றி யாதொரு சித்தாற்றல் உண்டோ என்று சிந்திப்பது சிறிதும் இல்லை. அங்ஙனம் சிந்திக்கப்புகுதல் மகத்தாகியதோர் பாதகம் என்பதுபோலும் அவர் கருத்து! சடசம்பந்தம் சமர்ப்பித்தல் கூடாதனவாகிய எத்தனையோ காட்சிகளால் உண்மை அனுபவங்கள் சித்தித்தமைக்கு நாம் ஆயிரம் ஆயிரமாகத் திருட்டாந்தங்கள் காட்டவல்லேம். அங்ஙனம் எடுத்துக் காட்டப்புகுந்தால், அஃது அதிப்பிரசங்கமாய் முடியுமென்றஞ்சி, சித்தியற் சொரூபத்தைப் பிரித்துக்காட்டுதென்மாத்திரைக்கியைந்த ஒருசிலவற்றை இங்கே எடுத்துக் கூறினும். இந்தச் சித்சொரூபமரபை ஒரு சற்று ஊன்றிச் சிந்தித்தால், சடவுலகத்தின் வேறாகியதோர் சித்துலகம் உண்டென்பது எவ்வெவரகத்துஞ் செவ்விதின் உறைக்குமென்க.

(ங.) மேலே நாம் எடுத்துக்காட்டிய சித்துவிநோதங்களுட் பின்னும் சிலவற்றை நமது பௌதிகவாதிகளுட் சிலர் எடுத்து, இவைகள் எல்லாம் ஓர் ஓர் சடபதார்த்த சம்பந்தமாக நிகழத்தக்கனவன்றி, யாதொரு சித்துமுயற்சியைக் காட்டமாட்டா என்பர். பௌதிகபதார்த்தங்கள் காரணமாக ஓர் ஓர் விநோதக்காட்சி நிகழ்ச்சிபெறத்தக்கது என்பதை நாமும் ஒத்துக்கொள்வேம். இதுகொண்டு அங்ஙனமாய காட்சிகள் எல்லாம் பௌதிகபதார்த்த சம்பந்தமுடையன எனல் சிறிதும் சாலாது. சடபதார்த்தசம்பந்தமாக நிகழ்தற்குரிய விநோதங்களை "சாலங்கள்" என்று ஆரிய சாத்திரங்கள் எடுத்தியம்பும். இந்தச் சாலங்களிற் கைவந்த கபடிகள் சிலர், இவற்றைச் சித்துவிலாசமெனக் காட்டிச் சனங்களை வஞ்சிப்பதுமுண்டு. இதுகொண்டு உண்மைச் சித்துவிலாசங்களுக் கெய்தற்பாலதோர் இழுக்கென்னையோ? உலகத்திலே பொய்சொல்வாரும் சிலர் உண்மையால் சனங்கள் பேசுவனவெல்லாம் பொய்யென்றொதுக்கப்படத்தக்கதாமோ? யாதொரு விநோதமரபை எடுத்து, அது சாலத்தின்பாற்றென்றொதுக்குவது,

அம்மரபு யாதானுமோர் பௌதிகபதார்த்த சம்பந்தமாகப் பெறப்படுதலைப் பரிஷ்காரமாகக் காட்டியபின்னரேயாம். இங்ஙனம் காட்டுதல் கூடாதாயின், அது பூதபௌதிகங்களின் வேறாகியதோர் சித்துமுயற்சியாற்றானே பெறப்படும் என்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படும். இங்ஙனமாகிய விநோதமரபுகள் பலப்பலதருணங்களிலே, பௌதிகசாத்திரத்திற் பாண்டித்தியம்படைத்த பலப்பல துரைமக்கள் முன்னிலையிலே, இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாகரிகநகரங்களிலே காட்டப்பட்டு அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு யாதோர் பௌதிகபதார்த்தத்தைக் காரணமாகக் காட்டல் இவராலும் எவராலும் முடியாதாயிற்று. ஆகவே இவ்விநோதங்கள் எல்லாம் ஓர் ஓர் சித்துமுயற்சியாற்றானே நிகழுவன என்பது நன்றாக நிறுத்தப்படும்.

ஆயிரமைலுக்கு அப்பால் உள்ள பொருள்களை அதிவிநோதகரமாக அரைக்கணத்தே அந்தரமார்க்கமாக வருவிக்கின்றார்கள். அநேக காதங்களுக்கப்பால் உள்ளவர்கள் தமது மனத்தின்கண்ணே நினைக்கும் நினைவுகளை அக்கணத்திற்றானே எடுத்துச் சொல்லிவிடுகின்றார்கள். பல வருஷங்களுக்குப்பின்னே நிகழ்தற்குரிய சம்பவங்களை வெகு நுணுக்கமாக எடுத்து முன்னே சொல்லிவிடுகின்றார்கள். யாதோர் அவுடதப்பிரயோகமின்றி எத்தனையோ தீராக்கொடுநோய்களை அரைக்கணத்தே மாற்றிவிடுகின்றார்கள். ஒருவனைக்கொண்டு அவனுக்கு உடன்பாடல்லாத எந்தெந்தச் செய்கையையும் மிக இலகுவிலே வெகு சந்தோஷமாகச் செய்வித்துவிடுகின்றார்கள். இவைகளுக்கு யாதானுமோர் பௌதிககாரணம் காட்டுதல் கூடுமேயோ? கூடாதபோது இவை எனைத்துக்கும் ஓர் ஓர் சித்தாற்றலே காரணம் என்பது செவ்விதிற் சித்திக்கும் என்க.

(சு.) இந்தச் சித்தியற் சித்திகள் எனப்படுவன சிற்சிலதருணங்களிலே பிழைபட்டு விடுகின்றனவன்றே எனின், ஆம்;

இதனையும் நாம் ஒத்துக்கொள்வம். இங்ஙனம் பிழைபடுவது அந்தச் சித்திகளிற் கைவராதார்தாமும், தாம் அவற்றிற் கைவந்தார்போன்று நடிப்பதனாலேயாம். இனிக் கைவந்தார் தமக்கும், அந்தச் சித்திகள் சிற்சில தருணங்களிலே பிரதிகூலப்படுதலும் நூதனமல்ல. பௌதிக சித்திகளிற் பயின்றுளார்தாமும், அதாவது இரசவாதமுதலிய வித்தைகளிற் கைவந்தாரும், சில தருணங்களிலே அச்சித்திகளிற் பிரதிகூலப்படுவது பலகாலும் கேட்கப்பட்டுள்ளது. இதுகொண்டு பௌதிகசித்திகளைப் பொய்யென்றொதுக்குதல் கூடுமேயோ? கூடாதாம். இங்ஙனமே சித்தியற் சித்திகளும் ஓர் ஓர் காலத்து ஓர் ஓர் தடை காரணமாகப் பிரதிகூலப்படுதலுமுண்டு. இதுகொண்டு அந்தச் சித்திகளைப் பொய்யென்றொதுக்குதல் சிறிதும் கூடாதாம். என்னை? உண்மைச்சித்திகள் எத்தனையோமுறைகளிற் சந்தேக விபரீதமறத் தாபிக்கப்பட்டுள்ளமையின்.

(௫.) இந்தச்சித்திகளை எல்லாம் பிராந்தியென் வழ் மருட்சி என்றும் கொண்டு புறங்கண்டொழித்த காலமொன்றிருந்தது மெய். ஆனால் தத்துவஞானமும் ஆரிய சமயாராச்சியும் தலையெடுப்பவே, இவற்றது உண்மைகள் படிப்படியே கைக்கொண்டு அங்கிகரிக்கப்படுகின்றன. இந்தச் சித்திகளை ஒப்புதற்குடன்படாதார் பலப்பலர் உளராயினும், இவர் முன்னிலையிற்றானே இந்தச் சித்திகளுட் பல பரிஷ்காரமாகக் காட்டப்பட்டு நிறுத்தப்பட்டமையால், (என்செயலாம்) அவர்கள்விருப்பமின்றியும் அவற்றது உண்மைகளை ஒத்து அங்கீகரிக்கவேண்டியவராயினார். இத்தச் சித்திகளது உண்மை இப்போது தாபிக்கப்பட்டுள்ளமையினன்றே அமரிக்கா ஐரோப்பா முதலிய தேயங்களிலே சித்சொருப ஆராய்ச்சி மிக விருத்திபெறுவதாயிற்று? இந்த விஷயத்திலே ஆவலுற்றுள அபேக்ஷகர் பலர், இப்போது தலைஎடுத்து, இந்தச் சித்திகளுக் கேதுவாகிய சித்துப்பொருள்கள் சடசம்பந்தமுடையனவோ? இவைகள் சடசம்பந்திகளாகிய எம்மைத்தாக்குமாறு எவன்? இவற்றது வியாபக வியாப்பிய லக்ஷணங்கள்யாவை? இவற்றது

அறிவு செயல்கள் சேட்டிக்குமாறெவன்? என்று பலவாறு ஆராயத் தொடங்கிக்கொண்டார்கள். இந்தச் சித்துகளது ஆற்றல் காரணமாகச் சடசம்பந்திகளாகிய எமக்கு எய்தற்குரிய சுகதுக்கங்களும் நயநட்டங்களும் பிறவும் வரையறுத்தற்குரியன என்பது பலப்பலவாறு ஆராய்ந்து நாட்டப்படுகின்றது. ஆகவே இந்தச் சித்துமரபைக்குறித்து நாம் கற்கவேண்டியன இன்னும் அநந்தங்கோடிகளுண்டு. இந்தக் கல்விக்குரியதோர் சிறுப்பிரயத்தினம் இப்போதுதான் மேலைத்தேசங்களிலே சிறிதுசிறிதாக ஆரம்பிக்கின்றது. இன்னும் சிலகாலத்திலே, நமது ஆரியராற் கொண்டாடப்பட்டுவந்த இந்தச் சித்துவிருத்தி, மேலைத்தேசங்களிலும் பரிபூரணமாக அங்கிகரித்து அனுபவப்படுத்தப்படும் என்பது நன்கு நிச்சயிக்கத் தக்கது. இங்ஙனமே இந்தச் சித்தியல் நிச்சயம் எவ்வெவராலும் கைக்கொண்டனுசரிக்கத் தக்கதொன்ருய்ப் படிமுறையே மிகத்திரம்படைத்து வளர்தலின், இது விவேகிகள் எவராலும் அத்தியந்த கவனத்தோடு சிந்திக்கத்தக்கதென்பதும், இங்ஙனம் சிந்தித்து நோக்குவார்க்கு, நாம் மேலேக்காட்டிய விநோதமரபுகள் காரணமாக இச் சித்துலக உண்மை சந்தேக விபரீதமறத் தாபிக்கப்படும் என்பதும், எனவே இச் சித்துலகமனைத்தையும் சேட்டிப்பராகிய கடவுளுண்மையையுந்தானே போதந்து நிற்கும் என்பதும் ஒருதலையாகத் துணியப்படும்.

(௬.) நமது பௌதிகவாதநண்பர் இன்னுந் திருத்திப்படாது, நாம் காட்டிய சித்துவிலாசங்களைப் பௌதிககாரியங்கள் என்றே சொல்லத்துணிவர் என்ருல், அவரிடத்தே நாம் கேட்கத் தக்கது ஒன்றுண்டு. இந்த நூதனமரபுகள் சடப்பொருள்களின் காரியமாமாயின், அந்தப் பொருள்களிடத்திலே அந்த அந்த நூதனங்கட்கியைந்த இலக்கணங்கள் அமைந்துகிடத்தலை ஆராய்ந்து எடுத்துக்காட்டுதல் வேண்டும். இங்ஙனம் காட்டுதல் கூடாதாயின், அவர் எல்லாம் மௌனம்பூண்டு, இவற்றைச் சடப்பொருள்களின் வேருகிய அமூர்த்த சித்துக்களின் காரியம் என்றே ஒத்துக்கோடல் வேண்டும்.

பௌதிகபதார்த்தங்களிடத்தே இந்த விநோதங்கட்கியைந்த இலக்கணங்களை எடுத்துக்காட்டுதல் கூடாதாக, நமது நண்பர் ஒருபோது இவற்றை மயக்கக்காட்சி என்று முடித்தல் தமக்கு மிக இலேசமாகும் என்று கருதுவார்போலும். அங்ஙனமாயின், அதுவுங் கூடாதென்பேம். என்னை? அவற்றை மயக்கக்காட்சி என்பதைப் போதிய நியாயங்கொண்டு தாபித்தல் வேண்டும். இங்ஙனமின்றிச் சொன்மாத்திரையால் யாதொன்றை மயக்கக்காட்சி என்று முடித்தல் சாலாதாம். யாதொன்றை மயக்கக்காட்சி என்று முடித்தற்கு அதன் உண்மைக் காட்சியை உள்ளபடி எடுத்துக்காட்டி; அதுமட்டோ, அந்த உண்மைக்காட்சி மயங்கித் தோற்றவேண்டிய ஏதுவையும் எடுத்து விளக்கிக் காட்டுவதுண்டாயினே, அது மயக்கக் காட்சி என்பது நிலைபெறும். இங்ஙனமின்றேல் எத்தனையோ பிரபலசாட்சியங்கள் முன்னிலையிலே பரிபூரணமாகக் காட்டி நிறுத்தப்பட்டுள இந்தக் காட்சிகள், மயக்கக் காட்சிகள் என்பது சிறிதும் போதரமாட்டாது. மாட்டாதாகவே, அவற்றால் நிறுத்தப்பட்டுள்ள சித்து நிச்சயம் யாதோராற்றானும் நிலைதளம்பாது நிறுத்தப்பட்டவாறும்.

☞ சடப்பிரபஞ்சத்தை உள்ளிட்டு ஆராயவே அதனோடு அளவளாய் அமைந்துகிடக்கும் சித்துப்பிரபஞ்சம் புலப்படும். இந்தச் சித்துப்பிரபஞ்சத்தை ஆராயவே, அந்தச் சித்துப் பிரபஞ்சத்தோடு அளவளாய் அமைந்துள்ள ஈச்சுரவுண்மை புலப்படும். இந்த ஈச்சுரவுண்மையையும், சித்துப்பிரபஞ்சவுண்மையையும், சடப்பிரபஞ்சவுண்மையையும் உற்றுநோக்கி, இவற்றது இயற்கைக் கிரமங்களை ஆராயவே, திரிபதார்த்தவிளக்கம் உண்டாம். இந்த விளக்கம் வாயிலாகச் சற்சமயத்தை அடைந்து, அதன்கட் பிரதிபாதிக்கப்படும் நெறிகளை அனுசரிக்கவே, ஆன்ம இரக்ஷணியம் சித்திக்குமாம். இவற்றைச் "சற்சமயவிளக்கத்" திலே விரித்துக்காட்டுவேம்.

# சிறப்பியல்.

—:o:—

## மூன்றாஞ்சூத்திரம்.

தருபவனுண்டெனச்சாற்றுதனியாய
மரபெனுமாற்றம்வாதித்துரைத்தது.

உலகத்திலே எமது பஞ்சப்பொறிகளுக்கு விடயமாகும் எவ்வெப்பொருளுக்கும் ஓர் ஓர் நிமித்தகாரணம் உண்டென்பது அனுபவசாட்சாற்காரத்தாற் றுணியப்பட்டதோர் உண்மையாம். ஆதலின் பிரபஞ்சத்துக்கும் அங்ஙனமே ஓர் நிமித்தகாரணம் உண்டென்பது நன்றாக நிச்சயிக்கப்படும். எவ்வெப்பொருளுக்கும் ஓர் ஓர் நிமித்தகாரணம் உண்டென்றும், அவ்வக்காரணம் இன்னின்னது என்றும் ஆராய்ந்தெடுத்துப் புலப்படுத்தலையே தலையீடாகக்கொண்ட தத்துவசாத்திரஞானம், இந்தப் பிரபஞ்சத்துக்கு மாத்திரம் ஓர் காரணம் இல்லை என்னுமென்றால், அது எமது அறிவுக்கடங்காததோர் பெருநூதனமென்றே சொல்லத்தக்கது.

### க-ம் அதிகரணம்.

(க.) நாம் ஒரு மண்டபத்தைக் காணுந்தோறும், அதனைச் சமைத்தான் ஓர் கம்மியன் உளன் என்று நிச்சயித்தல் போலவே, இவ்வுலகத்தைக் காணுந்தோறும், இதனையும் சமைத்தான் ஓர் மகா கம்மியன் உளன் என்று நிச்சயித்தல் வேண்டும். இதுபோலும் மண்டபங்கள் முன்னே கம்மியராற் சமைக்கப்பட்டமையினைக் கண்ணாரக் கண்டுளேமாதலின், இந்த மண்டபத்தையும் சமைத்தான் ஓர் கம்மியன் உளன் என்று சொல்வேம்; பிரபஞ்சங்கள் சமைக்கப்பட்டமையினை நாம் ஒருபோதுங் கண்டதில்லையாதலின், அதனைச் சமைத்தானும் ஒருவன் உண்டென்று நாம் கொள்ளமாட்டேம் என்பீரேல்; நீர் முன்னொருபோதும் கண்டு கேட்டிராததோர் நவீன பிராஞ்சிய யந்திரத்தை இப்போது புதிதாகக் காண்ப

துண்டானல், அதனைச் சமைத்தான் ஒருவன் இலன், அது தானே அமைந்துள்ளது எனக் கொள்வீரா? கொள்ளீர்! கொள்ளீர்!! அவ்வியந்திரமும் இம் மண்டபத்தோடு, செயற்கை இலக்கணங்கள்பற்றி, ஒருபுடை ஒத்திருத்தலின், அதனுக்கும் ஓர் கர்த்தன் உளன் என்று நிச்சயிப்பேம் என்பீரேல்; அஃதொக்கும். அவ்வாறே, உருவமுடைமை, அவயவமுடைமை, கிரமநெறி, பிரயோசன முதலிய ஏதுக்களால் மண்டபத்தோடு ஒருபுடை ஒத்த இப் பிரபஞ்சத்துக்கும் ஒரு கர்த்தன் உளன் எனக்கொள்வதன்றே ஏற்புடைத்தாகும்? பிரபஞ்சத்துக்கும், நாம் ஈண்டுக்காணும் மண்டபாதி பொருள்களுக்கும் அவயவாதி பொதுவிலக்கணங்கள் உண்டென்பது உண்மையேயாயினும், அவை தம்மின் வேறுபடுவனவன்றே என்பீரேல்; அங்ஙனம் வேறுபடுதலினால், அவற்றை ஆக்கினரும் வேற்றியல்புடையார் எனக் கொள்ளத்தக்கதன்றி, அவற்றுள் யாதொன்று ஓர் காரணகர்த்தன் இன்றித் தானே அமைந்தது என்று கொள்ளுதல் சாலாதாம். வேற்றிலக்கணங்களையுடைய இருதிறப் பாத்திரங்களை நாம் காண்பதுண்டாயின், அவை வேற்றியல்புடைய இருதிறக் கம்மியரால் அமைக்கப்பட்டனவெனக் கொள்வதன்றி, அவற்றுள் யாதானுமொன்று ஆக்குவானின்றி அமைந்தது என்று ஒரு சற்றும் கொள்ளேம். ஆகவே இவ்வுலகுக்கும் நம்மின் வேறுபட்ட இயல்பினையுடையான் ஓர் கர்த்தன் உளன் என்கை போந்தபடி காண்க.

(உ.) அற்றன்று: நாம் ஈண்டுக்காணும் மண்டபாதிபொருள்கள் செயற்கைப் பொருள்களாதலின், இவற்றுக்கும் பிற செயற்கைப்பொருள்கட்குப்போலக் கர்த்தன் ஒருவன் உளன் என்று துணிவேம்: இயற்கைப்பொருளாகிய பிரபஞ்சத்துக்கு அங்ஙனம் துணிதல் அமையாதெனின்; அமையுமாம்: ஒற்றுமைபற்றி: எங்ஙனம்?

யாதானுமொருபொருளைச் செயற்கைப்பொருள் என்று துணிதலும், அதுபற்றி அதனுக்கோர் கர்த்தனுண்டாம் பிற

என்று தாபித்தலும், அது பிற செயற்கைப் பொருள்களோடு கொண்டுள ஒற்றுமை நயம்பற்றியன்றே? அதுபோல், ஒரு காரணனை வேண்டி நிற்றற்குரிய பொதுவிலக்கணங்களாகிய கிரமநெறி, அவயவச்சிறப்பு, பிரயோசனமுதலிய இலக்கணங்கள் எவ்வெப் பொருள்களிடத்துண்டோ, அவ்வப் பொருள்களெல்லாம், அவ்வொற்றுமைபற்றி ஓர் காரணனை அவாவிநிற்றலே நியாயநூன்மரபாகும். செயற்கைப் பொருள்களிடத்துள்ள கிரமபிரயோசன முதலிய இலக்கணங்களால் அவற்றுக்கோர் கருத்தனுண்டென்பது பெறப்படுமாயின், அவ்விலக்கணங்களை உடைமையாகிய ஒற்றுமை நயம் யாதுயாது பொருளிடத்துண்டோ, அந்தந்தப்பொருள் எல்லாம் ஓர் காரணனை உடையன என்று துணிதலே நையாயிகவழக்காகும். ஆகவே அங்ஙனம் துணியாதொழிதல் நியாயவிருத்தமாகியதோர் துறையாம் என்றபடி.

(ரு.) இனி, ஓர் இனப்பொருள்கள் தம்மினும், ஒன்றனுக்குரிய இலக்கணங்கள் பின்னொன்றன்மாட்டும் அமைந்து விளங்கும் ஒற்றுமைபற்றியே அவற்றை இனமென்றலும், அவற்றுக்குரிய குலம் குணம், காரணம் முதலிய எல்லாம் அபேதம் என்று தாபித்தலுமாம். ஆதலாற் சிருட்டிகாரியமாகிய கிரம பிரயோசனமுதலிய பொதுவிலக்கணங்கள் எவ்வெப்பொருட்குண்டோ, அவ்வப்பொருள் எல்லாம் தாய்கொண்டுள்ள பொதுவிலக்கணத்தின் அளவுக்கியைந்தபடி இனமுடையன என்றும், அந்த இனம்பற்றி, ஒன்று காரணனையுடைத்தாயிருத்தலொப்ப, மற்றதும் உடைத்தாயிருத்தல்வேண்டும் என்றும் முடிப்பதன்றோ நையாயிகதர்மம்? காரணம் காணப்படாதனதாமும், கண்டவற்றோடு ஒப்புமை உடையனவேல், அவ்வொப்புமையின் அளவுக்கியைய, அப்பகுப்பின்பாற்படுத்துக் காரணங்காட்டப்படுதல் சாதாரண வழக்காய் அமைந்துகிடப்பவும், இக்கடவுள் விஷயத்தில் மாத்திரம் ஓர் நூதன்வாதம் செய்யத் தலைப்பட்டுள்ளாரைக் குறித்து நாம் என்சொல்கேம்!

(சு.) ஒரு பொருள் செயற்கைப்பொருள் என்று துணிந்த பின்னரே, அதனுக்கோர் காரணன் உண்டென்று தாபிக்கத்தக்கது. என்னே? செயற்கைப்பொருள் எல்லாம் செய்வானை வேண்டிக்கிடத்தலின். இயற்கைப்பொருள், பெயரளவிற்றானே செய்வானைக் காட்டாது செயற்கைப்பொருளின் வேறுபடுமாதலின், அதன் இலக்கணங்களை இதனுக்கமைத்தல் சாலாதென்பீரேல் * "செயற்கைப்பொருள்" = "செய்வானைவேண்டுவது" "இயற்கைப்பொருள்" = "செய்வானை வேண்டாதது" என்பன பொருளல்ல. இவை பொருளாமாயின் நாம் வாதிக்கவேண்டுவதில்லை. நமதுவாதம் அவ்வளவிற்றானேமுடிந்துவிடும். இயற்கைப்பொருள் செய்வானை வேண்டாதோ, என்பதே நமது வாதவிடயம். செயற்கைப்பொருள் ஈண்டுள்ள மனிதர் முதலியோராற் செய்யப்படுவது; இயற்கைப்பொருள், அவராற் செய்யப்படாது ஈங்கு அமைந்து கிடப்பது. இவைகளே இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள்களின் தாற்பரியமாம். இங்கே மனுஷர் முதலியோராற் செய்யப்படாதமைந்துகிடக்கும் இயற்கைப் பொருள்கட்கு ஓர் செய்வான் இல்லையோ என்பதே நாம் ஆராயப்புகுந்த விடயம்.

ஒருசாதிமனுஷரால் ஒருதிறப்பொருள் ஆக்கப்பட்டது கண்ட நாம், எம்மாலறியப்படாத பின்னோர் சாதிமனுஷராற் செய்யப்பட்ட பின்னோர் திறப்பொருளைக் கண்ட உடனே, "இது மனுஷராற் செய்யப்பட்டமையினையும் நாம் கண்டிலம், இது முந்த நாம்கண்ட வகைப்பொருளோடு ஒத்த இயல்பினையுடையதுமன்று, ஆதலின் இது மனுஷராற் செய்யப்பட்டதன்று" என்று முடிப்பேமா? அற்றேல், "இது பிறிதோர் திறப்பொருளாயினும், முந்த நாம்கண்ட வகைப்பொருளோடு ஒருபுடை ஒத்த மானுட செயற்கைலக்கணம் பூண்டுகிடத்த

* நாம் செயற்கைப்பொருளின் இலக்கணங்களை எல்லாம் இயற்கைப்பொருளுக்கு ஒருங்கே அமைக்கக்கருதுவதில்லை. ஒற்றுமை கொண்டுள்ள அத்துணை அளவைக்குமாத்திரமே அமைப்பம்.

லின், இதுவும் இவ்வுலகத்துள்ள ஒருசாதி மனுஷராற்றுனே ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்; ஆயின், இருவகைப்பொரு ளும் வேற்றியல்புடையனவாய்க் கிடத்தலின், பிந்தியதை ஆக்கினர், முந்தியதை ஆக்கினரின் வேறுய பிறிதோர் சாதி மனுஷராய் இருத்தல்வேண்டும்" என்று கொள்வேமா? பிந்தியவாறே கொள்வம். என்னை? க-வது. செய்யப்பட்ட மைக்கும், உ-வது. அதுவும் மனுஷராற் செய்யப்பட்டமைக் கும் உரிய பொதுலக்கணங்கள், இருதிறப் பொருள்கண்மாட் டும் காணப்படுதலின். இங்ஙனமே, இயற்கைப்பொருள் செய ற்கைப்பொருளின் வேறுபடுமாயினும், அவ்விரண்டன்மாட் டும், செய்யப்பட்டமைக்குரிய கிரம பிரயோசன முதலிய பொதுலக்கணங்கள் காணப்படுதலின், அவ்வளவினுக்கிசை ந்த சாமானியம் இரண்டனுக்கு முண்டென்றும், அதுபற்றி இரண்டும் செய்யப்பட்டிருத்தல்வேண்டும் என்றும் முடிப் பதே முறையாகும். முந்திய உதாரணத்திலே, அப்பொரு பிறிதோர் சாதிமனுஷரால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று முடித்தாலொப்ப, இங்கேயும், பிரபஞ்சம் மனிதரின் வேறுய பிறிதொரு சித்துப்பொருளால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று முடித்தலன்றே நியாயநூன் மரபாகும்? என்னை? இது மானுஷ்ய செயற்கையோடு ஒவ்வாது வேறுப டுதலின். முந்திய உதாகரணத்திலே இருதிற இலக்கணங்கள் ஒத்திருந்தமையின் இருதிற சாமானிய தர்மம் கொண்டேம். இங்கே ஒருதிற இலக்கணங்கள் ஒத்திருத்தலின் ஒருதிற சாமா னியம் கொள்வேம். ஆகவே, இயற்கைப்பொருள் மானுஷ்ய செயற்கைப்பொருளின் வேறுபடுமாயினும், இரண்டனுக்கும் பொதுலக்கணங்கள் உண்மையின், அப்பொதுலக்கணங்களின் அளவுக்கியைந்த சாமானியதருமம் இரண்டனுக்கும் அமை க்கப்படும் என்பதும், ஆகவே, செயற்கைப் பொருளிற்போல இயற்கைப் பொருளிலும் கிரம பிரயோசனந்திகள் உண்மை யின், அவற்றை ஆக்கினன் ஒருவன் உளன் என்பதுபோல, இவற்றையும் ஆக்கினன் ஒருவன் உளன் என்பதும்; ஆயின் இயற்கைப் பொருள்களிடத்துள்ள செய்கைகள், செயற்

கைப் பொருள்களிடத்துள்ளன போலாது வேறுபடுதலின், அவை செயற்கைப் பொருளைச் செய்த நம்போலிய மனுஷ ரால் செய்யப்படாது; நம்மின் வேறாயதோர் சித்துப்பொரு ளாற் செய்யப்பட்டன என்பதும் போந்தபடிகாண்க.

உலகத்திலே காணப்படும் *செயற்கைப்பொருளின் வடி வங்கட்கோர் கருத்தன் வேண்டும் எனக் கொள்வேமாகிய நாம், இயற்கைப்பொருளின் வடிவங்களுக்கு அங்ஙன் ஓர் கர் த்தன் வேண்டப்படுவான் அல்லன் என்று நூதனமாகக்கொ ள்ளுதல் எங்ஙனம்? அவற்றின்கணுள்ள கிரமநெறிகள் எல் லாம் ஒருவரால் அமைக்கப்பட்டன என்றும், இவற்றின்கணு ள்ள கிரமநெறிகள் தாமே அமைந்தன என்றும் நாம் துணியு மாறு எங்ஙனம்? அவற்றின் பிரயோசனங்களை அமைத்தற்கு யுத்தியிற் சிறந்ததோர் சித்துப்பொருள் வேண்டும் என்றும், இவற்றின் பிரயோசனங்கட்கு அங்ஙனம் ஓர் சித்துப்பொரு ள்வேண்டிற்றன்று என்றும் நாம் சாதிப்பது எங்ஙனம்? இவை போலிய வினாக்களை வினாவுங்கால் இப்பிரபஞ்சத்தினுக்கோர் இயற்றுதற்கருத்தா உண்டென்பது பசுமரத்தாணிபோல் நா ட்டப்படும்.

(௩.) இனி நாம், யாதானுமொருபொருள்தான், அன்றி அதனுக்கினமுறை பூண்டுள தொன்றுதான்; ஓர் ஓர் காரண முற்றிருந்தமையினைக் காண்டல் கூடாதவழியும், அதனுக்கு மோர் காரணமுண்டென நிச்சயித்தல் வழக்கேயாம். எங்ங னம்? வானவில்லுண்டாகுங்கால் சூரியகிரணமே அதனுக்குக் காரணமாய் அமைவதை நாம் கட்புலன்கொண்டு கண்டத ல்ல. இடிமுழக்குண்டாகுங்கால் முகில்களே அவற்றுக்குக் காரணமென்பதை நாம் கண்டதல்ல. ஓர் கொம்பசையுங்கால் காற்றே அவ்வசைவுக்குக் காரணமென்பதை நாம் கண்டத ல்ல. இவற்றை எல்லாம் எமது யுத்திமாத்திரையானே நிச்ச யிப்பது. ஆகவே காணுததனையும் யுத்திசாதனையால் நிச்சயி ப்பேம் என்பதும், கடவுளுண்மையும் இங்ஙனமே நிச்சயிக்க ப்படும் என்பதும் காண்க.

(சு.) இப் பிரபஞ்சத்தைச் சிருட்டிப்பான் ஓர் கர்த்தன் வேண்டப்படுவனேல், அக்கர்த்தனுக்கும் பின்னோர் கர்த்தன் வேண்டப்பட்டு, இங்ஙனமே எமது நியாயத்தொடர் முடிவுறாது வரம்பின்றிப் பெருகும் * என்பீரேல்; நியாய ஆதாரங் கொண்டு முன்னர் நிச்சயிக்கப்பட்ட ஈச்சுரவுண்மையை, பின்னர் அதன் காரணவிசாரமாகிய பிறிதோர் விடயம் முடிவுறாதென்றஞ்சிக் கைவிட்டு, நாம் உடனேதானே நியாயநெறிக்கு விருத்தமான கடவுளின்மையைச் சாதித்தல் "நரியூர்க்கஞ்சிப் புலியூர்க்குச்சென்ற" வாறும். அதுகிடக்க, நியாய ஆதார சகிதமாக முன்னர்த் தோன்றியதோருண்மை, பின்னர் அதன் சம்பந்தமான பிறிதோர்கொள்கை முடிவுறாமைபற்றிப் பிழைபடுதல் இல்லை. பின்னர் எடுத்துக்கொண்ட கொள்கையை முடித்துக்கொள்ளும் ஆற்றல் எம்மாட்டில்லை என்று துணிதலே முறையாகும். ஒருகொள்கை முடிவுறாமை, அதனோடு தொடர்புற்றுத் தன்னளவின் முடிந்துகிடக்கும் பின்னோர் கொள்கையைப் பிழை என்று காட்டப்போகாது. இனி இரண்டு கொள்கைகளும் முடிவுற்றுக் கிடக்குமிடத்தும், ஒன்று மற்றதனை மறுப்பது, அவ்வொன்றின் மற்றையது ஒருங்குபற்றிக் கிடப்பினேயாம். ஆதலின், பிரபஞ்ச அனுபவத்தாற் துணியப்படும் ஈச்சுரநிச்சயம், "அக்கடவுளைச் சிருட்டித்தார் யார்?" என்னும் பிறவினாவில் தொங்கி இருப்பினே, அதனால் மறுக்கப்பெறும். இன்றேல் சிறிதும் மறுக்கப்பெறாதாம். கடவுள் உண்டெனும் பிரதிஞ்ஞையோ கடவுட்சிருட்டியை (அங்ஙனமொன்றுளதேல்) பற்றுக்கோடாகக் கொண்டு கிடப்பதல்ல. ஒருபொருள் உண்டெனச் சாதிப்பது எப்போதும் அதுதோன்றிய காரணத்திருந்தேயல்ல. காரணத்திருந்து காரியந் தாபிக்கப்படுதல்போல, காரியத்திருந்து காரணந் தாபிக்கப்படுதலும் வழக்கேயாம். நெருப்புண்மையால் புகையுண்டென்று தாபிக்கப்படுதல் போல், புகையுண்மையால்

---

* கடவுளுண்மை சாதிக்கப்படாவிடத்துத்தான் அந்நியாயத்தொடர் முடிவுற்றுக்கிடப்பதோ?

நெருப்புண்டென்று தாபிக்கப்படுதல் காண்க. ஆகவே புகை தோற்றுகைபற்றி நெருப்புண்டென்று சாதிப்பேமாகிய நாம், அந்நெருப்பு எங்ஙனந் தோன்றிற்று என்று அறியாமைபற்றி நெருப்புமில்லை என்று முடிக்கமாட்டேம். சலத்துக்குக் காரணம் அமிலகாமும் (Oxygen), சுலகாமு (Hydrogen) மாம் என்று கொள்வேமாகிய நாம், இவற்றுக்குக்காரணம் இன்னது என்பதை அறியாமைபற்றி, இவற்றை இல்பொருள்களாம் என்று முடிக்கமாட்டேம். இங்ஙனமே, காரியமாகிய உலகத்திலிருந்து, அதனுக்குக் காரணமாகிய கடவுள் ஒருவர் உண்டென்று நியாயவழித் துணிந்துகொண்டேமாகிய நாம், இக்க...வுளுக்குக் காரணம் யாதென்பதை அறியாமைபற்றி, அக்கடவுளையும் இல்லை என்று முடித்தல் அமையாதாம்.

(எ.) இனி ஒன்றனுக்குள்ள இலக்கணம் பிறிதொன்றனுக்கும் உண்டெனக்கோடல், ஒற்றுமை நயம்பற்றியே என்பது மேலேக்காட்டினும். ஆகவே, நாம் ஈண்டுக்காணும் பொருள்களிடத்துள்ள பிறப்பிறப்பிலக்கணம் கடவுளிடத்தும் உண்டெனக்கோடல், அந்தக் கடவுளும் இந்தப் பொருள்களோடு ஒற்றுமைகொண்டு விளங்குவதுண்டாயினேயாம். கடவுளோ, நம்போல அவயவி என்றாவது சடசம்பந்தி என்றாவது எந்தச்சமயமும் கூறுவது இல்லை. இங்ஙனம் இலக்கணம் பூண்ட கடவுளுக்கு நாம் பிறப்பொடுக்கந்தேடி முட்டுற்று, நையாயிகதர்ம வழிப்போந்ததோர் முடிபைக்குறித்துச் சங்கித்து நிற்றல் பெருமடனுமென்க. அதுகிடக்க.

இந்தக் காரணத்தொடர் விசாரந்தான் முடிவுறுமாறு எங்ஙனம் என்று ஆராய்வாம் எனின்; அந்தக் கடவுள் தோற்றநாசமின்றி அநாதிநித்தியவஸ்துவாயதோர் சுயம்புமூர்த்தி என்பது தானேபோதரும். என்னை? இங்ஙனமானதோர் காரணமின்றேல், காரியமாகிய பிரபஞ்சமும் அதன்கணிகழ்ச்சிகளும் உளவாதல் கூடாது. இவைகளுண்மையின், அநாதிநித்தியவஸ்துவாகிய கடவுள் ஒருவர் அவற்றுக்கெல்லாம் காரணமாய் அமைந்துள்ளார் என்பது செவ்விதிற் துணியப்

படும். அற்றன்று: பிரபஞ்சவமைதிகட்கெல்லாம் ஓர்ஓர் இயற்கைக் காரணமிருக்கலாம்; அக்காரணம் இப்போது எமக்குப் புலப்படுகின்றிலதுபோலும் என்பீரேல்; நீர் இவற்றுக்கோரோர் காரணம் சமர்ப்பித்து எத்துணைத்தூரம் சென்றாலும், இறுதியிலே, தனக்குக் காரணமில்லதாகியதோர் சித்துப்பொருளிற்றானே அவ்விசாரம் சென்று முற்றற்குரியதாம். பௌதிகசாத்திரபண்டிதர், காலத்துக்குக்காலம் எத்துணை வியுற்பத்தி அடைந்து, ஓர் ஓர் காட்சிக்கு ஓர் ஓர் காரணம் தேடிச் சமர்ப்பிப்பராயினும், அஃதெல்லாம் பிரபஞ்சநிகழ்ச்சிப்பொருட்டுச் சர்வகாரணராகிய கடவுளால் நியமிக்கப்பட்ட நியதியேயாய், இறுதியில் அந்தக் காரண கர்த்தனிற்றானே சென்று முற்றுமாம். இங்ஙனமின்றேல், இக்காரணவிசாரம் எவ்வாற்றானும் முற்றாதென்க. அன்றியும், நாம் அறியாததோர் காரணம் இருக்கலாம் என்று ஆரோபித்து, அந்த ஆரோபங் காரணமாக, நியாயவழித்துணியப்படும் ஈச்சுரவுண்மையைக் கொள்ளாதொழிவது, அறிவுடைமாக்களுக் கருகமாயதோர் நெறியன்றாம்.

(அ.) நாம் அறியாததோர் காரணத்தை உண்டென்று உத்தேசித்தல் கூடாதெனின், நாம் ஒருபோதும் காணாத கடவுள் ஒருவர் இருக்கிறார் எனக்கொள்வதெப்படி என்பீரேல், கடவுளை நாம் கட்புலன்கொண்டு காணாதவழியும், அங்ஙனம் காண்டல் கூடாதார் ஒருவர் இருக்கிறார் என்றற்கியைந்த நையாயிக தர்மங்கொண்டு, அவரதுண்மை இனிது சாதிக்கப்படும்; ஆதலின் அந்த உண்மை எம்மாற் பரிபூரணமாகக் கைக்கொள்ளற்படற்குரியதாம். அற்றன்று, நாம் கட்புலன்கொண்டு காணாத யாதொன்றையும் நம்பமாட்டேம் என்பீரேல்; காணாததொன்றை விசுவசித்தல் வழக்கன்று கொல்லோ? காணாததைமாத்திரமல்ல, நமது பஞ்சப்புலன்களுள் யாதொன்றனுக்கேனும் புலப்படாத பொருள்களைத்தானும் நிச்சயித்தல் வழக்கினுட் காணப்படுமன்றே. எங்ஙனம்? பிரபஞ்சத்துள்ள கருஷணுதிகவர்ச்சிகளை நமதுபுலன்களுள் யாதொன்று

கவரவல்லதாமோ? விவேகம் ஞானம் முதலியவற்றை நமது பஞ்சப்பொறிகளுள் யாதொன்று கிரகிக்கமாட்டுமா? இவற்றை எல்லாம் காணப்படுவனவாகிய இவற்றின் காரியங்கள் கொண்டும், காணப்படும் பொருள்களோடு இவைகள் கொண்டுள ஒற்றுமையும் சம்பந்தமும் முதலிய ஏதுக்கள் கொண்டுமன்றோ எமது யுத்திமாத்திரையால் நாம் அனுமானித்து நிச்சயிக்கின்றனம்? இங்ஙனமே காரியமாகிய பிரபஞ்சத்தை நாம் காணவே, இதனுக்கோர் காரணமுண்டென்பது எமக்கு இனிதுபுலப்படுமாம். இவ்வாறு புலப்படும் ஒன்றனை நமது கட்புலம் கதுவுதல் இல்லை என்பதனால் இல்பொருள் எனமுடித்துவிடுதல் யுக்தமாகுமா? பிரசஞ்சமும் அதன் கணிகழ்ச்சிகளுமாகிய காரியங்களை நாம் கண்ணாரக்காண்கின்றேம். காரணமின்றிக் காரியம் அமையாதென்னும் உண்மையை நாம் ஆயிரம் கண்கொண்டு காண்கின்றோம். பின்னே இப்பிரபஞ்ச நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஓர் காரணம் உண்டென்று முடியாது என்செய்யத்தக்கதோ? பிரபஞ்சத்திலே அளவுக்கடங்காத கிரமபிரயோசன நூதனங்களைக் காண்கின்றோம். யாதொரு கிரமமாவது பிரயோசனமாவது நூதனமாவது அறிவாற்றல் தொழிற்பட்டாலன்றி அமையாதென்னும் உண்மையை நாம் பன்னூறு கண்கொண்டு காண்கின்றோம். பின்னைப் பிரபஞ்சத்துள்ள கிரமாதிகளைத் தொழிற்படுத்தினார் ஓர் சித்துப்பொருள் உண்டு என்று முடியாது என்செய்யத்தக்கதோ? இங்ஙனமே கடவுளுண்மை சந்தேகவிபரீதமற இன்றியமையாச் சிறப்பிற்றாக நாட்டப்படுமாகவும், "சானுதலொன்றை நம்புமாறெங்ஙனம்?" என்றோர் விதண்டைதொடுத்து நிற்றல் அறிவுடையார்க்கெல்லாம் பெருநகைவிளைக்குமென்க.

(கூ.) பிரபஞ்சத்துக்கோர் காரணம் உண்டென்பது எமக்குப் புலப்படுமாயினும், அந்தக்காரணம் எப்படிப்பட்டது என்பதை அறியாமையின், அதனை நாம் விசுவசித்தல் கூடாது என்பீராயின், யாதொருபொருள் உண்டென்று விசுவசித்தற்கு, அப்பொருள் இப்படிப்பட்டது என்னும் அறிவு அவசிய

மல்ல. (க-ம் சூத்திரம், உ-ம் அதிகரணம் காண்க.) சூரியன் இப்படிப்பட்டதென்னும் அறிவு ஒரு குருடனுக்கிருத்தல் கூடாதாதலின், அவன் சூரியன் என்றோர்பொருள் உண்டு என்பதையும் விசுவசித்தல் கூடாதேயோ? இனிக் கடவுளுடைய இலக்கணங்களை நாம் ஒருங்களந்தறிதல் கூடாதென்பதன்றி அவருடைய இலக்கணங்களிற் சிலவற்றைப் பிரபஞ்சமாகிய காரியத்திருந்துதானே நாம் அறிதல் கூடுமாம். ஆகவே நாம் கடவுள் இன்னர் என்பதனையும் ஒருபுடைக்காண்டல் கூடும் என்பதும், அங்ஙனங்கண்டு அவரை நன்கு விசுவசிக்கலாம் என்பதும் காண்க. ஒருபுடைக்காட்சியாற்றானும் ஒருபொருளை விசுவசித்தல் கூடாதென்பீராயின்; நாம் உண்டென்று விசுவசிக்கும் பொருள்கள் எல்லாம் எம்மால் ஒருங்களந்தறியப்பட்டனதாமோ? காலத்தை நாம் ஒருங்களந்தறிந்துதான் விசுவசிக்கின்றனமோ? அம்பரத்தை நாம் முற்றக் கண்டுதான் விசுவசிக்கின்றனமோ? அநாதி · அநந்தங்களை நாம் ஒருங்கே எமதறிவிற் பதித்துத்தான் விசுவசிக்கின்றனமோ? இன்னபொருள்கள் எல்லாம் எல்லைப்படாது, எமது அறிவு எத்துணைத் தூரத்துக்குச்சென்றாலும் அத்துணைத் தூரத்துக்கும் அப்பாற்சென்று விரிந்து முடிவின்றிக்கிடக்குமாதலின், இவைகள் எமது அறிவுக்கு ஒருங்கே அமைதல் கூடாதாகும். இங்ஙனமாயினும் இவற்றை நாம் ஒருபுடைகண்டு இவற்றைக்குறித்ததோர் அறிவினைப்பெற்று விசுவசிக்குமாறுபோல, கடவுளையும் பிரபஞ்சகாரியவாயிலாக ஒருபுடைக்கண்டு, அவரைக்குறித்த அறிவைப்பெற்றுச் செவ்வின் விசுவசிக்கலாமென்க. உலகத்துள்ள சமயங்களுள் ஒன்றாவது கடவுள் எம்மால் ஒருங்களந்தறியப்படும் இயல்பினர் என்று சொல்வதில்லை. அவரது இலக்கணங்களை முற்றத்தேர்தல் முடியாதென்பதே சமயங்கள் எல்லாம் சாதிப்பது. இந்த இயல்பினராகிய கடவுளை நாம் நமது சிற்றறிவுக்கமைந்தவாறு காண்டற்குரிய வாயில்களையும், அங்ஙனம் கண்டு விசுவசித்துப்பத்திசெய்தற்கமைந்த முறைகளையும், அப்பத்திவிசுவாசங்களால் நாம் பிரசாதம்பெறும் கிரமங்களையும் விளக்குதற்

பொருட்டே சமயங்கள் போந்தன. இந்தச் சமயங்கள் வாயி லாக நோக்குங்கால், நாம் மேலே விரித்துக்காட்டிய நையாயி கதர்மத்தால் பெறப்படும் கடவுளுண்மையை நாம் ஒகக்கொண்டு அனுசரித்துப் பயன்படைத்தற்கமைந்த உபாயங்கள் எல்லாம செவ்விதிற் புலப்படுமென்க.

## உ-ம் அதிகரணம்.

பிரபஞ்சகர்ரியங்களுக்குக் காரணர் ஒருவர் வேண்டப் படுவார் அல்லர்; ஆன்மாக்கள் செய்துகொள்ளும் கன்மங் களே, அவ்வ்வற்றுக்கியைந்த பலன்களாகிய இப் பிரபஞ்சகா ரியங்களைத் தந்துகொண்டு நிற்கும் என்பதும் ஒருசாரார் கொள்கை. இதனை ஆராய்வாம்.

(க.) கன்மங்கள் தத்தமக்கியைந்த ஓர்ஓர் பலனை நம்பாற் செலுத்தவல்ல சாமர்த்தியமுடையனவா மென்றால், அவை அறிவாற்றலின்வல்ல சித்துப்பொருள்களாமென்பது பெறப் படும். உண்மையை நோக்குங்கால், அவைகள் அறிவு சிறிதே னும் இல்லாத சடப்பொருள்களேயாதலின், அவை யாதொ ருபயனை நம்பாற்செலுத்தவல்லுனவென்பது சிறிதும் அமை யாதாம். அற்றன்று; சூரியன் உதிக்க இருள்நீங்குவதுபோல, யாதொருகன்மத்தைச் செய்தான் அக்கன்மத்துக்குரிய பல னை அனுபவிப்பதும் இயற்கைமரபாகும் என்பீரேல், இந்த உபமானம் ஈண்டமைக்கு அமையாதென்பதை ஆராய்ந்து காட்டுவாம்.

(உ.) யாதொருபொருள், பிறிது யாதொரு பொருளைப் பிறப்பிக்கும் என்னும் இடத்து, அது அங்ஙனம் பிறப்பிப்பது தனது பிரஞ்ஞை காரணமாக ஆதல் வேண்டும்; அற்றேல் இதனைப் பிறப்பித்தற்கியைந்த அமைதி அதன்கண் அமை ந்து விளங்குதல் காரணமாக ஆதல்வேண்டும். சூரியன் அறி வுடைப்பொருளன்றாயினும், அதனிடத்தே இருளை நீக்குதற்

கிசைந்த இயற்கை அமைதி உண்மையின், அதன் தோற்றத்தால் இருள் நீங்குதல் கூடும். கன்மங்களோ அறிவாற்றல் சிறிதுமில்லாத சடப்பொருள்கள். அவற்றின்கண்ணே பிரபஞ்சத்தைத் தருதற்கிசைந்த இயற்கை அமைதி உண்டோ என்றால், அதுவும் இல்லை. எங்ஙனம்? பிரபஞ்சத்தைத் தருதற்குரிய தொழிலாற்றலும் வேறு. நாம் செய்துகொள்ளும் கன்மங்களாகிய தொழிலாற்றலும் வேறு. இவை தம்முள்ளே ஒரு சற்றாயினும் ஒற்றுமைகொண்டு கிடப்பனவல்ல. இங்ஙனமே பிரபஞ்சோற்பத்திக்கு வேண்டப்படுவதாகிய தொழிலாற்றலை அணுப்பிரமாணமேனும் தான்பாற் கொண்டிராத நமது கன்மம், அந்தப் பிரபஞ்சத்தைப் பிறப்பிக்குமாறு எவ்வாறோ? "பாகல்வித்தூன்றச் சுரைக்கொடி முளைக்குமா?" "வாழைகுலையீன வான்மழை பொழியுமா?" இருள் நீக்கத்துக்குரியதாகிய ஒளி சூரியனிடத்தே உண்மையின், அந்தச் சூரியன் தோற்ற இருள் நீங்கும். பிரபஞ்சோற்பத்திக்குரிய தொழிலாற்றல் நமது கன்மங்களிடத்தே இன்மையின், இவற்றால் பிரபஞ்சம் தொழிற்படுவது கூடாதென்க. அற்றன்று: வித்தின்கண்ணே விருக்ஷங்கள் தோன்றினாலென்ன, நமது கன்மங்களிடத்தே பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தற்குரிய ஆற்றலும் காலாந்தரத்திலே விருத்தியுற்றுவிளங்கும் என்பீரேல், வித்தின்கண்ணே விருக்ஷத்துக்குரிய காரணங்கள் சூக்குமித்துக் கிடத்தல்பற்றியே வித்தினின்று விருக்ஷந்தோன்றுவது. நமது புல்லிய கன்மங்களின்கண்ணே, பிரமாண்ட சிருட்டிக்கிசைந்த பேராற்றல் சூக்குமித்துக்கிடப்பதெவ்வாறோ? ஒன்றனுக்குரிய சூக்குமகாரணம் அதனோடு இயைபுடைப் பின்னொன்றில் அமைந்து விளங்குவதன்றி, இயைபில்லாத தொன்றில் விளங்குவது கூடாது. விருக்ஷத்தின்பாற் தோற்றிய வித்திலே, அவ்விருக்ஷத்துக்குரிய சூக்கும காரணம் அமைந்து விளங்குதல்சாலும். பிரமாண்டம் இத்தன்மையது என்பதைத்தானும் அறியாத எமது அல்ப்ப கன்மங்களிலே, அப்பிரமாண்ட சிருட்டிக்குரிய அகண்டித ஆற்றல் சூக்குமித்துக்கிடப்பது எவ்வாறோ?

(௩.) இங்ஙனமன்று: நமது கன்மங்களின்கண்ணே அவ்வவற்றுக்கியைந்த பலன்களாகிய தனுகரணபுவனபோகங்களைத் தோற்றுவித்தற்குரியதோர் இயற்கை அமைதி உண்டு என்பீரேல்; இந்த அமைதி உண்டு என்பது நாம் கட்புலன் கொண்டு கண்டதல்ல. விசாரத்தினாற்றானே இந்த அமைதியை நாம் நிச்சயிக்கவேண்டியது. விசாரம்புரியுமிடத்து அவற்றின்கண்ணே இந்த அமைதி உளதாதல் கூடாதென்பது பெறப்படும்போது, அங்ஙனமானதோர் அமைதி அங்கே உண்டென்று நாம் கொள்ளுமாறு எவ்வாறோ?. கன்மங்கள் ஓர் ஓர் பலனை எமக்குத் தருதலை நாம் அனுபவத்திற்காணும் போது, அவற்றின்கண்ணே அப்பலனைத் தருதற்கியைந்த அமைதி இல்லை என்று முடிக்குமாறெங்ஙனம் என்பீரேல்; கன்மங்கள்தாமோ எமக்கு இந்தப் பலன்களைத் தருவன என்பதே நாம் ஆராயப்புகுந்த விடயம். ஆகவே, கன்மங்களே எமக்குப் பலன்களைத் தருதலை நாம் அனுபவத்திற் காண்கின்றேம் என்னுங்கூற்று அமையாது: அனுபவத்திற்காணக் கிடப்பது நாம் ஓர் ஓர் கன்மத்தைச்செய்ய ஓர் ஓர் பலன்விளைவது. இந்தப்பலன் கன்மத்தால் செலுத்தப்படுவதோ, அன்றி இந்தக் கன்மங் காரணமாக யாதொரு சித்துப்பொருளால் செலுத்தப்படுவதோ என்பதுதான் நாம் நிச்சயிக்கவேண்டுவது. கன்மத்தாற் செலுத்தப்படுவது கூடாதென்பது நாம் மேலைச்செய்த விசாரத்தால் போந்தமையின், அந்தப் பலன்கள் அனைத்தும் ஒரு சித்துப்பொருளாற்றானே செலுத்தப்படும் என்பது முடிக்கப்பட்டவாறாயிற்று. களவெடுத்தான் தண்டிக்கப்படுவன் என்பது அரசியற்பிரமாணம். இந்தப் பிரமாணத்தின்படி களவெடுத்தானை நீதிபதி தண்டிக்கின்றான். இங்கே களவெடுத்தவனுக்குத் தண்டனையைக் கொடுத்தது களவல்ல. நீதிபதியே அத்தண்டத்தைக் கொடுத்தவன். இங்ஙனம் கொடுத்தது கள்வன்செய்த களவாகிய ஏதுப்பற்றியாம். ஆகவே, களவு தண்டத்துக்கு ஏதுவன்றிக் காரணமாகாதாம். ஏதுவையும் காரணத்தையும் மயங்கவைத்தால் உண்மையைக் காண்டல் கூடாது. இங்ஙனமே நாம் செய்துகொ

ள்ளும் கன்மங்களும் எம்மை வந்தடையும் பலன்களுக்கு ஏதுவாகுமன்றிக் காரணங்களாகமாட்டா. அந்தக் கன்மங்களாகிய ஏதுப்பற்றி, அவ்வவற்றுக்கியைந்த பலன்களை நம்பாற்செலுத்துவார் ஓர் காரணர் உண்டென்பது இதுகொண்டு நன்ருக நிச்சயிக்கப்படும் என்க.

(ச.) கன்மங்கள் எமக்குப் பலன்களை உத்தேசித்துவருவிப்பன என்று நாம் சொல்வதில்லை; கன்மங்களைச் செய்யவே, அவ்வவற்றுக்குரிய பலன்களும் செலுத்துவார் ஒருவர் இன்றித் தாமே எம்மை வந்துசாரும் என்பீரேல்; யாதொரு பலன் யாவன் ஒருவனை அடையுமிடத்து, அஃதங்ஙனம் அடைவது தனது அறிவு சேட்டித்தல் காரணமாகவாதல் வேண்டும்: அல்லது அப்பலனைப் பிறப்பித்தற்கியைந்த தொழிலாற்றல், அது பிறத்தற்குரிய ஏதுவின்கண்ணே அமைந்து விளங்குதல் காரணமாகவாதல் வேண்டும்: அல்லது ஒரு காரணகர்த்தனது முயற்சி காரணமாகவாதல் வேண்டும்: கன்மபலன்களின் கண்ணே அறிவின்மையின், அவை அறிவு சேட்டித்து யார்யாரையும் சென்று பற்றும் என்பது அமையாது: இனி அவற்றுக்கு எல்லாம் ஏதுஎன்று உத்தேசிக்கப்படும் கன்மங்களின்கண்ணே, அப்பலன்களைத் தோற்றுவித்தற்கியைந்த தொழிலாற்றல் இன்மையின், கன்மங்களே பலன்களை விளைக்கும் என்பதும் அமையாது: பின்னைச் சித்தாந்தம் எங்ஙனமோ என்ருல், அவை எல்லாம் ஒரு காரணகர்த்தனுற்றுனே செலுத்தப்படல் வேண்டும் என்பதாம்.

(ரு.) அற்றன்று: மழைபெய்யக் குளம்நிறைந்தாலென்ன, கன்மத்தைச் செய்யவே அதனுக்குரிய பலன் நம்மை வந்தடையும் என்பீரேல்; இதுவும் மேலைக் காட்டியபடியேயாம். மழைபெய்தாற் குளம் நிறைவது, அந்தக்குள நிறைவுக்குக் காரணமாகிய நீர் மழையேயாதலின். இதுபோல எம்மைவந்தடையும் பலன்களாகிய தனுகாணுதிகளின் அமைதிக்குக்காரணமான ஆற்றலும் நமது கன்மங்களாமேயோ? இந்த ஆற்றல் நமது கன்மங்களிடத்தே சிறிதும் இன்மையின்,

கன்ம மாத்திரையாற் பலன்கள் சித்திப்பது சிறிதும் கூடா தாம். கன்மங்கள் அவற்றின் பலன்களுக்கு ஏதுவாக நிற்பனவேயன்றி அவற்றைப் பிறப்பித்தற்கியைந்த சக்தியை யுடைய காரணங்களாகாவாம். இனி மழைபெய்யக் குளம் நிறையும் என்னுமிடத்தும், குளத்தைநிறைக்கும் நோக்கமாக மழையைப் பெய்வித்தார் ஒருவர் உண்டென்பதே எமது கொள்கை. ஆகவே அவ்வுதாரணம் ஈண்டைக்கு அடுக்காதென்பதும் காண்க. 'அடுக்கும் என்றால், கன்மத்தைச் செய்வார் எல்லாம் அது அதுக்குரிய பலனைநோக்கியே அவ்வக்கன்மத்தைச்செய்வர் என்பது பெறப்பட்டு, உண்மையோடு மறுதலைப்படுமாம். மழைக்குக் காரணர் ஒருவர் உளர் என்பதை நாம் கைக்கொள்ளமாட்டேம் என்பீரேல், அங்ஙனம் ஒருவர் உண்டென்பதே எமது கொள்கை. ஆதலினே,' ஆக்ஷேபத்துக்கிடனாய்க் கிடக்கும் இதனை உதாரணமாக எடுத்துக்காட்டல் கூடாதெனக் காட்டிற்றுமென்க.

(ரு.) இங்ஙனமன்று: கன்மங்களுக்கு அவ்வவற்றுக்குரிய பலனைத் தருதற்குரிய சக்தி உண்டென்பீரேல், இஃதாயின் அவை எல்லாம் சித்துப் பொருள்களாக எண்ணப்படுதல் வேண்டும். சித்தாற்றல் இல்லையாயின் அப்பலன்களை வருவித்தற்குரிய தொழின்முயற்சிகள் இயற்கையாக அக்கன்மங்களிடத்தே அமைந்திருத்தல்வேண்டும். இவ்விரண்டும் கன்மங்களிடத்தே காணப்படுமாறில்லை என்றால், அவற்றை அப்பலன்களுக்குக் காரணம் என்றல் எங்ஙனே சித்திக்கும்?

(சா.) கன்மங்களின் கண்ணே தனுகரணமுதலிய பலன்களைத் தருதற்கியைந்த ஆற்றல் இப்போது இல்லையாயினும், அது காலாந்தரத்திலே அவற்றின்கட்டோன்றும்: ஓரிலைப் பூண்டு பெரியதோர் மராமரமானாற்போல: என்பீரேல்; சிறு பூண்டு மராமரமாக வளர்வது அஃதங்ஙனம் வளர்தற்கமைந்த இயைபு அதன்கணுண்மையானும்: அதாவது, மராமரமாதற்பொருட்டு வேண்டப்படும் சத்தினை உறிஞ்சித் தன்பாற் கவர்ந்துகொள்ளுதற்குரிய சக்தி அப்பூண்டின்கண்ணே உண்

மையானும், அந்தச் சத்துப் பதார்த்தங்கள் அப்பூண்டோடு சம்பந்தமுற்றுள்ள பூமியும் பரமாணுவும் முதலியவற்றிலே அமைந்து கிடத்தலானுமாம். கன்மங்களினும் இங்ஙனமாகிய இயைபுகள் உண்டாமோ? ஒரு கொலைக்கன்மத்தை எடுத்துப் பரீக்ஷிப்பாம். கொலைக்கன்மம் நாய்ப்பிறப்பைத் தரவல்லது என்று கொண்டுகொள்வோம். கொலைத்தொழிலுக்குரிய தொழிலாற்றல் என்னை? நாய்ப்பிறப்பை அமைத்தற்கு வேண்டற்பாலதாகிய தொழிலாற்றல் என்னை? இவ்விரண்டனுக்கும் சிறிதேனும் தம்முள்ளோர் தொடர்புண்டா? இல்லையே. இல்லாதபோது, இவற்றுள் ஒன்றன்கண் மற்றதைப் பிறப்பித்தற்கமைந்த இயைபு உண்டென்று நாம் முடிக்குமாறு எவனோ? கன்மம் ஓரிலைப் பூண்டை ஒத்து யாதோராற்றலைப் பிறிது யாதொரு பொருளின்கண்ணிருந்து தன்பாற்கவர்ந்து, அக்கவர்ச்சி காரணமாக வளர்ச்சியுற்றமையும் என்று கொள்ள யாதானுமோர் இயைபுண்டா? நமது கன்மம் கவர்ந்தெடுத்தற்பொருட்டுப் பிரபஞ்சசிருட்டிக்கிசைந்த ஆற்றல் யாண்டாயினும் காணப்படுவதுண்டா? அங்ஙனம் உண்டென்றாலும் அதனோடு நமது கன்மம் சம்பந்தமுற்றுக்கிடப்பதுண்டா? அஃதுண்டென்றாலும் அந்த ஆற்றலைத் தன்பாற் கவர்தற்கிசைந்த சக்தி நமது கன்மத்துக்குண்டா? இவற்றுள் ஒன்றாயினும் இல்லையே. இல்லாதபோது ஓரிலைப் பூண்டை ஒத்து நமது கன்மமும் விருத்தியுற்றுப் பிரபஞ்சத்தைப் பிறப்பிக்கும் என்று கொள்வதெங்ஙனம்?

(எ.) யாதொருபொருளுக்கு யாதொருகுணம் இயற்கை எனப்படுமாயின், அதன்பால் பின்னர் யாதொரு ஆக்ஷேபம் நிகழ்த்தல் கூடாதன்றே. கன்மத்துக்குப் பிரபஞ்சத்தைத் தருதல் இயற்கை இயற்கை எனப்பட்ட பின்னர், அதன் கண்ணே ஆற்றல் இல்லை, இயைபில்லை என்றற்றொடக்கத்த ஆக்ஷேபங்களைத் தொடுத்துநிற்றல் மரபாகாதாம் என்பீரேல்; இங்ஙனமாயின் எந்தெந்த ஆபாசத்தையும் எடுத்து "இது இயற்கைமரபாகும்; ஆதலால் இதன்பால் யாதொரு ஆக்ஷேபம் நிகழ்த்தல் கூடாது" என்று மிக இலகுவிலே முடித்து

விட்டிருக்கலாமே. இதுவேயோ இயற்கை விளக்கமுறை? இல்லை இல்லை. யாதொருகுணத்தை யாதொருபொருளுக்கு இயற்கை என்றமைப்பது, அந்தக்குணம் அந்தப் பொருளின்கண்ணே யுண்டென்கை ஆக்ஷேபமின்றி அமைந்தபின்பேயாம். இங்ஙனமின்றி ஒருபொருளுக்கு ஒருகுணம் உண்டென்று சாதிக்கப் புறப்பட்டுள்ளார், அந்தக்குணம் அந்தப் பொருளுக்கு இயற்கையாம் என்று கூறிவிடுவதினுல், அவர் பக்ஷம் ஒரு சற்றேனும் நிலைபெறமாட்டாதாம். ஆனுல், ஓர் ஒரு பொருளின்கண்ணே ஓர் ஒருகுணம் உண்டோ என்று விசாரம் செய்யுமிடத்து, அப்பொருளின்கண்ணே அக்குணம் இருத்தல் கூடாமைக்கமைந்த நியாயவாற்றல்கள் பற்பல வந்து வெளிப்படுமென்றுல், அந்தப் பொருளின்கண்ணே அந்தக் குணம் இல்லை என்பது நன்ருக நிறுத்தப்படுமாம். இனி ஒருபொருளுக்கு ஒருகுணம் உண்டென்று சாதிப்பது, அந்தக்குணம் காரணமாக அப்பொருளின்கட் காணப்படும் ஓர் ஓர் காரியம்பற்றியாம். நமது கன்மங்களிடத்தே, யாதொரு பலனைத் தாமாகத் தருதற்கமைந்தகுணம் உண்டென்று சாதிப்பது எந்தக்காரியங்கொண்டோ? இங்ஙனமானதோர் காரியத்தை நாம் கண்டிலேமாதலின், கன்மங்களுக்கு அங்ஙனமானதோர் குணமுண்டென்று சாதித்தல் சாலவும் தவறுடைத்தாம்.

(அ.) நாம் செய்யும் கன்மங்கள் எல்லாம் ஓர் ஓர் காலவெல்லையில் மீட்டும்வந்து அதைப்புண்டு தொழிற்படுமாம் என்பீரேல்; இஃதெங்ஙனம் பெறப்பட்டதோ? நாம் நமது விருப்புச்சென்றவாறு கற்பிக்கும் கற்பனைகள் எல்லாம் உண்மைகளேயாங்கொல்லோ? கன்மங்கள் காலாந்தரத்தில் அதைப்புண்டு நிகழ்தற்குரியன என்பதைச் சாதித்தற்குரிய நையாயிகதர்மந்தான் என்னை? இங்ஙனம் ஒன்றின்றி எமது சித்தம் சென்றமாத்திரையில் நாம் கூறும் வெற்றுரைகள் தர்க்கமுகத்து நிற்றற் பெலனுடையனவாமோ? அற்றன்று என்க.

இனிக் கன்மங்கள் காலாந்தரத்தில் மீட்டும்வந்து அதை த்தற்குரியனதாமோ என்பதைச் சிறிதுபரீக்ஷிப்பாம். யாதொரு ஆற்றல் யாதொரு காலவெல்லையில் அதைப்புண்டுமீண்டு தொழிற்படுவது யாதுபற்றி? அந்த ஆற்றல் ஓர் ஓர் பொருளிற்சென்று தாக்கி, அங்ஙனம் தாக்கியது காரணமாக, அஃதுப்பாற்செல்லுதல் கூடாமை பற்றியன்றே? இங்ஙனமே நாம் செய்துகொள்ளும் கன்மங்கள் சென்றுபட்டு மீளுதற்பொருட்டு யாதானுமோர் பொருளுண்டா? அங்ஙனம் ஒன்று உண்டென்றாலும், அதன்கண்ணே நமது ஆற்றலைக்கொண்டெய்த்தற்கு யாதானுமோர் கருவியுண்டா? ஆற்றலென்றுள்ளவெல்லாம் ஓர் ஓர் முதலின் தொழிற்குணமன்றி மற்றொன்றல்ல. ஆகவே அந்த முதலை ஒழித்து அவற்றுக்குப் பிரத்தியேகமானதோர் அமைதியில்லை. இங்ஙனமில்லாதன தாமாக யாதொருபொருளிற் சென்றுபடுதல் எங்ஙனம்? இது கூடாதபோது இவை ஓர் ஓர் காலத்தில் மீட்டும்வந்து எம்மைத் தாக்கும் என்பது எங்ஙனம்? அற்றன்று: அவை யாதொருபொருளிற் சென்று தாக்கி மீளுவனவல்ல. அவை ஓர் ஓர் காலவெல்லையில் மீட்டும்வந்து தொழிற்படுவனவாம் என்பிரேல்; கன்மங்களோ சடப்பொருள்களாதலின் அவை தாமாக உணர்ச்சிகொண்டியங்கி யாதொரு காலவெல்லையில் மீட்டும்வந்து தொழிற்படுவனவாகா. ஆகவே அவை இங்ஙனம் மீட்டும்வந்து தொழிற்படுதற்கு யாதொரு காரணம் வேண்டப்படும். இங்ஙனமோர் காரணமின்றி அவை மீட்டுத் தொழிற்படுதல் அமையாது. இந்தக் காரணந்தான் யாதோ? இஃதவற்றுக்கு இயற்கையாம் என்பீரேல், யாதொருகுணம் யாதொருபொருளுக்கு இயற்கை எனப்படுமிடத்து, அந்தப் பொருளின்கண்ணே அந்தக் குணநிலைக்கிையைந்த அமைதிகள் காணப்படுதல்வேண்டும். அங்ஙனம் காணப்படாக்கால் எந்தக்குணத்தையும் எந்தப்பொருட்காயினும் இயல்பென்று சாதித்தல் சால்புடைத்தாகாது. கன்மங்கள் தாமாக மீட்டும் தொழிற்படுவதுண்டெனின், அவை அறிவுடைப்பொருள்களாயிருத்தல் வேண்டும். அற்றேல் அவற்றை மீட்டும் நம

பாற் கூட்டுதற்கமைந்த காரணம் ஒன்று இருத்தல்வேண்டும். இந்த இருபடியுள் ஒன்றேனுமின்றுயின், கன்மங்கட்கு அங்ஙனமானதோர் இயற்கைக்குணம் உண்டெனல் அமையாது. எனவே கன்மங்கள் மீட்டும் தொழிற்படும் என்றல் ஒருசற்றும் அமைவுடைத்தாகாதென்க.

இனி, நாம் செய்யும் யாதொருகன்மம் மீட்டும் நம்பாற் தொழிற்படுமென்னுமிடத்து, அந்தக் கன்மந்தானே தனதாற்றலிற் கூடியும் குறைந்தும் தொழிற்படும் என்பதன்றி, அதனின் வேறுகிய பிறிது யாதொருகன்மம் தொழிற்படும் என்றல் அமையாது. இங்ஙனமாயின் ஒரு கன்மத்தைச் செய்ய, அதனேடு முற்றும் வேற்றுமை கொண்டுள்ள பிறிதொரு செயல் அதனுக்குப்பலனுகத் தொழிற்படுமாறெங்ஙனம்? இந்தத் தொழிற்பாட்டை முந்திய கன்மத்தின் அதிர்ச்சி என்று முடிக்குமாறெங்ஙனம்? நாம் ஒருகன்மத்தைச் செய்துவிட்டு வாளாவிருப்ப, நமது கன்மம் சென்று நமக்கு ஒரு நாய்ப்பிறப்பைத் தருதற்கமைந்த தொழின்முயற்சியைச் செய்யும் என்றுல், இது சாத்திரத்துக்கா, சம்பிரதாயத்துக்கா, யாதுக்கு இயைபுடைத்தாகும்? ஆகவே இக்கூற்று எவ்வாற்றுனும் அமைவுடைத்தாகாதென்பது காண்க.

(கூ.) இனிக் கன்மங்களாவன நாம் செய்துகொள்ளும் புண்ணியபாவங்களாகிய தொழிலாற்றல்களாம். இந்தத் தொழில்களுக்குரிய ஆற்றல்கள் அவ்வத்தொழில்கள் ஒழியவே தாமும் ஒழிந்துவிடும். பின்னை இவைகள் காலாந்தரத்திலே பலித்துப் பயன்தருமாறெங்ஙனம்? நாம் செய்துகொள்ளும் கன்மங்கள் எம்மோடுதானே பந்தமுற்றிருந்து பின்னைப் பலித்துப் பயன்தரும் என்பீரேல்; எந்தெந்தச்செயலும் முற்றுப்பெற்றபின் யாண்டாயினும் காணப்படாது. என்னை? காணப்படுமென்றுல் அச்செயல் முற்றிற்றென்பது கூடாது. ஆகவே செயல்முற்றியபின், அது செய்வானிடத்துண்டென்பது அமையுமாறெங்ஙனம்? அந்தச்செயல் எம்மிடத்திருப்பதல்ல; அந்தச் செயலாற் பெறப்படும் வாசனை எம்மைப் பந்தித்து

நிற்கும் எனின்; இந்தவாசனை பின்னும் அந்தச் செயலைச் செய்யுமாறு எம்மை ஏவுமாற்றலுடையதன்றி, அந்தச் செயலோடு சிறிதும் தொடர்பில்லாத சுவர்க்க நரகங்களையும் தனு கரணாதிகளையும் தருமாறு எவ்வாறோ? இனி இந்த வாசனையும் பிறவாசனை காரணமாக எம்மை அகலுந்தகையினதாதலின், முந்தியகன்மபலம் எம்மைச் சாரமாட்டாதென்றபடியாகும். இஃதாயின் கன்மபலங்கள் தந்தம்பலனைத் தப்பாது தந்துநிற்கும் என்னும் மதம் யாதாய் முடியுமோ?

இங்ஙனமன்று: நாம் எந்தெந்தக்கன்மத்தையும் செய்யுமிடத்து, அந்தச்செய்கை எம்மளவில் ஒழிந்துவிடுமாயினும், அதனுக்குரிய ஆற்றல், தன்னை ஏற்ற அணுக்களின்கண் அமைந்து நித்தியமும் நிலையுதலுடைத்தாம் என்பீரேல்; இங்ஙனம் கன்மங்கள் நித்தியமும் நிலையுதலுடையனவாம் எனின், அவற்றின் பலன்களும் நித்திய நிலையுடையனவாதல் வேண்டும். எனவே நாம் ஒருகன்மப்பொருட்டு அனுபவிக்கும் அனுபவம் எம்மை ஒருபோதும் விட்டகலாதென்றபடியாகும். இது உண்மைக் கூற்றுத்தானேயோ?

இனி ஒருவனது கன்மம், அதனாற்றுக்கப்படும் அணுக்களில்வியாபித்து நித்தியமும் நிலைபெறுமென்பதெங்ஙனம்? ஒருவன் பின்னொருவனுக்கு அடித்தான் என்றுகொள்க. அடித்தானது தொழிலாற்றல் அடிப்பட்டானது அணுக்களில் நித்தியமும் விளங்குவதாயின், அவனுக்கு அவ்வடியால் எய்தற்பாலதாகிய நோ எப்போதும் உளதாதல்வேண்டும். இங்ஙனமின்றி அந்நோ சில கணத்துள்ளே நீங்கிவிடுதலின், கன்மத்துக்கு நித்தியவியாபகம் சாதிப்பது சித்திக்குமாறெங்ஙனம்? கன்மம் அமைந்து விளங்குவதலல. அக்கன்மத்துக்குரிய ஆற்றல் அமைந்துவிளங்குமாம் என்பீராயின், இந்த ஆற்றல் கன்மத்தைச் செய்வானிடத்தும், அதனைச் செய்யுமுன்றொட்டே அமைந்து விளங்குவதொன்றாம். ஆகவே கன்மங்களைச் செய்யாதவிடத்தும், அவ்வாற்றல்பற்றி, அதனையுடையார்

பலனை ஏற்றற்குரியார் என்றபடியாகி, கன்மங்கள் பலனைத் தரும் என்னுங் கூற்றுப் பிறழ்வுற்றழியுமா மென்க.

(க0) இனிக் கன்மங்கள் அமூர்த்தங்களாகும். இவைகள் மூர்த்தங்களாகிய தனுபுவனங்களைத் தொழிற்படுத்துத் தருமாறெங்ஙனம்? இவற்றை மாயைகாரணமாகத் தொழிற்படுத்தும் எனின், மாயையைத் தொழிற்படுத்துவது சித்துப்பொருள்களும் அக்கன்மங்களின் கர்த்தாக்களுமாகிய எமக்கே கூடாதொன்றாக, அசித்துப்பொருள்களும் எமது புல்லிய தொழிலாற்றல் மாத்திரையாயும் அமைந்துள்ள கன்மங்களுக்கு அது கூடுவது எங்ஙனமோ? மூர்த்தங்கள் கிடக்க, அமூர்த்தங்களாகிய கரணபோகங்களைத் தான்தர வல்ல சக்தி நமது கன்மங்களுக்கு உண்டாமோ? யாதொரு கரணத்தையாவது, யாதொரு போகத்தையாவது எமது இச்சைப்படி ஈட்டிக்கொள்வது எமக்கே கூடாதுகிடக்கும்போது, எமது கன்மங்களுக்கு அந்தச் சக்தி உண்டென்று சாதிப்பது யுக்தமாகுமா?

(கக) தனுகரணபோகங்கள்கிடப்ப, புவனங்களை எடுத்து ஒரு சற்றுப் பரீக்ஷிப்பாம். புவனங்கள் பல்லாயிர சிவர்களது கன்மங்கள்பற்றி, அவர்க்கெல்லாம் பொதுவாகிய நிலைக்களங்களாக அமைக்கப்படுவனவாகும். இந்தப் பல்லாயிர சீவர்களது கன்மங்கள் எல்லாம் ஒருங்குகூடி, ஒன்றோடொன்று கலந்து பேசி உத்தேசித்துத்தான் இப்புவனங்களை உண்டாக்குவனவாமோ? கன்மங்கள் எல்லாம் இங்ஙனம் கலந்து பொதுமையில் யாதொன்றை அமைத்தற்கியைந்த சக்தி யுடையன என்று யாரேனும் சொல்வரா? அன்றியும், யாதொருபுவனம் யாதொருகாலத்து உண்டாகியதாயின், அந்தப் புவனம் அந்தக்காலத்துக்குப் பின்னே செய்யப்பட்ட கன்மங்களை யுடையார் தமக்கும் நிலைக்களமாகக் கிடக்குமாம். ஆகவே, அந்தப் புவனோற்பத்திக்கு, அந்தக்காலத்துக்குப் பிந்திய கன்மங்களும் காரணங்களாம் என்றபடியாகும். இது தந்தைமன்றலிற் றனயன் தேங்காயுடைத்த கதையை நிகர்க்குமன்றே!

எனவே, கன்மங்களாற் பிரபஞ்சம் காரியப்படும் என்பது ஒருவாற்றானும் அமைவுடைத்தாகா தென்க.

(கஉ.) இனி எம்மை வந்தடையும் கன்மபலங்களாகிய தனுகரண புவனபோகங்களை நாம் எடுத்துச் சீர்தூக்குவம் என்றால், அவற்றின்கண்ணே, யுத்திசாதனைகொண்டு, அதுவும் அதிவிவேக அதுல்லிய யுத்திசாதனைகொண்டு, அமைந்துள்ள பலப்பல கணிதசாதனைகளும் விநோதவியுற்பத்திகளும் காணப்படும். இவைகள் எல்லாம் ஓர் சித்துப்பொருளின் வரம்பிலாற்றல் கொண்டன்றி, யாதொரு அசித்துப்பொருளின் சேட்டை காரணமாக அமைதல் சிறிதும் கூடாதென்பது நன்றாக நிச்சயிக்கப்படும் என்க. (உ-ம் சூத்திரம் காண்க.)

# நான்காஞ் சூத்திரம்.

படைத்தளித்தழிக்கும் பரம்பொருளுண்மை
திடப்படநிறுத்தித் தெருட்டிநாட்டியது.

நாம் இதுகாறும், முதற்சூத்திரத்தால் கடவுள் உண்டெனும் உலகவகழக்கை ஏலாதொழிதல் கூடாதென்றும்; இரண்டாஞ் சூத்திரத்தால் கடவுள் உண்டெனத்துணிதல் யுத்திக்கியைந்ததென்றும்; மூன்றாஞ் சூத்திரத்தால் நையாயிகதர்ம வழிக் கடவுளுண்மை இனிது சாதிக்கப்படும் என்றும் காட்டினோம். இப்பால், கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பது இன்றியமையாச் சிறப்பிற்றாக நாட்டப்படும் என்பதைக் காட்டுவாம்.

## க-ம் அதிகரணம்.

(க.) கடவுள் ஒருவர் இல்லாக்கால் இப்பிரபஞ்சம் எல்லாம் தோன்றியவாறு எங்ஙன் என்றோர் பிரபலவினா நிகழு

மன்றே. அவ்வினுவுக்கு உத்தரங்கூறுமாறு எங்ஙன்? "அஃ தறிதேயோ! பிரபஞ்சம் அநாதிதொட்டு நிலையுதலுடைத்து" என்பீரேல்; நன்றுகூறினீர். இப்பிரபஞ்சத்திலே எத்தனை எத்தனை பாகங்கள் இடையிற்தோற்றி நிற்கின்றன! இதன் கண் எத்தனை எத்தனை பேதத்தின்வாய்ப் தோற்றங்கள் காலந்தோறும் தோன்றி நின்று அழிகின்றன! இதன்கணுள்ள எந்தப்பொருள்தான் காலவரையறை சாதிக்கப்படாதொழிகின்றது! ஆகவே, பிரபஞ்சத்தை அநாதி என்று சாதிப்பது அமையாதபடி காண்க.

(உ.) அங்ஙனமன்று: இங்ஙனம் தோன்றி நின்றழிதல் இயல்பெனின்; இவ்வியல்பு எப்பொருட்குரியதோ? பூதங்கட்கெனின், பூதங்கள்தாமும் தோன்றி நின்றழியுமாதலின் அவற்றைத் தோற்றுவித்தார் யாரேயோ? அப்பூதங்கள் தாமே தம்மைத் தோற்றுவிக்குமெனின், தோற்றுமுன் இல்பொருளாயுள்ளன தம்மைத்தாம் தோற்றுவிக்குமாறெங்ஙனே?

(ங.) இங்ஙனமன்று: பூமியின்கட் தோன்றி நின்றழியும் சிருட்டிபேதங்கள் எல்லாம் உற்பத்திநாசமுடையனவேனும், இப்பூமியும் இதனை ஒத்த பிற கிரக நக்ஷத்திரங்களும் அநாதிதொட்டுள்ளனவாம் என்பீரேல்; எமது பூமியைமாத்திரம் எடுத்து ஒருசிறிது ஆராய்வம். இப்பூமிக்கு வயதின்னதென்பது தத்துவசாத்திர வியுற்பன்னர்களால் நிச்சயிக்கப்பட்டதொன்று. இதன் மேற்பாகத்தை மூடியுள்ள கற்படை, பட்படைமுதலிய படைத்திரங்களின் கனம் குணம்முதலிய இலக்கணங்களால், அப்படைகள் அமையத்தொடங்கி இத்துணைக்காலமாயிற்றென்பது செவ்விதிற்றுணியப்படும். இனி அப்படைகளின் உள்ளீடாக அமைந்துள்ள கந்தகநீர் இப்படைகளைப் பிறப்பித்தற்கமைந்த பக்குவத்தை எய்திய பின்னே அப்படைகளைத் தோற்றுவித்தமையானும், அவை அங்ஙனம் தோன்றுமுன் அக்கந்தகநீர் அப்பக்குவத்தை அடைந்திலாமையானும், அதனுக்குமோர் வயதும், ஆகவே ஓர் உற்பத்திக்காலமும் உண்டென்பது தெற்றெனத்துணியப்படும். இங்

வனமே மற்றைக் கிரகாதிகட்கும் துணியலாமாதலின், பிரபஞ்சத்துள்ள எவ்வெப்பொருளும் ஓர் தோற்றத்தையுடைத்தாமென்பதும், எனவே அவ்வவற்றைத் தோற்றுவித்தார் ஒருவர் உண்டென்பதும் பெறப்படுமாமென்க.

(௪.) இனி இப்பூமியின்கணுள்ள எவ்வெப்பாகமும் காலம் கழியக்கழியப் பேதப்படுதல் காண்டலானும், சிற்சில பாகங்கள் தத்தமதுருமாறித் தமக்கு முதற்காரணங்களாயுள்ள பூதங்களாகக் குலைந்துவிடுதலானும், இவற்றுக்கெல்லாம் ஓர் ஓர் உற்பத்திக்காலம் உண்டென்பது துணியப்படுமாம். சிற்சிலபாகங்கள் அங்ஙனமாகக் காண்டலின் மற்றைப்பாகங்களும் அவ்வாறேயாம் என்பது எங்ஙனம்பெறப்படும் என்றோர் ஆக்ஷேபம் நிகழுமாயின், ஒரே இயல்புடைய பொருள்களுட் சில அடையும் முடிபே மற்றவைகட்குமாம் என்பது நாம் சொல்லிக்காட்டவேண்டா. சிலமனிதர் இறக்கக்கண்ட நாம், மனிதர் எல்லாரும் இறத்தற்குரியர் என்று துணிகின்றாம். இங்ஙனம் துணிதல் கூடாதாயினன்றோ, பூமியின் சிலபாகங்களிற் காணப்பெறும் முடிபை, மற்றைப்பாகங்கட்கும் அமைத்தல் கூடாதாகும்? இதுகாறும் மனிதர் எல்லாம் இறந்தது மெய்; அதுகொண்டு இப்போதுள்ள மனிதரும் இறப்பார்கள் என்று துணிதல் எவ்வாறோ என வினவுவாரும் உளரோ? இல்லை. இல்லை. இதுபோலவே பூமியில் இதுகாறும் சிலபாகங்களிற் கண்டமுடிபே மற்றைப் பாகங்கட்கும் உண்டாம் என்பதும், எனவே அதுவெல்லாம் ஓர் தொடக்கத்தையுடையனவாம் என்பதும் ஆக்ஷேபமின்றித் துணியப்படுமாம். அற்றன்று பூமிதான், அதன் பாகங்கள்தான், பேதுற்றழிதல் காரணமாக அவற்றுக்கோர் தொடக்கமுண்டென்று சாதித்தல் எவ்வாறோ? அவை எல்லாம் அநாதிதொட்டே உள்ளன. அங்ஙனம் அநாதிதொட்டிருந்து இப்போது பேதுற்றழிகின்றன எனக்கொண்டால் என்னென்பிரேல்; அவை இதுகாறும் பேதுற்றழியாது இருந்து இப்போது அங்ஙனம் அழிதல், துகாறும் அம்முடிபை எய்தற்கமைந்த பக்குவம் அவற்றின்

கட்டோன்றாமைபற்றியன்றே. ஆகவே அவை அநாதியே யுள்ளனவாயின், அப்பக்குவத்தை அடைதற்கு அவை இது காறும் தாழ்க்கவேண்டா என்பதும், எனவே அவை அநாதியாயுள்ளன அல்ல, ஓர் தொடக்கத்தை உடையன என்பதும் செவ்விதிற் போதருமாம்.

(ரு.) இன்னமும் பூமியின் எம்தெந்தப்பாகமும் அதன் முதற் காரணங்களாக உருக்குலைதற்றகையதாதலின், அப்பூமியை அநாதிக்கண்ணதெனச்சாதித்தல் சாலாது. உருக்குலைதற்றகையன எல்லாம் ஆதிக்கண்ண என்பதெங்ஙன் போதரும் என்பிரேல்; உருக்குலைதற்றகையன வெல்லாம் அங்ஙனம் குலையாதமைந்திருப்பது, அவ்வாறு குலைதற்கிசைந்த பக்குவத்தை அடையாமையினன்றே. இப்பக்குவம் காலத்தாற் பெறப்படுவதொன்றாதலின், அவ்வெல்லாம் காலத்தாற் தாக்குண்பன என்பதூஉம், எனவே அவற்றுக்குத் தோற்றநாசங்கள் உண்டென்பதூஉம் பெறப்படுமாம். அற்றன்று, அவை அப்பருவத்தை அடையாதொழிவது அதனைப் பிறப்பித்தற்கமைந்த காரணங்கள் எதிர்ப்படாமையினன்றிக் காலம் வாயாமைபற்றியன்றென்பிரேல்; ஒரு காரணம் தானே நிகழ்ச்சிபெற்றுவரும் பல காலங்களிற் காரணத்திற்றிரிபின்றாகவும் காலத்திரிபுமாத்திரையால் பதார்த்தங்கள் எல்லாம் உருக்குலைதலும் பிறபேதமுறுதலும் காணப்படுதலால், அவை காலத்தாற்றாக்குண்டல் இல்லை என்பது அமையாது. எனவே, காலங்களாற்றானே அவை பேதுற்றழிவன என்பதும், ஆகவே அவற்றுக்கெல்லாம் ஓர் உற்பத்தியுண்டாம் என்பதும், எனவே அவற்றை உற்பவிக்கச்செய்தார் ஒருவர் உண்டென்பதும் போந்தவாறு காண்க.

(சு.) இங்ஙனமன்று நாம் நம்முன்னோரை ஒத்துப் பஞ்சபூதங்களே பிரபஞ்சோற்பத்திக்குக் காரணம் என்று கூறேம். இப்பஞ்சபூதங்கள் தாமும் தோற்றுதற்கேதுவாய் அறுபதுக்கு மேற்பட்ட தாத்துவிகபதார்த்தங்கள் உள்ளன. இவை எல்லாம் அநாதிநித்தியமாகும். இவற்றினிருந்தே பூத

பேதங்களும் பிரபஞ்சமும் தோன்றும் என்பிரேல்; இக்கூற்றைச் சிறிதும் அங்கீகரித்தல் கூடாதென்பதைப் பிரபலநியாயவாயிலாகக் காட்டுவாம்.

க-வது. இங்ஙனம் இப்பூதங்கட்குக் காரணமாய் அறுபதின்மேலவாய பதார்த்தங்கள் உண்டென்று நாம் நிச்சயிக்குமாறெங்ஙன்? அந்வயபரீக்ஷையால் எனின், ஒருபொருளை அந்வயஞ்செய்யுமிடத்து அதனைப் பலவாறு பகுத்தல் கூடும். இது பகுப்பானுடைய திறமையினும் பகுக்குங்காற் பிரயோகிக்கப்படும் ஆயுதாதி கருவிகளின் நுண்மையினுமே பெரிது தொங்கிக்கிடக்கும். இங்ஙனமாயதோர் பகுப்பாற்கண்ட பதார்த்தங்களே ஒருபொருளமைதற் கமைந்த முதற்காரணங்கள் என்று நிறுத்துதல் சாலாது. எமதுடம்பை அந்வயஞ்செய்யுமிடத்து இரத்தாதிசத்ததாதுக்களுமே அதன் உட்கூறுகளாகக் காணப்படுமாயினும், உடம்பமைதற்கியைந்த முதற்காரணங்கள் இத்தாதுக்களன்றாம். சுக்கில சோணிதங்களே அக்காரணங்களாமென்பது வெளிப்படை. இங்ஙனமே பூதபௌதிக தோற்றங்கட்கும் அந்வயத்தாற்கண்ட பதார்த்தங்களே காரணங்களாமென நிறுத்திச் சாதித்தல் சாலாதபடி காண்க. (இதுபற்றியன்றே, சுரு, ஆகக் காணப்பட்ட பதார்த்தங்கள் இப்போது பின்னும் அதிகமாகக் காணப்படுவது?)

உ-வது. தனிப்பதார்த்தங்கள் என்று தத்துவசாத்திரிகளாற் கொள்ளப்படும் இவ்வறுபதின் மேலவாகிய பௌதிகங்கள் எல்லாம் எங்கெங்கிருப்பினும் அங்கங்கெலாம் பஞ்சபூதங்களுட்செறிந்து, அப்பஞ்சபூதங்களுள் ஒன்றாய், அல்லது அவற்றுள் யாதொன்றன் உட்கூறுகளாய் கவனிக்கத்தக்கவாறு கிடக்குமன்றி, தாம் அப்பூதங்களை ஒத்து ஓர் தனிமுதல் எனத்தக்கவாறு தமக்கெனவோர் வேற்றுண்மைகாட்டிக் கிடப்பனவல்ல. இதுபற்றியே நம்முன்னோர் ஆதாரபூதங்களை ஐந்தாகப் பகுத்துவைத்தனர். ஆனால் இப்பூதங்கள் எல்லாம் கலவைப் பதார்த்தங்கள் (Compound matter) என்பது அவ

ர்க்கெல்லாம் பெரிதும் உடன்பாடாம். என்னை? ஆதலி னன்றே அவர் பிரிதிவியிற் பிரிதிவியாதி ஐம்பூதமும், அப்பு வில் அப்புவாதி சதுர்ப்பூதமும், தேயுவில் தேயுவாதி முப்பூ தமும், வாயுவில் வாயுவும் ஆகாயமும், கலப்புற்றுக்கிடக்கும் என விளக்கியுள்ளார் என்க. இவற்றின் சங்கம ஆற்றல் எங் ஙனம் கிடப்பினும், இவை ஓர் ஓர் தனிமுதலாக எடுத்தாளத் தக்க இயற்கைமுறையை நோக்கியே அவற்றை வேறுபடுத்து ஓதத்தக்கது. இந்த முறையை நோக்குங்கால் பிரிதிவியாதி ஐம்பூதங்களுமே ஆதாரபூதங்களாகக் கொள்ளத்தக்கனவாம். (இங்ஙனமன்றிப் பிரபஞ்சத்துள்ள மூர்த்த அமூர்த்தங்களா கிய இருவகைத்தத்துவங்களையும் நுண்ணிதாக விளக்குமிட த்து அவற்றை கூ௬, பகுப்புகளாக நம்முன்னோர் கூறிட்டு வைத்தார் என்பதறிக).

ங-வது. இன்னமும் பூதங்களைப் பரீக்ஷை செய்யு மிடத்து, அவற்றின்கண் உட்பகுப்புகள் சில காணப் படுதல் காரணமாக, அவ்வுட்பகுப்புகள் சேர்ந்தே இப்பூதங் கள் அமைந்தன எனக்கோடல் கூடுமாயின், அவ்வுட்பகுப்பு களைப் பரீக்ஷைசெய்யுமிடத்து, அவற்றின் முட்கூறுகளாக வரையறுத்தற்கரிய அணுக்கள் காணப்படுமாதலின், அவ்வ ணுக்கள் சேர்ந்தே இவ்வுட்பகுப்புகளும் அமைந்திருத்தல்வே ண்டும் என்னும் நியாயமும் சித்திக்குமாம். இவ்வணுக்களை எங்ஙனம் பகுத்துச் சென்றாலும், செல்லச்செல்ல அவை பின்னும்பின்னும் பகுக்கப்படும் மரபினவாய், அம்மரபு வரம் பின்றிச் செல்லுமாதலின், பதார்த்தங்கள் எல்லாம், அவ்வவ ற்றுக்குரிய அணுக்கள் சேர்ந்தமையுமுறைக்கோர் தொடக்க முண்டாம் என்பதும், அந்த அந்த அணுக்கள்தாமும் தத்தம க்குரிய அணுக்கள்சேர்ந்தே அமையவேண்டுதலின், அவை அங்ஙனஞ் சேர்ந்தமையுமுறைக்கும் ஓர் தொடக்கம் உண் டாம் என்பதும், என்வே, எவ்வகைப்பட்ட பதார்த்தமும் எந்த எந்த ஸ்திதியினும் அமைந்து ஓர் வடிவுகொண்டு விள ங்குகைக்கோர் தொடக்கமுண்டாம் என்பதும் சித்தாந்தமாம்.

ஆகவே, தனிப்பதார்த்தங்கள் எல்லாம் (Simple matter) அநாதிக்கண்ணவாம் என்னும் மதம் நிராகரிக்கப்பட்டவாறுகும்.

௪-வது. இனி, இத்தனிப்பதார்த்தங்கள் அநாதியாயுள்ளன என்றே கொள்வம். இவைகள் சடப்பொருள்களாதலின், இவற்றின்கண் இயற்கையன்றிச் செயற்கைவந்தமையாது. இயற்கையாவது திரிபின்றி எக்காலத்தும் ஒரேபடித்தாயுள்ளதோர் நியதியாம். இந்நியதியையுடையதோர்பொருள், எக்காலத்தும் ஒரேபடித்தா யிருப்பதன்றிக் காலந்தோறும் பேதப்படுதல் கூடாது. பதார்த்தங்களின்கண்ணே அளவிகந்த பேதங்கள் காணப்படுதலின், இப்பேதங்கட்கெல்லாம் காரணனுவான் ஒருவன் வேண்டப்படுமென்பது.

௫-வது. அற்றன்று; பதார்த்தங்கள் எல்லாம் அநாதிக்கண்ணவே. அவற்றின்கண் ஆற்றல் (Force) சகசமாயுண்மையின், அவ்வாற்றல்காரணமாகப் பதார்த்தங்கள் எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்தும் பிரிந்தும் நிகழ்ச்சிபெற்று இப்பேதங்களைத் தோற்றுவிக்கும் எனின், இதுவும் கூடாது. என்னை? ஆற்றல்கொண்டு யாதொருபொருள் இயங்குமாயின், அவ்வியக்கம் செயற்கையன்றி இயற்கையாகாது. ஒருபொருள் செயற்பட்டு இயங்குவது தனது பிரஞ்ஞையாலாகல்வேண்டும்; அற்றேல் பின்னோர் பொருளின்வலியாலாகல்வேண்டும். இவ்விருபடியுமின்றி எப்பொருளும் எக்காலத்தும் இயங்குதல் கூடாது. அன்றியும், பதார்த்தங்கட்கெல்லாம் முயற்சியின்மை (Inertia) யாகியதோர் குணம் உண்டென்பது தத்துவசாத்திரசம்மதமாதலின், எப்பொருளும் பின்னொன்றன்வலியானன்றி இயங்குதல் ஒருங்கே கூடாது. ஆகவே பதார்த்தங்கள் தமது ஆற்றல்காரணமாக ஒன்றொடொன்று கூடியும் பிரிந்தும் நிகழ்ச்சிபெறும் என்கை அமையாதபடி காண்க.

௬-வது. அங்ஙனமுமன்று: பதார்த்தங்களிடத்தே ஆகருஷண கிராசியாதி (Attraction, Cohesion) குணங்களுண்மையின், இக்குணங்களைக்கொண்ட குணிகள் சூரியசந்நிதியிற்

தாமரை அலர்ந்தாலென்ன ஒன்றை ஒன்று கவர்ந்தும் சேர்ந்தும் பிரிந்தும் இயங்கும்; இயங்கவே பிரபஞ்சநிகழ்ச்சியும் நடைபெறும் என்பிரேல்; இதுவும் கூடாது. எங்ஙனம்? ஒரு பொருளின்கணுள்ள ஆகருஷண கிராசியாதி வன்மைகள் மற்றொருபொருளின்கட் தீண்டுவதுண்டாயினே, அப்பொருள் அக்குணங்களாற் தாக்குண்டியங்குவ துண்டாம். அவ்வன்மை அங்ஙனம் தீண்டுமாறு அதனைப் பதார்த்தங்கடோறும் கொண்டு செலுத்தவல்லதோர் கருவி வேண்டப்படும். அக்கருவிதான் யாதோ? வாயுப்பூதமெனின், இவ்வாயுப்பூதமும் பற்பல தனிப்பதார்த்தங்கள் இயைந்தே அமைந்துளதாதலின், அத்தனிப்பதார்த்தங்களைச் சேர்த்து வாயுப்பூதத்தை அமைத்தற்கோர் கருவி வேண்டப்படுமன்றே. அதுதான் யாதோ? அக்கருவி ஆகாயபூதம் என்பது (Ether) தத்காலத்துள்ள தத்துவசாத்திரிகள் துணிபு. இப்பூதம் இவ்வியல்பினதென்னும் வரையறை இதுகாறும் சித்தித்திலதாயினும், இஃதோர் பதார்த்தம் என்றதுணையானே, இதுவும் அணுக்கள் சேர்ந்தே அமைந்திருத்தல் வேண்டும் என்பது எவரும் பரிஷ்காரமாக ஒத்துக்கொள்ளத்தக்கது. இங்ஙனமாகலின், இவ்வாகாயபூதத்தின் அணுக்களை ஒருங்குசேர்த்தற்கு—அதாவது அவ்வணுக்களின்கணுள்ள ஆகருஷண கிராசியாதி வன்மைகளை ஒன்றிலிருந்து ஒன்றுக்குக் கொண்டு செலுத்துதற்கு—பிறிதோர்கருவி வேண்டப்படுமன்றே. அக்கருவிதான் யாதோ? ஒன்றுமில்லையே. ஆகவே அவ்வணுக்களைச் சேர்த்தித்திரட்டி ஆகாயபூதத்தை அமைத்து, அதுகாரணமாகப் பிரபஞ்சத்தை நிகழச்செய்தற்கோர் கருத்தன் வேண்டப்படுவன் என்பது தெளிந்த சித்தாந்தமாம்.

எ-வது. அற்றன்று: தனித்தனித் தாம் நிலையுதலாற்றாத இரு தம்பங்கள், ஒன்றோடொன்று சார்த்தப்பெறின், அவை ஒன்றுக்கொன்று தாரகமாக நிலையுமாறுப்ப, வாயுப்பூதமும் ஆகாயபூதமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக நிலையுதலுற்று நிலவிடும் என்பிரேல்; இரண்டுதம்பங்கள் ஒன்றையொன்று தார

கமாக்கொண்டு நிலையுமென்னுமிடத்து, அவைதாம் நிலையுமா ற்றுக்கு ஒன்றை ஒன்று வேண்டிநிற்கும் என்பதன்றி, தமது அமைதிக்கு (அதாவது உண்மைக்கு) ஒன்றை ஒன்று வேண்டிநிற்கு மென்பதமையாது. அவை நிலையுதலுறுதல், அங்ஙனம் நிலைபெறுமுன்னும் உண்மைபற்றியன்றே. ஆகவே அவற்றின் உண்மைக்கு ஒன்றை ஒன்று வேண்டிநிற்கும் என்பது சிறிதும் பெறப்படாது. இங்ஙனமே வாயுவும் ஆகாயபூதமும் அமைந்துளபின்னர், ஒன்றை ஒன்று பற்றுக்கோடாகக் கொண்டு யாதொருநிலையைக் கொள்ளத்தக்கன என்று வாதிக்கத் தக்கதன்றி, அந்நிலைக்கு முதற்கட் பெறப்படும் அவற்றின் அமைதிக்கும் அவை அங்ஙனம் ஒன்றுக்கொன்று ஆதரமாமென்று கோடல் கூடாதென்க.

அ-வது. நன்றுகூறினீர், பதார்த்தமும் (Matter) ஆற்றலும் (Force)ஒன்றுக்கொன்று ஆதரமாக அமைந்துள்ளனவன்றோ என்று வினவுவீரேல்; பதார்த்தமும் ஆற்றலும் ஒருபொருளின்கட்டானே பெறப்படும் குணமும் குணியுமாம். குணமின்றிக் குணியில்லை: குணியின்றிக் குணமில்லை. ஆகவே அவை ஒன்றை ஒன்று அவாவிநிற்குமாம். வாயுவும் ஆகாயமும் இரண்டுவேற்றுப் பொருள்களாகலின், அவற்றின்கண் அம்முடிபு சார்த்தப்படுதல் கூடாதென்க. வாயுவும் ஆகாயமும் ஒருபொருளின்கட் காணப்படும் குணகுணிகளாகுமேல் அவற்றுள் ஒன்றன் அணுத்திரட்சிக்கு மற்றையது கருவியாதல் கூடாதென்க. ஆகவே பதார்த்த ஆற்றல்களின் முடிபை வாயு ஆகாயங்கட்கு அமைத்தல் கூடாதெனமுடிக்க. ஓர் அணுப் பின்னோர் அணுவோடு சேர்தற்கு அவ்விரண்டனிலும் வேறாய கருவியொன்று வேண்டப்படுமென்பதை யோசித்துணர்க.

கூ-வது. அற்றன்று; ஆகாயபூதம் அநாதிக்கண்ணதாம். இதுகாரணமாக மற்றைப் பௌதிகபதார்த்தங்கள் எல்லாம் இயங்கிநிலவும் எனின்; ஆகாயபூதம் அநாதிக்கண்ணதாயினுமாக, அற்றேல் ஆதிக்கண்ணதாயினும் ஆக. இஃதோர் பதா

ர்த்தம் என்றதுணையானே, இதனகத்து அணுக்கள் உண்டெ ன்பதும், இவ்வணுக்களை ஒன்ரோடு சேர்த்துவைத்துக்கொ ண்டிருத்தற்கு ஓராற்றல் வேண்டப்படும் என்பதும், அவ்வா ற்றலை ஆகாய அணுக்கடோறும் கொடுசென்றுய்த்தற்கு ஓர் கருவி வேண்டப்படும் என்பதும் தெளிந்த சித்தாந்தங்க ளாம். அன்றியும் ஆகாயபூதம் எமது புலனுக்கு விடயமாதல் கூடாத அத்துணை நுண்ணியல்புகொண்டுகிடத்தல் காரண மாக, அதன் அணுக்கள் எல்லாம் ஒன்றிலிருந்தொன்று வெகு தூரத்தே கிடக்குமென்பது தத்துவசாத்திரிகள் சம்மதம். இங்ஙனந் தூரத்துள்ளனவாய அணுக்களை ஒன்ரோடொன் றியைத்து ஆகாயபூதத்தை அமைத்தற்கு ஓர் கருவி வேண்ட ப்படுமென்பது தெற்றெனத் துணியப்படுமாம். இனி இவ் வணுக்கள்தான் ஒன்ரோடொன்று தீண்டுற்றே அமைந்துள் ளன எனக்கொண்டாலும், ஓர் அணுவின்கணுள்ள ஆற்றற் குணம் அவ்வணுவின்கட்டானே கட்டுண்டு கிடக்குமன்றிப் புறத்துச்சேறல் கூடாது. இது கூடாதபோது ஓரணுவின்க ணுள்ள ஆகருஷண (Attraction) ஆற்றல் மற்ரோரணுவின் கட்சென்று தாக்குதலும், அங்ஙனம் தாக்குதல் காரணமாக அவை தம்பாட்டுள்ள கிராசிய (Cohesion) ஆற்றல்கொண்டு ஒன்ரோடொன்று சேர்வுற்றியைதலும், அங்ஙனம் இயைந்து ஆகாயபூதத்தை அமைவுறச்செய்தலும் சிறிதும் கூடாவாம். ஆகவே ஆகாயபூதம் அமைதற்கு எவ்வாற்ருனும் ஓர் கருவி வேண்டப்படுமேயாம். இங்ஙனமோர் கருவியின்மையின் அவ் வணுக்களைச்சேர்த்தி ஆகாயபூதத்தை அமைத்தான் ஓர் கர் த்தன் உண்டென்பதே முடிபாம் என்க.

கo-வது. அற்றன்று; ஆகாய அணுக்கள் யாதானுமோர் கருவியின்றி ஒன்ரோடொன்று சேர்ந்து அமைதற்கியைந்த இயல்பினையுடையவாம் எனக்கொண்டால் என்னெனின்; ஒரு பொருளிடத்துள்ள யாதோராற்றல் பின்னோர் பொருளிட த்துச்சென்று தாக்குமென்னுமிடத்து, அஃதங்ஙனம் சென் றுதாக்குதல் அதனையுடைமையாக்கொண்ட பொருளின்

பிரஞ்ஞையுபாலாதல் வேண்டும்; அற்றேல் பிறிதோர் கருவி யானுதல்வேண்டும். ஆகாய அணுக்களோ அசித்துப் பொருள்களாதலின் அவற்றின்கட் பிரஞ்ஞையுளதாதல் கூடாது. ஆகவே ஓர் கருவிவேண்டப்படுமேயாம்.

கக-வது. கருவியின்றி ஆகாய அணுக்கள் கலப்புற்றமைதல் கூடாதெனின், கடவுள்தான் அவற்றை எங்ஙனம் கலப்புற்று நிற்பச்செய்வர்? கூடாமைகளினும் அவரதுசாமர்த்தியம் சென்று பயன் படைக்குமோ என்னுமோர் ஆக்ஷேபம் நிகழுமேல்; கருவியின்றி அவை தாமாகச்சென்று கலப்புறல் கூடாதென்பதன்றி, அவற்றைக் கலப்புறச்செய்வார் ஒருவரது முயற்சி தொழிற்படுமிடத்தும் அவை கலப்புறுதல் கூடாததொன்றல்ல. ஆகவே கடவுளது முயற்சிகாரணமாக அவை கலப்புற்றமைதல் கூடுமாம். கடவுளுடைய சாமர்த்தியம் இல்பொருள்களாகிய விருத்த அசம்பவங்களில் செல்லுமாறில்லை எனக் கொள்ளத்தக்கதன்றி, உண்மைப்பொருளாயுள்ளதொன்றை எங்ஙனம் ஆக்கல்வேண்டுமோ, அதனுக்குரிமைபூண்டுள ஆற்றலை எங்ஙனம் செலுத்துதல்வேண்டுமோ, அவ்வல்லாம் அவரது வரம்பிலாற்றலுக்கமைந்த பேரிலேசங்களேயாம். ஆதலின் மாயா அணுக்களின்கணுள்ள ஆற்றல்களை எங்கெங்கே எவ்வெவ்வாறு செலுத்துதல்வேண்டுமோ அங்கங்கே அவ்வவ்வாறு செலுத்துகையெல்லாம் கடவுளது திருவருளாற்றலே என்க. (இதுபற்றியன்றே கடவுள் மாயைக்கண் அளவளாய் வியாபித்திருப்பர் என்று சற்சமயம் கூறுவது?)

கஉ-வது. அங்ஙனமன்று; கடவுள் ஆகாயஅணுக்களையாதானுமோர் கருவியின்றி ஒன்றோடொன்று கலப்புற்றமையச் செய்தார் எனவே, அவ்வணுக்கட்கு அங்ஙனம் ஓர்கருவியின்றிக்கலப்புற்றமைதற்கியைந்த இயல்பைக் கொடுத்தார் என்றவாறாயிற்று. எனவே, அவ்வியல்பு அவற்றின்கணுண்டென்றபடியாகும். ஆகுமேல், அவை அவ்வியல்பின்வழி ஒன்றோடொன்று கலப்புற்றமையும் எனக்கொள்ளலாமே: கர்த்தன்

ஒருவன் வேண்டும் எனக் கொள்ளவேண்டியதென்னை என்றோர் ஆக்ஷேபம் நிகழுமாயின்; ஆகாய அணுக்கள் ஒன்றோடொன்று கலப்புற்றமைவது, அவற்றின்கணுள்ளதோர் இயற்கையியதிபற்றி எனக் கோடல்கூடாது. என்னை? யாதொருபொருளாவது அற்றேல் அதன்மாட்டுள்ள ஆற்றலாவது பின்னோர் பொருளிற்சென்று தாக்குவது, அப்பொருளின் பிரஞ்ஞைபாலாதல்வேண்டும்; அற்றேல் அப்பொருளைத்தான், அன்றி அதன் ஆற்றலைத்தான் மற்றைப்பொருளிற்கொடு சென்றுய்த்தற்கமைந்ததோர் சருவியானுதல்வேண்டும் என்பது மேலேவிளக்கப்பட்டது. இது பொருள்கட்கெல்லாம் இயல்பாகவுள்ளதோர் சாமானியதர்மமாம். எனவே இவ்விருபடியுமின்றிப் பொருள்கள் ஒன்றோடொன்று கலப்புற்றமைதல் கூடாதென்பதும், ஆகவே அவற்றின்கண் அங்ஙனம் கலத்தற்கமைந்ததோர் இயல்பின்றென்பதும் தெற்றெனப்புலப்படுமாம். ஆனபின், ஆகாயஅணுக்கள் தம்மிடத்துள்ளதோர் இயற்கைபற்றிக் கலப்புற்றமைவன எனக்கோடல் கூடாதபடி காண்க. இனி இவ்வாகாய அணுக்களின் கலப்புக்கு மேலைக்காட்டிய காரணங்களுள் ஒன்றேனும் இன்மையால், அவை ஓர் காரணகர்த்தனது முயற்சியாற்றலாற்றானே அங்ஙனம் கலப்புற்றமைந்தன என்பது செவ்விதிற்றுணியப்படுமென்க.

(இதனால், மற்றையபூதங்களினும் ஆகாயபூதத்திற்றானே கடவுளுடைய திருவருள்விலாசம் ஒருவாறு வெளிப்பட்டுநிற்கும் என்பதுதொனித்தல் காண்க. ஆதலினன்றே "விண்ணேயுன்முடிவிலெதுவயங்குமாங்கே துரியவறிவுடைச்சேடனீற்றினுண்மை சொல்லானேசொல்லென்பேன்" என்றார் ஆன்றோரும். பிரிதிவியாதி பஞ்சபூதங்களும் ஒன்றிலிருந்து ஒன்று அருகி அருகி எமக்கு விடயமாமுறைக்கேற்ப, இவற்றின்கண்ணே அமைந்துள்ள ஈச்சுரலிலை ஒன்றிலிருந்தொன்றில் ஏற்றமுற்றுச்செல்லுமாம். இது நாம் கடவுளுடைய திருவருட்பிரசாதத்தைக் காண்டல்கூடாத அபக்குவிகளாய் மாயையாற் பந்திக்கப்பட்டுள்ளமையினென்க. இதனை விரிப்பிற் பெருகும்).

இங்ஙனமே எமக்கு விடயமாகும் தாத்துவிகபதார்த்தங்களின் அமைதிக்கியைந்த முதற்காரணத்தை விசாரிக்கவே, அவ்விசாரம் ஆகாயபூதத்திற் சென்று முற்றிப் பின்னர் அதனை விசாரித்துச் செல்லவே, அதன்முடிவில் கடவுளுண்மை பிரத்தியக்ஷமாகத் தோன்றிநிற்றல் காண்க.

௧௩-வது. அற்றன்று. ஆகாய அணுக்களை ஒன்றோடொன்று சேர்த்தமைத்தற்கு யாதானுமோர் கருவி இருக்கலாம். அஃதெமக்குப் புலப்பட்டிலதுபோலும் என்பிரேல்; ஆகாய பூதத்துக்குத்தான் அங்ஙனம் ஓர் கருவி இருப்பினும், அக்கருவியின் அணுக்களைச் சேர்த்தற்குப் பிறிதோர்கருவி வேண்டப்படுமோம். இங்ஙனமே இவ்வாதத்தை எத்துணைத் தூரத்துக்குத்தான் கொண்டுசென்றீர்ப்பினும், இறுதிக்கட் கருவியொன்று யாதாயினும் ஓர் சித்துப்பொருளின் முயற்சி ஆற்றலாற்றானே பெறப்படுதல்வேண்டும் என்னும் நியாயம் சித்தாந்தமாகும். எனவே எவ்வாற்றானும் கடவுணிச்சயம் தாபிக்கப்பட்டவாறும் என்பது காண்க.

௧௪-வது. அங்ஙனமுமன்று. இவ்வாகாயபூதம் அற்றேல் அதுபோன்ற பிறிதொர்கருவி தானாகச்சேர்ந்தமையத்தக்கது என்பதை முடித்துக்காட்டுதற்கியைந்ததோர் நையாயிகதர்மம் இருக்கலாம். அஃதெமக்குப் புலப்படாதிருந்தா லென்னை என்பிரேல்; மக்கட்பிறவி எடுத்துள்ளேமாகிய எமக்கெல்லாம் எவ்வெமக்குப் புலப்படும் நியாயங்கொண்டொழுகுதலே கடன். ஆதலால், ஓர் காரணகர்த்தனது முயற்சியின்றி இக்கருவிப்பூதம் அமைதல் கூடாதென்று எமக்குப்புலப்படும்போது, அங்ஙனம்புலப்படும் நியாயத்தைப் புறம்பொதுக்கி, புலப்படாததோர் நியாயத்தின்வழி ஒழுகநினைத்தல் பெருமடனாகுமெனமுடிக்க.

௧௫-வது. இங்ஙனமுமன்று, ஆகாயபூதம் அமைதற்கு ஓர் கருவி வேண்டப்படும் என்பது சத்தியம். இக்கருவியின்றி இப்பூதம் எங்ஙனம் அமைந்தது என்கை எமக்குப் புலப்படு

இன்றிலது. எமது விசாரத்தால் நாம் அறியத்தக்கது இவ்வ ளவே. இதுகொண்டு நாம் கடவுளுண்மையை விசுவசிக்கமாட்டேம் என்பிரேல்; ஆகாயபூதம அமைந்துள்ளமையும் சத்தியம். அஃதோர் கருவியின்றி அமையாதென்பதும் சத்தியம். ஆகவே அப்பூதத்தை அமைத்ததோர் கருவியுண்டென்பதும் சத்தியமேயன்றோ? இச்சத்தியத்தை விசுவசியாதொழிதல் கூடுமேயோ? இனி இக்கருவியும் ஆகாயபூதம்போன்றதோர் பொருளாயின், அதனுக்கும் பிறிதோர்கருவி வேண்டப்பட்டு, எமது நியாயம் அநவர்த்தா தோஷத்தின்பாற்பட்டழியும். ஆகலின் அக்கருவி இப்பூதாதிகளைப்போல் தனக்கோர் கருவி வேண்டப்படாத சுயம்புவாயிருத்தல்வேண்டும் என்பதும், அக்கருவி ஓர் மூர்த்தபதார்த்தமாயிருப்பின், அம் மூர்த்தபதார்த்தத்தின் அணுக்களைச் சேர்த்தற்கும் ஓர் கருவி வேண்டப்பட்டு மேலே அநவர்த்தாதோஷமே பின்னும் எய்துமாதலின், அக்கருவி ஓர் அமூர்த்தபதார்த்தமாயிருத்தல் வேண்டும் என்பதும், அமூர்த்தபதார்த்தம் அசித்தாயிருக்குமேல் மூர்த்தபதார்த்தங்களைத் தொழிற்படுத்தல் கூடாதாதலின், அந்த அமூர்த்தபதார்த்தமாகிய கருவி ஓர் சித்துப்பொருளாதல் வேண்டும் என்பதும் இனிதுசித்திக்குமாம். இங்ஙனமாய இலக்கணங்கள் பூண்டுள கருவியையே நாம் "கடவுள்" என்று சாதிப்பதெனக்கண்டு கடைத்தேறுக.

கசு-வது. நன்றுகூறினீர் கடவுள் ஓர் அமூர்த்தசித்தாயிருப்பின், அவரது தொழிலாற்றல் மூர்த்தசித்துக்களாகிய அணுக்களின்கட் டீண்டுதலும், அதுகாரணமாக அவை தொழிற்பட்டியங்குதலும் எங்ஙனம் என்பிரேல்; ஆம்: இதனாலன்றே கடவுளது வியாபகமுறை இனிது விளங்கும். கடவுள் எவ்வெப்பொருளிலும் "பற்றொடுபற்றின்றி" (தோயாதுதோய்ந்து) வியாபித்திருப்பர் என்றும், அவர் "உலகெலாமாகிவேறுருயுடனுமாயொளியாய்ஓங்கி" எவ்வெப்பொருளிலும் அணுவுக்கணுவாய் நிறைந்திருப்பர் என்றும், இங்ஙனமே எந்தெந்தப் பொருளும் தம்பாற் தோயத் தாம் அவற்றில் தோயாது

அவற்றையெல்லாம் "உடலுயிர்போல" சேட்டிப்பர் என்றும் சற்சமயம் பிரதிபாதிக்குமாற்றால், கடவுள் அணுக்கடோறும் செறிவுற்றமைந்து (அமூர்த்தங்களாகிய ஆன்மாக்கள் மூர்த்தங்களாகிய உடம்புகளைச் சேட்டித்தாற்போல) பிரபஞ்ச அணுக்களை எல்லாம் சேட்டித்தருள்வரென்க. இந்தமுறைகள் எல்லாம் சற்சமயசாத்திரங்களிலே சுருக்கமற விரித்துரைக்கப்பட்டுள்ளனவாதலின் அவற்றை ஆராய்ந்தறிக. இங்ஙனம் போந்தவாற்றால், பிரபஞ்சத்தை அமைத்தியக்குதற்கோர் நிமித்தகாரணன் வேண்டப்படுவன் என்பது முடிந்தபடி கண்டுகொள்க.

## உ-ம் அதிகரணம்.

(க.) இனி, இப்பிரபஞ்சம் அமைதற்கியைந்த காரணங்கள் எல்லாம் அநாதிதொட்டு இயற்கைமுறைபால் அமைந்துள்ளன என்றே கொண்டாலும், அக்காரணங்களைத் தொழிற்படுத்து இயக்குதற்கோர் நிமித்தகாரணன் வேண்டப்படுமாம். ஓர் கறிசமைத்தற்கியைந்த பொருள்களனைத்தும்—அதாவது, கறிப்பதார்த்தமும், அடுப்பும், விறகும், நெருப்பும், பாத்திரமுமாகிய இவை எல்லாம்—இருப்பினும் ஓர் சுயம்பாகிஇன்றிக் கறிசமையாதாம். சமுத்திரத்தின்கண்ணே மரக்கலமும் அதனத்துச் சுக்கானும் துவாரடையும் பிறவும் அமைந்திருப்பினும் அஃதோர் மீகாமனின்றிச் செல்லமாட்டாது. ஓர் வீட்டுக்கு வேண்டப்படும் மரங்களும் அவற்றைச்செப்பஞ் செய்தற்கமைந்த ஆயுதங்களும், அவ்வாயுதங்களைத் தொழிற்படுத்தற்கியைந்த ஆற்றலும் அமைந்துகிடப்பினும், ஓர் சிற்பனின்றி வீடுசமையாது. ஓர் கடற்பரப்பின்கண்ணே ஊசிகளும் நூல்களும், அந்நூல்களை ஊசித்துவாரத்துட் புகட்டற்கியைந்த ஆற்றலும் அமைந்துகிடப்பினும், அந்நூல்கள் ஓர் இயற்றுதற்கருத்தனின்றி ஊசித்துவாரங்ளுட்புகுதல் கூடாது. இங்ஙனமே பிரபஞ்ச உற்பத்திக்கியைந்த முதற்காரணங்கள் எல்லாம் உளவாயினும், அவற்றை

விதிமுறைபிறழாது ஒன்றோடொன்றைச்சேர்த்தி அதிவிநோதவிசித்திரம் அமைந்த இப்பிரபஞ்சத்தை அமைத்தற்கும் ஓர் கர்த்தன் வேண்டும் என்க. காற்றுவீச இலை உதிர்ந்தாலென்ன இப்பிரபஞ்சமும் பௌதிக அணுக்களின்கணுள்ள ஆற்றல்காரணமாக அவற்றின்கட்டோன்று நிகழ்ச்சிகளினால் அமையுமெனக்கொண்டால் என்னெனின், இங்ஙனம் அமைதல் ஓர் இயலுந்தகையதன்றி நிகழுந்தகையதன்று. (It is a possibility but not a probability) அதாவது, சமுத்திரப்பரப்பின்கணுள்ளதோர் ஊசித்துவாரத்தின்கண்ணே ஆண்டுள்ள நூற்றலை சென்றுபுகுதல் இயலுந்தகையதெனக்கோடலாம். ஆனல், அஃது நிகழுந்தகையதாமோ? அற்றன்றாம். நாம் எதுவும் எமது கிஞ்சித்ஞானம்பற்றி இயலுந்தகையது எனக்கோடல்கூடும்: ஆனல், நமது அனுபவஞானத்தை ஒட்டி அஃது நிகழுந்தகையதுதானே என்பதே நாம் முக்கியமாகச் சிந்திக்கவேண்டுவது. இங்ஙனம் சிந்திக்குங்கால் நிகழுந்தகையதல்லாதவொன்றை, இது நிகழ்வுற்றதே என்று முடித்தல் சிறிதுங்கூடாதாம். நாம் ஓர் விசித்திரவிஸ்தீரண மண்டபத்தைக்கண்டு இஃதெங்ஙனம் அமைந்தது என்று ஆராய்வுழி, ஓர் விகடகவி முற்பட்டு "இது ஆகாயத்தினின்று ஈண்டிறங்கி வந்தமைந்தது" என்றால் அதனை நம்புவமா? ஏன்? அஃதோர் கூடாமையேயோ? அற்றன்றே. பின்னை நாம் அதனை நம்பாதொழியவேண்டுவதெற்றுக்கு? அது நிகழுந்தகையதன்றாதலினேயாம். இங்ஙனமே பௌதிக அணுக்களிலிருந்து அவ்வவற்றுக்குரிய அதிவிநோத அளவைப்படி கலந்து பஞ்சபூதங்களும், அவற்றிலிருந்து கோடிக்கணக்காய உலகங்களும், அவற்றின்கணுள்ள வரையறைகடந்த கிரம ஒழுங்குகளும், அவை ஒவ்வொன்றினும் அதிவிநோத பேராச்சரியமாபமைந்த அளவைக்கடங்காச் சிருட்டிபேதங்களும் பிற இயற்கைக்கிரமங்களும், ஓர் இயற்றுதற் கர்த்தனின்றி நிகழுந்தகையனதாமோ என்பதைச் சிறிதுபொழுது சிந்திப்பாமெனின், அஃதொருங்குகூடாதென்றே பரிஷ்காரமாகச் சொல்வம். சமுத்திரப்பரப்பின்கணுள்ள ஓர் ஊசித்துவார

த்தின்கண் ஓர் நூற்றலெ சென்றுபுகுதல் தானும்நிகழுந்தகை யதன்ருக, எத்தனையோ ஊசித்துளைகளுள் எத்தனையோ நூற்றலெசென்று புக்கிருந்தால், அஃதோர் நிமித்தகாரணனுற் ருனே அங்ஙனம் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தானே புலப்படமாட்டாதா? ஊசித்துளையுள் நூல்புகுதல் இயலுந்தகையதாயினும், எத்தனையோ ஊசிகளுள் எத்தனையோ நூல் புகுந்திருப்பதைக் கண்டவுடனே, இதுஓர் காரணகர்த்தனுற்ருனே இங்ஙனம் புகுத்தப்பட்டிருத்தல்வேண்டும் என்பதைப் பெரிதுவற்புறுத்தி; நூல்தானே துளையுட்புகுமியல் பிற்று என்னும் இயலுந்தகுதியை இவ்விஷயமாத்திரையினே அஃதோர் இயலுந்தகையதன்றெனத் தக்க அத்துணை எல்லைக்கு நிஷ்பலம்செய்து; அதன் நிகழுந்தகுதியின்மையை அது நிகழ்வுற்றதே இல்லையென்னும் அத்துணை எல்லைக்குப் பேராற்றல்கொள்ரூட்டி; அங்ஙனம் நாட்டுமுகத்தானே அந்நிகழ்ச்சிக்கோர் காரண கர்த்தனுண்டென்பதைப் பிரத்தியக்ஷமாகக்காட்டி நிற்குமாம். இங்ஙனமே இப்பிரபஞ்சதோற்றவிஷயத்தினும், அதன்கணுள்ள அளவிகந்த கிரமபிரயோசனுதிகள் காரணமாகப் பெறப்படும் நிகழுந் தகுதியின்மையின் வன்மை, அவை காரணனின்றி நிகழவேமாட்டா என்று நிறுத்திக்காட்டத்தக்க அத்துணை எல்லைக்குத்திட்பம்படைத்து; அதன்கணுள்ள இயலுந்தகுதியை அடியோடுபோற்றி; அங்ஙனம் பாற்றுமுகத்தானே அவற்றுக்கெல்லாம் ஓர் காரணனுண்டென்பதைச் சந்தேகவிபரீதமறக் காட்டி நிற்குமாம். நிகழ்தற்றகுதியின்மை வன்மைபடைக்கவே, அதன்கணுள்ள இயலுந்தகுதி எங்ஙனம் சிறந்ததாயினும் தானே வலியிழந்தழியுமாம். அழியவே அவ்வியலுந்தகுதி நியாயத்தால் யாதானுமோர் பயனின்ருய், நிகழ்தற்றகுதியின்மையாற் பெறப்படும் கர்த்தனுண்மை அங்கை ஆமலகம்போற் பூரணவன்மைகொண்டு நாட்டப்படுமென்க. இந்த நியாயம் அனுபவசித்தியிலே தொங்கிநிற்பதொன்ருதலின், இதுமற்றெவற்றினும் சிறந்துளதென்பது யூகித்துணர்தற்பாற்று.

## ங-ம் அதிகரணம்.

(க.) சீவதோற்றங்களிடத்தெல்லாம் உடம்பின் வேருகி அறிவாற்றலிற் சிறந்துவிளங்கும் ஓர் ஆன்மா உண்மையானும், இந்த ஆன்மா தான்விரும்பியவாறு ஓர் ஓர் உடம்பை எடுத்தலும், எடுத்த உடம்பின்கண்ணே நிலைபெறுதலும் கூடாமையானும், இதனை உடம்புகடோறும் செலுத்தினின்றியக்குமோர் காரணகர்த்தன் உளன் என்பது.

ஓ! அந்தரத்திலா அரணமைக்கின்றனிர்? ஆன்மா எனப்படுவது ஒன்றுண்டென்று சாதித்தபின்னன்றே நீர் கூறுவது தொக்கும் என்பீரேல்; பின்னை இத்துணை அத்தியந்த வியப்பமைந்த அறிவுகள்யாவும் யாதன்குணமாமோ? பூதங்களின் குணமெனின், பூதங்கள் சடப்பொருள்களாதலின் அறிவாற்றல் அவற்றின் குணமென்கை அமையாதாம். அற்றன்று: வெற்றிலை பாக்காதிய் கூடியவிடத்து அவற்றின் கூட்டத்திலே ஓர் செம்மைவந்துதித்தாலென்ன, பஞ்சபூதங்களின் சமவாயமாத்திரையான் ஆண்டு அறிவுதோற்றற்குரித்தென்பிரேல், இது சிறிதும் பொருந்தாததோர் பெருவிரோதமென்பதை நியாயமுகத்தாற் சாதிப்பாம்.

க-வது. "உள்ளதுபோகாது இல்லதுவாராது" உள்ளது உள்ளதேயாகும். இல்லது இல்லதேயாகும். உண்மையில்இன்மையும், இன்மயில் உண்மையும் தோன்றுதல் என்றுமில்லை. சடபதார்த்தங்கள் எல்லாம் அறிவில்பொருள்களாதலின், இப்பதார்த்தங்கள் எத்தனை எவ்வாறுகூடினும், இவற்றின்கண் அறிவாற்றல் தோன்றுமாறு சிறிதும் கூடாதாம். ஆயிரமூகர் அநந்ததரம்கூடினும் அவரது வாயிடத்து ஓர் சிறுசொல்லேனும் பிறத்தல் அமையாதாமென்க.

உ-வது. செம்மை ஓர் மூர்த்தபதார்த்தத்தின் குணமேயாம். இக்குணத்தைப் பிறப்பித்தற்கியைந்த பதார்த்தங்கள் வெற்றிலை பாக்காதியவற்றில் ஆங்காங்குக்கிடந்து, அவை கலப்புற்ற மாத்திரையினே தாமுங் கலப்புற்று அச்செம்மை

யைப் பிறப்பிக்குமாம். அறிவோ சடபதார்த்தங்களின் குணமன்று; ஆகவே அறிவுக்கமைந்த பதார்த்தங்கள் சடப்பொருள்களிற் காணப்படுதல் ஒருங்கே கூடாது. அறிவுக்கியைந்த பதார்த்தங்கள் சடப்பொருள்களில் அணுத்துணையேனும் இல்லை என்பது பதார்த்தாந்நுவயிகள் எல்லாம் பகிரங்கமாகச் சொல்லத்தக்கது. ஆனபின், சடப்பொருள்களின் கலப்பால், அவற்றுச்சிறிதேனும் காணப்படாத அறிவு பிறக்குமெனக்கோடலும், அக்கொள்கைக்கோர் எடுத்துக்காட்டாக வெற்றிலை பாக்காதியவற்றின் கலவையை எடுத்துக்காட்டலும் சிறிதேனும் அமையாவாம்.

ௐ-வது. இன்னமும் வெற்றிலை பாக்காதியவற்றிற் பெறும் செந்நிறம், அக்கலவையின் பயனாதல்பற்றி, அக்கலவையுளதாங்காறும் தானும் உள்ளதாக் கிடக்கின்றது. அறிவோ பஞ்சபூதக்கலப்பாகிய உடம்பு கிடப்பவும், உயிர் நீங்க தானும் நீங்கிவிடுதலின், அதனை அக்கலவையின் பயன் எனத் துணிதல் கூடாதாம்.

அற்றன்று; உயிர் நீங்கியதென்னுமிடத்துப் பிராணவாயு சேட்டை ஒழிந்துவிடுமாதலின், உடம்பின்கண் அறிவு சேட்டித்தல் கூடாதென்பிரேல்; உறக்கத்திலே பிராணவாயு தொழிற்பட்டு நிற்புழியும் அறிவு சேட்டித்தலின்மையின், பிராணவாயுவைத்தானும் அறியுமுதல் எனச் சாதித்தல் கூடாதாம். உறக்கத்திற் கரணங்கள் தொழிற்படுதலின்மையின் அறிவு அடங்கிக்கிடக்குமென்பிரேல்; அஃதாயின் கரணங்களையே அறிவைக் கிரகிக்கும் முதல்கள் எனச்சாதித்தல் வேண்டும். கரணங்கள் அறிவைப் பற்றுதற்கியைந்த கருவிகள் அன்றி அதனைக் கிரகிக்கும் கர்த்தாக்கள் ஆகாவாம். கருவியைக் கருத்தா என மயங்கல் பேதமையின்பாற்றென்க. அன்றியும் அந்தக்கரணங்களே அறிவின் கர்த்தாக்களெனில், அவை தொகையளவில் நான்காதல்பற்றி, எம்முள் அறிதற் கர்த்தாக்களும் நான்குண்டெனக் கோடல்வேண்டும். அங்ஙனமாகாது எம்மாட்டுள்ள சேதனமுதல் ஒன்றேயாதலின்,

இக்காரணங்கள் எல்லாம் அந்தச்சேதனமுதல் அறிவைக்கிரகி த்தற்கியைந்த, கருவிகளேயன்றித் தம்மளவிற் சேதன ஆற்ற லுடையனவல்லவாம்: இவைகளும் சேதனஆற்றலுடையன வெனின், இவற்றுள் ஒன்று தொழிற்படுமிடத்து மற்றவை தொழிற்படுதல் கூடாமையானும், ஒன்றை ஒன்று அறியும் சக்தி இவற்றின்கண் இன்மையானும், இவற்றைச் சேதனப் பொருள்களெனக்கோடல்கூடாது. இவற்றைக்கருவியாக்கொ ண்டு அறிவைக்கிரகிக்கும் ஓர் முதல் நம்மிடத்துண்டென்ப தே சித்தாந்தமாகும்.

ச-வது. இன்னமும் பூதக்கலப்பே அறிவின் காரணம் எனின், அக்கலப்பின் ஏற்றக்குறைவுக்குத்தக்கபடி பெருத்த உடலில் அறிவு பெருத்தும், சிறுத்த உடலில் அறிவு சிறுத் தும். இருத்தலுவேண்டும். இங்ஙனமின்றிப் பெருத்த உடலை யுடைய யானை குதிரை முதலியவற்றுக்கு அறிவு சிறுத்தும் சிறுத்த உடலையுடைய மனுஷனுக்கு அறிவு பெருத்தும் இரு த்தலின், இக்கொள்கை அமையாதென்க. இங்ஙனும் அறிவு சிறுத்தும் பெருத்தும் இருத்தல்தானும், அந்த அறிவு விருத்தி க்கமைந்த பௌதிகங்களின் ஏற்றக்குறைவானும், அக்கலவை யாற்றலின் திட்பநுட்பங்களானும் எய்தற்பாலதாம் எனின், ஒரே அளவைகொண்டு ஒரேபடித்தாய்க் கலக்கும் ஒருதிறச் சிருட்டியிற்றானே, சில அற்ப சரீரிகட்கு அறிவு கூடியும், சில பருத்த சரீரிகட்கு அறிவு குறைந்தும் இருத்தலின் இதுவும் கூடாதென்க. அற்றன்று: அங்ஙனமாய ஒருதிறச் சிருட்டியி ன்கண்ணும், சிலவற்றிலே அறிவுவிருத்திக்குரிய பதார்த்தங் களும், அவ்விருத்திக்கியைந்த கலவையாற்றலும் கூடி இருத் தலானும், சிலவற்றிலே அவைகுறைவுற்றிருத்தலானும், அக் கூடுதல் குறைவுக்கு ஏற்ப, அறிவும கூடியும் குறைந்தும் இருக்கும்: சரீரங்களின் பருமை சிறுமைகளால் அறிவு எப் போதும் தாக்கப்படாது என்பிரேல்; ஒருகால் அறிவு விருத் திபெற்றிருந்த ஓர் சரீரிதானே காலஞ்செல்ல அவ்வறிவிற் குறைவுறுதலானும், ஒருகால் அறிவு குறைவுற்றிருந்த சரீரீ தானே பின்னர் அறிவுவிருத்திபெறுதலானும் இதுவும் கூடா

தென மறுக்க. இது அறிவுவிருத்திக்குரிய பதார்த்தங்களும் கலவைகளும் இடையிலே நோய்முதலிய ஏதுக்களால் தடைப்படுதலானும், அங்ஙனம் தொடக்கத்திலே பட்டுண்டதடை பின்னர் நீங்குதலானும் பெறப்படும் எனின்; எத்தனையோ பேர் தமதுடம்பு நோய் சிறிதுமின்றிப் புஷ்டி அடையவும், அறிவின்கிளர்ச்சி குறையப்பெறுகின்றனர். எத்தனையோபேர்தமதுடம்பு நோய் முதலிய காரணங்களால் தேய்ந்து அருகவும், அறிவுக்கிளர்ச்சியில் சிறிதும் குறைவின்றி அக்கிளர்ச்சி விருத்திக்கப் பெறுகின்றார்கள். அன்றியும் பூதபௌதிகங்களே அறிவின் காரணமாமென்பது சத்தியமாமாயின், அப்பதார்த்தங்கள் ஏற்றமாயுள்ள பருத்தசரீரிகள் எப்போதும் அறிவிற் கூடியும், சிறுத்தசரீரிகள் எப்போதும் அறிவில் குறைந்தும் இருத்தல் வேண்டும். இங்ஙனஞ் சரீரத்தின் பெருமை சிறுமைகள் ஒருவருடைய அறிவாற்றலை நிச்சயித்தற்குச் சிறிதேனும் ஓர் அளவையாகக் காணப்படாதபோது, அந்தச் சரீரத்தையாவது அதன்காரணமாகிய பூதபௌதிக சங்கமத்தையாவது அறிவின்காரணமெனல் அமையாதபடி கண்டுகொள்க. இன்னமும் பூதபௌதிக சங்கமமே அறிவுக்குக் காரணமாமென்னும் கொள்கையை நாட்டுதற்கு, அங்ஙனம் அவற்றைக் கலந்து அறிவைப் பிறப்பித்துக்காட்டல் வேண்டும். இது ஒருவராலும் ஆகாது. அல்லாமலும், இன்னின்ன பதார்த்தங்கள் இன்னின்ன பிரமாணங்கொண்டு இன்னின்னவாறு கலந்தால் அறிவுதிக்கும், அற்றேல் விருத்திபெறும் என்பதோர் நியதி இருத்தல்வேண்டும். இவ்வாறுயதோர் நியதியுமில்லை. இங்ஙனமாய ஏதுக்கள் சிறிதுமின்றி உடம்பை அறிவின்காரணமெனல் பெரிதுமோர் ஆபாசமாமென்க.

ரு-வது. ஒரேகாலத்தில் ஒருமாதாவின் கருப்பத்தில் ஒரேவித பௌதிக ஆற்றல்கொண்டுற்பவித்து, ஒரேவகையான உணவுண்டு, ஒரேவகையாய் வளரும் இரட்டைப்பிள்ளைகள், சரீரத்தோற்றம் குணம் முதலியவற்றில் ஒருவரை ஒருவர் மிக ஒத்திருந்தும், அறிவாற்றலளவில் பெரிதும் பேதப்படுகி

ன்றனர். இங்ஙனமேல் உடம்பை அறிவிற்குரியதோர் காரணம் எனல் கூடுமோ? சரீர இயல்பளவிலே அவ்விருவர்க்கும் உள்ள ஒற்றுமைநயமோ மிகப்பெரிது. ஒருவர்க்கு நோயுண்டாக மற்றவர்க்கு நோயுண்டாகின்றது: ஒருவர் சுகித்திருக்குங்காலையில் மற்றவர் சுகித்திருக்கின்றனர். அறிவளவினேஒருவர் தீரராக மற்றவர் மூடராகக் காணப்படுகின்றனர். இஃதேல் அறிவை உடற்கூறு எனல் எங்ஙனங் கூடுமோ?.

சு-வது. இன்னும், மானுஷ்யசரீரங்கள் எல்லாம் தத்தம்முட் பேதங்காட்டி நிற்குமேனும், அவற்றின்கண் ஒற்றுமைநயம் மிகவுண்டு. அதனினும், ஓர் ஊரில் ஓர் சாதியில் ஓர் குடும்பத்தில் ஒரேபெற்றூரது வயிற்பிறந்து ஒரேவகையாக வளர்க்கப்படும் பிள்ளைகளில் அவ்வொற்றுமைநயம் பின்னும் அதிகமுண்டு.. இவர்களது உடம்பிலும் பௌதிகசங்கமம்பற்றிய பேதமும் சிறிதுண்டாமெனக் கொண்டாலும், பொதுப்பட நோக்குமிடத்து அவரிடத்துச் சரீரநயம்பற்றிய ஒற்றுமை மிகப்பெரிதுண்டாம். இங்ஙனம் ஒற்றுமைநயம் பெரிதுகொண்டுள சரீரங்களில் அறிவளவையும் பெரிதும் ஒத்திருத்தல் வேண்டும். இதற்கு மாருக அவர்களுள் ஒருவர் அறிவாற்றலில் மகாசாதுரியராக, பின்னொருவர் நிர்மூடராகக் காணப்படுவரென்றால், அவர்களது அறிவை உடம்பின்பயன் எனக்கோடல் எங்ஙனமாமோ?

இங்ஙனமே சரீரத்துக்கும் அறிவுக்குமுள்ள சம்பந்தத்தை எடுத்துப் பலவாறு ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியின் பயனைப் பின்னர்த் திரட்டி எடுத்துச் சீர்தூக்குமளவில், அறிவை உடம்பின் காரணமெனல் கூடாதென்பது விவேகிகளுக்கு இனிது புலப்படுமாம்.

எ-வது- அறிவு பூதக்கலப்பின்காரியமெனில், எமதுடம்பனைத்தும் பூதக்கலப்பேயாதலின், அவ்வுடம்பெங்கும் அறிவுமயமாயிருத்தல்வேண்டும். இங்ஙனமின்மையின் அறிவைப் பூதக்கலப்பின்காரியம் எனல் கூடாதாம். அற்றன்று; மரங்

களிற் பால்திரண்டாலென்ன அறிவும் உடம்பின் ஓர் குறித்த் தானத்திற்ருனே திரண்டமையுமெனில்; அங்ஙனமோர் தானந்தானும், "இது அறிவைக்கிரகித்தற்றகையினது" என்று எடுத்தோதத்தக்கவாறு, நமது உடம்பின்கண் அமைந்துவிளங்குதலின்மையின், இதுவும் கூடாதெனவிடுக்க. நன்றுகூறினீர்; நமது மூளையன்றே எம்மிடத்து அறிகருவியாய் அமைந்துவிளங்குவது என்பிரேல்; மூளையும் பயிருக்குப் பசளைபோல, அறிவைக் கிளர்த்தற்குரியதோர் பதார்த்தமன்றித் தான் அறியுமாற்றலுடையதொன்றன்று. மூளைமாத்திரமா? எமதுடம்பின்கண், அறிவுக்கிளர்ச்சிக்கேதுவாய் அமைந்துகிடக்கும் எந்தஎந்த உறுப்பும், நாம் அறிவைக்கிரகித்தற்கோர் ஓர் உபகாரகமாத்திரையாய் நிற்பதன்றி, தான் அறியுந்திறமையுடையதன்ருதலால், இவ்வெவற்றினும் வேருய், இவற்றின்சகாயம்கொண்டு, அறிவைக்கிரகிக்கும் ஓர்முதல் எம்மாட்டுளதென்பது தெள்ளிதிற்றுணியப்படுமோம்.

அ-வது. இஃதேல் அறிவானது சரீரம் வளருந்தோறும் வளர்ந்து, அது சுருங்கத் தானும் சுருங்கவேண்டியதென்னை என்பிரேல்; காட்டத்தில் மூட்டப்பெற்ற அக்கினி, அக்காட்டம்வளரும்தோறும் தானும்வளர்ந்து, அஃது அருகத்தானும் அருகி ஒழியுமாம். இங்ஙனமாயினும் காட்டம் அக்கினியுமல்ல, அக்கினி காட்டத்தின் காரியமுமல்ல. காட்டம் அக்கினியின் கிளர்ச்சிக்கு ஓர் காரணமாத்திரையேயாய் அமைந்து நிற்றல்போல, சரீரமும் அறிவுக்கிளர்ச்சிக்கோர் காரணமாத்திரையேயாம். கண்ணொளிகுன்றினூர்க்குக் கண்ணடிபோல, ஆன்மாவுக்கு தேகேந்திரியங்களெல்லாம் அறிதொழிற்கியைந்த உபகாரககருவிகளாம். இவற்றைச் சற்சமயசுருதிகளிற் சுருக்கமறக்காணலாம்.

கூ-வது. பைத்தியரோகிகண் முதலாயினூர்க்கு, அவர் தேகத்துக்கு மருத்துவஞ்செய்ய அறிவு தெளிவுறுதலானும், தெளிந்த அறிவுடையார் நச்சுப்பதார்த்தங்களை உட்கொள்ள, அப்பதார்த்தங்கள் அவர்களது தேகத்திற்ருக்கி அறி

வைமய்க்குதலானும், அறிவு தேகத்தின்குணம் என்றன்றோ பெறப்படும் எனப்பின்னும் ஆசங்கைநிகழுமாயின், இன்னோரன்ன விஷயங்களிலே நாம் சிந்திக்கவேண்டுவது உடம்புக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தத்தை, உயிர் உடம்பின் வேறாயதாயினும், அவ்விரண்டனுக்குமுள்ள அந்நியோந்நிய சம்பந்த ஒற்றுமைபற்றி, உயிரின்கணுள்ள அறிவு உடம்பின்றிச் சேட்டியாதாம். பார்வை கண்ணுக்குரியதொழிலாயினும், வெள்ளொளிப்பருவத்து, அஃது கண்ணடியின்றிச் சேட்டியாது. இங்ஙனமே உயிர் அறிவுடைப்பொருளாமாயினும் அவ்வறிவு உடம்பின்றிச்சேட்டியாது. இன்னமும் கண்ணினதுபார்வை கண்ணடியின்து இயற்கைமுறைக்குத்தக்கவாறு விகற்பித்துச் சேட்டித்தல்போல், உயிரின்அறிவும் அதன் சேட்டிப்புக்கு உபகாரக்கருவியாயுள்ள தேகத்தின் இயற்கைமுறைக்குத்தக்கவாறு விகற்பமுறுமாம். கண்ணடி செம்மை, பசுமை, வெண்மை முதலிய நிறங்களையுடையதாமிடத்து, எமது பார்வைக்குவிடயமாகும் பொருளும் அந்த அந்த நிறமேகொண்டு எமக்கு விடயமாவதுபோலவும், கண்ணடியின் ஆற்றலுக்குத்தக்கவாறு எமதுபார்வை சேய்மையினும், அண்மையினும் சென்று தொழிற்படுவதுபோலவும், எமது அறிவுக்குக் கண்ணடியாயுள்ள தேகேந்திரியங்கள் எங்ஙனம் விகற்பமுறுமோ, அவ்விகற்பத்தின் அளவைக்கியைய எமது அறிவின் சேட்டிப்பும் தாக்குற்றிடுமாம். இங்ஙனம் தாக்குண்டல்பற்றி அறிவுக்குபகாரகமாயுள்ள கருவிகளை அவ்வறிவென்றாவது அதனுக்குரிய முதலென்றாவது மயங்குதல் பேதமை என்க. நந்தேகேந்திரியங்கள் அறிவின் சேட்டிப்புக்கியைந்த உபகாரககருவிகளாதல்பற்றியே இக்கருவிகள் பழுதுறுமிடத்து, இவற்றாற்றாக்கப்படுமளவைக்கு, நமது அறிவும் பழுதுறுவது. ஆதலினே அக்கருவிகளின்கணுள்ள பழுதுக்குப் பரிகாரம் செய்ய, அதுகாரணமாக நமது அறிவும் தெளிவடைவதாம். இங்ஙனமன்றி அறிவு தேகேந்திரியங்களிற்றானே ஒருங்கு தோங்கிநிற்பதொன்றாகுமேல், அக்கருவிகட்குப் பரிகாரம்செய்து எந்த மூடனையும் மகாசதுரனாக்கிவிடலாமே. இதுகூடா

மை, அறிவு உடம்பின்வேறுதல்பற்றியே என்பதும், தேக த்துக்கு மருத்துவஞ்செய்ய அறிவு தெளிதன்முதலிய வெல் லாம், அவ்வறிவுக்கு இத்தேகாதிகள் எல்லாம் ஓர் அளவை க்கு உபகாரக் கருவிகளாய் அமைந்திருத்தல்பற்றியே என்ப தும் காண்க.

கO-வது. உயிரின்கணுள்ள அறிவு உடம்பின்றி சேட்டி யாதென்றனிரன்றே? சித்தாயுள்ள ஆன்மாவினறிவு சேட்டி த்தற்குச் சடமாயுள் உடம்புவேண்டப்படுமாறு எங்ஙன் என் றோர் ஆசங்கை நிகழுமாயின்; கண்ணடிக்குச் சட்சு உணர் ச்சி இல்லையாயினும், அஃதவ்வுணர்ச்சியையுடைய கண்ணு க்கு உபகாரக்கருவியாய் நிற்றல்போல, உடம்பு சடப்பொரு ளாயினும், ஆன்மாவின் அறிதொழிற் சேட்டிப்புக்கு அஃ தோர் உபகாரககருவியாம். ஆன்மா தன்னைப்பந்தித்துள்ள பாசங் காரணமாக யாதொன்றையும் தானேயாய் அறிதல் கூடாத கேவலாவத்தையிற்கிடத்தலின்; அங்ஙனம்கிடக்கும் ஆன்மாவுக்கு அறிவுபலிக்குமாறு, அதற்கியைந்த கருவிகள் அமைந்துளதோர் தேகத்தைக்கொடுத்து, அத்தேகத்தையும் ஆன்மாவையும் குணமும் குணியும்போல அந்நியோந்நிய சம்பந்தஞ்செய்து, இச்சம்பந்த ஆற்றலால் இக்கருவிகள் எல் லாம், முடவனுக்கு ஊன்றுகோல்போல ஆன்மாவுக்கு அறி வு பலித்தற்கியைந்த கருவிகளாய் அமையுமாறு, இத்துணைப் பெருஞ் சிறப்புடையதோர் உபாயத்தைப் பரமகாருண்ணிய ராகிய கடவுள் செய்துவைத்தனர் என்க. *

* இந்த உபாயமாகிய தேகமும் சூக்குமதேகம் என்றும் தூல தேகம் என்றும் இருவகைப்படும் என்றும், கரணங்கண் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்துமே அருவுடம்பாகிய சூக்குமதேகம் என்றும், சத்ததாதுக்களாலாகிய இவ்வருவுடம்பே தூலதேகம் என்றும், ஆன் மாவை முன்னர்ச் சூக்குமதேகத்துய்த்துப் பின்னர் அவ்விரண்டை யும் தூலதேகத்தமைக்கவே அதன் அறிவு சூக்குமங் காரணமாகத் தூலத்தின் உதவியைப்பெற்று புறத்துள்ள விடயங்களிற் சென்று சேட்டிக்குமென்றும், இக்கருவிகள் இன்றி ஆன்மாவுக்கு அறிவுபலி த்தல் இந்நிலையிலே கூடாதென்றும், இந்நிலையைக்கடந்து, இக்கரு விகளின்சகாயமின்றி அறிவைப்பெறுமுபாயமே முத்தியுபாயம் என் றும் சற்சமயம் விளக்குமாற்றை நாடிக் காண்க.

கக-வது. நன்றுகூறினீர். மூர்த்தபதார்த்தமாகிய உடம்பையும் அமூர்த்தபதார்த்தமாகிய ஆன்மாவையும் அந்நியோந்நிய சம்பந்தஞ்செய்தல் யாங்ஙனம் என்பீரேல்; ஆம். இன்னோரன்ன திருக்குகளை முட்டறுத்தற்கன்றே சமயச்சுருதிகள் போந்தன. இவற்றை எல்லாம் சற்சமயம் எடுத்துப் பிரதிபாதிக்குமாற்றை ஆராய்ந்து காண்டலே மரபாகும். ஆன்மாவுக்குரிய தனுகரணபுவனபோகங்கள் எல்லாம மாயையின் காரியமாதலாலும், இந்தமாயை ஆன்மாவைப்பந்தித்து அதனோடு அந்நியோந்நியசம்பந்தங்கொண்டு நிற்றலானும், மாயாகாரியங்களாகிய தனுகரணாதிகள்தாமும் அந்த ஆன்மாவோடு அந்நெறிச்சம்பந்தமேகொண்டு நிற்குமென்க.

கஉ-வது. மாயை ஆன்மாவைப் பந்தித்துநிற்குமென்றால் அதுவும் ஓர் அமூர்த்தபதார்த்தமாகுமன்றே. அந்த அமூர்த்தம் மூர்த்தங்களாகிய தனுவும் புவனமும் என்றுள்ள இவற்றைத்தருமாறு எங்ஙனம் என்பிரேல்; இவ்வெல்லாம் சற்சமயசுருதிகளால் இனிது விளக்கப்பெறுவனவாம். மாயை ஓர் அமூர்த்த பதார்த்தமேயாயினும், அஃதோர் நிரம்பியசாமர்த்தியமுடையனாற் றொழிற்படுத்தப் படுங்காலத்து, எவ்வெவ்வகைப் பதார்த்தங்களையும் பிறப்பித்தற்கியைந்த சத்திகளைத் தன்மாட்டுடைமையால், அமூர்த்தமாகிய அம்மாயையினின்று மூர்த்தங்கள் எல்லாம் தோன்றுமென்க. வித்தினிடத்தே கிளை கொம்பர்களும், விந்தினிடத்தே இரத்தமும் என்பும் முதலிய சத்ததாதுக்களும் சூக்குமித்துக்கிடந்தாலென்ன, மாயையின்கண்ணே மூர்த்தங்களனைத்தும் சூக்குமித்துக்கிடக்குமென்க. இதுபற்றியே மாயையை விந்தைகட்கெல்லாம் நிலைக்களமென்றும பிரபஞ்சத்துக்கு வித்தென்றும் ஆன்றோர் கூறிவைத்தனர். வித்தும் விந்தும் மூர்த்தங்களாதலின் அவற்றின்கட் பிற மூர்த்தங்கள் சூக்குமித்துக்கிடத்தல்சாலும், அமூர்த்தத்தின்கண் மூர்த்தம் சூக்குமித்துக்கிடத்தல் யாங்ஙனம் என்பிரேல்; நாம் வித்து விந்துகளையும் அவற்றாற் பெறப்படுமவற்றையும், அமூர்த்த மூர்த்தங்கட்கு உதாரணமாகக் காட்டினுமல்லம். ஓர் உண்மைப்பொருளிவி

ருந்து அதனோடுவேறுபட்ட பிறிதோர் உண்மைப்பொருள் தோன்றுமாற்றை விளக்குதற்பொருட்டே அந்த உதாரணங் கள் எடிமாற்காட்டப்பட்டன. ஒன்றிலிருந்து அதனின் வே றுபட்ட பின்னொன்று தோற்றுமெனவே, அமூர்த்தத்திலிரு ந்து அதனோடு வேறுபட்ட மூர்த்தம்தோன்றுதலும் சாலும் என்பது தானேபோதருமாம். இனி மூர்தத அமூர்த்தங்களை எடுத்துச் சிந்திக்குமிடத்தும், உருவமாகிய மலரில் அருவ மாகிய மணந் தோன்றுமென்றால், அருவமாகிய மாயையி லிருந்து உருவமாகிய பிரபஞ்சந் தோன்றுதலும் இனிது கூடு மென்க.

கந-வது. ஒன்றிலிருந்து அதற்கினமாயதொன்று தோன் றுமாறன்றே வழக்கின்கணுள்ளது? இச்சாதாரணவிதிக்கு மா றாக அமூர்த்தத்திலிருந்து அதற்கினமல்லாத மூர்த்தம் தோ ன்றுமென்பதெங்ஙனம் பொருந்தும் என்பிரேல்; மூர்த்த அமூ ர்த்தங்களை இனமில்பொருள்களெனச் சாதித்தல் எப்போதும் கூடாது. பொருள்கள் ஓர் ஓர் காரணத்தைநோக்க இனமில் லனவாகக் காணப்படினும், பின்னோர் ஓர் காரணத்தைநோ க்க இனமுள்ளனவாகவும் துணியப்படும். மூர்த்தமும் அமூ ர்த்தமும் தத்தஞ்சிறப்பியல்பை நோக்குமிடத்துப் பேதப்படு வனவாயினும், அவ்விரண்டும் உண்மைப்பொருள்களும் சட ப்பொருள்களும் என்ற அளவினே அவ்வொற்றுமைபற்றிய இனத்தை நிரம்ப உடையனவாம். இன்னமும் மூர்த்தங்கட் குரிய சூக்குமகாரணங்கள், அமூர்த்தமாகிய மாயையின்கணு ள்ளமைபற்றி, அவை பின்னும் இனமுடையனவென்றே கொ ள்ளப்படும். இனி ஒன்று பின்னொன்றற்குப் பிறப்பிடமாயமை தற்பொருட்டு அவ்விரண்டும் ஓர் இனப்பொருள்களாய், அ தாவது ஓர் வகைப்பொருள்களாய், இருத்தல்வேண்டும் என் பதும் எப்போதும் பெறப்படாது. இப்பியில் இருந்து அத னோடு ஒற்றுமையில்லாத முத்துப்பிறக்கின்றது. கள்ளியில் இருந்து அகில் பிறக்கின்றது. அருவமாகியவாயுவில் இருந்து உருவமாகிய அக்கினிபிறக்கின்றது. இங்ஙனமே அமூர்த்தமா

கிய மாயையிலிருந்து மூர்த்தமாகிய பிரபஞ்சந்தோன்றுதலும் இனிது சாலுமென்க.

கசு-வது. சடத்தின்கட் சித்துப்பிறத்தல் சாலாதெனச் சாதித்தீர், இப்போது அமூர்த்தத்தின்கண் மூர்த்தம் பிறக்கும் எனச் சாதிப்பதெப்படி என்பீராயின், சடமோ சித்துக்கு ஒருங்கே மறுதலையாயுள்ளது. சடத்தின்கண்ணே யாதொரு சித்தியல் சூக்குமதரமாயேனும் அமைந்து கிடப்பதில்லை. அதாவது சித்தின் அபாவமே சடம் என்றபடி. எனவே, இன்மையில் இருந்து உண்மை தோன்றுதல் கூடாமையின், சடத்திலிருந்து சித்துத்தோன்றுதலும் கூடாதெனச் சாதித்தாம். மாயைக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தம் இங்ஙனமாயதல்ல. மாயை ஓர் அமூர்த்தவஸ்துவாயினும், அதனகத்தே பிரபஞ்ச தோற்றத்துக்கியைந்த சூக்கும காரணங்கள் அமைந்துகிடத்தலால், அது பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தல் இனிது சாலுமென்க. மாயை ஓர் அமூர்த்தவஸ்துவென்பதனுல், அது மூர்த்தங்கட்காவது அவற்றின் காரணங்கட்காவது அபாவ சம்பந்தமுடையது என்பது பெறப்படாது. வடிவளவிற்றனக்கோர் மூர்த்தமில்லதே அமூர்த்தம். இந்த அமூர்த்தத்தின்கண்ணே மூர்த்த பிரபஞ்சங்கட்குரிய சூக்கும காரணங்கள் அமைந்து கிடத்தலால், மாயைக்கட் பிரபஞ்சந் தோன்றுமென்பது. மூர்த்தங்கட்குரிய சூக்குமகாரணம் அமூர்த்தமாயிடுதல் சாலுமோவெனின், இனிது சாலுமென்க. என்னை? யாதொருபொருள் தோன்றுதற்குரிய முதற்காரணம் அப்பொருளின் வேருயிடுதல் இனிது சாலுமென்பது மேலே விளக்கப்பட்டது. அதாவது: அருவங்களாகிய இருதிற வாயுக்கள் காரணமாக உருவமாகிய அக்கினிதோன்றுதல்போலவும், வெப்பமாகிய அக்கினிகாரணமாகத் தட்பமாகிய சலந் தோன்றுதல்போலவுமாம். எந்தெந்தப்பொருளும் தோன்றுதற்குரிய முதற்காரணத்திலே, அந்தந்தப்பொருட்டோற்றத்துக்குரிய அமைதியே காணப்பட வேண்டுவது. இது காணப்பட்டுவிட்டதாயின், காரண காரியங்களிரண்டும்

தம்முண் வேறுபடுதல்பற்றிப் பெறப்படுவதோர் இழுக்கென் றுமில்லையாம். அன்றியும காரணங்கள் காரியங்களின் வேறு பட்டுக்கிடத்தல் உலகத்திலே அநேகாநேகமாய்க் காணப்படுவ துண்டு. நுண்ணிதிலிருந்து மகத்துப்பிறத்தல் நூதனமல்ல வே. ஆகவே நுண்ணிதாகிய அமூர்த்தம் மகத்தாகிய மூர்த்த த்தைத் தருதலும் நூதனமல்லவென்க.

இஃதாயின் சித்தினுக்குரிய சூக்கும்காரணமும் சடத்தின் கண் அமைந்து விளங்கும் எனக்கொண்டால், என்னெனின் ரேல்; சித்தியலுக்குரிய யாதொரு காரணம் சடத்தின்கண் உண்டென்றால், அதனைச் சடமென்றல் அமையாது. என் னை? சித்தும் சடமும் ஒன்றனுக்கொன்று எதிர்மறைப் பதார் த்தங்கள். ஒன்றன் அபாவமே மற்றையதாம். அதாவது அறிவும் அறிவின்மையும் என்றபடி. அறிவினுக்குரிய யா தொரு காரணம் அறிவின்மைக்கண் அமைந்து விளங்குவது கூடாது. அறிவின்மைக்குரிய யாதொரு காரணம் அறிவின் கண் அமைந்து விளங்குவது கூடாது. ஆதலின் சித்தியலுக் குரிய யாதொரு காரணம் சடத்தின்கண் உண்டெனல் அமை யாதபடி காண்க.

அமூர்த்தம் தன்னளவில் ஓர் வடிவில்லதாயினும், ஓர் ஓர் தொழிலாற்றலை ஏற்குமிடத்து மூர்த்தமாய் பரிணமித்த ற்கியைந்த சக்தியையுடையது. மூர்த்தங்கட்காவது அவற்றி ன்காரணங்கட்காவது யாதோராற்றானும் விருத்தமாகாதது. ஆதலின் அது மூர்த்தத்தைப் பிறப்பித்தல் மிகுதியும் தகுதியு டைத்தாம். அன்றியும் மூர்த்த அமூர்த்தங்கள் இரண்டும் சட ப்பொருள்கள். ஒன்றனுக்கொன்று விருத்த சம்பந்தமில்லாத பொருள்கள். காரணகாரிய சம்பந்தமுடைய பொருள்கள். ஆதலின் அவை ஒன்றன்கண் ஒன்று பிறந்தற்குரிய இனமு றையை நிரம்ப உடையனவாம். சடமும் சித்துமோ இங்ங னமாகிய சம்பந்தத்தைச் சிறிதாயினும் உடையனவல்ல. அவை, உண்மையும் இன்மையும் போல, ஒன்றன் அபாவமே

மற்றையதாய் அமைந்துள்ள எதிர்மறைப்பொருள்கள். இவை ஒன்றுக்கொன்று காரணமாதல் சிறிதும் பொருந்தாதென்க.

மூர்த்த அமூர்த்தங்கள் காரணகாரிய சம்பந்தமுடையனவாதல் யாங்ஙனம் என்பீரேல்; அமூர்த்தம்தடித்து மூர்த்தமாதலினென்க. தம்மளவில் யாதொரு மூர்த்தலக்ஷணமில்லாத பொருள்கள் தடிப்பதனால் மூர்த்தம்வந்தெய்துமோ என்பீரேல், நன்றாக வந்தெய்துமாம். எங்ஙனம்? மென்மையும் வன்மையும்போல: மென்மை வன்மையின்வேறாய் தன்னளவில் யாதொரு வன்னெறிபடைத்திலதாயினும், அம்மென்மை தடித்து வன்மையாயிடுதல் சாலுமாம். அதுபோல, அமூர்த்தம் தடித்து மூர்த்தமாயிடுதலும் சாலும் என்பதுகாண்க. மூர்த்தமில்லதே அமூர்த்தமாகுமேல், இந்த அமூர்த்தங்கள் எத்தனை கூடினாலும் மூர்த்தம் பெறப்படுமாறெப்படி என்றோர் ஆக்ஷேபம் நிகழுமாயிற் கூறுதும்: அமூர்த்தம் தடிப்பது, அங்ஙனம் தடித்தற்குரிய சில தொழிலாற்றலை ஏற்றுத் தனது சுபாவிகதர்மத்திற்பிரிந்து விகாரமுற்றுப் பரிணமிப்பதாம். இங்ஙனம் பரிணமித்தற்குரிய சக்திகள் பற்பல அதனிடத்துண்டு. நீர் கட்டியாவதுபோல. இதுபற்றியே மாயையை விந்தைகட்கெல்லாம நிலைக்களம் என்றும், பிரபஞ்சத்துக்கு வித்தென்றும், கடவுளுக்குப் பரிக்கிரகசத்தி என்றும் சமயசாத்திரங்கள் சாதிப்பது. *

கரு-வது. இங்ஙனமேல், அமூர்த்தங்கள் மூர்த்தங்களைப் பிறப்பித்தலை நாம் உலகத்தில் காண்கின்றிலமன்றே என்பீ

* அமூர்த்தமாகிய மாயைகாரணமாகப் பிரபஞ்சந்தோன்று முறையை சமயசாத்திரங்கள் விருத்திக்கிரமமாக எடுத்து வித்தரிக்கும். பிரபஞ்சகாரணங்களாகிய ஐவகைப்பூதங்களும் ஒன்றைநோக்க ஒன்று சூக்குமமாகி அருகி அருகிச்சென்று இறுதியில் அதிசூக்குமமாகிய மாயையிற்சென்று முற்றுமாம். இவ்வதிசூக்குமமாகிய மாயை அல்பதூலமாகிய ஆகாயத்தைப் பிறப்பிக்க, அது தன்னிற் சிறிதுவிஞ்சிய தூலமாகிய சத்தத்தைப்பிறப்பிக்க, அச்சத்தத்திலிருந்து மற்றைய பூதங்களும் படிமுறையே தடிப்புற்றுத் தோன்றுமுறைகளைச் சமயசாத்திரங்களில் நாடிக்காண்க.

ராயின், அமூர்த்தத்திலிருந்து மூர்த்தம்பிறத்தல் சால்புடைத்தொன்றேயாயினும், அது தக்கசாமர்த்தியம் தொழிற்படுமிடத்தன்றிக் காணப்படமாட்டாது. அதாவது, கடவுளுடைய திருவருள்விலாசத்தானன்றி அமையாது என்றபடி. அந்தத் திருவருள்விலாசம் லௌகிகர்களாகிய எம்மனோர்க்கு விடயமாந் தகைத்தன்றாதலின், அது பிரபஞ்சம் அனைத்துக்கும் அடிப்படையிலுள்ள மாயைக்கட் காண்டற்குரியதன்றி, இந்தஉலகத்திலே சாதாரணமாகக் காணுந்தகையதன்றென்க.

கரு-வது. நல்லது. இங்ஙனமேல், இவ்வாறயதோர் மாயை உண்டென்பதும், அதனிடத்தே மூர்த்தகாரணங்கள் எல்லாம் சூக்குமித்துக்கிடக்குமென்பதும், அதில்நின்றுதானே பிரபஞ்சதோற்றங்கள் எல்லாம் உற்பவித்தன என்பதும், எங்ஙனம் காணப்பட்டன என்றோர்வினு எழுவதுண்டாயின்; நாம் பிரபஞ்ச உற்பத்திக்கிரமத்தை எடுத்து விசாரித்துக்கொண்டு செல்வம் எனின், இப்பிரபஞ்சம் தோற்றுதற்கோர் காரணம் வேண்டும் என்பதும், அக்காரணம் அவயவியாயிருப்பின், அதுவும்காரியமாய் அதனுக்குமோர் காரணம் வேண்டப்படுமாதலின், அஃதோர் நிரவயவப்பொருளாகிய அமூர்த்தவஸ்துவாயிருத்தல் வேண்டும் என்பதும், அது நிரவயவியாயினும் அதன்கணின்றே அவயவிகளாகிய மூர்த்தங்கள் தோற்றவேண்டிக்கிடத்தலின், அதன்கண் இவ்வவயவிகளைத் தோற்றுவித்தற்கியைந்த சத்திகளுண்டென்பதும், ஆகவே மூர்த்தகாரணங்கள் எல்லாம் ஆண்டுச் சூக்குமித்துக்கிடக்கும் என்பதும், அந்தச் சூக்குமகாரணங்கள், வல்லானொருவனது தொழின்முயற்சி காரணமாகத் தூலங்களாய் விகற்பித்து இப்பிரபஞ்சத்தைப் பிறப்பிக்குமென்பதும் தெற்றெனப் போதருமாம். இங்ஙனமின்மேல் இப்பிரபஞ்ச வியவகாரத்தை முடித்துக்கொள்ளுதல் கூடாதாதலின், இவ்வுண்மை சிலையிலெழுத்துப்போல் திட்பமாக நாட்டப்படுமென்க.

(உ.) ஆன்மா ஒன்றுண்டென்பதை இத்தேகசம்பந்தங்கொண்டு நிச்சயிப்பதன்றி, அதனை ஒழித்து நிச்சயித்தலும் கூடு

மோ? ஆன்மா தேகத்தின் வேறுகுமேல் அதனை அத்தேகத் தோடொட்டிக் காட்டாது பிரத்தியேகமாகக் காட்டுக: அதாவது, நாம் இறந்தபின் அவ்வான்மா உண்டென்பதைத் தேக சம்பந்தமின்றி நாட்டிக்காட்டுக என்பிராயின், நாம் இறந்த பின்னும் ஆன்மா உண்டென்பது சுருதிவாக்குகளாற் பெறப் படும். இச்சுருதிவாக்குகளை அங்கிகரியாது "கண்டதேகாட்சி" "பிரத்தியக்ஷயமேபிரமாணம்" "நாம் அறியாததை நம்பேம்" என்று நிற்பார்க்கு, அவர் அறிவுக்குப் புலப்படத்தக்க இத்தேகசம்பந்தநிலையை எடுத்து அதுகொண்டே ஆன்மாவைக் காட்டத்தக்கதன்றி, அதனுக்கப்பாற்பட்டதும், ஆகவே அவர் அறிவுசென்று தாக்குதல் கூடாததுமாகிய விதேகநிலையை எடுத்து, அவர்விரும்பிய முறைப்படி ஆன்மாவைக் காட்டுதல் கூடார்தன்றே. தாம் காணுமாறு காண்பனவற்ருல் ஆன்மாவைக் காட்டுக என்று கேட்டுநிற்குமவர், காணுத நிலையில் ஆன்மாவைக்காட்டுக என்றுகேட்டல் தங்கோளைத் தாமே மறுத்தவாருய் மதானுஞ்ஞையின்பாற்படுமென்க.

ஆயினும் ஒன்றுசொல்வம்; தேகசம்பந்தநிலையை எடுத்துப் பரீக்ஷிக்குமளவிலே, இத்தேகத்தின்வேருய் இதனேடு காரணகாரியத் தொடர்பில்லதாயதோர் ஆன்மா உண்டென்பது பெறப்படுமாயின், அச்சம்பந்தநிலை குலையுங்காலத்துத் தேகம் நீங்க ஆன்மா சேஷிக்கும் என்பது தானேசித்திக்குமன்றே. ஆகவே இறந்தபின் ஆன்மா உண்டென்கை செவ்வி திற் புலப்பட்டவாருயிற்றும்.

ஓர் சமுத்திரத்தின்கண் நீர்ச்சுழியுண்டென்பது அச்சுழியின்கட் பட்டதோர் பொருள்கொண்டே நிச்சயிக்கப்படுமாயின், பின்னர் ஆண்டு யாதானுமோர் பொருள் அகப்படாக் காலத்தும், ஆங்கோர் சுழியுண்டென்பது இனிது சாதிக்கப் படும். அதுபோல, ஓர் ஆன்மா உண்டென்பது தேகங்கொண்டே காணப்படுமாயின், அத்தேகம் ஒழிந்தபின்னும் அந்த ஆன்மா உண்டென்பது சாதிக்கப்படுமென்க.

(ரு.) இங்ஙனம் போந்தவாற்ருல் நந்தேகத்தின்கண்ணே அத்தேகத்தின் வேருயதோர் சித்துப்பொருள் உண்டென்பதும், அச்சித்துப்பொருள் தான்விரும்பியவாறு ஓர் ஓர் தேகத்தை எடுத்தலும் அதன்கண் நிலையுதலுறுதலும் கூடாதாதலின், அப்பொருளை உடம்புகடோறும் புகட்டி நிறுத்திக் காலாந்தரத்தில் நீக்கவல்லார் ஓர் வன்மையாளர் உளர் என்பதும் போந்தபடி கண்டுகொள்க.

## ச-ம் அதிகரணம்.

(க.) இனி எம்மிடத்தே அமைந்துகிடப்பனவாகிய மனம் புத்தி அகங்காரங்களாகிய கரணங்களும், சோத்திரம் தொக்கு சிங்ஙுவைமுதலிய புலன்களும் படைத்துள அருமையையும், பெருமையையும், சிறப்பையும், விநோதத்தையும் எடுத்து ஒருசிறிது பரீக்ஷிப்பாமெனின், இவை இப்பிரபஞ்சத்திலே காணப்படும் எவ்வகைப் பதார்த்தங்களானும் அமைதல் கூடாதென்பது எமக்கு இனிது புலப்படும். இங்ஙனம் சிறந்த இக்கருவிகள் எல்லாம் எமக்குக் கிடைத்தவாறெவ்வாருே? இவை தாமேவந்தடையத்தக்க அறிவுடைப்பொருள்களுமல்ல. எமது தேகத்தின்கணுள்ள சத்ததாதுக்களின் காரியமாவனவுமல்ல. பின்னை இவை எல்லாம் எம்மிடத்து வந்தமைந்தவாறெவ்வாருே? இவற்றை எல்லாம் எமக்குத் தந்தருளினுர் ஒருவர் உளரென்பது நாம் சொல்லிக்காட்ட வேண்டுமா?

(உ.) அற்றன்று: இவைகள் எல்லாம் எமதுடம்பின்குணங்களே என்பிரேல், அஃதேல் இவைகள் உறக்கத்தினும் தொழிற்படுதல்வேண்டும். அங்ஙனமின்மையின் அவற்றை உடம்பின்குணமெனல் கூடாது. இனி உயிரின்குணந்தான் எனக்கோடலாமோ என்ருல், இக்கரணுதிகள் மயக்குற்றுநிற்கும்நிலையே உறக்கம் ஆதலானும், அவ்வுறக்கத்திலே ஆன்மாதான் இவற்றுக்குவிடயமாகும் பொருள்களைக் கிரகித்தல் கூடாமையானும்,இவற்றை ஆன்மாவின் குணமெனல்தானும்

கூடாது. இவற்றைச் சகாயமாகக்கொண்டு ஆன்மா அறிவு சேட்டிக்கப்பெறும் என்பதே துணிபாகும்; ஆன்மாவையும் பொறியாதி புறத்துறுப்புகளையும் இவ்வகத்துறுப்புகள் இடைநின்று பந்தனம் செய்து, அப்புறத்துறுப்புகள் காரணமாகத் தாம் அறிவைக்கிரகித்து ஆன்மாவுக்குக் கொண்டுசெலுத்துமென்க. இதுபற்றியே இக்கரணாதிகளெல்லாம் ஆன்மாவுக்குச் சூக்குமதேகம் எனப்படுமாம். ஆன்மாவின் அறிவு இக்கரணங்களின்றிச் சேட்டியாது. இக்கரணங்களும ஆன்மாவின் அறிவாற்றலின்றித் தொழிற்படமாட்டா. இவ்விரண்டும் பொறியாதிபுறத்துறுப்புகளின்றி வெளியே புக்குவிடயங்களிற்றாக்கி அதுகாரணமாக அறிவு சித்திக்கமாட்டாவாம். இதை ஒருவாறு விளக்குமிடத்து கண்ணுடையானும், கண்ணும், கண்ணடியும்போலாம். இவற்றைக்குறித்துத் தத்துவ சாத்திரங்கள் பிரதிபாதிக்குமாற்றை நாடிக் காண்க.

(ரு.) இங்ஙனஞ் சிறந்த இக்கரணேந்திரியங்கள் ஓர் ஓர் விஷயத்தைக் கிரகிக்குமாறும், கிரகித்ததைச் சேமித்துவைக்குமாறும், சேமித்துவைத்ததைப் பின்னர் எடுத்தாளுமாறும் எத்துணைப் பெருஞ்சிறப்பின என்பதும், எத்துணைப் பெருநூதன மரபின என்பதும், இத்துணைப் பெருஞ்சிறப்பும் நூதனமும் அமைந்த இக்கரணாதிகள் எம்மிடத்துக் காணப்படுவதில்லையாயின் நாமும் சடமாத்திரையேயாய்க் கிடப்பேமென்பதும், இத்துணை விசிட்டமும் விநோதமும் அமைந்த இவ்வேதுக்களை அமைத்தற்கமைந்த காரணங்கள் பிறிதில்லை என்பதும் தெள்ளிதிற் பெறப்படவே, இவற்றை எல்லாம் எமக்குத் தந்தருளினர் ஒருவர் உளர் என்பது தானே சித்திக்குமாம்.

இங்ஙனமே ஓரறிவுமுதல் ஆறறிவு இறுதியாயுள்ள சீவதோற்றங்களில் எல்லாம் காணப்படும், சீவத்துவம் விவேகத்துவம் முதலிய விநோதமரபுகள் எங்ஙனம் அமைந்தன? இவைகள் ஈண்டுள்ள பூதபௌதிகங்களால் ஆதல் சிறிதும் கூடாதன்றே. பின்னை இவற்றை அமைத்தற்கோர் காரணம்

வேண்டப்படுமென்றே! அக்காரணந்தான்யாதோ? என்று நாம் சித்தசமாதானத்தோடு தீர்க்கவிசாரணம் புரிவாம் எனின், அவ்விசாரணத்தால் கடவுளுண்மை பகிரங்கமாகப் புலப்படுமென்பது கண்டுகொள்க.

## ரு-ம் அதிகரணம்.

(க.) உலகத்திலேயுள்ள விநோதாச்சரிய மரபுகளை ஒரு சிறிது எடுத்துச் சிந்திக்குமிடத்து, அவை எல்லாம் "கடவுள் ஒருவர் இருக்கிறார் இருக்கிறார்" என்று ஆயிரநாக்கொண்டு ஆர்ப்பரிக்கும். இவற்றைக்குறித்து உ-ம் சூத்திரத்தின்கட் சிறிது விரித்துரைத்தாம். இங்கே கடவுளுண்மையை நிறுத்திக் காட்டவல்ல சில கூற்றுகளைமாத்திரம் எடுத்துக் காட்டுவாம்:

க. மனிதருடைய அவயவச்சிறப்பு முதலாயினவெல்லாம், அவர்கள் கருப்போற்பத்தியாங்காலத்து, பெற்றோரது கட்புல மனப்புலங்களுக்கு விடயமாகும் பொருள்களின் அளவினவாயே பெரும்பாலும் அமையுமென்பது சாத்திரயுக்தம். இத்துணிபை மேற்கொண்டு நோக்குமிடத்து, ஆண் பெண் என்னும் இருவகைப் பேதங்களின்கணுள்ள சிறப்பிலக்கணங்கள் ஆங்காங்கமையுமாறு எவ்வாறே? இவ்விரு பேதங்களும் கருவிலுற்பத்தியாமிடத்து, இவற்றது வெளியுறுப்புகள் பெற்றோரது கட்புல மனப்புலங்களுக்கு ஒரோவாறு விடயமாவதன்றி, உள்ளுறுப்புகள் அங்ஙனமாதல் இல்லையாம். ஆகவே அவ்வகத்துறுப்புகளாய சிறப்பிலக்கணங்கள், ஆணுக்குவேண்டியன ஆணுக்கும், பெண்ணுக்குவேண்டியன பெண்ணுக்குமாகக் கிரமந்தவறாது அக்கருப்பத்தின்கட் டோன்றுமாறு எங்ஙனே? பெண்டோற்றங்களிற் கருப்பை அமைதலும், தனம் பாரிக்குமியல்பும்; ஆண்டோற்றங்களில் தேகபலமும் வீசைமுளைத்தலும் முதலிய நெறியும் அமையுமாறெங்ஙனம்? இவைகள் கருப்போற்பத்தியாங்காலத்து பெற்றோரது புலன்

களுக்கு விடயமாதலுமுண்டோ? இல்லையே. இல்லாத போது இந்தச் சிறப்பிலக்கணங்களை அவ்வத் தோற்றங்களின்கண் வரன்முறை பிறழாது அமைத்தற்கோர் காரணகர்த்தன் வேண்டும் என்பது செவ்விதிற் போதருமென்க.

உ. விலங்கினங்களைக் குழவிப்பருவத்தே ஆகாரமருத்தி வளர்த்து, அவற்றை இறந்துபடாது காத்துவரும் ஏகதஞ்சம் அவற்றைப் பெற்றுள்ள தாய் விலங்குகளன்றிப் பிறிதில்லையாம். இத்தாய் விலங்குகளின் சகாயமின்றேல், விலங்கினங்கள் எனப்படும் சீவவர்க்கம் உலகத்தில் உளவாதல்கூடாதாய் ஒழிந்துவிடும். இத்தாய் விலங்குகள் இங்ஙனம் தஞ்சமாய் அமைந்து தத்தம் குழவிகளைப் போஷிப்பது, அவற்றின் உள்ளத்தின்கண்ணே அக்குழவிகளை நோக்கிப் பெருநூதனமாய் அமைந்துள்ளதோர் அத்தியந்த அன்பேயாம். முன்னில்லாத இவ்வன்பு அக்காலத்தே அவ்விலங்குகளிற் கிளருமாறும், அதுகாரணமாக அவ்விலங்குகள் தத்தம் குழவிகளை, ஆகாரமருத்தியும், சத்துருக்களினின்றுகாத்தும், மிக்ககரிசனையோடு வளர்த்துவரத்தக்கதாக அவ்வன்பு மேறுகிவளர்ந்து படைத்துளமுதிர்ச்சியும், இங்ஙனமாய அன்புதானும் அக்குழவிகள் தமது சுவ ஆற்றல்கொண்டு இயங்கும் பருவம் படைக்குந்துணையுமே நிலையுதலுற்றுக்கிடந்து, அப்பால் அந்நிலைகுலைந்தொழியும் பெற்றியும் எவ்வாறமைந்தனவோ என ஆராய்வாம் எனின், இவை யாதோர் சடபதார்த்தத்தின் குணமல்ல என்பதூஉம், உலகத்திலே சீவவர்க்கங்களைப் பல்கச்செய்தற்கோருபாயமாக இவற்றை ஓர் காரணகர்த்தன்றானே அத்தாய்விலங்குகளின் உள்ளத்தின்கண் உதிப்பிப்பர் என்பதூஉம் பொள்ளெனப் புலப்படுமென்க.

ங. உலகத்தின்கணுள்ள சிருட்டிபேதங்களைச் சாத்திர தீபமேற்றி நுனித்துநோக்குவாம் எனின், அவற்றின்கண்ணே பயன்றூக்கிச் செய்யப்பட்டமையைக் காட்டும் குறிகள் பல்லாயிரம் காணப்படும். பயன்றூக்கிச் செய்யப்பட்ட யாதொன்றை நாம் காணுமிடத்து, அங்ஙனம் அப்பொருளைப் பயன்

றாக்கிச் செய்தான் ஒருவன் உளனென்பது தானே அமையுந் தாலென்ன, இவ்வுலகத்தினும் காணப்படும் பயன்றாக்கிச் செய்யப்பட்டவற்றால், அவற்றை அங்ஙனம் பயன்றாக்கிச் செய்தார் ஒருவர் உளரென்பது இனிது சித்திக்குமாம்.

பயன்றாக்கிச் செய்யப்பட்டமையினை நாம் கண்ணாரக் கண்டனமா? அற்றன்றே. பின்னை நாம் அவற்றைப் பயன் தூக்கிச் செய்யப்பட்டன என்று நிருபித்தல் எங்ஙனம் என்பீராயின்; பயன் தூக்கிச் செய்யப்பட்டமையினை நாம் கண்டதுண்டாயின், பின்னைக் கர்த்தனுண்டென்று துணிதற்கு நாம் அங்ஙனங் கண்டமைதானே போதிய சான்றாகும்: பயன்தூக்கிச் செய்யப்பட்டது எமக்கு வேண்டுவதின்று. காட்சிப் பிரமாணம் இன்மைபற்றியே நாம் பயனிலிருந்து அப்பயனுக்கு ஏதுவாகிய காரணத்தை நிச்சயிப்பது. ஆகவே பயனிலிருந்து கொள்ளப்படும் ஓர் துணிபுக்குக் காட்சி வேண்டப்படுவதின்றெனக் கூறி விடுக்க. நல்லது, அப்பயன்தான் எங்ஙனம் பெறப்படும் எனின்; நாம் அவ்வப்பொருள்வாயிலாக எய்தும் பிரயோசனத்தால் இப்பயன் இனிதுபுலப்படும் என்க. இப்பிரயோசனங்கள் ஓர் கர்த்தவ்ய சம்பந்தமின்றி அமைந்திருந்தால் என்னெனின்; இஃதிங்ஙனமாமெனக் காட்டப்படுதல்வேண்டும். இல்லாக்கால் பயன்றருவன பயன்றாக்கிச் செய்யப்பட்டன என்பதும், எனவே அவற்றை அங்ஙனந் தூக்கிச் செய்தார் ஒருவர் உளர் என்பதும் இனிது சித்திக்குமாம். உலகத்துக் காணப்படும் பிரயோசனங்களை இங்ஙனங்காட்டல் கூடாமையின் இவற்றுக்கோர் காரணன் உண்டென்பது வெளிப்படை.

## கூ-ம் அதிகரணம்.

இனிப் பதார்த்தங்களை அநாதி எனச் சாதித்தல் கூடாதென்பதைக் காட்டி அதுகாரணமாகக் கடவுளுண்மையை காட்டுவாம்.

(க) பௌதிகங்களாவது அற்றேல் அவற்றுக்குக் காரணமாயுள்ள அணுக்களாவது அநாதி எனச்சாதித்தல் அமையாது. என்னை? அவற்றின்கட் சிருட்டி இலக்கணம் காணப்படுதலின். பௌதிக அணுக்களெல்லாம் மூர்த்தபதார்த்தங்களேயாதலின், அவை உருவம் அவயவம்முதலிய இலக்கணங்களையுடையவாம். இவ்விலக்கணங்கள் இவற்றுக்கமைந்தவாறெங்ஙன்? உருவ அவயவங்கள் எப்போதும் ஓர் காரணகர்த்தனாற்றனே ஆக்கப்பெற்றனமதலின், பௌதிக அணுக்களின்கணுள்ள உருவ அவயவாதி இலக்கணங்களும் அங்ஙனமே இடையில் ஆக்கப்பெற்றமைந்திருத்தல் வேண்டுமாம்.

அற்றன்று: இவற்றின் உருவ அவயவங்களெல்லாம் அநாதிக்கண்ணவே, என்னின்; உலகத்தின்கணுள்ள யாதொருபொருள் யாதொருவடிவத்தைப் படைக்குமிடத்து, அவ்வடிவத்தின் அமைதிக்கியைந்த காரணம் ஆங்காங்கே தொழிற்படுதல் காரணமாகவே, அவ்வடிவம் வந்தெய்துவதாகும். இந்த நியாயத்தின்வழி நோக்குமிடத்து, எந்த எந்த வடிவத்தின் அமைதிக்கும் ஓர் ஓர் காரணன் வேண்டப்படும் என்பது. எனவே, பௌதிக அணுக்களின் வடிவங்கட்கும், அங்ஙனமே ஓர் காரணம் வேண்டப்படும் என்பதும் இனிதுபோதருமாம். இந்த நியாயம் இடையிலே ஓர்ஓர் வடிவத்தைப்படைக்கும் பொருள்களுக்கன்றி அநாதியாயுள்ள பொருள்களுக்கமையாதன்றே என்பீராயின்; ஆம்: ஆனதுபற்றியன்றே வடிவத்தையுடைய பொருள்கள் அநாதியாயுள்ளனவென்பதமையாதென்று நாம் சாதிப்பது. வடிவம் ஓர் ஓர் காரணம்பற்றி அமைவதொன்றாயின், அஃது இடைத்தோற்றியதென்பதேயன்றி அநாதிக்கண்ணதென்பது சிறிதும் சாலாதாம். பௌதிக அணுக்களை அநாதிக்கண்ணவெனக் கோடலினாற் பெறப்படும் இழுக்கென்னையோ என்பீராயின்; வடிவம் காரணம் வேண்டிநிற்கும் எனவே, அது எங்கெங்கு காணப்படுமோ அங்கங்கெலாம் அம்முடிபே அமையுமாம். ஆகவே பௌதிக அணுக்களிற் காணப்படும் வடிவத்துக்கும் அம்முடிபே

அமையுமாதலின், அவ்வணுக்களை அநாதிக்கண்ண எனக்கோடல் கூடாது. பௌதிக அணுக்களின்வடிவை ஆக்கலும் அழித்தலும் கூடாமையால் அவை எல்லாம் அநாதிநித்தியம் என்றன்றோ பெறப்படும் என்பிரேல், எம்மால் ஆக்கலும் அழித்தலும் கூடாதபொருள்கள் எல்லாம் அநாதிநித்தியம் எனக்கோடல் தார்க்கிகமாகாது. அவற்றின்கட் சிருட்டி இலக்கணம் உண்டோ இல்லையோ என்பதே நாம் சிந்திக்கவேண்டுவது. அவ்விலக்கணம் ஆண்டுண்மையின், அவற்றை அநாதி எனக்கோடல் கூடாமைகாண்க.

ஓர் ஓர் வடிவத்தைக்கொள்ளும் ஓர் ஓர் பொருள், பிறிதோர் ஓர் வடிவத்தையுடைய பிறிதோர் ஓர் பொருளிலிருந்து தானே அமைவது; ஆகவே, எவ்வாற்றானும் ஓர் பொருளதுவடிவம் இறுதியிலே அநாதிக்கண்ணதெனத்தானே கொள்ளப்படுதல்வேண்டும் என்பிரேல்; பொருள்களது வடிவத்தின் அமைதி எவ்வாற்றானும் தொடக்கமுடையதாகக் காணப்படுமென்றால், அவ்வடிவம் எங்கெங்குகாணப்படுமோ அங்கங்கெலாம் அதன்பாற் தொடக்கமுடைமை சாதிக்கப்படுமாம். எனவே பொருள்களின் வடிவத்தை எந்தநிலையிலாவது அநாதிக்கண்ணதெனச் சாதித்தல் சாலாதென்பதும், எனவே வடிவுடைப் பொருளொன்று அநாதியாயுளதென்பதும் அமையாவென்றபடி காண்க. வடிவங்கட்கு அநாதித்துவம் சாதிக்கப்படுதல் கூடாதென்றால், அவ்வடிவத்தினைக்கொண்டபொருள்களும் அநாதிக்கண்ணவாதல் கூடாது என்பது பெறப்படுமன்றே. ஆகவே இப்பொருள்கள் தோன்றுதற்கியைந்ததோர் அநாதிபதார்த்தமும் இல்லையென்றாக இவை எல்லாம், நிராதாரமாகத் தோற்றினவோ என்பிரேல்; இன்னோரன்ன திருக்குகள் எல்லாம் சற்சமயத்தாற்றானே முட்டறுக்கற்பாலன என்பது நாம் பலமுறையும்விளக்கி இருக்கின்றாம். வடிவத்தினையுடையனவாகிய மூர்த்தபதார்த்தங்கள் எல்லாம் வடிவமில்லாத அமூர்த்தபதார்த்தமாகிய மாயையில் இருந்து தோன்றின என்பதும், அம்மாயை அநாதிநித்தியம் என்பதும் சற்சமயசுருதிகளாற் பிரதிபாதிக்கப்படும்.

இதுவே யுத்திக்கும் அனுபவத்துக்குமொத்த உண்மைத்துறையாய் அமைந்துகிடத்தலைக் கண்டுகொள்க.

(உ) இனிப்பதார்த்தங்களது வடிவத்துக்குக் காரணம் அவற்றின்கணுள்ள ஆற்றல் என்றும், ஆற்றலின்றிப் பாதார்த்தமில்லை, பாதார்த்தமின்றி ஆற்றலில்லை என்றும், இவ்வாற்றலும் பதார்த்தமும் அநாதிநித்தியம் என்றும் தத்காலத்துள்ள பௌதிகவாதிகள் சாதிப்பர். இவரது கொள்கையைச் சிறிது ஆராய்வாம்.

யாதொருவடிவம் அமையுமிடத்து அவ்வடிவத்தின்கணுள்ள பதார்த்தத்தை அவ்வடிவாகாரமாக அமைத்துவைப்பது அதன்கணுள்ள ஆற்றலேயாம். பதார்த்தங்கள் எவ்வளவு நுண்மையாகப் பகுக்கப்பட்டாலும் அவை பின்னும் பின்னும் பகுக்கப்படும் இயல்பினவாய் ஓர் ஓர் வடிவத்தைக்கொண்டே கிடக்கும். ஆகவே பதார்த்தங்களிடத்து எந்தெந்தத் திதியிலும் ஓர் ஓர் வடிவுண்டென்பதும், அவ்வவ்வடிவத்தின் அமைதிக்கமைந்த ஓர் ஓர் ஆற்றல் உண்டென்பதும் வெளிப்படை. நல்லது: நாம் இங்கே சிந்தித்தற்குரிய பொருள்கள் மூன்று. அவையாவன: பதார்த்தம், வடிவம், ஆற்றல். பதார்த்தத்தின்கண் வடிவம் இன்றேல் ஆண்டு ஆற்றல் உளதாதல் கூடாது. (வடிவம் என்று நாம் இங்கே கொள்வது மூர்த்தலக்கணத்தை). என்னை? ஆற்றல் ஓர் குணமாத்திரையேயாதலின், குணி இன்றிக் குணம் இருத்தல் கூடாது. அதாவது, ஆற்றலுக்கு யாதோர் பற்றுக்கோடு உண்டாயினே அஃது ஆண்டமைதல் கூடும். பதாத்தங்களிடத்தே உருவம் பெறப்படுதல் இல்லையாயின் ஆண்டு ஆற்றல் அமைதலும் இல்லையாம். ஆகவே இவ்வாற்றல் ஆங்கமையுமாறு, பதார்த்தங்களிடத்தே முந்த ஓர் உருவம் பெறப்படுதல் வேண்டும். அவ்வுருவத்துக்குக் காரணம் யாதோ? அதுவும் ஆற்றல்தானேயோ? ஆம் எனின் ஆற்றல்தான் அமையுமுன் தொழிற்படுதல் எங்ஙனமோ?

(ங.) அற்றன்று: ஆற்றலின்றிப் பதார்த்தமுமின்றே. ஆகவே பதார்த்தம் எப்போதுண்டோ அப்போதங்கே ஆற்றலும் உண்டென்பிரேல், வடிவமின்றி ஆற்றலுமின்றன்றே. ஆகவே பதார்த்தங்களினிடத்து வடிவுண்டாயினன்றோ ஆண்டு ஆற்றலுளதாதல் கூடும். பதார்த்தம் தன்னளவிலே ஓர் வடிவுடைப்பொருளாயின், அத்தோடு ஆற்றல் சார்ந்துநிற்றல் கூடும். அவ்வடிவம் பதார்த்தமாத்திரையால் அமைதல்கூடாதபோது அங்கே ஆற்றல் அமையுமாறெங்ஙனம்? அதாவது, ஆற்றல் பதார்த்தத்தோடு அமைதற்கு அப்பதார்த்தத்தின்கண்ணோர் வசதி வேண்டப்படும். இவ்வசதி அப்பதார்த்தத்தின் வடிவமேயாம். இவ்வடிவமாகிய வசதியில்லாதபோது ஆண்டு ஆற்றலமைவது எங்ஙனமோ? அன்றியும் ஆற்றலைநீக்க பதார்த்தமில்லை. பதார்த்தத்தைநீக்க ஆற்றலல் இல்லை. இங்ஙனம் இல்பொருளாயுள்ளன ஒன்றை ஒன்று பற்றிநிற்கும் என்பதெங்ஙனம்?

அற்றன்று. பதார்த்தமும் ஆற்றலும் அநாதிதொட்டு ஒன்றை ஒன்று சார்ந்துநிற்கும் என்பிரேல்; அங்ஙனம் சார்ந்துநிற்பதெவ்வாறு. ஆற்றல் நிலைபெறுதற்கியைந்த இலக்கணம் பதார்த்தத்தில் இல்லாதபோது ஆண்டு ஆற்றல் நிலைபெறுமெனக்கோடல் எங்ஙனம்? அவ்விலக்கணத்தை ஆற்றலே அமைக்குமெனின்; இது தாயை மகள் ஈன்றாள் என்பது போலும் ஓர் அபத்தமாம். பதார்த்தத்தில் சாருமுன் இல்பொருளாயுள்ள ஆற்றல், தான் அங்ஙனம் சார்தற்கியைந்த இலக்கணத்தை பதார்த்தத்துக்கு தருமாறு வெகுநூதனமன்றே.

பதார்த்தத்தின் குணந்தானே ஆற்றல். குணியாகியபதார்த்தம் உள்ளவன்றே குணமாகிய ஆற்றலுமுண்டு. ஆகவே அவ்விரண்டையும் வேறுபடுத்து ஆற்றல்சாருமுன் பதார்த்தத்துக்கோர் நிலையுண்டெனக்கற்பித்து, அப்போது அப்பதார்த்தம் இருந்தவாறு எங்ஙனம் என்று வினுதல் மரபாகாதென்பிரேல், ஆற்றல்சாருமுன் பதார்த்தத்துக்கோர் நிலையுண்டென்று வாதிக்க நாம் புறப்படவில்லை. ஆற்றலைக் குணமாக் கொ

ள்ளுதற்றகுதியுடையன வடிவுடைமூர்த்தங்களேயாம். பதார்த்தங்கட்கோர் ஆற்றலின்றி வடிவில்லையாகவே, அவ்வாற்றற் குணம் பதார்த்தங்களினுள்ளவாதல் யாங்ஙனம் என்பதே நாம் வினாவுவது.

குணம் இன்றேல் குணியுமின்றே. குணியின்றேல் குணமுமின்றே. இவை ஒன்றை ஒன்று தாரகமாக்கொண்டு அமைந்து விளங்குதலே அவ்வற்றது இயற்கைமுறை. இம்முறையை நோக்காது இவை இங்ஙனம் சாருமாறெங்ஙனம் எனவினாதல் மரபாகாதென்பிரேல்; குணம் இன்றேற் குணியில்லை, குணியின்றேற் குணமில்லை என்பது சத்தியம். எனவே இவை ஒன்றனுக்கொன்று காரணமாதல் கூடாது என்பதும் சத்தியமாம். என்னை? இவற்றுள் எந்தப்பொருளாவது மற்றைப்பொருளுக்கு ஆதியாதல் கூடாமையின். ஆனபின், இவற்றுள் ஒரு பொருள் மற்றைப்பொருளின் வடிவத்துக்குக் காரணமாய் நிற்றல் எங்ஙனமாமோ? இம்மற்றைப்பொருளின் வேறாகாத அதன்வடிவம் முந்திய அவ்வொருபொருள் ஆண்டுச் சார்ந்து நிற்றற்குக் காரணமாதல் எங்ஙனமோ? வடிவின்றேல் பதார்த்தமுமில்லை: பதார்த்தமின்றேல் ஆற்றலுமில்லையேயன்றோ? ஆற்றலின்றேல் வடிவில்லை: வடிவின்றேல் பதார்த்தமுமில்லையேயன்றோ? ஆகவே எவ்வாறுநோக்கினாலும் இப்பொருளது அமைதி சித்தித்தல் கூடாதபோது, இதை, இம்முக்கூற்றையும் அமைத்து இடையில் சிருட்டித்தார் ஒருவர் உளரென்பது இனிது சித்திக்குமாம்.

அற்றன்று, பதார்த்தம், வடிவும், ஆற்றல் ஆகிய இம் மூன்றும் ஒன்றுக்கொன்று காரணமாய் அநாதிதொட்டு அமைந்து விளங்குமாம் என்பிரேல்; காரணமாயதொன்று காரியத்துக்கு முந்தி அமைந்து விளங்குதல் வேண்டும். இங்ஙனம் முந்தி அமைந்து விளங்குதல் இவற்றுள் எவற்றுக்காவது கூடாதாதலின், இவற்றை இடையிலே கூட்டி மூன்றும் ஏககாலத்து அமையுமாறு சிருட்டிசெய்தார் ஒருவர் உளரென்பதே சித்தாந்தமாம்.

முடவனும் ஊன்றுகோலும்போல இவை ஒன்றுக்கொன்று தாரகமாய் நிலையுமெனக்கொண்டால் என்னெனின்; முடவனுனும் ஊன்றுகோலும் நிலையுதல்மாத்திரைக்கே—இவனுக்குக் கோலும், கோலுக்கு இவனும்—ஆதரவன்றி, முடவனதுண்மைக்காவது கோலதுண்மைக்காவது அப்பதார்த்தங்கள் ஒன்றுக்கொன்று தாரகமல்ல. ஆதலின் இவ்வுதாகரணம் பொருத்தமின்மை காண்க.

## எ-ம் அதிகரணம்.

(க.) உலகத்திலேயுள்ள சீவபேதங்களைக் கணக்கிடப்புகுந்தால் அவை வரையறைக்கதீதமாகச் செல்லும். இங்ஙனந் தொகைகடந்துள்ள பேதங்களையெல்லாம் உலகத்திலே திரிபில்லாது ஒரேபடித்தாயுள்ள இயற்கைமுறை தருமாறு எங்ஙனம்? சீவதோற்றங்களைத் தரவல்லதோர் இயல்பு பூமியின்கணுள்ளதெனக் கொண்டாலும், அவ்வியல்பு ஒரேவகையாய தோற்றத்தையன்றி ஒன்றுக்கொன்று மாறுகொண்டு கிடக்கும் பல்வகைத் தோற்றங்களையும் தருமாறு கூடாது. இப்பிரபல நியாயத்தை நிராகரிக்கக் கருதி சில பௌதிகவாதிகள், சிருட்டிபேதங்கள் எல்லாம் ஒன்றின்கணின்றுப் பரிணமித்தமையும் என்பர். ஆகா! இவரது விவேகத்துவஞானம் இருந்தவாறென்னை? உலகத்துள்ள கோடாகோடி சிருட்டிபேதங்கள் எல்லாம் ஒன்றிலிருந்து ஒன்றாகவே உருத்திரிந்தமைந்தமையினைக் கண்டாரும் இல்லைக் கேட்டாருமில்லை. அவை அங்ஙனம் ஆகவல்லவோ என்பதுதானும் அநேக ஆக்ஷேபங்கட்கும் சமுச்சயங்கட்கும் இடனாகக் கிடக்கின்றது. பரிணாம சித்தாந்திகள் தாமும் அக்கொள்கை ஓர் இயலுந்தகையதாம் எனக் கொள்வர் அன்றி அதனை நிறுத்திச் சாதிக்கமாட்டார். இங்ஙனமாயதோர் சந்தேகத்தை நம்புவாராம்; இப்பேதங்களைச் சிருட்டித்தார் ஒருவர் உளர் என்பதை மாத்திரம் நம்பமாட்டாராம்! கடவுள் ஒருவர் உண்டென்றால் அவரைக் கண்டார் யாரும் உளரோ என வினவி நிற்கும் இவர், பரிணாம சித்தாந்தமுறையை உள்ளபடி கண்டுதான்

சாதிக்கின்றனரோ? இயற்கைமுறையே நங்கடவுள்: இத னுக்கு வேறாய் யாதொன்றுண்டென்பதை நாம் காண்டலின் மையின் நம்பமாட்டேம் என்று சாதிப்பாராகிய இவர், இவ்வி யற்கைமுறையிற் கட்புலங்கொண்டு காண்டல் கூடாத பரி ணாம சித்தாந்தத்தை எங்ஙனம் விசுவசிப்பரோ? மண்விஞ் சிற்றண்ணீர், தண்ணீர் விஞ்சின் மண்ணோ? இவருடைய சுவஞானசாதனையை யாதுக்கொப்பிடுவேம்!! அதுகிடக்க. இவரது பரிணாம சித்தாந்தமுறையைச் சிறிது ஆராய்வாம்.

(உ) இவ்வாராய்ச்சியிற் புகுதன்முன்னர் நாம் சொல்லத் தக்கதொன்றுண்டு. பரிணாம சித்தாந்தம் எமக்கு ஒருங்கே அநங்கிகாரமாயதொன்றல்ல. அஃதெமக்கும் ஓர் எல்லைக்கு அங்கிகாரமேயாம். எமது மதசித்தாந்தப்படியும் ஆகாயத்தி ருந்து வாயுவும், அதிலிருந்து தேயுவும், அதிலிருந்து அப்பு வும், அதிலிருந்து பிரிதிவியும் தோற்றியவென்றே நாமுங்கொ ள்வம். இதுவும் உருத்திரிதற் சித்தாந்தமுறை என்றே கொ ள்ளத்தக்கது. இன்னும் சீவதோற்றங்களிற் சிலதாமும் ஒன் றிலிருந்து ஒன்று உற்பவிக்கத்தக்கன என்பது எமக்குமுடன் பாடேயாம். வேட்டைப்புழுவின் தோற்றமும் பிறவும் பரி ணாம சித்தாந்தமுறையை அனுசரித்தே எமது சமய நூல்களி லெல்லாம் எடுத்தாளப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் நாம் இங்கே சாதிப்பது உலகத்துள்ள தோற்றங்கள் அனைத்தும் ஒன்றிலிருந்து ஒன்றாகவே பரிணமித்தமைந்தனவன்றி, அவ ற்றைத் தொடக்கத்திலே வேற்றுவேற்றுச் சிருட்டிகளாகச் சிருட்டித்ததில்லை என்னும் இக்கொள்கை அங்கிகரிக்கத்தக் கதன்றென்பதேயாம். இப்பூமியிற் காணப்படும் தோற்றங் கள் லோகம், தாவரம், மிருகம், என்னும் முத்திற மகா பகுப் புகட்கிடனாக் கிடக்கின்றன. அல்லதூஉம் அவற்றைச் சரம் அசரம் என்னும் இருபகுப்பாகப் பகுத்தலும் கூடும். இவை ஒன்றிலிருந்து ஒன்றாகவே உற்பவித்தன என்பதும் சாலுமா மோ? லோகத்திருந்து தாவரமும், தாவரத்திருந்து மிருகவர் க்கமும் உருத்திரிந் தமையத்தக்கனதாமோ? ஓர் அசரப்

பொருளிலிருந்து சரப்பொருள் திரிபுற்றமைதலும் இயலுந் தகையதுதானேயோ?

(௩.) உலகத்தின்கண்ணே லோகங்கள் இரும்பு பொன் முதலிய மகா பகுப்புகளாகவும், தாவரங்கள் மரம், செடி, கொடி, பாசி முதலிய மகா பகுப்புகளாகவும், மிருகங்கள் ஊர்வன நடப்பன, பறப்பன முதலிய மகாபகுப்புகளாகவும் பகுக்கப் படும். (இவற்றின் உபபகுப்புக்களை விரிக்கப்புகின் இதுபோலும் பல பிரபந்தங்கள் விரியும்.) இம்மகாபகுப்புகள் எல்லாம் ஒன்றோடொன்று ஒவ்வாத வேற்றிலக்கணங்களை நிரம்ப உடையனவாம். இவை தத்தமக்கேயுரிய வேற்றுவேற்றிலக்கணங்களிற் சிறிதும் பிறழாமலும், பிறவற்றுக்குரிய சிறப்பிலக்கணங்கள் தம்பாற் சிறிதும் அணுகப்பெறாமலும், தத்தமது சுபாவீக தர்மத்திலே அணுத்துணையேனும் திறம்பாது நிகழ்ச்சிபெறுமாறு அதிவலிமை படைத்துளதோர் இயற்கை மரபாற் செலுத்தி நடாத்தப்படுகின்றன. இங்ஙனமாகலின், இவற்றுள் ஒரு பகுப்பிலிருந்து பின்னொருபகுப்புத் தோற்றிற்றென்று நாம் நிருமித்தல் யாங்ஙனம்? உலகத்துள்ள இயற்கை மரபிலே ஒன்றிலிருந்து அவ்வினத்துட்பட்ட தொன்றே தோன்றுதலன்றி, அவ்வினத்துக்கன்னியமான பிறிதொன்று தோன்றுதல் சிறிதும் காணப்படுகின்றிலது. பிரத்தியக்ஷ பிரமாணம் இங்ஙனம் கிடக்கும்போது, இதனுக்குமாறாக, ஒன்றிலிருந்து பின்னொன்று தோற்றிற்றென்று நாம் சாதிக்குமாறு எவ்வாறு? அதுவும் ஒன்றிரண்டல்ல, உலகத்துள்ள சிருட்டி பேதங்கள் எல்லாம் இங்ஙனமே ஒன்றிலிருந்தொன்றாகவே உற்பவித்தமைந்தன எனச் சாதித்தல் சால்புடைத்தாமோ? இம்முறைக்கு இயைந்ததோர் அருகல் விதிதானும் எமக்குப் புலப்படாதிருக்கும்போது, இதனை ஓர் சாதாரண விதியாகக் கொண்டு சிருட்டிபேதங்கள் அனைத்துக்கும் ஒப்பவே அமைத்தல் யுக்தமாகுமோ?

சிருட்டிபேதங்கள் எல்லாம் தோற்றம் குணம் செயல் முதலிய இலக்கணங்களால் ஒன்றோடொன்று வேறுபட்டுநிற்

கும். இங்ஙனம் வேறுபட்டுநிற்கும் இவை, தத்தம்வர்க்கத்தன வற்றையன்றிப் பிறவற்றைப்பிறப்பித்தல்கூடாத இயற்கைநிய தியுட்பதிந்து கிடக்கும்போது, ஒருதிறச் சிருட்டி பின்னொரு திறச் சிருட்டியைத் தருமாறு எங்ஙன்? பாசியிலிருந்து ஓர் கொடி பிறக்குமோ? கொடியிலிருந்து ஓர் விருக்ஷம் பரிண மித்தமையுமோ? செடியிலிருந்து ஒரு மாமரம் பரிணமித்தல் சாலுமோ? ஊர்வனவற்றிலிருந்து நடப்பன தோன்றுதல் கூடுமோ? பறப்பனவற்றிலிருந்து ஊர்வனதோன்றுதல் அமை யுமோ? ஓர் அறுகம்புல்லிலிருந்து ஆலமரம் தோன்றுமேயோ? கருப்பஞ்செடியிலிருந்து வேப்பமரந் தோன்றுமேயோ? ஓர் கீரைப்பூண்டு எத்துணைக் கோடிவருஷஞ் செல்லினும் ஒரு மராமரத்தைப் பிறப்பிக்குமாமோ? ஓர் சேளிலிருந்து யானை தோன்றுமோ? எறும்பிலிருந்து புலிதோன்றுமாமோ? புலியி லிருந்து பசுவும், பசுவிலிருந்து மயிலும், மயிலிலிருந்து பாம் பும், பாம்பிலிருந்து கருடனும் தோன்றுங்கொல்லோ? பளிங் கிலிருந்து கருங்கல்லும், கருங்கல்லிலிருந்து மாணிக்கமும், மாணிக்கத்திலிருந்து பொன்னும், பொன்னிலிருந்து இரும் பும் தோன்றுதல் சாலுமோ? புளிப்பிலிருந்து இனிப்பும், இனிப்பிலிருந்து கார்ப்பும், வெண்மையிலிருந்து கருமையும், கருமையிலிருந்து பசுமையும் தோன்றுமேயோ? பொதுவாகி யதோர் பொருளிலிருந்துதானும் எத்துணை நீடித்த காலத்தா யினும் இப்பொருள்கள் எல்லாம் தோன்றுமென்றல் இயையு மோ?

சீவதோற்றங்கள் எவற்றினும், தத்தம்வர்க்கத்துக்கே சிற ந்த தோற்றம், குணம், செயல் என்றுள்ள இவற்றைப் பிறப் பித்தற்கு உரிய நியதிகளே சூக்குமித்துக் கிடப்பனவாம். இவற்றுக்கு வேறுந் தகையனவாகிய சூக்கும காரணங்கள் ஆண்டுக் காணப்படுதல் சிறிதும் இல்லை. இல்லாதபோது இவற்றுள் ஒன்று, தன்னிடத்தில்லனவாய சூக்குமகாரணங் கொண்டு, மற்றொன்றைப் பிறப்பிக்குமெனல் மலடிமகன் அந்தரத்தாமரையைக் கொய்தாலொக்குமன்றே. ஓரினத்த வாகிய சிருட்டி-பேதங்களிற்றானும், சிற்சில வேறுபாடுகள்

காணப்பெறுமெனினும், அவை அவ்வினத்தின்கண் நிகழத் தக்கனவேயாம். என்னை? ஆனதுகொண்டன்றே அவ்வேறுபாடுகள் ஆண்டுச் சகசமாகக் காணப்படுகின்றன? அவ்வினத்துட்டானே கட்டுண்டு அமைந்துள்ள இச்சுவல்ப; வேறுபாடு மாத்திரமே ஆண்டுக் காணப்படுமன்றி, அவ்வினத்தின் வரம்பைத் தாண்டி அப்பாற் செல்லத்தக்க வேறுபாடு ஆங்குச் சிறிதும் காணப்படாது. இவ்வரம்பைத் தாண்டாமாறு அவ்வவற்றின்கணுள்ள இயற்கைநியதி அவற்றை எல்லாம் விலங்கிட்டு வைத்திருக்குமென்க. இங்ஙனமிருக்கும்போது, ஒன்றிலிருந்து அதன் இனவரம்பைக்கடந்த பின்னொன்று தோன்றுமென்பதை நாம் கைக்கொள்ளுமா றெங்ஙன்?

(ச.) அற்றன்று: ஒன்றிலிருந்து அதற்கினமான மற்றொன்று பரிணமித்தமைய, அதிலிருந்து அதனோடு சிறிது வேறுற்ற பின்னொன்று பரிணமிக்க, இங்ஙனமே காலாந்தரத்திலே சகல சிருட்டிகளும் உருத்திரிந்தமையுமன்றி "புலியிலிருந்து பசுவும் பசுவிலிருந்து மயிலும்" நேரே பரிணமித்தமைந்தனவல்ல என்பிரேல்; சிருட்டிபேதங்களை வேறுபடுத்துவன அவற்றின்கட் காணப்படும் தோற்றம், செயல், குணம், பிரமாணம் முதலிய இலக்கணங்களாம். இவ்விலக்கணங்களை எல்லாம் அவ்வவ் வர்க்கத்தின்கண்ணே சிறிதும் பிறழாதுய்த்து இயற்கையென்னும் வலிய வேந்தன் செங்கோல்நடாத்தும். இச்செங்கோன்முறையைக் கடத்தல் கூடாமையினும் கூடாமை எனலாம். ஆகவே இந்த நெறிபூண்ட இயற்கை நியதியால் பர்திக்கப்பெற்று நிகழ்ச்சியுற்று வரும் பிரபஞ்சதோற்றங்கள், தத்தமக்குரிய தோற்றமுங் குணமும் செயலும் பிரமாணமும் என்றுள்ள இவ்விலக்கணங்களை எல்லாம் தத்தம்பாற்றோற்றும் தோற்றங்கட்கு முறைபிறழாது செலுத்திக்கொண்டே வருமாகலின், அவ்விலக்கணங்களை அங்ஙனம் செலுத்தப் பெற்றுக்கொண்ட தோற்றங்கள், முந்தியவற்றோடொத்த மரபினையே யுடையவாதலன்றி, அவற்றின் வேறாயதோர் மரபை உடையனவாதல் சிறிதும் கூடாது. இது கூடாதபோது அவை எத்துணைக்காலத்திற்றானும், தாம் பிறிதோர்வர்க்கம்

எனத்தக்க மரபைப் படைத்தலும் சாலாதென்க. இவற்றுள் யாதோர் அல்ப்ப வேறுபாடு அமைதல் கூடுமாயினும், அவ் வேறுபாடு நாம் மேலேக் கூறியவாறு அவ்வர்க்கத்துட் கட்டுண்டுள்ளதோர் வேறுபாடாகுமன்றி, அவ்வெல்லையைக் கடந்து அப்பாற் செல்லத்தக்கதொன்றாகாதாம். இங்ஙனம் கடந்துசெல்ல அவ்வவற்றைப் பந்தித்துள்ள இயற்கைநியதி சிறிதும் ஒட்டாது. எந்த எந்தத் தோற்றத்தின்கணுள்ள தோற்றங் குணம் முதலிய எந்த எந்த இலக்கணமும், அந்த அந்தத் தோற்றம் உற்பவித்தற்கேதுவாயுள்ள முற்றோற்றங்களில் நின்றே இவற்றுக்குச் செலுத்தப்படுவதன்றிப் பிறிதோர்வாயிலாக ஆங்குச் செலுத்தப்படுதலின்மையின், அவைகள் எத்துணை நீடித்தகாலத்துக்குத்தான் ஒன்றை ஒன்று பிறப்பித்துக்கொண்டுவரினும், அவற்றின்கண், அடியிலேயுள்ள தோற்றத்துக்கு வேறாயுள்ளதோர் இலக்கணம் இறுதியிலுள்ள தோற்றத்தின்பாலமைதல் கூடாது. இங்ஙனங் கூடாதபோது ஓர் பாம்பிலிருந்து அதனுக்குச் சத்துருவாயுள்ள மயில் தோற்றுமாறு எங்ஙனே? அற்றேல் இவ்விரண்டன் தோற்றத்துக்கும் பொதுவாய் ஓர் சிருட்டியுண்டெனறு நான் கொள்ளுமாறு எவ்வாறோ? இவற்றுள்ளே காணப்படும் அல்ப்ப வேறுபாடுகள் காலாந்தரத்திற் றிரளுமிடத்தும், அத்திரட்சி அவற்றது வர்க்க வரம்புக்குட்பட்டதாமன்றி அதனுக்கப்பாற்பட்டதாகாது. என்னே? அவை அங்ஙனம் திரண்டதெல்லாம், அவ்வத் தோற்றத்துக்குரியதாய், அது அது தன்தன் அடித்தோற்றத்தின்பாற் சுதந்தரித்துக்கொண்டதாயுள்ள இயற்கைநியதியுட் கட்டுண்டமைந்ததேயாதலினென்க. இந்நியதி பிறிதோர் வர்க்கத்துக் கியைபுடைத்தன்றாகலின், ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தைப் பிறப்பித்தல் சாலாதென முடிக்க.

(ரு.) தோற்றங்கள் தத்தமக்குரிய வடிவு குணம் செயல்களுக்கியைந்த ஆற்றலை தத்தம்வர்க்கத்துக்குரிய முற்றோற்றங்களிலிருந்தே கிரகிப்பனவாயினும், புறத்தாற்றல்களும் பல காலந்தோறும் அவற்றிற் சென்று தாக்குதல்பற்றி, அத்தாக்கம் காரணமாக அவை தமதியற்கையிற் றிரிபுறும் என்பி

ரேல்; தோற்றங்களின் வடிவு குணமுதலிய அகத்தாற்றல்க ளுக்குக் காரணம் அவை முற்றோற்றங்களின்பாற் கிரகித்து க்கொண்ட அவ்வாற்றலேயாம். புறத்தாற்றல் பெரும்பாலும் அவ்வத்தோற்றத்தின் விருத்தி அவிருத்திகட்குக் காரணமா குமேயன்றி, அவற்றின் இயற்கை மரபைச் சிறிதும் தாக்கு தல் இல்லையாம். பசளையும நீரும் பரமாணுவும் முதலியபுற த்தாற்றல்களால் ஒரு தாவரம் ஓங்கலும் ஒடுங்கலுமாகிய விருத்தி அவிருத்திகளைப் பெறுமேயன்றி, தனது இயற்கை நியதியிற் சிறிதும் திரிபுறாது. இனி இப்புறத்தாற்றல்களால் அகத்தாற்றல் தாக்கப்பெறுமிடத்தும், அத்தாக்கம் அந்த அ ந்த வர்க்கத்துள் நிகழுந்தகையதாகிய ஓர் திரிபைப் பிறப்பி க்குமன்றி, அதனுக்கப்பாற் படுவதாயதோர் திரிபைப் பிறப் பித்தல் சிறிதும் கூடாது. ஓர் மாமரத்துள்ள கனிச்சுவை சிற்சிலகாலங்களிலே அம்மரம் நின்றுவளரும் மண்ணியல்பு முதலிய ஏதுக்களால் திரிபுறுதலுமுண்டு. இங்ஙனம் திரிபு ற்றமைந்த சுவையும் அம் மாவர்க்கத்துக்குரியதோர் சுவை யேயாதலின், இது அவ்வர்க்கத்துட் கட்டுண்டுள்ளதோர் குணமேயாம். ஆதலின் இத்திரிபை அம்மரத்தின்கணுள்ள அகத்தாற்றல்கள் அமைவுறவொட்டும். அவ்வர்க்கத்துக் கந் நியமாயதோர் திரிபை அவை சிறிதும் அமைவுறவொட்டா வென்க. ஆகவே புறத்தாற்றல்கள் அகத்தாற்றல்களுக்கு மாறாயதோர் திரிபைப்பிறப்பித்தல் சாலாதபடிகாண்க.

(சு.) பஞ்சபூத பரிணாமமாகிய இப்பிரபஞ்சம் எப்போதும் ஒருபடியில்நில்லாது, தன்மாட்டுள்ள ஆற்றல்கள் காரணமாக த்தனதணுக்கள் ஒன்றோடொன்று கூடியும் பிரிந்தும் வேற்று வேற்றுமாற்றங்களை அடைதல் காணப்படுகின்றதன்றே. அது போலவே, சீவதோற்றங்களிடத்தும் காலந்தோறும் திரிபுகள் கேட்கப்படுகின்றனே என்பிரேல்; பிரபஞ்சம் அங்ஙனம் திரிபு றல் அதன்மாட்டுள்ள ஆற்றல் காரணமாகவாம். ஆகவே அத் திரிபு அதன் இயற்கையேயாம். சீவதோற்றங்களும் அங்ஙனம் திரிபுறல் கூடாது. என்னை? அவற்றின்கணுள்ள ஆற்றல்

அவற்றை அங்ஙனம் திரிபுறவொட்டாது. காலாந்தரத்தில் அவ்வாற்றல், தனது இயல்பிற் திரிபுறுமாதலின் இது கூடும் என்பிரேல்; அவ்வாற்றல் அங்ஙனம் திரிபுறுதற்குக் காரணம் என்னையோ? புறத்தாற்றல்கள் எனின், புறத்தாற்றல் அகத்தாற்றலைத் தாக்கமாட்டாதென்பது மேலே விளக்கப்பட்டது. அல்லதூஉம் புறத்தாற்றல்கள் அகத்தாற்றல்களைத் தாக்குமென்பது அனுபவத்திற் காணப்பட்டிலது. இது கூடுமேல் எத்துணைச் சாத்திரவல்லார் தாமும் ஒன்றன் அகத்தாற்றலைப் புறத்தாற்றலாற் திரிபுறச்செய்க: இது கூடாதே. கூடாத போது புறத்தாற்றல் அகத்தாற்றலைத் தாக்குமென்னும் வாதம் நிலையுமாறெங்ஙனம்? ஓர் வித்திலிருந்து ஒரு தோற்றம் பிறக்குமிடத்து அஃதங்ஙனம் பிறப்பது எதனால்? அவ்வித்தினுக்கே இயற்கையாவுள்ள அகத்தாற்றல் காரணமாகவா? அல்லது, அதுக்குப்புறத்தேயுள்ள புறத்தாற்றல் காரணமாகவா? புறத்தாற்றல் காரணம் என்பது சிறிதும் பொருந்தாது. அகத்தாற்றலாகிய அதனதன் இயல்பே அவ்வத் தோற்றத்துக்குக்காரணமாம். புறத்தாற்றல்கள் நாம் மேலே காட்டியபடி அவ்வத்தோற்றத்தின் விருத்தி அவிருத்திகட்குக் காரணமாதன மாத்திரமன்றி, அதன் உற்பத்தி யியதிக்குச் சிறிதும் காரணமாகாதாம். உலகத்தின்கணுள்ள அநந்தகோடி தோற்றங்களிற் காணப்படும் பேதங்கட்கெல்லாம் காரணம் அவ்வத் தோற்றத்தின்கணுள்ள அகத்தாற்றலன்றி அவற்றுக்குப் புறத்தேயுள்ள புறத்தாலன்றாம். இப்புறத்தாற்றல் பெரும்பான்மையும் எங்கெங்கும் ஒருபடித்தேயாதலின், தோற்றங்கள் இப் புறத்தாற்றலைக் காரணமாகக்கொண்டால் அவற்றின்கட் பேதங் காணப்படுதல் கூடாதாம். ஆதலின் இப்புறத்தாற்றல் தோற்றங்களின் பேதவியல்பைத் தாக்குதல் கூடாதென்பது இனிது சித்திக்குமாம். சித்திக்கவே, தோற்றங்கடோறும் இந்நூதனமாய பேதவியல்பைத் தருதற்கியைந்த அகத்தாற்றலை, ஆங்காங்கே ஓர் ஒன்றுக்கு ஓர் ஒருபடித்தாய் அமைத்தார் ஒருவர் உளர் என்பதும் இனிது சித்திக்குமென்க.

(எ.) குதிரையும் கழுதையுங்கூடக் கோவேறுகழுதை பிறக்கின்றதன்றே. இங்ஙனமே மற்றைய தோற்றங்களும் ஒன்றிலிருந்தொன்ருகப் பரிணமித்தமைந்தனவாம் என்பிரேல்; கோவேறுகழுதை ஓர் சங்கமதோற்றமன்றிப் பரிணுமதோற்றமன்று. அஃது இருவகைவேற்றுத்தோற்றங்கள் தம்முட்கலத்தலினுல் பிறப்பதல்லாமல், ஒருவகைத்தோற்றத்திருந்து பரிணமிப்பதல்ல. இருவகைவேற்றுத்தோற்றங்கள் தம்முட்கலந்து ஓர் சங்கமதோற்றத்தைப் பிறப்பித்தன எனவே, ஆதியில் வேற்றுத்தோற்றங்கள் உள்ளன என்பதும், எனவே, அவ்வேற்றுத்தோற்றங்களைப் பிறப்பித்தற்கோர் கடவுள் வேண்டப்படுவர் என்பது இனிது சித்திக்குமாம்.

இனி வேற்றுத்தோற்றங்கள் தம்முட் கலத்தல்தானும் குதிரை கழுதையாகிய இவ்விருபாற் தோற்றங்களின் மாத்திரம் கேட்கப்படுமன்றி மற்றைய தோற்றங்களிற் கேட்கப்படுதல் இல்லை. இங்ஙனம் கேட்கப்படாமை அவற்றின்கணுள்ள அகத்தாற்றல் அவ்வாருயதோர் சையோகத்துக்குச் சிறிதும் இடந்தராமைபற்றியேயாம். குதிரையும் கழுதையும் ஓரினத்தன என்று சொல்லத்தக்கவாறு மிக நெருங்கிய இனசம்பந்தமுடைய இரண்டு உபபகுப்புகளாய், ஒரே பகுப்பின்பாற்படு மாதலால், இவை தம்முட் கலத்தல் இயலுந்தகையதாயது. அதாவது, அவற்றின்கணுள்ள அகத்தாற்றல் அக்கலவைக்கு இயைந்ததென்றபடியாம். மனுஷருள்ளே மங்கோலியரும் காக்கேசியரும் தம்முட்கலக்க, ஓர் சங்கமமகவுதித்தலைப் பெரிது நிகர்க்க, குதிரையும், கழுதையும் கலக்கக் கோவேறுகழுதை வந்துதிக்குமென்க. இச்சங்கமசையோகம் இவற்றினன்றி, ஒன்றேடொன்று முற்றும் மாறுகொண்டுகிடக்கும் வேற்றினச் சிருட்டிகளில் நிகழுதல் கூடாதாதலின், உலகத்தின்கண்ணே அவ்வாருய பேதத்தைக்காட்டிநிற்கும் பல்லாயிரவேற்றுச் சிருட்டிகள் எல்லாம், இச்சங்கம சையோகத்தாற் பிறத்தல் கூடாதென்பதும், இவற்றை எல்லாம் வேறு வேறு சிருட்டித்தார் ஒருவர் உளர் என்பதும் செவ்விதிற் போதருமென்க.

குதிரையும் கழுதையும் அல்ப்ப வேற்றுமையுடைய ஓர் இனச்சிருட்டிகளேயாதலின், அவை தம்முட் கலத்தல் கூடும். அங்ஙனம் கலக்கவே அவற்றின்கணுள்ள அல்ப்ப வேற்றுமைபற்றி, அவ்வேற்றுமைக்கியைந்த அளவுமாற்றம், அவற்றின்கட் பிறக்குந்தோற்றத்தினும் காணப்படும். இம்மாற்றம் ஆண்டுத்தோற்றுவது, அஃதத் தோற்றங்களின்கணுள்ள அகத்தாற்றலின் வரம்பினுட்பட்டமை பற்றியேயாம். இவ் வரம்பினுக்கப்பாற்பட்ட மாற்றம் சிறிதும் கேட்கப்படுதல் கூடாது. இதுபற்றியன்றே இப்பரிணாமம் கோவேறுகழுதை அளவிற் றம்பித்து, அப்பாற் செல்லுதல் கூடாதொழிந்தது. ஆகவே இஃது பரிணாம சித்தாந்தத்தை அடியோடு பாற்றுதற்கியைந்ததோர் மரபென்பதைக்காட்டி நிற்பதறிக.

(அ) மயிர்ப்புழுவிலிருந்து வண்ணத்துப்பூச்சி பரிணமித்தாலென்னச் சிருட்டிபேதங்கள் எல்லாம் ஒன்றின்கணொன்றாகிப் பரிணமித்தன்மையுமெனின்; இதுவும் பரிணாமசித்தாந்தத்தை நாட்டமாட்டாதாம். வண்ணத்துப்பூச்சி மயிர்ப்புழுவின் ஓர் முதிர்ச்சியுற்ற நிலை என்றே கொள்ளத்தக்கது. மயிர்ப்புழுவே வண்ணத்துப்பூச்சியாக நிலைதிரியுமெனினும், பின்னர் இவ்வண்ணத்துப்பூச்சியிலிருந்து வண்ணத்துப்பூச்சி பிறத்தலில்லை. அங்ஙனம் பிறக்குமிடத்தும் முந்த மயிர்ப்புழுவடிவம் படைத்தே பின்னர் அவ்வடிவம் வண்ணப்பூச்சிவடிவம் கொள்வது. ஆகவே தவழ்ந்த குழந்தை நடந்தாலென்ன இத்திரிபும் ஒரு தோற்றத்திற்கட்டானே நிகழும் பல பக்குவங்களிலொன்றாம். எனவே, இஃது ஒன்றிலிருந்து, அதனோடு எந்த எந்த நிலையினும் பிரத்தியேகமாக வேறுற்ற பிறிதோர்தோற்றம் பரிணமிக்கைக்கோர் எடுத்துக்காட்டாக நிலையுமாதில்லையாமென்க.

தவழ்ந்த குழந்தை நடப்பதும், கசப்புப் புளிப்புள்ள மாம்பிஞ்சு, இனிப்புற்ற கனியாய்த் திரிதலும், வித்துவிந்துகள் அவ்வவற்றுக்குரிய தோற்றங்களாய் விருத்திபெறுதலும் பரிணாமங்களேயாம். இவ்வியல்பினவாகிய பரிணாமங்களை நாம் மறுப்பதில்லை. இவைகள் எல்லாம் எமக்குப் பெரிதும் உட

ன்பாடேயாம். இங்ஙனமே அஞ்ஞானத்தமிழ்ந்திக் கிடக்கும் ஆன்மவர்க்கங்களும் படிமுறையிற் சுத்த சிவரூபம்படைத்துப் பரிணமிக்கும் என்று எமது சைவசமயம் பிரதிபாதிக்கும். அதுமட்டோ? பிரபஞ்சத்துள்ள பூத அணுக்களும் ஆண்டிக் கடவுளது ஆஞ்ஞையாற் பதிக்கப்பெற்றுள ஆற்றல் காரணமாகக் காலந்தோறும் பரிணமதசைகளையடைந்து உருத்திரியும் என்பதும் எமது சமயத்துக்கு விருத்தமானதொன்றல்ல. ஆனல் நாம் இங்கே வாதிப்பது, உலகத்துள்ள ஜீவதோற்றங்களிலும் இப்பரிணமவாதத்தை அமைத்தல் கூடாது, இத்தோற்றங்களைப் பலபேதப்படுத்துச் சிருட்டித்தார் ஒருவர்உண்டு, அங்ஙனம் ஒருவர் இலரேல் இப்பேததோற்றங்கள் உலகத்துக் காணப்படுதல் கூடாது என்பதேயாம். தவழ்ந்த குழந்தை நடப்பதை ஒத்த பரிணமம், ஒரு பொருளின்கட்டானே நிகழும் பலபடிமுறையாம். இங்ஙனம் நிகழுவது அப்பொருளின்கணுள்ள அகத்தாற்றல்களின் வழியேயாம். இனி இவற்றினின்று பிறதோற்றங்கள் பரிணமித்தற்கு அவற்றின்கணுள்ள அகத்தாற்றல் சிறிதும் ஒட்டாதாதலின், அப்பிறதோற்றங்கள் அவற்றின்கட்டோன்றுதல் கூடாதாமென்க.

(கூ.) இனிச் சிலர் சாணத்திருந்து புழுப் பிறக்கவில்லையா? ஒரு தோற்றத்திலிருந்து பிறிதொருதோற்றம் பிறத்தல் கூடாதா? எனவினவுவர். இங்கே சாணம் புழுவுக்கு ஓர் பிறப்பிடமாத்திரமேயன்றிச் சாணம் பரிணமித்துப் புழுவாவதல்ல. கர்ப்பத்தின்கண் ஓர் சிசுத்தோன்றுதல் காரணமாக, அக்கர்ப்பந்தானே பரிணமித்துச் சிசுவாயிற்றென்று யாரும் சொல்லார்.

ஒன்றிலிருந்து அதனியல்பிற் சிறிது வேறுற்ற பிறிதொன்று பிறத்தலையாவது, ஒரு பொருள் பலப்பலவாறு விகாரப்பட்டுப் பூவானது பிஞ்சாய், காயாய் பின் கனியாகத் திரிபுறுதலை ஒத்துப் பரிணமிப்பதையாவது நாம் இங்கே மறுப்பதில்லை. இப்போது நாம் பிரபஞ்சத்தில் எந்த எந்தப் பரிணமமுறையைக் காண்குதுமோ அது அதுவே அவ்வத்தோற்றத்தின் அகத்தாற்றல் காரணமாக ஆங்காங்கு நிகழ்ச்சிபெறு

மியற்கை முறையாம். இங்ஙனங் காணப்படுமவற்றையன்றி இவற்றுக்கு மாறான யாதோர் பரிணாமம் யாதோர் தோற்றத்தில் அமைதிபெறுதற்கு ஆங்காங்குள்ள அகத்தாற்றல்கள் சிறிதுமொட்டாவாதலின், ஒருதோற்றத்திலிருந்து அதனகத்தாற்றலுக்கு வேறாயதோர் அகத்தாற்றலைக்கொண்ட பின்னொருதோற்றம் அமையுமெனக்கோடல் கூடாதென்பது.

(கூ.) ஓர் ஓர் சாதியாருள்ளே ஒருகாற் காணப்பெறும் பழக்கவழக்கங்கள் காலங்கழியக்கழியத் திரிபுறவில்லையா? ஒரு பாஷைதானே அதனை அப்பியசித்து வருமிடத்துக் காலந்தோறும் பலப்பல மாறுபாடுகளை அடையவில்லையா? இவைபோலவே, சீவதோற்றங்களும் காலங்கழியக்கழியத் திரிபடையவேண்டுவது நியதியன்றோ என்பீராயின்; ஓர் ஓர் சாதியாருட் காணப்பெறும் பழக்கவழக்கங்கட்காவது, அல்லது அவராற் பேசப்படும் பாஷைக்காவது யாதானுமோர் அகத்தாற்றல் இல்லை. இவைகள் சீவதோற்றங்களை ஒத்துத் தம்மகத்தேயுள்ள ஓர் ஓர் இயற்கைநியதியால் நடாத்தப்படுவனவல்ல. இவற்றின் மாற்றங்கட்கெல்லாம் காரணர் இவற்றை எடுத்தாள்பவரேயாம். இங்ஙனம் எடுத்தாள்பவரது அகத்தாற்றல்கள் எந்த எந்தத் திரிபுகட்கு இடங்கொடுக்குமோ, அந்த அந்தத்திரிபெல்லாம் இவற்றினும் அமைதல் நியதியேயாம். மானுஷபவர்க்கத்தின்கண் உள்ள அகத்தாற்றல்கள், காலதேசபேதங்களாற்றாக்குண்டு திரியுறற்கியைந்த பழக்கவழக்கங்களை இனிது பிறப்பிக்கத்தக்கனவும், அவர்களால் பேசப்படும் பாஷைகள் காலந்தோறும் சொற்சுருக்க பெருக்கங்களாலும் அந்நிய பாஷாசங்கமத்தாலும் பலவாறாய திரிபுகள் வந்தினிது அமையத்தக்கனவுமேயாம். ஆதலின் அப்பழக்க வழக்கங்களிலும் பாஷைகளிலும் ஓர் ஓர் மாற்றம் வந்தமைதல் இனிது சாலும். இதுகொண்டு அந்த அந்த அகத்தாற்றல்களுக்கு மாறாய திரிபுகளை நாம் சாதிக்கத்துணிதல் எங்ஙனமாமோ? ஆங்கிலதேசத்துப் பிறந்தானோர் ஆங்கிலேயன், தமிழ்த்தேச சஞ்சாரஞ்செய்யவே தமிழ்ப்பாஷையைப் பேசவல்லுநனவன். அத்தமிழ்ப்பாஷையை அப்பியசித்து வரு

தலினால் அவனது சுயபாஷையிலும், அவன் பேசுமளவிலே,
சிறிது மாற்றங் காணப்படும். தமிழ்ச்சாகியத்துள் அவன் பயி
ன்றுள சஞ்சாரங் காரணமாக, அவனது பழக்கவழக்கங்களி
லும் சிறிது மாற்றங் கேட்கப்படும். ஈதெல்லாம் நிகழ்வது
மானுட இயற்கை இம்மாற்றங்கட்கு இடங்கொடுக்கும் இய
ல்பினதாதலினும். இதுகொண்டு அவ்வியற்கைக்கமைவுறாத
தோர் மாற்றத்தையும் ஆண்டமைக்கப்புகுதல் சாலுந்தா
னோ? ஓர் கிளிப்பிள்ளையைப் பிடித்துப் பேச்சுப்பயிற்ற, அது
பேசும். இங்ஙனம் பேசப்பழகுதல் அதன் இயற்கையதிக்
கமைவுடைத்தாதலின். இதுகொண்டு அந்நியதிக்கமைவுடை
த்தாகாத கணிதவியுற்பத்தியை அதனுக்குப் பயிற்றல் கூடு
மோ? கூடாதாம். ஆகவே மானுடசாகியத்துக் கியல்புடை
த்தாகிய பாஷாமாற்றங்களும் பழக்க வழக்க மாற்றங்களும்
கேட்கப்படலாம். அதனுக்கமையாத பிற மாற்றங்கள் கேட்
கப்படுதல் கூடாதென்க.

(௧௦.) பரிணாமவாதிகளது கொள்கைக்காதாரம் சிருட்டிக
டோறும் காணப்படும் ஒற்றுமைநயமேயாம். ஒற்றுமையுடை
யனவெல்லாம் ஒன்றின்கணொன்றாகத் தோற்றினவெனச் சா
தித்தல் நியாயநெறிக் கியைபுடைத்தொன்றல்ல. கருமையு
டையனவெல்லாம் காக்கைவாய்ப் பிறந்தனவல்ல. இனிப்பு
டையனவெல்லாம் கரும்பின்வாய்ப் பிறந்தனவல்ல. புளிப்
புடையனவெல்லாம் புளியமரத்திற்றோன்றினவல்ல. இங்ங
னமாதலின் முள்ளந்தண்டுடையன எல்லாம் ஒரு தோற்றத்
திருந்து உதித்தனவென்றும், இறகுடையனவெல்லாம் ஒரே
அடியிற் கிளைத்தன என்றும், இரைமீட்கு மிருகங்கள் எனை
த்தும் ஒரு முதலவாய்ச் சனித்தன என்றும் சாதிக்கத்துணி
தல் தர்க்க சம்பிரதாயமாகாது. இன்னமும் ஒற்றுமை நயஞ்
சிறிதுள்ள இம்மிருகங்களிடத்தும், அவற்றை வேறுபடுக்கும்
வேற்றுமைநயம் மிகப் பெரிதுண்டாம். ஆங்குள்ள ஒற்றுமை
நயத்தையும் வேற்றுமைநயத்தையும் எதிர்நிறுத்துத் தூக்கு
வம் எனின், வேற்றுமைநயம் பன்மடங்கதிகமாகக் காணப்ப
டும். ஆகவே அங்ஙனம் அதிகமாக ஆங்குள்ள அவ்வேற்று

மையங் காரணமாக, அவை ஒன்றன்வாய்ப்பிறத்தல் கூடா தென்னும் நியாயமன்றோ பெரிது வலிபெறற்பாலது? இன்னமும், தோற்றங்களின் உபபகுப்புகளின்கண்ணே ஒற்றுமை நயம் காணப்படுதலன்றி, மகா பகுப்புகளில் அவ்வ காணப்படுதல்தானும் இல்லை. இம் மகா பகுப்புகளோ பலவாதலின், இப்பகுப்புகளை ஆதியிலே உலகத்தின்கண் நாட்டுதற்கோர் கர்த்தன் வேண்டப்படுவன் என்பது இனிது சித்திக்குமன்றே.

(கக.)இனி.வேற்றுற்பத்தியினையுடைய வேற்றுத் தோற்றங் கண்மாட்டும் ஒற்றுமைநயமுளதாதல் மரபேயாம். என்னை? அத்தோற்றங்கள் சரிக்கும் பூமியும், அதன்கண் நிகழும் சீதளோஷ்ண நிலையும், பரமாணுவும் பிறவும், பல தோற்றங்கட்கெல்லாம் பொதுவேயாதலின், அப் பொதுமைக்கியைந்த ஒற்றுமை அத்தோற்றங்களிடத்துக் கேட்கப்படுதல் மரபேயாம். இதுகொண்டு அவற்றை ஒன்றன்வாய்ப்பிறந்த சிருட்டிகள் எனமுடித்தல் இயைபுடைத்தாகாது. ஆயின், இத்தோற்றங்களிடத்துள்ள ஒற்றுமைதானும் ஒரு காரணனைக்காட்டுதற்கேபெரிதும் உபகாரக ஏதுவாகும். எங்ஙனம்? ஒருவன் பல பொருள்களை ஆக்குமிடத்து அவற்றின்கண் ஓர் பொது நெறி அமைத்தே ஆக்குவன். கடவுளும் இத்தோற்றங்களை எல்லாம் சிருட்டிக்கும் இடத்து, அவை பூமியின்கண் இயங்குதற்கியைந்ததோர் பொதுத் தருமத்தை அவற்றின்கணெல்லாம் அமைத்துவைப்பர் என்பது காண்க.

(கஉ.)இவ்வொற்றுமைபற்றியவாதம் ஒருபுறம் கிடக்கட்டும். தம்முட் சிறிதேனும் ஒற்றுமையில்லாத லோக, தாவர, மிருக பேதங்கள் உலகத்திற் தோற்றியவாறெவனோ? இவையும் ஒன்றின்கணொன்றாய்த் தோற்றற்கியைந்த ஒற்றுமைநயம் ஒருசிறிதேனும் உளவாமோ? இனி வேற்றுத்தோற்றங்களை விடுத்து யாதானும் ஒருதிறத்தோற்றத்தை எடுத்துச் சிறிது.விசாரிப்பம். மிருகதோற்றம் எனப்படுவது உலகத்துத் தோற்றியவாறெவன்? இத்தோற்றத்தை உலகத்தின்கணுள்ள இயற்கைநியதி எவ்வாற்றானும் பிறப்பித்தல் கூடுமாமோ? கூடா

தே. கூடாதபோது இதனைப்பிறப்பித்தார் ஓர் காரணர் உண்டென்பது செவ்விதிற்போதருமன்றே. தத்துவ ஆராய்ச்சியிலே பெரிதுகாலம் போக்கிய மகாசதுரராகிய எத்தனையோ பண்டிதோத்தமர்கள், வித்தின்றி எப்பொருளும் எக்காலத்தும் உண்டாதல் இல்லை என்று நிலைநிறுத்திச் சாதித்திருக்கின்றார்கள். நிரீச்சுராபிமானமுடைய (Tindall) திண்டல், (Huxly) ஹக்ஸ்லி முதலிய சகல சாத்திர பண்டிதர்கள் இதைக்குறித்து விரித்து வித்தரித்தெழுதுகின்றார்கள். இவருள் முந்தியவர், "Not a trustworthy evidence exists to prove that life in our day has ever appeared independently of antecedent life." (Ninteenth Centwry 1878.) என்று எழுதுகின்றனர். ஆகவே வித்தின்றி எவ்வகைத்தோற்றமும் உற்பவித்தல் கூடாதென்பது எல்லார்க்கும் உடன்பாடாக, இத்தோற்ற பேதங்களை ஆதிக்கட் சிருட்டித்தார் ஒருவர் உளர் என்பது செவ்விதிற் போதரும்.

(சரு.) இப்பரிணாமசித்தாந்தத்தைக்குறித்து நாம் சொல்லத்தக்கது பின்னுமொன்றுண்டு. மிருகவர்க்கங்கள் ஒன்றன்கணின்றொன்றாகப் பரிணமித்துக் குரக்கினம் தோன்ற, அக்குரக்கினத்திலிருந்து மனிதன் தோன்றினன் என்பது, டார்வின் (Darvin) என்பார் ஓர் பண்டிதர் கொள்கை. இதனையே தத்காலத்துள்ள லௌகிகஞானிகள் எல்லாம் வேதாந்த மகாவாக்கியம்போற் பெரிதுபேணிச் சிரமேற்றாங்கிநின்று ஆர்ப்பரிக்கின்றார்கள். இக்கொள்கை அப்பண்டிதரது அனுமானக்காட்சியேயன்றிப் பிரத்தியக்கக்காட்சியல்ல. சாஸ்திரபண்டிதர்கள் எல்லாம் பிழைபடாச் சாதுக்கள் அல்லர். தத்காலத்துள்ள லௌகிகசாஸ்திரிகள் பெரும்பான்மைபற்றித் தமது சுவ ஆராய்ச்சியாற் கண்ட ஞானத்தினை பற்றிநிற்பதன்றி, யாதோர் ஆப்தவாக்கியத்தைத் தமக்கோர் பற்றுக்கோடாகக் கொள்வதில்லையாதலின், இவர் கொள்கைகளை நாம் பிழைபடாச் சத்தியங்கள் எனக் கையேற்றல் மரபாகாது. என்னை? இந்தச்சாத்திரிகள் தாமே, ஒருகாற் கொண்ட ஓர் ஓர் கொள்கையை பின்னொருகாற் பிழையென்றொதுக்கிவிட்டுப் பிறி

தோர் ஓர் கொள்கையைக் கைக்கொண் டொழுகுகின்றவர். இதற்கு நாம் உதாகரணம் காட்டவேண்டா. இங்ஙனமாயதே டார்வின் பண்டிதர் கொள்கையுமாம். இதன்மாட்டித் துணையபிமானங்கொண்டு, பண்டுதொட்டு ஆன்றோரால் சந்ததிக்கிரமாக் கையேற்றங்கீகரித்துவரும் கொள்கையை ஒழித்துநிற்பாரது சுவஞானசாதனையை நாம் யாதுக்கு ஒப்பிடுவம்!!

நல்லது. டார்வின் பண்டிதர் குரங்கிலிருந்து மனிதன் பரிணமித்தான் எனக்காட்டிய கூற்றை நாம் கைக்கொள்ளுதற்கமைந்த நியாயமென்னை? குரக்குடம்பு மனித உடம்பாய்ப் பரிணமித்தற்கியைந்த இலேசமே அந்த நியாயமாமோ? இருவகை உடம்புக்கண் மாட்டுமுள்ள ஒற்றுமை நயம்பற்றி ஒன்று ஒன்றாய்ப் பரிணமித்தல் இலேசத்தின்பாற்றென நாம் நிருமித்தல் யுக்தமாகுமோ? இருதிறத்தோற்றத்தின்கணுள்ள தேக ஒற்றுமையாகிய இந்த ஒரு இலேசத்தைமாத்திரம் இவர் சிந்தித்தாரன்றி, அவ்விரண்டனையும் இரண்டுவேற்றுச் சிருட்டிகளாக நிறுத்தி வைத்துள்ள அவ்வவற்றின் அகத்தாற்றலாகிய இயற்கைமுறையை இவர் சிறிதுஞ் சிந்தித்தாரில்லை. இரண்டன்கண்ணும் அது அதுக்கே சிறப்பாகிய ஓர் ஓர் நியதி நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, ஆங்கே எத்துணை இலேசந்தான் காணப்பட்டாலும், அதுகொண்டு பரிணாமவாதத்துக்கெய்தற்பாலதோர் சலாக்கியந்தான்என்னை? இலேசம் என்று நாம்கூறுவதெல்லாம், எமதுகிஞ்சித்புத்திக்கு அங்ஙனம்தோற்றுவதன்றி, அவ்விலேசம் ஆங்குப்பயன்பட அவ்வவற்றின்கணுள்ள இயற்கைவரம்பு சிறிதும் ஒட்டாதன்றே. ஓர் கோபுர சிகரத்தின்கணுள்ள கலசம் நாற்புறத்தாலும் காற்றுமோதப்பெறுதலும், மிக ஒடுங்கியதோர் மீதானத்தமைக்கப்பட்டிருத்தலும் முதலிய ஏதுக்கள்காரணமாக, கீழே தவறுற்று விழுமென்கை ஓர் பேரிலேசமாக எமக்குப் புலப்படுமேனும், அது அங்கே நாட்டப்பெற்றுள்ள வன்மை, அதனைத் தவறுற்றுக் கீழ்த்தலத்து வீழச் சிறிதும் ஒட்டாதாம். இங்ஙனமே குரக்கினங்கள்தம்மினும், மனுஷவர்க்கத்துக்கேற்றம் பெறுதற்கி

யைந்த இலேசங்கள் காணப்பட்டாலும், அவற்றைத் தமது வரம்புகடந்து அப்பாற் செல்லவொட்டாத இயற்கைநியதி நீங்காது பந்தித்திருக்கும்போது, அவை அங்ஙனம் ஏற்றம் படைத்தல் சிறிதுங் கூடாதென்க. ஆகவே இலேசம்பற்றி இப்பரிணாமவாதத்தைச் சாதிக்கத் துணிதல் வியர்த்தமேயா மென்பதறிக.

(கஅ) அன்றியும் யாதொருபொருள் தானே பின்னொன்றாய் அமைந்த தென்னுமிடத்து, அங்ஙனம் அமைந்தமை உண்மைதானோ என்பதைப் பரீக்ஷித்தறிதற்குப் பலப்பல உபாயங்கள் உண்டாம். யாதொரு அணிகலத்தினைச் சிறிது பேதப்படுத்துப் பிறிதோர் அணிகலமாக அமைத்ததுண்டெனில், அவ்விரண்டும் தம்மாற்றிற் சிறிதும் பேதப்படாவாம். அங்ஙனமே குரங்கும் மனிதனும் தத்தமது தேகக்கூற்றினும், அத்தேகத்தமைந்துள்ள அறிவுக்கூற்றினும் சிறிதும் பேதப்படுதல் கூடாதாம். இக்கூற்றுகளோ இவ்விரண்டற்கும் பெரிது பேதப்பட்டுக் கிடத்தலின், இவற்றில் ஒன்றிலிருந்து மற்றையது பரிணமித் தமைந்ததெனக் கோடல் சிறிதும் கூடாது. மனிதனிடத்துக் காணப்படும் அறிவாற்றலுக்குரியதோர் சிறு கூற்றுத்தானும் குரங்கினிடத்துக் காணப்படுவதில்லையாக, இக் குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினன் என்பது எங்ஙனம் சாதிக்கத்தக்கதோ யாமறிகிலம். இனி இவ்விருதிறச் சிருட்டிகளின்கணுள்ள தேக ஒற்றுமையைத்தானும் எடுத்துப் பரீக்ஷித்த சாத்திரோத்தமர் பலர், அவற்றை ஒற்றுமைப்படுத்தற்கியைந்த முக்கிய இலக்கணங்கள் பெரிது விகற்பமுறும் என்பர். இவ்விருதிறச் சிருட்டிகளினது அங்கங்கள் பலவற்றினும் சிரேட்டம்படைத்த மூளைப்பிரமாணந் தானே இவ்வொற்றுமையைப் பெரிது சாதிக்கத்தக்கது. இந்தமூளை மனுஷனுக்கு. கஉஅ, கன அங்குல பிரமாணமுடைத்தென்றும், குரங்குக்கு இப்பிரமாணத்தின் அரைக்கூறுதானும் இல்லை என்றும் தக்கவாறு ஆராய்ந்த சாத்திரவியுற்பன்னர் கூறுவரென்றால், இவை ஒன்றினின்று ஒன்று பரிணமிக்கத்தக்க அத்துணை ஒற்றுமையமுடையன எனச் சாதித்தல்

அமையுமாறு எங்ஙனமோ? இன்னமும், மனுஷனுக்கு அகங்கையினமைந்துள்ள நரப்புமண்டலப் பெருக்கமும், அதுகொண்டு அவன் தனது கைத்தலத்தை இனிது விரித்தும் சுருக்கியும் வேலை செய்தற்கியைந்துள்ள வசதியும், குரக்கினங்களிலே இவ்வசதி சிறிதுமின்மையும் முதலிய விகற்பங்களை ஆராயுமிடத்து, இவை ஒன்று மற்றொன்றாய்ப் பரிணமித்தமைதல் சிறிதும் கூடாதென்பது பொள்ளெனப் புலப்படும்.

(௬) இனிக் குரக்கினங்கள் மனிதவடிவாகப் பரிணமிக்கவல்லனதாமோ என்பதைப் பரீக்ஷிக்கவேண்டி சில பண்டிதர்கள் குரங்குகளைப் பிடித்து ஐம்பது நூறு வருடங்களாகப் பயிற்றினர். இக்காலத்திலே அவற்றின்கண் அங்ஙனமாயதோர் திரிபுக்கமைந்த மாற்றம் சிறிதேனும் இல்லாதிருப்பக் கண்டார்கள். ஐம்பது நூறு வருடங்களாக அற்ப திரிபுதானும் காணப்பட்டிலதாயின், ஆயிர வருடங்களில் அங்ஙனமோர் திரிபெய்துமெனக் காத்திருத்தல்கூடுமேயோ? அற்ப காலத்தில், அற்ப திரிபு காணப்படினன்றே, காலாந்தரத்தில் அவ்வல்ப திரிபுகள் திரண்டு ஓர் பெருவிகற்பத்தைப் பிறப்பிக்கும் எனக் கொள்ளலாம். அல்பகாலத்தில் அத்திரிபு சூனியமாமென்றால், அநந்தகோடி காலத்திற்றானும் அஃது சூனியமேயாமென்க. என்னை? அநந்தகோடி சூனியமும் சூனியமேயாதலின். இனி மற்றைச் சிருட்டிபேதங்கள் தம்மினும் இத்திரிபை யாரும் மட்டிட்டிலர். உலகத்தின் தற்காலிக இதிகாசகாலமாகிய ஆறாயிர ஏழாயிர வருஷங்காறும் இங்ஙனமாயதோர் திரிபை யாரும் கண்டிலர். இவ்வாறாயிர ஏழாயிரவருஷ அனுபவம் பரிணாமவாதத்துக்கு முற்றும் மறுதலையாக அமைந்துகிடக்கும்போது, இப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தைத் தத்காலத்துள்ள சில நூதன விவேகிகளது அனுமானப் பிரமாணம் சபலஞ்செய்யுமாற்றலுடைத்தாயோ? இன்னமும் டார்வின் பண்டிதரும், தாம் படைத்துள்ள பூர்வக பரீக்ஷா ஞானங்கொண்டு, சிருட்டிகளெவற்றினும் ஓர்படித்தாகிய ஒற்றுமை உண்டென்று சொல்வாரேனும், அவ்வொற்றுமை அவற்றை ஒன்றன்கணொன்றாகப் பரிணமித்தன எனக் கொள்ளத்

தக்க அத்துணைச் சிறப்புடையனவன்றென்பர். "We do not find infinitcey numerous fine transitional forms closely joining them together" * என்பது அப்பண்டிதர் வாக்கு. பூவகசாத்திரத்திலே மகா பாண்டித்தியம்படைத்த எத்தனை சாதுரியர், சீவதோற்றங்கள் உருத்திரிந்தமையத் தக்கனவன்றென்று நிறுத்திச் சாதிக்கின்றார்கள். இவர்கள் கோவேறு கழுதை முதலிய சங்கரபேதங்களிடத்தே பல்குநெறி இல்லா திருத்தன் முதலிய பல நியாயங்களைக்கொண்டும், சங்கரபேத ங்கள் தொன்றுதொட்டு நிகழ்ந்துவருவதுண்டாயின், உலகத் திலே கிரமநெறி சிறிதுமின்றி எங்கெங்கும் கிரமப்பிறழ்ச்சிக ளும் குழப்பங்களுமே காணப்படும் என்பனமுதலிய பல நை யாயிகதர்மங்கொண்டும், பரிணாமவாதத்தைப் பெரிது கண்டி க்கின்றனர். ஆகவே இப்பரிணாமவாதம் சாத்திரயுக்தமாம் என்று நம்மவர் சிலர் வாய்ப்பறை அறைந்து திரிதல் வெற்று ரையேயாய் முடிந்தபடி கண்டுகொள்க.

(க்சு.)இந்நிலவுலகத்திற் காணப்பெறும் எந்த எந்தப் பொரு ளும் கணந்தோறும் திரிபடைந்துகொண்டே நிகழ்ச்சி பெறு மாதலின், அந்நிகழ்ச்சிக்கு இப் பரிணாமவாதம் பெரிதும் அ மைவுடைத்தன்றே என்பீரேல்; இங்ஙனமாய பரிணாமத்தை நாம் சிறிதும் மறுப்பதில்லை என்று முன்னர்த்தானே கூறியு ள்ளோம். உலகத்தின்கணுள்ள சிருட்டிகள் எல்லாம் எப்போ தும் ஒர்படித்தாகவே நிலையுதலுற்றமையும் என்று நாம் சொ ல்வதில்லை. எவ்வெச்சிருட்டிகளும் தத்தமது அகத்தாற்ற லுக்கமைந்து, அவ்வாற்றல் வரம்பினுள் நிகழுந்தகையனவாய திரிபுகளைக் கணந்தோறும் ஏற்றுக்கொண்டே அமையுமாம். ஆனல், அவற்றின்கண்ணே ஆங்காங்குள்ள அகத்தாற்றலு க்கதீதமான யாதொரு திரிபமைதல் கூடாதென்பதே நாம் சாதிப்பது. அவ்வகத்தாற்றலினும் அத்திரிபு கேட்கப்பட்டால் என்னெனின், சீவதோற்றங்கடோறும் காணப்படும் அகத்தா ற்றல்களுள் யாதொன்றேனும், பிரபஞ்ச வியவகாரங்களுள் யாதொன்றைப் பற்றுக்கோடாக் கொள்ளாது, பிரத்தியேக

* Darwin's "Origin of Species" pages 388.

மாக அமைந்துள்ளன என்பதும், ஆகவே அவ்வகத்தாற்றல் திரிபடைதல் ஏக்காலத்தும் கூடாதென்பதும் மேலே விளக்கப்பட்டன. அன்றியும் அகத்தாற்றல்களிடத்தும் காலந்தோறும் திரிபெய்தும் ஓர் நியதியுண்டாமேல், அந்நியதி எவ்வெத்தோற்றத்தும் காணப்படுமோம். படவே ஒரு தோற்றத்தின்கணுள்ள அகத்தாற்றல் திரிபுற்றுப் பிறிதோர் தோற்றம் பரிணமிக்குமிடத்து, அத்திரிபு அந்த இனத்தின்பாற்பட்ட தோற்றங்கள் எவற்றினும் உண்டாய், அவற்றை எல்லாம் ஒருங்கே பிறிதோரினமாகப் பரிணமிக்கச் செய்துவிடுமோம். ஆகவே, ஆதிக்கணுள்ள சிருட்டிதோற்றத் தொகையே எந்தக் காலத்தினும் உளதாதல் வேண்டும் என்பதும், எனவே இப்போது காணப்படும் சிருட்டிபேதத்தொகை ஆதிக்கண்ணும் உண்டென்பதும், அங்ஙனம் ஆதிக்கட் பலபேதத்தினவாய தோற்றங்களை அமைத்தற்கோர் காரணகர்த்தன் வேண்டப்படுவன் என்பதும் தெற்றெனப் புலப்படுமென்க. இங்ஙனம் போந்தவாற்றால் பரிணாமவாதம் நிலையுதலுடைத்தன்றென்பதும், அஃது நிரீச்சுரவாதிகட்குச் சிறிதேனும் ஓர் அநுகூலம் தாத்தக்கதன்றென்பதும் போந்தவாறு கண்டுகொள்க.

(கஎ.) பரிணாமவாதிகள் தமதுவாதத்தை நிறுத்துமிடத்து, சீவதோற்றங்கள் ஒன்றோடொன்று கலப்புற்று நட்புக்கொண்டாடுதல் காரணமாகவும், அவற்றின் பலதுறைப்பட்ட இயக்கங் காரணமாகவும், காலாந்தரத்தில் தத்தமது தேகத்தில் ஓர் ஓர் பரிணாமத்தை எய்தும் என்பர். இக்கூற்றை ஒத்துக்கொள்ளுமிடத்தும், இக்கூற்று இயங்குதிணையாகிய மிருகவர்க்கத்துக்கமையுமன்றி, நிலத்திணையாகிய தாவர சங்கமத்துக்கமைவுறாதன்றே. இத்தாவரசங்கமத்தின்கண் ஒன்றோடொன்று அளவளாய் நட்புப் பாராட்டுதற்கியைந்த மனக்கரணமும் இன்றன்றே. ஆகவே இந்தச் சங்கமத்திலே உருத்திரியுமியல்பு கேட்கப்படுதல் எங்ஙனமோ? இவற்றின்கண்ணுள்ள பேதங்கட்கெல்லாம் காரணர் யாரோ? கடவுளேயன்றோ?

(கஅ.) இனி இப்பரிணாமசித்தாந்தம் உண்மையின்பாற்றாயினும் ஆக. இதுகொண்டு கடவுளுண்மை சிறிதேனும் சபலமுறுதல் இல்லை. நுண்ணறிவுகொண்டாராயுமிடத்து, இச்சித்தாந்தம் கடவுளுண்மைக்குப் பின்னுமொருமடங்கு பலந்தருவதாயே முடியுமாம். பரிணாமநியதி உலகத்திற் காணப்படுவதோர் இயற்கைமரபாயின், அதுவும் கடவுளால் அமைக்கப்பட்டதோர் நியதியேயாகும். எந்தெந்தச் சமயிகளும், இந்நியதிகளைக் கடவுள் கிருத்திய நடாத்து முறைகள் எனக்கொள்வரன்றி, இவற்றை அம்முறைகட்கு மறுதலையாயுள்ளனவெனச் சிறிதும் ஒப்பமாட்டார். பிரபஞ்ச நிகழ்தற்கமைந்த முறையினை அநாதியே தமது சர்வஞானங்கொண்டு நிருமித்த கடவுள்; அந்தந்த முறையை அந்தந்தக் காலங்களில் நிகழுமாறு செய்தருளுவர். ஆகவே இயற்கைமரபுகள் எங்கெங்கே எவ்வெவ்வாறு நிகழுகின்றனவோ, அவைகள் எல்லாம் கடவுளது சங்கற்பங்களே என்றபடியாம்.

தனது நெறியினின்று சிறிதும் பிறழாத் திவ்விய லக்கணத்தைக்கொண்டு, அந்நெறியாறாகிய அதிப்பெல வரம்பினுட்பட்டு நிகழ்வதாகிய இயற்கைமரபிலிருந்து, பிறிதோர் மரபு தோன்றுவதுண்டெனில், அம்மரபை அங்ஙனம் பிறழ்த்தித் தோற்றுவித்தற்கோர் காரணர் உண்டென்றே நாம் எல்லாம் கொள்ளத்தக்கது. இன்னமும், அங்ஙனம் பிறழ்வுற்றுத்தோற்றும் தோற்றத்தினும், முன்னதிற்போலாது பின்னதுக்கு விசேடமாக வேண்டப்படும் அங்கவசதிகளும் பிறவும் காணப்படுமென்றால், இவற்றை எல்லாம் அமைத்து இதனை இங்ஙனம் பிறழ்த்தி அமைத்தார் ஒருவர் உண்டென்றே எவ்வெவரும் துணியத்தக்கது. அன்றியும், ஓர் படித்தாகியதோர் இயற்கைமரபிலிருந்து அதனோடு சம்பந்தமில்லாத பின்னோர் இயற்கைமரபு தோன்றுமென்றால், அதனை அங்ஙனம் தோற்றுவித்தது, நிரம்பிய சாமர்த்தியமுடையார் ஒருவரது தொழிலாற்றல் என்று நாம் பூரணமாக நிறுத்திச் சாதிக்கத்தக்கதாம். எக்காலத்தும் ஒருவழியாகச் செல்லுவதோர் நதி, பின்னொருகாலத்தில் பிறிதோர் வழியாகச் செல்லுவதுண்

டாயின், அதனை முந்தியவழியாற் செல்லவொட்டாது தடுத்
துக்கட்டிப் பிந்திய வழியாற் செல்லுமாறு செலுத்தினர் ஒரு
வர் உண்டென்று யார்யாரும் வற்புறுத்துச் சாதிப்பர். இனிப
பிந்தியவழியினும் கிரமத்தவறுகள் சிறிதுமின்றிப் பலப்பல
ஒழுக்க கிரமங்களும் பிரயோசனுதிகளும் காணப்படுமென்
ருல், இது தடையின்றி ஓர் யுத்தியின் வல்ல சித்துப்பொரு
ளாற்றுனே இங்ஙனம் செலுத்தப்பட்டதென்பது செவ்விதி
ற்போதரும். இங்ஙனமே சீவதோற்றங்களிலும், பரிணுமமு
றை கேட்கப்படுமாயின், அதனுக்குப் பரிபூரண சாமர்த்தியமு
டையார் ஓர் காரண்கர்த்தர் வேண்டப்படுவர் என்பதுதானே
போதருமாம். ஆகவே எவ்வாற்றுனும் கடவுளுண்மை நிறு
த்தி நாட்டப்பட்டவாறுமென முடிக்க.

## அ-ம் அதிகரணம்.

கடவுள் ஒருவர் உண்டென்று நிச்சயிப்பதெல்லாம் பிர
பஞ்சமாகிய காரியம் கொண்டன்றே? ஆகவே, முந்தப் பிர
பஞ்சத்தை ஓர் உண்மைப்பொருள் என்று நாட்டினுலன்றே
கடவுளுண்மை திரம்பெறும் என்பது மித்தியா வாதிகள்
(Idealists) கொள்கை. இவர்கள் பிரபஞ்சத்தைக் கயிற்றரவு
போன்றதோர் விபரீதக்காட்சி எனக்கொண்டு மார்படிப்பர்.

பிரபஞ்சத்தை நாம் உண்மைப்பொருள் என்று கொள்
வது மானுடதேகிகளாகிய எமது அறிவுக்கு கருவியாயுள்ள
புலன்கள்கொண்டு. இப்புலன்களுக்குப் புலப்படுவனவெல்
லாம் எம்மளவில் உண்மைப்பொருள்களேயாம். இக்காட்சிக்
குட் சில விபரீதக்காட்சிகளாதலுமுண்டு. அந்தக்காட்சிகளை
அங்ஙனமாமெனக் காட்டுதற்கியைந்த நியாயமரபை நாம் சந்
தேகவிபரீதமறக் காண்பதுண்டாயினே அக்காட்சிகளை இன்
மைக்காட்சிகள் என்று நாம் ஒதுக்குதல் கூடும். பிரபஞ்சத்
தை இங்ஙனமெனக் காட்டுதற்கியைந்த யாதோர் நையா
யிக மரபுண்டோ? இல்லையே. இல்லாதபோது நாம் எமது

அறிகருவிகளின் சாக்ஷியத்தைப் புறம்பே ஒதுக்கிவிட்டு, அச் சாக்ஷியத்தூக்கு மாறுக இப் பிரபஞ்சத்தை விபரீதக்காட்சி என்று முடிப்பது எங்ஙனம்?

கயிற்றரவு ஓர் விபரீதக்காட்சியல்லவா? அதுபோலவே பிரபஞ்சமும் ஓர் விபரீதக்காட்சியாம் என்பீரேல், கயிற்றரவு விபரீதக்காட்சி என்பதற்கமைந்த நையாயிகதர்மம் உண்டு. பிரபஞ்சமும் அங்ஙனமாம் என்பதற்கமைந்த நியாயம் ஏதும் உண்டா? கயிறு அரவாக ஒருகாற் தோற்றுமாயினும், பின்னர்ச் செய்துகொள்ளும் விசாரம் காரணமாக, அத்தோற்றம் ஓர் விபரீதத்தோற்றமே என்பது இனிது சித்திக்குமாம். இங்ஙனமாகிய யாதொரு விசாரத்தால் பிரபஞ்சத்தையும் ஓர் விபரீதக்காட்சி என்று முடித்தல் கூடுமோ? கூடாதபோது அதனையும் கயிற்றரவை ஒத்ததோர் காட்சி என்று முடிக்குமாறெங்ஙனம்? இங்ஙனம் முடித்தல் கூடாதாக, கயிற்றரவு விபரீதக்காட்சி அல்லவா அதுபோல் பிரபஞ்சமும் விபரீதக்காட்சியாம் என்று சாதிப்பது எவ்வாறு? இங்ஙனம் சாதிப்பார் பருந்து பறக்கவில்லையா? அதுபோலப் பசுவும் பறக்கும் என்று சாதிப்பர்போலும். உபமானம் காட்டுமிடத்து உபமேயத்தின்கண்ணே உபமானத்தோடு இயைபுடைய சில ஒற்றுமைநயம் இருத்தல்வேண்டும். இஃதில்லாக்கால் அதனை இதனுக்கு உபமானமாக எடுத்துக்காட்டுதல் வியர்த்தமேயாமென்க. கயிற்றரவுக்கும் பிரபஞ்சத்துக்கும் பொதுவாயுள்ள யாதொரு ஒற்றுமைநயம் இல்லாதபோது, அதனை இதனுக்கு உபமானமாக எடுத்துக்காட்டி, அதுபோல் இதுவும் ஓர் விபரீதக்காட்சியாம் என முடிக்கத்துணிதல் அறிவிலார் கூற்றுமென்க.

# ஐந்தாஞ் சூத்திரம்.

:o:

இறையவனுண்மைக் கெதிர்கெழுசங்கைகண்
முறைமுறையொழித்து முடிபுகூறியது.

## க-ம் அதிகரணம்.

இப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்தார் ஒருவர் உளர் எனில், அவரது உண்மை எமது பஞ்சப்புலனுள் யாதொன்றுக்கு விடயமாதல்வேண்டும். இங்ஙனம் ஒன்றுக்கும் விடயமாகாதார் ஒருவர் உளர் என்று நாம் கொள்ளுமாறெவன் என்பீரேல்; நாம் உண்மைப்பொருள் என்று கொள்வன எல்லாம் எமது பஞ்சப்புலனுள் ஒன்றுக்கு விடயமாவனமாத்திரந்தானேயோ? பஞ்சப்புலனுக்கு விடயமாவனவெல்லாம் மூர்த்த வஸ்துக்களேயாம். அமூர்த்தங்கள் இவற்றுக்கு விடயமாதல் இல்லை. இங்ஙனமாதலின் அமூர்த்தங்களை இல்பொருள்களென முடித்துவிடுவமா? கவர்ச்சி, (Attraction) ஓர் அமூர்த்தப்பொருள். இது எமது பஞ்சப்புலனுள் ஒன்றனுக்கேனும் விடயமாகாது. ஆனதுபற்றி இதனை இல்பொருள் என்று முடித்துவிடுவமா? காலம் எமது புலனுள் யாதொன்றற்கேனும் விடயமாகமாட்டாது. ஆனதுகொண்டு அதனை இல்பொருள் என முடித்துவிடுவமா? ஒளியை எமது புலனுள் யாதொன்று கிரகிக்கமாட்டாது. ஒளி ஆற்றலால் பொருள்கள் எமக்குப் புலப்படுதலன்றி, அவ்வொளி நேரே நமது புலனுக்கு விடயமாகமாட்டாது. இங்ஙனமாட்டாமையால் ஒளி என்று ஒருபொருள் இல்லை என்பேமா? இந்தப் பொருள்களை எமதுபுலன்கள் கிரகித்தல் இல்லை என்பது உண்மையாயினும், இவற்றின் ஆற்றல் பிறபொருள்களிற் காணப்படுதல் காரணமாக, இவற்றது உண்மை எமக்கு எளிதிற் புலப்படத்தக்கனவாம் என்பீரேல், அங்ஙன்மே கடவுளது ஆற்றற் சத்தியும் பிரபஞ்ச நிழ்ச்சியாகிய காரியத்திற் காணப்படுதல் காரணமாக, அவரை எமது புலன் கிரகித்தல்கூடா

தவழியும், அவ்வாற்றல்கொண்டு அவரதுண்மை இலகுவிற் தாபிக்கப்படும் என்க.

(உ.) இனி, எமக்குப் புலப்படுந்தகையனவாகிய பொருள்களைத்தான், அனைத்தையும் நாம் அளந்தறியத்தக்க பூரணஞானமுடையேம் அல்லேம். ஆகலின், எமக்குப் புலப்படாத பொருள்களும் இருத்தல் இனிதுசாலும். இதுகொண்டு எமக்குப் புலப்படாத பொருள்களை இல்பொருள் என முடித்தல் இயைபுடைத்தாகாது. அற்றன்று: அவற்றை நாம் இல்பொருள் என முடித்தல் கூடாதுதான்; ஆயின், அவற்றைக்குறித்து அவை உள்பொருள் என்றாயினும், இல்பொருள் என்றாயினும் யாதொருதுணிபைப் பிறப்பிக்கமாட்டேம்; ஆகவே கடவுள் இருக்கிறார் என்றாவது இல்லை என்றாவது நாம் சொல்லாது, அவரது உண்மை இன்மைகளைக்குறித்து நாம் ஒன்றும் அறியேம் என்றே கூறுவேம் என்பிரேல்; கடவுளை நாம் நேரே காண்டல் கூடாதாயினும், அவரது உண்மையை அனுமானித்தற்கியைந்த நியாயத்துறையைக்குறித்து நாம் யாதும் அறியேம் என்றுகொள்வது நடிப்புமாத்திரையேயன்றி உண்மையின்பாற்றாகாது. நாம் யாதொன்றை நேரே கண்டாலன்றி, அதனுண்மையை விசுவசித்தல் கூடாதென்பதோர் நியதியுண்டாமாயின், எமது அறிவு அல்ப்பத்தினும் மிக அல்ப்பமாய் வெறும் பாழாய் முடியுமாம். எமது அறிவு விருத்தியாவது நம் பஞ்சப்புலன் வாயிலானும், அப்புலன் வாயிலாய் நாம் கிரகித்த அறிவை ஆதாரமாக்கொண்டு செய்யும் விவேகசாதனைவாயிலானுமாம். இவ் விவேகசாதனையாற் கடவுளுண்மை இனிது புலப்படத்தக்கதாகக் கிடக்க, அது எமது அறிவுக்குப் புலப்பட்டிலதெனக் கொண்டு, அதைக் குறித்து நாம் யாதொரு கொள்கையைக் கொள்ளமாட்டேம் என்பது நடிப்புமாத்திரையே என்பது நன்குபோதருமென்க.

(ங.) இனி நாம் கடவுளுண்மைக்கியைந்த நியாயத்துறைகளை அறியாதவிடத்தும், அவரதுண்மையை எடுத்தியம்பும் உலகவழக்கு முதலியவற்றை நாம் கைக்கொண்டொழுகல்

வேண்டுமென்பது முதற்சூத்திரத்தின்கண் இனிது தாபிக்கப்பட்டுளதாதலின், கடவுளை உண்டென்றும் சொல்லேம் இல்லை என்றும் சொல்லேம் என்பாரதுவாதம் சிறிதும் நிலையுதல் பெறுதென்க.

## உ-ம் அதிகரணம்.

கடவுள் எவ்வெவற்றையும் ஆக்க வல்ல சர்வசாமர்த்தியரும், எவ்வெவர்க்கும் கைமாறுகருதாது நன்மையேபயக்கும் சர்வகாருண்ணியருமாமென்றால், இப் பிரபஞ்சத்திற் காணப்படும் தீமைகளையெல்லாம் புரியுமாறெங்ஙனம்? என்பது பின்னொரு சாரார் ஆக்ஷேபம்.

உலகத்தின்கண்ணே தீமை பயப்பனவும் சில உண்மை பற்றிக் கடவுளுண்மைக்கெய்தற்பாலதோர் இழுக்கு ஒரு சிறிதேனும் இல்லையாம். தீமைகளைப் புரிதல் காரணமாகக் கடவுளைத் தீயர் என்று கொள்ளத்தக்கதன்றி, அவரை இல்பொருள் எனமுடித்தல் சாலாது. நமது நாஸ்திகவாதிகட்குக் கடவுளைச் சிட்டர் என்றுகொள்ளச் சித்தமின்றாயின், அவரைத் துட்டரென்றாயினும் கொள்க. சிட்டராயினும் துட்டராயினும், பிரபஞ்சகாரணர் ஒருவர் உண்டென்பதே நாம் இங்குப் பேசப்புகுந்தது. அவரதுண்மை அங்கிகரிக்கப்பட்டுவிட்டதாயின், அவர் துட்டரோ சிட்டரோ என்னும் அவரது இலக்கண ஆராய்ச்சியை அப்பால் நடாத்துவாம். (இது சற்சமயவிளக்கத்திலே விரித்து வித்தரிக்கப்படும்).

(உ.) இங்கே தீமைபயப்பன சிலவற்றைக்கொண்டு கடவுளைத் தீயர் என முடித்தல் சாலாது. என்னை? உலகத்திலே நன்மைபயப்பனவோ தீமைபயப்பனவோ அதிகமாக உள்ளன? நன்மைபயப்பனவேயாம். நன்மைகள் தீமைகளினும் சதகோடிமடங்கதிகம் எனினும் இழுக்காது. இத்துணைப்பெரு நன்மைகளை எல்லாம் செய்வார் ஒருவர் அற்பதீமைகளையும் அவற்றோடு உடன்புரியப்புகுந்தமை என்கொலோ

என்று ஆராய்வாம் எனின், அத்தீமைகள் எனப்படுவனவும் நன்மைகளேயாம் என்பது நன்றாகப் புலப்படும்.

(௩.) பெற்றார் பிள்ளைகளைத் தண்டிப்பதெல்லாம் அப்பிள்ளைகட்குத் தீமைபோலத் தோற்றினும், உண்மை அளவிலே அவை எல்லாம் பெருநன்மைகளேயாம். அதுபோல், ஆன்மாக்கள் செய்துள்ள வினைப்பயன்களை ஊட்டி அருளுமாறு ஈசுரனும் அவர்க்குச் சிற்சில தீமைகளை உய்த்தருள்வர். இது அவர்களை ஈடேற்றுதல்வேண்டுமென்னும் பெருங் காருண்ணியமேயாதலின், பெருநன்மையேயாகுமன்றிக் கிஞ்சித்தேனும் தீமையாகாதென்பது இவ்விஷயத்தைக் கூர்ந்து ஆலோசித்தால் இனிது பெறப்படும் என்க.

(௪.) நன்மைகளையேசெய்வான்ஒருவன், ஒரோவழித் தீமைபோறறோற்றுவன சிலவற்றைப் புரிவான் என்றால், தீமையைப்புரிதல் அவனது இயற்கைக்குணத்துக்கு மாறாதலின், அத்தீமைபோறறோற்றுவனதாமும் ஓர் ஓர் நன்மைப்பயன் குறித்தன எனக்கொள்வதே அறிவுடையார் கடற்றாகும். அவற்றைத் தீயன என்று முடித்தல் அறிவில்லாரது பசப்பு மாத்திரையேயாமென்க.

## ௩-ம் அதிகரணம்.

இப்பிரபஞ்சம் எல்லாம் கடவுளாற் சிருட்டிக்கப்பட்டனவாமாயின், அவற்றைச் சிருட்டித்தன்முன் அக்கடவுள் இருத்தற்கோர் இடம் வேண்டப்படுமன்றே. அவ்விடந்தான் யாது? அதாவது, கடவுள் இப்பிரபஞ்சத்தை எங்கே இருந்து சிருட்டித்தார்? என்பதும் சிலர் ஆக்ஷேபம்.

(௧.) பிரபஞ்சஅமைதிக்கு ஓர்நிமித்தகாரணன் வேண்டப்படுவன் என்பது நியாயவாற்றல்கொண்டு துணியப்பட்டுவிட்டதாயின், அந்நிமித்தகாரணன் யாண்டிருந்து இதனை அமைத்தான் என்பது அத்துணிபுக்கு எவ்வாற்றானும் ஓர் தடையாகாது. அந்நிமித்தகாரணனது நிலைக்களத்தைக் குறித்தாயி

னும், அன்றி அன்னோனது பிற இலக்கணங்களைக் குறித்தாயி னும், நாம் வேண்டியமட்டும் விசாரணம்புரிந்துகொள்ளலாம். ஆயின் அவ்விசாரணவிடயத்துள் யாதொன்றேனும் அந் நிமி த்தகாரண நிச்சயத்துக்கு எவ்வாற்றானும் ஓர் தடையாகாதா தலின், "கடவுள் பிரபஞ்சத்தை யாண்டிருந்தமைத்தார்" என்னும் இவ்வினாவை அக்கடவுணிச்சயத்துக்கோர் ஆக்ஷேப மாமெனக்கொண்டெழுத்தல் மரபாகாமை காண்க.

(௨.) இனிக்கடவுள் எங்கிருந்து பிரபஞ்சத்தை அமைத்தார் என்னும் கூற்றை விசாரித்தற்கு நாம் கடவுளது இலக்கணத் தை முந்த அறிதல்வேண்டும். கடவுள் ஓர் ஆதாரப்பொரு ளா? ஆதேயப்பொருளா? அவர் தமது இருக்கைக்கு யாதொ ரு ஆதாரத்தை வேண்டிநிற்பவரா? வேண்டாதுநிற்பவரா? அவர் ஆதேயப்பொருளாய்த் தமது இருக்கைக்கு யாதொரு ஆதாரத்தை வேண்டிநிற்பவர் என்றால், அவரும் ஓர் பாதந்தி ரராய் அவருக்கும் பின்னோர் காரணன் வேண்டப்பட்டு, அவ ரது பிரபஞ்சகாரணத்வம் பின்னப்பட்டுவிடுமாம். ஆகவே அவர் யாதொருபொருளைத் தமக்கிடமாகக் கொள்பவரல்லர் என்பதும், எனவே அவர் பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கும்போ து தாம் இருத்தற்கு யாதொரு நிலைக்களத்தை வேண்டிநிற் பார் அல்லர் என்பதும் காண்க.

(௩.) இஃதாமேல், அவரைச் சர்வவியாபி என்பது என்க ருதி என்பிரேல்; சர்வவியாபி என்பதனால், "சர்வம்" ஆகிய விஸ்வம் அவருக்கு ஓர் ஆதாரம் என்பது பொருளல்ல. அவர் "சர்வத்தி"லும் விளங்கி அருள்வர் என்பதன்றி, அச் சர்வம் இன்றேல் அவரும் இல்லை என்பது பொருளாகாது. அவர் தமது இயற்கைமரபால் யாதொரு ஆதாரத்தை வேண் டாது தாமே சுயம்புவாய் உள்ளார் என்பதே அவரைக்குறித் துச் சமயங்கள் எல்லாம் சொல்வது. இவற்றை எல்லாம் நாம் நையாயிகதர்மங்கொண்டு "சமயநிச்சய"த்தில் எடுத்துக் காட்டுகின்றுமாதலின் இவ்வுண்மைகளை ஆண்டுக் காண்க.

(ச.) பிரபஞ்சத்தைக் கடவுள் சிருட்டித்தார் எனவே, அது சிருட்டிக்கப்படுமுன் பொருள் ஒன்றும் இல்லை என்பதும், எனவே கடவுளுக்கு வியாப்பியமாகத்தக்க பொருள் யாதேனும்இல்லை என்பதும், வியாப்பியம் இல்லையாகவே வியாபகமுமில்லை என்பதும், வியாபகமில்லையாகவே வியாபகப்பொருளாகிய கடவுளும் இல்லை என்பதும் அன்றோ பெறப்படும் என்பீரேல்; இவைபோல்வனதாமே விதண்டை என்று வித்துவசனரால் ஒதுக்கப்படுவன. ஒளிக்குரிய குணம் பொருளை விளக்குவது. அவ்வொளியால் விளக்கம்பெறுதற்கியைந்த பொருளின்றேல், ஒளியும் இல்லை என்பது முடிக்கப்படுமாமோ? படாதாம். அதுபோல் கடவுளுக்குரிய குணம் எவ்வெப்பொருளினும் வியாபித்தல். அவரது வியாபகத்தை ஏற்றற்கியைந்த பொருள் ஒன்றுமின்றாயின், அக்கடவுளை ஓர் இல்பொருள் என்று முடித்தல் கூடுமாமோ? கடவுள் ஓர் ஆதேயப்பொருளாமாயின், ஆதாரமின்றேல் ஆதேயமின்றென்று முடித்தல் சாலும். கடவுளோ நிராதாரவஸ்துவும் சுயம்புவும் சுவதந்திரருமாய் இருக்கும்போது, அவருக்கோர் ஆதாரந் தேடி அலைவதும், அவ்வாதாரம் இன்மையால் அவரையும் இல்லை என்று முடிப்பதும் பெருமடனுமென்க.

(ரு.) இஃதுண்மைதான், பொருள் ஒன்றும் இல்லாத இடத்து நுங்கடவுளைக் காட்டுக என்றுகேட்டு நிற்பீராயின், இது முருங்கையை அகன்று நட்சத்திரத்தைக் காட்டுக பார்ப்பேம் என்ற மாலுமியன் கடாவை நிகர்க்குமாம். முருங்கையின்றேல் நட்சத்திரம் புலப்படாமைபற்றி, அஃதோர் இல்பொருளாய் விடமாட்டாது. அதுபோல், பொருள் ஒன்றின்மைபற்றி கடவுளுண்மை எமக்குப் புலப்படுதல் கூடாமையால் அவர் இல்பொருளாய் விடமாட்டார். ஆனால், பொருள் எல்லாம் ஒடுங்கிய அவதரத்துப் பரவெளியே எஞ்சிநிற்கும் என்பதும், அப்பாவெளி அண்டாண்ட சராசரங்கள் அனைத்தையும் அடக்கிநிற்கும் என்பதும், அங்ஙனம் அடக்குற்ற சராசரங்கள் எல்லாம் விரியுமிடத்து, அவ்வெளி அவற்றுண்மறைந்து

எவ்வெப்பொருளிலும் இயல்பாகவே வியாபித்துநிற்கும் என்பதும்; கடவுள் இலக்கணத்தை ஆராயப்புகுந்தால் இனிதுசித்திக்குமாம். இவை எல்லாம் சற்சமயத்தைநாடி உண்மையை ஆராய்ந்தால் அப்போது செவ்வே புலப்படத்தக்கனவாம். இக்கடவுளிலக்கணநிச்சயம் கடவுணிச்சயத்துக்கு யாதோராற்றும் ஓர் தடையாகமாட்டா தென்றறிக.

## சஎம் அதிகரணம்.

இனிக் கடவுள் பிரபஞ்சத்தை எதுகொண்டு சிருட்டித்தார்? எல்லாம் கடவுளாற் சிருட்டிக்கப்பட்டனவாமாயின், அவராற் சிருட்டிக்கப்படாதது ஒன்று இல்லை என்பது பெறுமன்றே. பெறுமாயின், இவற்றைச் சிருட்டித்தற்கோர் முதற்காரணமும் இல்லை என்பதும் பெறுமன்றே. அங்ஙனமாயின், முதற்காரணமொன்றில்லையாக, பிரபஞ்சத்தை அந்தக்கடவுள் சிருட்டித்தார் என்பது எங்ஙனம் நிலைபெறும்? என்பதும் சிற்சிலர் ஆசங்கை.

இவைபோல்வன ஆசங்கைகள் எல்லாம் சற்சமயத்தை ஆராய்ந்து, அதன்கட் பிரதிபாதிக்கப்படும் உண்மைத்துறைகளை உள்ளவாறு அறிந்தால் மிக எளிதின் நிவிர்த்திபெற்று விடுமாம். இன்னோரன்ன ஆசங்கைகளை முட்டறுத்தற்சக்தியில்லாத சமயங்களைக் கற்றாரே, இத்துறைகளை எடுத்துக்கொண்டு கடவுணிச்சயத்தைக் கண்டித்தற்கென்று துவசங்கட்டி நின்று அழிவாராயினர். கடவுணிச்சயத்தைக்குறித்துப் பேசப்புகுந்த நாம், இங்கே அவ்விஷயத்தை விடுத்து மற்றொன்றிற்புக்குப் பிரபஞ்சத்துக்கு முதற்காரணந்தேடி வினைக்கெல் மரபாகாது. பிரபஞ்சத்துக்கு முதற்காரணம் ஒன்றுண்டாயினுமாக, இன்றாயினும் ஆக; அதன் இயற்கைமுறைப ஆராயுமிடத்து அதனுக்கோர் நிமித்தகாரணன் உண்டென்பது தன்னளவிற்றானே இனிதுசித்திக்கும் என்னும் இவ்வளவே நாம் இங்கே சொல்லத்தக்கது. ஆனால் அந்தக்கடவுள்

இந்தப் பிரபஞ்சத்தை எங்ஙனம் சிருட்டித்தார் என்று அவ ரது சிருட்டி இலக்கணமுறையை சற்சமயவாயிலாக நோக்கு வாம் எனின், பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணமாகிய ஓர் சித் துமுதலும், முதற்காரணமாகிய ஓர் அசித்துமுதலும் உண் டென்பது செவ்விதிற் சித்திக்குமாம். இவ்வசித்துமுதலே மாயை என்றும், இந்த மாயையே பிரபஞ்சத்துக்கு முதற்கா ணம் என்றும் நமது ஆரிய சமயங்கள் பெரிது விளக்கும். இந்த மாயை பிரபஞ்சத்தை ஒத்ததோர் மூர்த்தப் பொருளுமு ல்ல காரியமுமல்ல, ஆதலால் அதனுக்கு ஓர் நிமித்தகாரணன் இல்லை. அஃது அநாதிநித்தியம் என்று அச்சமயங்கள் ப லாற்ருனும் பெரிது வற்புறுத்து விளக்குமாம். இவற்றைக் குறித்து, அந்தச்சமயங்களை ஆராய்ந்து உண்மையை நாடிக்கா ண்க. ஈதெல்லாம் "சமயநிச்சய" த்து விரித்து வித்தரித் துரைக்கப்படும்.

## ரு-ம் அதிகரணம்.

கடவுணிச்சயத்தைக் குறித்த பின்னும் பல சங்கைகள், ஓர் ஓர் சமயக்கொள்கைகள் பற்றி ஆங்காங்கே நிகழ்வனவுள. இந்தச் சங்கைகள் எல்லாம் சற்சமய சகாயங்கொண்டு விசாரி க்கப்படுவ துண்டாரயின் பரிதிமுற்பனிபோலத் தாமே விலகி விடுமாம். ஆனல் இந்நூலகத்தே நாம் யாதொரு குறித்த சமயக்கொள்கையை எடுத்துத் தாபிக்கப் புகுந்தாமல்லேம். எல்லாச்சமயத்துக்கும் ஒப்ப, இயற்கைமுறையாற் கடவுணிச் சயத்தைத் தாபிப்பதே நாம் ஈண்டெடுத்துக்கொண்டது. ஓர் ஓர் சமயக்கொள்கைபற்றி எழுஞ் சங்கைகள் எல்லாம், நாம் இங்கே கடவுளுண்மையைத் தாபிக்குமாறு எடுத்துக்கொண்ட பொது நியாயங்களைச் சிறிதும் தாக்கமாட்டாவாம். அவை கள் அவ்வச்சமயங்களாற் பிரதிபாதிக்கப்படும் சிறப்பிலக்க ணங்களாகிய பதி இலக்கணமுறை, பதி கிருத்தியமுறை மு யவற்றைத் தாக்கத்தக்கனவன்றி, பதியுண்மையை எவ்வ ருனும் தாக்குமாறில்லை. அவ்விலக்கண முறைகளிற்ருனு

நிகழும் சங்கைகளை நிவிர்த்திசெய்தற் கருத்துடையார், சற்சமயத்தை நாடி, அதன் கொள்கைகளை ஆராய்ந்து உண்மைத்துறையைக் கண்டறியக்கடவர். இந்தச் சற்சமயத்தை அடைந்து அதனுட்போதிந்துள்ள சில அந்தரங்க கொள்கைகளை அனுட்டிப்பதுண்டாயின், அவ்வனுட்டானம், கடவுளுண்மையைப் பெரிதுவற்புறுத்தி, அதனை அனுபவத்தால் அங்கை ஆமலகம்போல் காட்டிவிடுமாம். அவற்றை நாம் இங்கே எடுத்துக் காட்டப்புகுந்தால், இந்நூல் மிகவிரிவுற்றுப் பல்குவதன்றியும், அவ்ற்றை விளங்குமாற்றலும் பக்குவமுடையோர்க்கன்றி ஏனையோர்க்குச் சித்திக்கத் தக்கதல்லவென விடுத்தாம். அத்துறைகள் பெரும்பாலும் குருமுகமாகக் கேட்டனுட்டிக்கத் தக்கனவுன்றி, நூலுணர்ச்சியாற் சித்திக்கத்தக்கனவல்ல. இங்ஙனமாய விளக்கங்கள் பல லௌகிகங்களிற்றானும் உண்டென்பதை விவேகிகள் ஒத்துக்கொள்வர். இவ்வனுபவஞானத்தால் எங்கெங்தப் பொருளிலும் கடவுளைக் காணவல்லாரே உண்மைநெறியைத் தலைப்பட்ட சாதுக்களாவர்.

நாம் இப்போது அங்ஙனமாய நியாயங்களை ஒழித்து, எல்லார்க்கும் பயன்படத்தக்கனவும், தற்காலத்தே உலகத்தில் பெரும்பாலும் எடுத்தாளப்படும் நிரீச்சுரவாதநெறிகளை லௌகிகப்படியில்நின்று கண்டிப்பனவுமாகிய நியாயங்களைப் போதிந்து, இச்சிறு பிரபந்தத்தை குமரப்பிரானது அருட்பிரசாதத்தை முன்னிட்டு எழுதிமுடித்துக் கடவுணிச்சயத்தை காட்டினும்.

இனி இங்ஙனம் ஆகிய கடவுளை நாம் ஏன் வணங்கல்வேண்டும்? நாம் ஏன் ஒரு சமயத்தை அனுட்டித்தல்வேண்டும்? சற்சமயத்தை ஏன் நாடுதல்வேண்டும்? அந்தச் சற்சமய இலக்கணம் யாது? என்பன முதலிய விஷயங்களை "சமயநிச்சயம்" என்னும் பிரபந்தவாயிலாக ஆராய்ந்து காட்டுவோம்.

திருச்சிற்றம்பலம்.